உ

சிவமயம.

S.337

யூகிமுனி சாஸ்திரம்.

வைத்தியநூல்

முதல்—கooo.

இஃது

மயிலை-அழகப்ப முதலியாரால்

சிவஞானபோத யந்த்ரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதல் பாகம்.

ஐயாமுதலியார் வீதி ௩௫-வது, இலக்க வீடு

சென்னை - சிந்தாதிரிப்பேட்டை

கலி-௫௦௧௭ - ஐ இராக்ஷச - ௵ ஆடி-௴

முதற்பதிப்பு.

(Registered Copy-right)

ஆர். எம். கே. வேலுசுவாமி சித்த வைத்தியசாலை (பாய்)
தபால் பெட்டி: 16. பழநி. தமிழ்நாடு.

ஓ

சிவமயம்.

யூகிமுனி வாதகாண்டம்

முதல்—க000.

நூல் உபதேச பரம்பரை

சிவந்தானும் வடமொழியில் வாதமார்க்கம்
சிறப்பாக விருலகூஞ் கிரந்தந்தன்னை
கவந்தானு மைந்தாம்வே தத்திற்சொன்னர்
கருணைபெற உமையவளுந் தமிழாய்ச்செய்து
பவந்தானும் நந்திக்குச் சொன்னபோது
பார்த்தவரும் நந்திதன் மந்திரிக்குச்சொன்னர்
தவந்தானுந் தன்மந்திரி அசுவனிக்கு [னர்.
தகைபெறவே அசுவனியும் விசுவனிக்கு
சொன்னதொரு விசுவனியும் அகஸ்தியர்க்கு
சொல்லிடவே அகஸ்தியரும் புலத்தியர்க்கு
கன்னதொரு புலத்தியரும் தேரருக்கு
கருணைபெற தேரருமே யூகிக்குத்தான்
வன்னதொரு யூகிமுனி பார்த்துவாதம்
வயித்தியமுங் கைமுரையும் கண்டுதேறி
பன்னதொரு வுலகத்தோர் பிழைக்கவென்று
பரிவாக விந்நூலே வுரைசெய்தேனே. உ

இந்நூலறுக்கிரகிக்கத் தக்கவர்கள்.

உரைசெய்தேன் புத்தியுள்ள வாதிக்குத்தான்
உண்மையுள்ள யோகநிஷ்டைபண்ணினோர்க்கும்



கரைசெய்தேன் வாசியென்ற யோகத்தோர்க்கும்
கனமான சிவசிந்தை யுள்ளபேர்க்கும்
பரைசெய்தே னுண்மையுள்ள சீஷருக்கும்
பலிக்குமே யிந்நூலை பார்த்துச்செய்ய
தரைசெய்தேன் பரிபாஷை நீக்கிச்சொன்னேன்
தண்மையுள்ளபேர்களுக்குச்சொன்னேன்பாரே.

இந்நூலுபதேசிக்கத் தகாதவர்கள்.

சொன்னதொரு கொலைகளவு செய்தபேர்க்கும்
சுருக்கான காமத்தை விரும்பினோர்க்கும்
பன்னதொரு பொய்சொன்ன பேர்களுக்கும்
பதறுமல் கள்ளுண்ணல் செய்தபேர்க்கும்
கன்னதொரு இவ்வைந்து பாதகர்க்கும் [னோர்க்கும்
கருத்துவைத்து உண்மைசொல்லி பின்சொன்
தன்னதொரு இவர்களுக்கு வாதந்தானும்
தக்காதுநூல்கொடுக்க வேண்டாம்சொன்னேன்.

வெள்ளிவித்தை.

சொல்லவே வெள்ளிவித்தை யொன்றுகேளு
சுயமான வெள்ளியது பலமுங்கால்தான்
மெள்ளவே யுருக்கையிலே யிடையேதாக்கு [ன்
மேன்மையாய் வெள்ளையென்ற பாஷாணந்தா
ரள்ளவே வெள்ளியது நொறுங்கித்தூளாய்
தண்மையா யிருக்குமது தந்தம்போலாம்
கள்ளவே ரசபதங்க மிடையேசேர்த்து
கருணைபெற வெருக்கம்பால் தன்னிலாட்டே. (ரு

அண்டோடு நீற்றி கவசஞ்செய்ய.

ஆட்டியே வில்லைபண்ணி ரவியிற்சுாய
அன்பாக வைத்துமே யப்பாற்கேளு
தாட்டியே சீனத்தை யூதச்சுன்னம்
தப்பாமல் வில்லைமேல் கனமாய்க்கட்டி
காட்டியே யண்டோடு ஊதநீறும்
கனமாக வதன்பேரில் கட்டிக்கொண்டு
மாட்டியே சேவலென்ற புடத்திற்போடு
மனதாக நிறமதனைச் சொல்லக்கேளே. ௬

சொல்லக்கேள் தந்தம்போல் வெள்ளையாகும்
சுகமாகத் தானெடுத்து வெள்ளீயத்தில்
வல்லக்கே ளிருபத்திற் கொன்றாய்ப்போட்டால்
வலுத்துமே வெள்ளியது பத்துமாற்று
நல்லக்கேள் செம்பதனில் பத்துகாணும்
நலமான குடவனிலே பத்துமாற்று
சொல்லக்கேள் தேவிசொன்ன வார்த்தையாகும்
செப்பினேன் சத்தியமாய்ச் செயல்தானாமே. ௭

துருசு சிந்தூரம்.

செயலாக துருசுனுட சிந்தூரத்தை
செப்புகிறே னிதுலகுவு முன்னேபாரு
கயலாகத் துருசுதான் சேரதொன்று
கனமாக நாகம்பூ நாலுசேரு
வயலாக நாகத்தி னமிழ்த்திக்கொண்டு
வளமான கெந்தி தாளகமுமுக்கால்

தயவாகச் சூடனது அரையும்போடு
தப்பாமல் வீரமது காலுஞ்சேரே. அ
காலான சேருடனே திராவகத்தைவிட்டு
கனமாக விருஜாம மாட்டிக்கொண்டு
பாலான துருசின்மேற் கவசம்கட்டி
பக்குவமாய் சுண்ணும்பு சீலைசெய்து
வாலான புடமிட்டு எடுத்துப்பார்த்தால்
வளமான கறுப்பாகி யிருக்கும்பாரு
சேலான வெண்காரம் பொரித்துக்கொண்டு
செப்பமாய் நெற்கார மிடையேசேரே. கூ
இடைசேரத் தண்ணீரா லரைத்துவில்லை
யின்பமாய்ப்புடம்போட்டு எடுத்துப்பார்த்தால்
நடைசேரு கறுப்பாக விருக்கும்பாரு
நல்லமையாய் கறுப்பெடுத்து உருக்கும்போது
கடைசேரு சிவக்கின்ற பதத்திலப்போ
கணக்காக வெடுத்துமே ஆறப்பார்த்தால்
சடைசேரு சிந்தூர மாகும்பாரு
சாங்கமா யதையெடுத்து அப்பால்வையே. கூ

சிந்தூரத்திராவகம் அல்லது அயத்திராவகம்.

வையப்பா திராவகத்தைச் சொல்லக்கேளு
வகையான வெடியுப்பு பலமுநூறு
கையப்பா சினமது நூற்றுப்பத்து
கணக்காகப் பொடித்துமே சட்டியிட்டு
நையப்பா வாலியென்ற சட்டிமூடி

நலமாக வடுப்பெரிக்க வெள்ளைநீராம்
பையப்பா வெள்ளையைத்தான் வீசிப்போடு
பக்குவமாய் மஞ்சளென்ற நீரைவாங்கே. கக
நீரைத்தான் வாங்கியே அப்பால்வைத்து
நிர்ணயமா யிரும்புபல மொன்றுவாங்கி
காரைத்தான் வீரமது பலமோவொன்று
கலரவே திராவகத்தா லரைத்துக்கொண்டு
சேரைத்தான் வறுத்துமே யெடுத்துக்கொண்டு
செப்பமாய் திராவகத்தில் போட்டுப்பார்க்க
வாரைத்தான் கரைந்துமே துவருமேறி
வளமாக ரத்தம்போ லாகும்பாரே. கஉ

அயத்திராவகத்தால் துருசு சிந்தூரம்.

ஆகுமே திராவகத்தின் வலிமைசொல்ல
அரனாலு முடியாது ஆத்தாள்சொன்னாள்
ஏகுமே யிந்தநீர் விட்டரைக்க
இயல்பாக சகலமுஞ் சிந்தூரமாகும்
பாகுமே முன்வைத்த துருசுக்குத்தான்
பக்குவமாய் விட்டரைக்க நான்குஜாமம்
தாகுமே உமிநெருப்பால் வறுத்துப்போட்டு
தப்பாமல் காசியென்ற மேருக்கேற்றே. கங
ஏற்றியே யிருபத்து நான்குஜாமம்
ஏழைமதி போகாம லெரித்துவாங்க
சாற்றியே சிந்தூர மருணன்போலாம்
தப்பாமல் கைகண்ட வித்தையப்பா

மாற்றியே வெள்ளிதனி லிருபதுக்கேயொன்று
வகையாகக் கொடுத்திடவே பத்துமாகும்
வாற்றியே அருகுகட்டி யிரங்கும்பாரு
வகையான சிந்தூரங் குன்றியுண்ணே. கசு

திருசுச்சுரத்தில் திரும்வியாதிகள்.

குன்றிதா னுண்டிடவே மண்டலத்தில்
குரைநோவு குட்டமுத லோடிப்போகும்
கன்றிதான் குன்மதத்துக் கிதுதானறி
கலங்காமல் துருசைநீ வைத்துத்தேறு
பன்றிதான் போலுழுது மயங்கவேண்டாம்
படபடத்துச் செய்யாதே பதமாய்ச்செய்து
கன்றிதான் பிள்ளைகட்காய்ச் சொல்லிவிட்டேன்
நலமான சூரறிந்து நாடிப்பாரே. கஎ

லிங்கக்கட்டுக்கு தொறுக்குவெள்ளி.

நாடிப்பார் லிங்கமது கட்டுசொல்வேன்
நலமான வெள்ளியது பலமிரண்டு
ஆடிப்பா ரந்திடைக்கு கெந்திவீரம்
அப்பனே கற்றுழம் பாலிலாட்டி
வாடிப்பா ரிதையனைத்து ரசிதமேலே
வளமாகக் கட்டியே புடத்தைப்போடு
காடிப்பார் மூன்றுபுடம் போட்டெடுக்க
கருணைபெற நொறுங்கியே கரியாய்ப்பேரமே.
கரியாகப் போனத்தை யெடுத்துக்கொண்டு
கருணைபெறக் கல்வத்தில் மாவாயாக்கி

தரியாக வெண்கருவில் குழப்பிக்கொண்டு
நலமான லிங்கமது பலமிரண்டு
வரியான லிங்கத்தை குழம்பில்வாட்ட
வளமாகக் கவசமா யேறிக்கொண்டு
பரியாக நெருப்பதனில் தட்டிவாட்ட
பண்பாகக் கவசமது ஏறுந்தானே கஎ
லிங்கக்கட்டுக்குச் செம்புக்காரி.
ஏறினதோர் கவசமது சுவரவாட்டி
யின்பமா யதன்பேரில் கவசங்கேளு
நாறினதோர் செம்பதுவும் பல்முமொன்று
நலமான தாளகத்தா லுடைத்துக்கொண்டு
வாறினதோர் வெள்ளியிடை முன்போற்பூசு
வளமான பழச்சாற்று லரைத்துப்பூசு
ஆறினதோர் லிங்கத்தின் மேலேபூசு
அன்பாக புடத்தையினிச் சொல்லக்கேளே. கஅ
சொல்லக்கே ளுமியதுவுங் குருணிபோட்டு
ஜெயமான வீரட்டியது குருணிபோட்டு
நல்லக்கே ளீதிரண்டு நொறுக்கிப்போடு
நலமான லிங்கத்தை நடுவேவைத்து
கல்லக்கேள் புடமிட்டு நான்குமூன்று
கடிதாக வெடுத்திடவே கட்டிப்போகும்
வல்லக்கேள் கட்டினதை யெடுத்துக்கொண்டு
வலுவான வெள்ளியதி லெட்டுக்கொன்றே. கசு

கட்டியலிங்கத்தை வெள்ளியில்கொடுக்கத் தங்கமாகும்.
எட்டுக்கொன் றேகொடுக்க வீச்சங்காய்போ
லிதமாகக் கறுத்துமே வெள்ளிதானும்
நட்டுக்கொண் டேயிருக்கு மெடுத்துக்கொண்டு
நலமாகத் தங்கத்தை யிடையேசேர்த்து
பட்டுக்கொண் டேயிருக்கு மிடைக்கிரட்டி
பதிவாக செம்பதனை சேர்த்துஊத
புட்டுக்கொண் டேயடித்துத் தகடாய்தட்டி
பேரான புடம்போட விரங்கும்பாரே. ௨0

இரங்குமே யிடையிரண்டு தானிருக்கு
மியல்பான விடையிரண்டு மோடிப்போகும்
கரங்குமே வறுத்தவுப்பு நான்குபங்கு
கடிதான செங்கல்தூள் பலமுமொன்று
தரங்குமே யிதைவைத்துப் புடத்தைப்போடு
தாகமா யிரங்கியே தங்கமாகும்
வரங்குமே யிரண்டிடையும் வைத்துக்கொண்டு
வடிவான ஞானத்தைப் பார்த்திடாயே. ௨௧

யூகிமுனிசெய்த வித்நூலைப் பூஜிக்க சகலமுங்கிடைக்கும்.
ஞானமென்ற சிதம்பரத்தைப் பார்த்துக்கொண்டு
நடனவொலி யம்பரத்தை நாடிநில்லு
பானமென்ற வாதத்தின் செயலறிந்து
பத்தியே நின்றுக்கால் முத்தியாகும்
கானமென்ற கைக்குள்ளாய்ச் சிச்சும்பாரு
கருவறிந்து நூலறிந்து கணக்கும்பாரு
தானமென்ற யூகிமுனி பகர்ந்தநூலை
தப்பாமல் வைத்துநீ பூசிப்பாயே. ௨௨

இன்னின்ன தேகிகட்கு நேர்வாளக்குழம்பு
கொடுக்கும்வகை யிப்படியெனல்?

பூசிப்பாய் வாதநோ யென்றபேர்க்கு
புகழான நேர்வாளக் குழம்புதன்னை
ஆசிப்பாய் கொடுத்தாக்கால் சித்தியாகும்
ஆண்மையாய் பித்தமென்ற ரோகிக்குத்தான்
வாசிப்பாய் விளக்கெண்ணை தனில்கொடுக்க
வண்மையாய் சித்தியாம் சிலேத்மரோகி
நேசிப்பாய் சிவைதைவேர் கடுக்காய்கூட்டி
நிலவரமாய் வெந்நீரில் கொடுத்திடாயே. உ௩

கொடுத்திடவே சித்தியாம் தொந்தரோகி
குணமாக பேதிக்குக் கொடுத்தாற்கேளு
அடுத்திடவே கள்ளிப்பால் மோரில்கொள்ள
அன்பாக சித்தியாம் அறிந்துபாரே
படித்திடுமே வுழலாத்தி அமுரியில்தான்
பண்பாகக் கொண்டிடவே சித்தியாகும்
நடித்திடவே யிப்படியே கொடுக்காவிட்டால்
நலமில்லா வயித்தியங்க ளெல்லாம்பொய்யே.உச

பொய்யென்று அகஸ்தியர்தான் குழம்புதன்னை
போக்கோடே சொல்லாம லொன்றாய்ச்சொன்
மெய்யென்று நம்பாதே திரேகந்தன்னை [னார்
மெதுவான குறியறிந்து செய்யவேணும்
வையென்று பேதிக்குப் பச்சைதன்னை [ம்
மரைத்துவைத்தா ரென்றுமே மயங்கவேண்டா

கையென்ற வுடலதுதா னூற்றக்கட்டை
கனமாக விதையறிந்து வைத்யஞ்செய்யே. உரு
வயித்தியர்கள் பேதிக்குக்கொடுக்கும் வகையறியாது
சாத்திரத்தை நிந்தித்தல்.

செய்யவே யிரண்டுதரம் கழிச்சலானால்
செப்பமாய் காதடைத்துக் கண்ணுங்கெட்டி
மெய்யவே பொறிகலங்கி யுயிர்கள்போகு
மேதினியில் வயித்தியர்கள் மூழித்துப்போவார்
நையவே முன்கொடுத்தேன் பின்கொடுத்தேன்
நலமான திரேகத்தை யரியாமல்தான்
வையவே சாஸ்திரங்கள் பொய்யோவென்று
வலுமையா யிருந்தழுது மாளுவாரே. உசு

காலுதேகிகட்கும் பேதிக்கிக்கொடிக்கும்
வகை யிப்படியெனல்?

மாளாம லிருக்கவல்லோ திரேகம்பார்த்து
மயங்காமல் நான்குதிரே கத்தைப்பார்த்து
தாளாமல் தாளுந்தா ளாதுபார்த்து
தயவாக நாகுன்பே திக்குச்சொன்னேன்
கோளாக நூல்விரும்பிப் பார்த்துக்கொண்டு
குணமறிந்து கைபாகம் விபரங்கண்டு
கீளாமல் பேதிக்குக் கொடுத்தாயானால்
நீடிழி வாழ்ந்துமே யிருப்பாய்தானே. உள

அயக்களங்கு.

இருக்கவே அயத்தினுட களங்குகேளு
ஏற்றமா அயமுடனே துருசுநேரே

தருக்கவே சம்பளத்தின் சாற்றிலாட்டி.
தாக்கவே யதற்குநிகர் லிங்கங்காரம்
தருக்கவே வீரமுடன் சிலையும்தாரம்
தாக்கிநன்று யொன்றுக வரைத்துருட்டி
திருக்கவே சட்டியிலே நடுவேவைத்து
திரமாகத் தாம்பூரச் செப்பால்மூடே. உஅ
மூட்டியே நன்றுக மணலைக்கொட்டி
மூர்க்கமுட னெடுப்பேற்றி யனலைமூட்டி
நாட்டிநன்றுய் மணல்கருக்கும் பருவம்பார்த்து
நன்மையுடன் தானிறக்கிக் குளிரவைத்து
கூட்டிநன்றுய் கவசத்தை யெடுத்துப்பார்த்தால்
குணமாக வெழுசரக்குங் கட்டிப்போகும்
சூட்டிநன்றுய் கட்டியது திட்டமாகும்
சங்கையுடன் தானெடுத்துத் தாக்குவாயே. உக
தாக்குவது தாம்பூரம் தனையிறுக்கு
சதுராக வவிபுடத்தின் மருந்தைச்சேர்க்க
மூர்க்கமுள்ள தாம்பூரம் கட்டிப்போகும்
முத்தியுள்ள வெள்ளியெட் டிரண்டுஞ்சேர்த்து
தாக்கமுட னுருக்கிநன்றுய்ப் பார்க்கும்போது [ன்
தரிப்பான பொன்னெளியே யென்னசொல்வே
மார்க்கமுள்ள தங்கமடா பற்றிக்கொண்டு
வைத்திருக்கத் தங்கமய மாகும்பாரே. ஈ0

கிரந்திகட்குக் களிம்புவகை.

மயமாகும் கிரந்திக்குச் சூலைக்குத்தான்
மகத்தான களிம்புவகை சொல்லக்கேளு

கயமாகக் காசுகட்டி புடனேகெந்தி
நலமான தித்தம்ரச முடனேகூட்டி
கயமாக வெள்ளை குங்கிலியஞ்சேர்த்து
நாட்டியே சுண்ணும்பு வகைக்குஒன்று
பயமாக வெண்ணெரெட்டி போட்டிழைத்து
பதராமல் துணிதனிலே யூட்டிப்போடே. நக
ஊடிட்யே போட்டிடவே புண்கள்போகு
முண்மையாய்ச் சூலைப்புண் பவுத்திரங்கள்
காட்டியே கண்டமாலைகள் புண்தீரும்
கடிதான பிளவைத்தான் புண்கள்தீரும்
நாட்டியே லிங்கபுத்து புண்கள்தீரும்
நலமாக மேகப்புன் ரணங்கள்தீரும்
வாட்டியே யிம்முறைபோல் செய்துக்கொள்ளு
வளமான வயித்தியங்கள் மிகவும்பண்ணே. நஉ

யழியறியாவாதிகள் வகைதப்பிச்செய்து துக்கப்
பட்டு சாத்திரத்தைப் பொய்யாக்குதல்.

பண்ணவே சிரிதுபேர் வாதம்பார்த்து
பவிவான களங்குவகை செய்துக்கொண்டு
நண்ணவே யினமறிந்து கொடுக்காமல்தான்
நளியாத களங்கெல்லாம் பொய்யாய்ப்போகும்
கண்ணவே நினைவுபல பாதைபட்டு [ம்
கருத்தழிந்து சாஸ்திரமும் பொய்யாய்ப்போகு

எண்ணவே யெண்ணியெண்ணி அறுத்தாள்போலே
யெத்தேச காலமுந்தா னழுகுவாரே. ஙூ

துருசுகளங்கு செய்து வெள்ளியில் கொடுக்
கத் தங்கமாகும்.

அழுகாமல் துருசிலுட களங்குசெய்தால்
அப்பனே செம்புருக்கி அதிலேதாக்கு
கழுகாமல் செம்புமிகக் கட்டிப்போகும்
கனமான வெள்ளிதனில் நிற்கும்பாரு
வழுகாம லுப்புக்குங் காவிக்குந்தான்
வலுவாக நிற்குமே வலுமைமெத்த
நழுகாம லிக்கருவைக் கண்டுதேறு
நாடினால் வாதமெல்லாம் சித்தியாமே. ஙச

சித்தியாம் செம்புரொம்ப நழுகலாகும்
சிறப்பான செத்தசெம்பு காரமாகும்
நத்தியாம் சரக்குஅதில் போட்டரைத்தால்
நலமாகச் செம்புசெத் தோடும்பாரு
தத்தியாம் நெருப்புதனி லுருகும்போது
கனமான பாஷாண வேகத்தாலே
முத்தியாம் சரக்குவகை வேகத்தாலே [ஙஞ
முதன்மையாம் நெருப்புமுன் னோடும்பாரே.

ஓடுமே காக்கட்டாம் பூப்போலோடு.
முத்தமனே அந்தசெம்பு பழுக்கும்வேதை
ஆடுமே அதையடக்க வித்தைகேளு
அன்பாகச் செம்புருக்கித் தாக்கினுக்கால்

நாடுமே செத்தசெம்பை யிழுத்துக்கொள்ளும்
நலமான செம்புமிகக் கட்டிப்போகும்
பாடுமே வெள்ளிதனில் வேதையாகும்
பழுக்கவே தங்கமய மாகுந்தானே. கசு

மயமாக யூகிமுனி சொன்னநேர்மை
மாதவர்கள் வாதியர்கள் மயங்கவேண்டாம்
கயமாகக் கருணைபெற நம்பிப்பாரு
கருணைபெற வாதமாம் யோகியாவான்
நயமாகத் துருசுதனில் களங்குபண்ணு
நல்லசெம்பு தனில்கொடுத்து ஊதிப்போடு
வயமாக வெள்ளிதனில் கொடுத்தாயானால்
வளமான தங்கமா மாட்டிப்பாரே கஎ

லிங்கக்கட்டு.

மாட்டிப்பார் லிங்கமது கட்டுசொல்வேன்
மயமான கெந்தியது பலமுமொன்று
நாட்டிப்பார் தாளகமும் பலமுமொன்று
நலமாகப் பொடித்துமே வைத்துக்கொண்டு
காட்டிப்பா ரயக்கரண்டி தன்னிலிட்டு
கனமான லிங்கத்தைப் போட்டுக்கொண்டு
வாட்டிப்பார் கொஞ்சமாய் தூளையிட்டு
வளமாகப் புரட்டிடவே கட்டும்பாரே. கஅ

கட்டுமே கல்லுப்போ லிறுகிப்போகுங்
கடிசாக அப்பாலே யெடுத்துவைத்து

மூட்டுமே வெடியுப்பு ஐந்தாங்காச்சல்
முதன்மையாய் தானெடுத்து இடையேசூடன்
தட்டுமே வாநீரா லரைத்துமைபோல்
தனித்துமே புடம்போட இறுகும்பாரு
ஷிட்டுமே லிங்கமிடை வெடியும்சேர்த்து
வளமாக அரைத்துருட்டி வைத்திடாயே. நக

லிங்கக் களங்குசெய்து வேதையாடல்.

வைத்திடவே ரவிதனிலே காயப்போடு
வகையாக மணல்மரவில் புடத்தைப்போடு
கைத்திடவே களங்காகும் செம்புதன்னில்
கனமாக விருபத்துக் கொன்றுவீய
ஈத்திடவே கறுப்பாக விருக்கும்போது
நலமாக வெட்டுக்கு இரண்டுசேர்க்க
பைத்திடவே யெட்டரையா மாணிக்கொக்கும்
பலமாக யூகிமுனி பண்புமாமே. சo

துருசுசேர்த்து அயத்தையரைத்து செம்புக்குக்
கொடுக்கத் தங்கமாகும்.

பண்பாக அரப்பொடியும் பலமுமொன்று
பரிவான எலுமிச்சம் பழச்சாரூற்றி
கண்பாக மூன்றுநா ளூரவைத்து
கழுவியே அரப்பொடியை யெடுத்துக்கொண்டு
தண்பாக துருசியது பலமும்பத்து
தண்மையா யீதிரண்டும் பழச்சாறூட்டி
மண்பாக நேதியது பலமுமுக்கால்
வண்மையாய் சூடனது அரையும்போடே. சக

அரைபோடு வீரமது நாலுங்கூட்டி
அன்பாக வெலுமிச்சம் பழச்சாறுட்டி
கரைபோடு மணல்மரவில் புடத்தைப்போடு
கணக்காக வெடுத்துமே செம்புருக்கி
நரைபோடு இடைக்கிடையே கொடுத்துவாது
நலமான செம்பாகு மிடையேதங்கம்
வரைபோடு பத்துக்கு ஒன்றுசேர்த்து
வகையாக வூதிடவே யேழுமாற்றே. சஉ

ஏழான மாற்றுன பொன்னைவிற்று
இன்பமாய்ச் செலவுசெய்து ஞானம்பார்த்து
தாழாகப் போகாமல் சிந்தூரித்துத்
தண்மையா யுண்டிடவே சட்டைகக்கும்
வாழாமல் பெண்ணேடே யிருந்துதேறு
வையகத்தி லுனக்கொருத்த ரீடோயில்லே
பாழாண்டி போலிருக்க வேண்டாமையா
படியோடே செய்துநீ பரிவாய்த்தானே. சஊ

வைத்தியர்கள் பிழைக்க நூலுபதேசித்தபரம்பரை.

பரிவான சிவன்சொல்ல தேவிசொல்ல
பகர்ந்துரைத்து நந்தி தன்மந்திரிசொல்ல
கரிவான விசுவனியு மசுவனியுஞ்சொல்ல
கருணையா யகஸ்தியரும் கண்டுதேறி
நரிவான புலத்தியரும் தேரருக்கு
தரித்ததொரு யூகிதான் கேட்டுத்தேறி
வரிவான வடமொழியை பார்த்துத்தேறி [சச
வையகத்தில் வயித்தியர்கள் பிழைக்கத்தானே

அப்ரேக சிந்தூரம்.

தானென்ற ரோகமெல்லாங் தீர்ந்துபோக
தாக்கான அப்ரேக்கு பலமுமொன்று
பானென்ற வாயலுப்பு சாரஞ்சேர்த்து
பதையாமல் வெண்காரங் கூடச்சேரே. சுரு
சேர்த்துமே நாகரசங் கூடச்சேர்த்து
சுகமாகத் தாளகமுங் கூட்டிக்கொண்டு
பார்த்துமே சரக்கெல்லாம் வகைக்குஒன்று
பதிவாக நிறுத்துமே கல்வத்திட்டு
நாத்துமே அரைத்துருட்டி ரவியிற்காய
நலமாகப் புடமதனில் வைத்தெடுத்தால்
காத்துமே முருக்கம்பூப் போலாகும்பார்
கனமான சிந்தூரங் குன்றியுண்மை. சசு

அப்ரேக சிந்தூரத்தில் திரும்வியாதிகள்.

குன்றிதா னுண்டிடவே வாதமெட்டும்
கூரான பித்தமுதல் குன்மம்போகு
நன்றிதான் பாண்டுவுடன் மூடக்குந்திரும்
நலமான கூயரோகங் கிராணிபோகும்
வன்றிதான் காசமுத லீளைபோகும்
வளமான சிந்தூர மாதியாகும்
கன்றுதான் புளியுப்புத் தவிரத்தின்று
காயசித்தாம் கண்டுகொள்ளு கருவாய்ப்பாரே.

தாம்ரசுத்தி.

கருவான தாம்பூர சுத்திகேளு
கல்லுப்பு வெடியுப்பு சீனஞ்சூடன்

இக்காண்டத்திற் கூறிய சவுக்காரம் சிவன் தேவி சொல்ல
வந்தகா லறிவாளிக ளுற்றுப்பார்த்துச் செய்து
சமாதி பொருந்தியிருப்பார்கள்.

மருவவே சவுக்கார வண்மையெல்லாம்
வடிவாக யிக்காண்டந் தன்னிற்சொன்னேன்
திருவவே தேசசத்தி லலையவேண்டாம்
சிவன்சொல்ல தேவிசொல்ல கண்டேன்பாரு
உருவவே யிதையறிந்த வல்லோரப்பா
உற்றுமே பார்த்துஅதைச் செய்வார்பாரு
கருகாமற் சவுக்காரம் வித்தைபார்த்து
கருத்துறவே செய்தாலே சமாதியாமே. எசஉ

சித்தர்கள் மனறத்துச்சொல்லிய சவுக்காரத்தை யறி
யாமற்செய்து கோடாகோடிபேர் கெட்டதால்
சமாதியடைவோர்க்கு வெளிப்படை
யாம்பொருட்டுச் சொல்லினேன்.

சமாதியிலே யிருக்கவல்லோ சவுக்காரத்தை
சரியாக வெளியாகச் சொன்னேனப்பா
சமாதியிலே வழலைதனைச் சித்தரெல்லா
மாச்சதாய் மகாகடின மாகச்சொன்னர்
சமாதியிலே எண்ணெயாற் பண்ணிபண்ணி
ஏற்றமாஞ் சுன்னத்தில் நீற்றஞ்சொன்னர்
சமாதியிலே கனபாடு பட்டுத்தேறி
காணமே பிறந்தவர்கள் கோடிதானே. எசங

கோடிதா னொருகோடி ரெண்டுகோடி
கோடான பேர்கள்தான் வாதஞ்சுட்டு

தருவாகத் துருசியுடன் சாரஞ்சேர்த்து
தாக்கப்பா வகைக்குஓரு பலமுங்கால்தான்
மருவாகப் பழச்சாற்று லரைத்துவில்லை
வளமாக ரவிதனிலே யுலரவைத்து
நருவாகப் பத்தெருவிற் புடத்தைப்போட்டு
நலமாக வெடுத்திடவே கறுக்கும்பாரே. சஅ

சுத்தியான தாம்ரத்தை வேதையாட.
கறுக்குகின்ற குருவெடுத்து வைத்துக்கொண்டு
கனமான தாம்பூரம் பலமுங்கால்தான்
தறுக்குகின்ற தகடாகத் தட்டிக்கொண்டு
தாக்கவே யதன்பேரில் வைத்துப்பூசி
நறுக்குகின்ற ரவிவைத்து கெஜபுடந்தான்
நலமாக விப்படியே அஞ்சுபோடச்
சுறுக்குகின்ற செம்புகட்டி தங்கமாகும்
சாரித்து தங்கமதைச் சேர்த்துருக்கே. சக

உருக்கிடவே தங்கமா மென்னசொல்வே
னுண்மையாய் தங்கத்தை விற்றுக்கொண்டு
நருக்கிடவே செலவுக்கு வைத்துநீயும்
நலமான காயசுத்தி யோகசித்தி
கருக்கிடவே நந்தியென்ற பாட்டன்சொன்னார்
கனமான யூகிமுனி பார்த்துத்தேறி
வருக்கிடவே நாற்கோடி யுகங்கள்பார்த்து
வழியாகச் சொல்லிவிட்டேன் சிந்தாமணியில்

[தானே.

இதையறிந்தவ னின்னவரு வானெனல்.

மணியான கண்ணிலுட மணியேயாகும்
மாசற்ற பொருளறிந்தால் வாதியாவான்
கணியான களங்குவகை தெரிந்தேதான்யோகி
காரணமாய்ச் சிந்தூர மறிந்தேதான்மூத்தன்
பணியான ஆபரணந் தரித்தேதானீசன்
பரனென்று சொல்லியே பாடியாடி
தணியான விந்தூலே கண்டுதேறு
தவித்துமே திரியாமல் வாதம்பாரு. ருக

வெடியுப்பு சிந்தூரம்.

வாதமே பார்ப்பதற்கு வெடியுப்பைத்தான்
வகையான சிந்தூரம் செய்யக்கேளு
பேதமே வெடியுப்பு பலமூணாலு
பேதமாய் வீரமது பலமிரண்டு
காதமே ரோமமது பலம்ரெண்டாகும்
கட்டாய மாகவே சீக்காயில்தான்
மோதமாந் தண்ணீரை விட்டுக்யாழம் [டே.
மேன்மைபெற வெட்டிலென்று காய்ச்சிப்போ
காச்சியே குரைந்தபின்பு ரோமம்போட்டு
கடுசாக வெடித்திடவே சுத்தியாச்சு
பாச்சியே மூன்வீரத் திடையேபோட்டு
பக்குவமாய் கலசப்பால் தன்னுலாட்ட
நாச்சியே வெண்ணெய்போ லிருக்கும்பாரு
நலமான வெடியுப்பு அஞ்சாங்காச்சல்

வாச்சியே கம்பியா யெடுத்துக்கொண்டு
வண்மையாய் வீரவெண்ணெய் மேலேகட்டே.
வெடியுப்பை வைத்தெரிக்க சீனச்சுன்னம்.
மேலேதான் கட்டியே ரவியில்வைத்து [டு
மேன்மைபெற வெடித்துமே வைத்துக்கொள்
காலேதான் சீனத்தின் சுன்னம்சொல்வேன்
கனமான சீனமது பலமோபத்து
ஆலேதான் கரியில்வைத் தூதிப்போடு
அப்பான கடுஞ்சுன்னம் சீனச்சுன்னம்
பாலேதான் சட்டிதனில் மணல்நாலிட்டு
பண்பாக வீரற்கடைதான் மணலைக்கொட்டே.
கொட்டியே யதன்பேரில் சீனச்சுன்னம்
கெடிபடவே நாலுவீரற் கடைபரப்பி
அட்டியே வீரவெண்ணெய் தடவினத்தை
அன்பாக அதன்மேலே வைத்துக்கொள்ளு
பட்டியே யதன்மேலே மண்ணைபிட்டு
பதிவமாய்க் கமலாக்னி யிரண்டுஜாமம்
கட்டியே யெரித்திடவே மணல்சிவக்கும்
கனமான பருவத்தில் தீயைமாற்றே. [டு
மாற்றியே குழாயாலே மணலையூதி
மன்பாக சீனத்தை நீக்கிப்பார்த்தால்
காத்தியே வெடியுப்பு சிந்தூரந்தான்
கனமான நாகரச முருகப்புட்டு

காத்தியே சிவந்திருந்த வெடியுப்பேபோடே
நலமாக முலைப்பாலா லரைத்துக்கொண்டு
பாத்தியா முன்போலே வில்லைதட்டி
பக்குவமாய் சட்டிதனில் மணல்பரப்பே. (நசு)

வெடியுப்புசிந்தூரத்தை செம்பிலிட்டுவேதையாட.

பரப்பியே சினைத்தில் சுன்னம்போடு
பக்குவமா யதன்பேரில் வில்லைவைத்து
கரப்பியே யதன்பேரில் சினைச்சுன்னம்
கடுமையாய் பரப்பியே மேலேமண்தான்
தரப்பியே யிட்டுமே யெரியிட்டாக்கால்
தாக்கான சிந்தூர முருக்கம்பூப்போல்
பரப்பியே செம்புதான் பத்துருக்கி
பகையான சிந்தூர மொன்றுபோடே. (நஎ)

போடவே திசைமாற்று யிருக்கும்பாரு
பொய்யென்று எண்ணுதே நிஜமதாகும்
ஆடென்று சிவனுமைக்குச் சொன்னபோது
அடைவான நந்திபக்கல் கேட்டுச்சொன்னார்
காடென்றும் யூகிமுனி பார்த்துத்தேறி
கருவான பொருளிதுதான் கண்டுதேறி
நாடென்று மதுவினிலே முண்டுதேறு
நலமான தேகசித்தி யாகுந்தானே. (நஅ)

வெடியுப்புச் சிந்தூரத்தில் தீரும்வியாதிகள்.

ஆகுமே ஆயிரந்தான் வாய்வுதானும்
அல்பாகத் தவிடுபொடி யாகும்பாரு

நாகுமே வயிற்றில்வலி சூதணத்திற்போகும்
நலமான மேகமுத லெல்லாந்தீரும்
காகுமே வுப்புக்குங் காவிக்கேகா
கனமான வெடியுப்பு ஆடும்வித்தை
தாகுமே அண்டரண்டம் கிழிந்துஆடும்
தப்பாமற் செய்துகொள்ளு வயித்தியோசே.

குடவன் செம்பு வேதை.

வயித்தியரே யின்னமொரு தங்கமாக
வகையாகச் சொல்லுகிறேன் குடவன்வேதை
தயித்தியமாய்க் காரம் வெடியுப்புக்கூட
தப்பாமல் கண்டருமே சிலைக்காரம்
கயித்தியமாய் சூடனுமே கூடச்சேர்த்து
கனமாக வகைக்குஒரு பலமுஞ்சேர்த்து
பயித்தியமாய் முன்னிடைக்கு வீரம்சேர்த்து
பதமாக அரைத்துமே பழச்சாற்றிலே. கூ0

பழச்சாற்று லரைத்துமே குடவன்மேலே
பக்குவமாய்ப் பூசியே புடமூநாலு
தழைச்சாற்றில் வலுவாகப் போட்டுத்தீரு
தண்மையாய் செம்பாகும் சிகப்புமெத்த
வழச்சாற்றில் வெள்ளியெட்டு செம்பிரண்டு
வகையாகச் சேர்த்துமே யெட்டுக்கொன்று
கழைச்சாற்றில் பொன்சேர்த்து ஊதிப்போடு
கனகமது ஆறுகும் கண்டுபாரே. கூக

லிங்கக்கட்டு.

கண்டுகொள்ளு லிங்கமது கட்டுசொல்வேன்
கனமான லிங்கமது பலமுமொன்று
திண்டுகொள்ளு தேன்தனிலே மூன்றுநாளும்
திரமாக வூரவைத் தெடுத்துக்கொண்டு
நண்டுகொள்ளு நாகரச மொன்றாய்க்கூட்டி
நலமான பொரிகார நாத்தம்சேர்த்து
வண்டுகொள்ளு முலைப்பாலால் தன்னாலாட்டி
வளமான லிங்கத்துக் கங்கிபூட்டே. ௬௨

கல்லுப்புச் சிந்தூரம்.

அங்கியே பூட்டிரவி காயவைத்து
அன்பான சுண்ணாம்பு உப்புநேரே
தங்கியே அரைத்துமே அதன்மேல்கட்டி
தப்பாம லுமிநெருப்பால் புடத்தைப்போடு
மங்கியே லிங்கமது கட்டிப்போகும்
வலுவாகத் தானிருக்க முழுகட்டப்பா
ஓங்கியே கல்லுப்பு பலமிரண்டு
ஒப்பிலாக் குப்பைமேனிச் சாற்றிலாட்டே.

லிங்கக்கட்டுங் கல்லுப்புச்சிந்தூரமுஞ்
சேர்த்து வேதையாட.

ஆட்டியே சிவக்கமட்டும் புடத்தைப்போடு
அன்பாகச் சிந்தூர மாகும்பாரு
நாட்டியே கல்லுப்பு சிந்தூரமூன்று
நலமான கட்டிலிங்க மொன்றுகூட்டி

பாட்டியே அரைத்துமே பழச்சாற்றிலே
பண்பாக புடம்போடு குருவாய்ப்போகும்
காட்டியே மணல்மரவில் புடத்தைப்போடு
நலமான செம்பிரண்டு வெள்ளியெட்டே. சுசு
வெள்ளியெட்டு களங்கொன்று சேர்த்துஊத
விருப்பமாய் தங்கமாம் தங்கம்சேரு
துள்ளியென்ற காவிக்கி ஏகிடாது
துப்புறவாய்க் கைகண்ட வித்தையாகும்
கள்ளியென்ற வாய்மதத்தால் பேசிடாதே
நன்மையாம் சிவயோகம் நாட்டம்பண்ணு
கொள்ளியென்ற மனக்குறங்கு செய்யொட்டாது
கொடுமையா யிரந்துண்டு மாளுவாரே, சுரு
லிங்கக்கட்டும் வேதையாடுதலும்.
மாளாம லிங்கமொரு கட்டுசொல்வேன்
மயங்காம லிங்கமொரு பலமும்வாங்கி
வாளாமல் காசியென்ற மேரடைத்து
வகையாகப் பலமொன்று புடத்திற்போடு
காளாமல் நீறியே சுன்னமாகும்
தயங்காமல் சினமது சுன்னம்பண்ணு
காளாம லண்டமது சுன்னம்பண்ணு
கடுமையாய் வெண்காரம் சுன்னம்பண்ணே. சுசு
சுன்னமெல்லாம் பழச்சாற்றி லரைத்துக்கொண்டு
சுருக்கான லிங்கத்தை துவைத்துவாட்டு
கன்னமெல்லாம் குழம்பாலே அதட்டிவாட்டு
கணக்காக மேலேறும் கவசந்தானும்

பன்னமெல்லா மண்சீலை வலுவாய்ச்செய்து
பகரவே யுமிநெருப்பில் புடத்தைப்போடு
வன்னமெல்லாந் தங்கமது இடையேசேர்த்து
வளமாகக் கொடுத்திடவே தங்கமாமே. சுஎ

லிங்கக்கட்டும் அதை வேதையாடலும்.

தங்கமாம் லிங்கமொரு கட்டுசொல்வேன்
தயங்காமல் லிங்கமொரு பலமும்வாங்கி
கங்கமா மயக்காந்தம் பழச்சாற்றாலே
கடுமையா யரைத்திட்டு ஊதிப்போடு
துங்கமா மால்தேவி மனோசிலையும்கெந்தி
துடியாக அரைத்திடவே அயத்திற்சேர்த்து
பங்கமாம் லிங்க மேல்பூசிப்பூசி
பகரவே வலுவாகக் கவசம்கட்டே. சுஅ

கட்டியே மண்சீலை வலுவாய்ச்செய்து
கடிதான வுமிநெருப்பால் புடத்தைப்போடு
நட்டியே யெடுத்தாக்கால் முழுக்கட்டாகும்
நலமான தங்கத்தி னிடையேதாக்கு
வட்டியே சேர்ந்திரண்டு மணியுமாகும்
வலுமையாய்ச் செம்பிரண்டு வெள்ளியெட்டு
தட்டியே யீதிரண்டும் சேர்த்துஊத
தயவான தங்கமாம் தாக்கிப்பாரே. சுகூ

கறியுப்புச் சிந்தூரத்தால் குடவன் செம்புசெய்ய.

தாக்கிப்பார் குடவனது செம்புசொல்வேன்
தடையான காகதோண்டி பித்தளைத்தான்

பாக்கிப்பா ருருக்கியே தகடாய்த்தட்டி
பக்குவமாய் மேல்பூசக் கவசம்கேளு
ஆக்கிப்பார் வெடியுப்பு சினைச்சுன்ன
மயமான நவசாரம் துருசுவீரம்
வாக்கிப்பா ரிந்திடைக்கு கறிவுப்புத்தான்
வளமான சிந்தூரம் பண்ணிச்சேரே. ஏ0

பண்ணியே சரக்கெல்லாம் பழச்சாற்றிலே
பதிவாகக் குடவனிலே பூசிப்பூசி
நண்ணியே புடம்போடச் செம்பாய்ப்போகும்
நலமான செம்பதுதான் வேதைக்காகும்
புண்ணியமே செய்தவர்க்கு செம்புமாகும்
பொன்வெள்ளி யெட்டுசெம்பு தானிரண்டு
கண்ணியே கொடுத்துருக்கப் பத்துமாற்று
கனகமது உண்டாகும் கருத்தாய்ப்பாரே. ஏக

ஜலஸ்தம்ப மூலிகிருதம்.

கருத்தான கிருதமது சொல்லக்கேளு
களமான மேகமெல்லாங் காணுதோடும்
நருத்தான பசுநெய்யும் படிதானென்று
நலமான சாருவகை சொல்லக்கேளு
வருத்தான ஜலஸ்தம்ப மூலிச்சாறு
வளமான வோரிலைத் தாமையின்சாறு
கருத்தான ஆவரையின் சாறுவாங்கி
கனஇலவஞ் சாறுபடி தானும்வாங்கே. ஏஉ

வாங்கியே விடத்தலையின் சாருவாங்கு
வகையான வகைக்குக் காற்படியுங்கூட்டி
தேங்கியே நெய்தனிலே கலந்துகொண்டு
சிறப்பாக ரவிதனிலே காயவைத்து
தாங்கியே அதிற்போட மருந்துகேளு
தண்மையாய் சீரமதி மதுரங்கூட்டு
ஏங்கியே திரியாதே அதிவிடையம்குக்கி
லேத்தமாய் ஜாதிக்காய் கிராம்புகூட்டே. எங
கூட்டியே ஜாதிபத்திரி யேலங்கூட்டு
குணமான வல்முளகு லவங்கப்பத்திரி
மாட்டியே விலாமிச்சு வெள்ளைகுங்கிலியம்
மயமான வகைக்குபல மொன்றுபோடு
தாட்டியே பசுவினுட பாலாலாட்டி
தயவாக முன்னெய்யில் கலந்துகொண்டு
வாட்டியே யடுப்பேற்றி அனலைமூட்டி
வளமான மெழுகுபதம் பார்த்துக்கொள்ளே.
ஜலஸ்தம்ப நெய்யால் தீரும் வியாதிகள்.
பார்த்துமே வடித்துநாற் பதுநாட்கொள்ள
பதிவான கிரந்திமுதல் மேகம்தீரும்
கார்த்துமே விரணமுதல் பித்தசேத்மம்
கனமான வாயுவுடன் கிராணிமூலம்
நார்த்துமே காசமொடு வெட்டைதீரும்
நலமான கிருதவகை சொன்னேன்பாரு
வார்த்துமே அஸ்திவெட்டை போகுமென்று
வண்மையா யூகிமுனி யுரைத்தவாறே. எடு

வெடியுப்புச் சுன்னம்.

உரைசெய்தால் வாதத்தை நிறுத்தவென்று
லுண்மையாய்ச் சினத்தை யூதிநீற்று
கரைசெய்த கடுங்காரச் சுன்னமாகும்
கடுமையாய் வெடியுப்பு இடையேசேர்த்து
பரைசெய்த பழச்சாற்று லரைத்துக்காயப்
பண்பாகக் காரியில்லைத் தூதிப்போடு
வரைசெய்த வெடியுப்பு கடுஞ்சுன்னந்தான்
வண்மையாய் சினத்தை சேர்த்துஊதே. எசு

சேர்த்துமே சினமென்ற சுன்னம்சேரு
நேயமான வெடியுப்பு பூர்த்துப்போகும்
பார்த்துமே வில்லைகட்டி ரவியிற்காய
பண்பாக வூதிடவே சுன்னமாமே. எள

இந்துப்புச் சுன்னம் வளையலுப்புச் சுன்னம்.

சுன்னமா மப்பாலே யெடுத்துவைத்துச்
சுகமான விந்துப்பு பலமூநாலு
கன்னமாம் சினத்து சுன்னநாலு
கனமாக மூன்முறைபோ லரைத்துஊது
வன்னமா நீறியது சுன்னமாகும்
வகையாக அப்பாலே யெடுத்துவைத்து
தன்னமாம் வளையலுப்பு பலமூநாலு
தாக்கியரை சூடனது பலமூநாலே எஅ

வெண்காரச் சுன்னம்.

பலநாலு சினத்தின் சுன்னநாலு
பகரவே யிடைரண்டுஞ் சேர்த்தரைத்து

கலநாலு வுடிநெருப்பில் வறுத்துப்போடு
கலங்காமல் வில்லைபண்ணி காயவைத்து
தலநாலு ஊதிடவே நீறிப்போகும்
தாக்கான இதையெடுத்து அப்பால்வைத்து
நலநாலும் வெண்காரம் பொரித்துக்கொண்டு
நன்னையமாய் சினத்தை யிடையேசேரே. எக

கல்லுப்புச் சுன்னம்.

இடைசேரு எருக்கம்பால் தன்னிலாட்டி
யிதமான வில்லைகட்டி ரவியிற்காய
நடைசேரு கரியில்வைத் தூதிப்போடு
நன்மையாய்க் கடுஞ்சுன்னங் காரச்சுன்னம்
படைசேரு கல்லுப்பு பலமூநாலு
பண்மான சின்சுன்னம் பலமூநாலு
கடைசேரு காயவைத் தூதிப்போடு
கனகமா யெடுத்துடனே அப்பால்வையே. அ0

தாளகச் சுன்னம் பூநீறு சுன்னம்.

வையப்பா தாளகமும் பலமூநாலு
வகையான சின்சுன்னம் பலமூநாலு
கையப்பா யிதையரைத்து ஊதிப்போடு
கடிதான தந்தம்போல் நீறிப்போகும்
நையப்பா பூநீறு பலமூநாலு
நலமான சினமது பலமூநாலு
பையப்பா வீதிரண்டு மரைத்துஊது
பகரரிது சுன்னமாம் பண்பாய்ப்பாரே. அக

துருசுக்கு ரசச்சுன்னஞ் செய்து கவசமிட.

பண்பாக வெடியுப்பு சுன்னமொன்று
பரிவான நவசார சுன்னமொன்று
வண்பாகச் சூடனது சுன்னமொன்று
வகைசமனுய்ச் சேர்த்துமே அப்பால்வையே.

வைத்துமே ரசபதங்கந் தன்னைத்தானும்
வகைசமனுய்ச் சேர்த்துமே திராவகத்தால்
நைத்துமே யிருஜாம மாட்டிக்கொண்டு
நலமாக வில்லைபண்ணி ரவியில்காய
பைத்துமே தெரிப்படங்க காயவைத்து
பகரவே கரியில்வைத் தூதச்சுன்னம்
கைத்துமே நாலுக்கு ஒன்றுவீரங்
கடிதாகச் சேர்த்துமே அரைத்துக்கொள்ளே.

துருசுசுன்னம்.

அரைத்துமே திராவகத்தால் நேகரைத்து
அன்பான துருசின்மேலப்பிப்போடு
கரைத்துமே சுண்ணும்புக் கவசஞ்செய்து
காடையென்ற புடத்திலே கண்டால்திரும்
சரைத்துமே துருசியது நீறினுக்கால்
சகலசித்து மாடலாங் கவனமாகும்
தரைத்துமே யோகநிட்டை காயசித்தி
தடையில்லை யென்றுமே யூகிசொன்னார். அசு

சனச்சுன்னத்தால் சகல சுன்னமுமானதும் துரு
சுச்சுன்னத்தால் ரசங் கட்டுப்பட்டதும்.

சொன்னதொரு சுன்னமெல்லா மேதாலாச்சு
சுகமான சீனமென்ற சுன்னத்தாலே
கன்னதொரு சீனமென்ற முஜாவாலே
கடுமையா யுப்பெல்லாஞ் சுன்னமாச்சு
வின்னதொரு துரிசென்ற பெரியராஜா
விருப்பமாய் சேர்த்துமே சுன்னமாஞ்ன்
வன்னதொரு கண்டருட சுன்னத்தாலே
வகையான சூதமென்ற முஜாபட்டான். அரு

கட்டியரசத்தில் தங்களுஞ்சேர்க்க சகலமுந் தங்கமாகும்.

பட்டுமே யிரந்துமே விலங்குபூண்டு
படராட்டந் தப்பியே கட்டுப்பட்டான்
தட்டுமே கோசமென்ற தங்கஞ்சேர்த்து
தடையறவே யுருக்கிடவே யெல்லாந்தங்கம்
கட்டுமே மண்ணோடு எல்லாந்தங்கம்
கருணைபெறத் தடவினல் பழுத்துப்போகும்
விட்டுமே பொருளறியான் வாதிதானும்
விரும்பியே விரும்பாமல் திரிவான்பாரே. அசு

மூடவாதிகள் சீனச்சுன்னத்தைப் புடங் கொஞ்ச
மாய்ப் போடுவதால் கெட்டுப்போக மனம்
வருத்தப்படுகிறன். சீனச்சுன்னத்திற்குக்
கரியதிகமிட்டுச் சுன்னமாக்கவும்.

திரிகுவார் சிறிதுபோர் சீனச்சுன்னம்
திரமாக வைப்பமென்று எண்ணியெண்ணி
கரிகுவார் புடங்கொஞ்சம் போட்டெடுத்து
நலமில்லை யெடுத்தெறிந்து அலைவார்பாவி.

பரிகுவார் பரிகாரம் பேசிப்பேசி
பலனில்லை யென்றுசொல்லி நெருப்பைகாணார்
கரிகுவார் கெட்டிபாய்க் கரியைக்கண்டால்
கலங்காமல் சினமது சுன்னமாமே. அள
சினச்சுன்னத்தால் தாளகத்தைக்கொல்லும்
மற்றெல்லாச் சுன்னமுமாகும்.
சுன்னமாம் சினமது சுன்னமானால்
சருங்கான தாளகத்தை யிருத்திக்கொல்லும்
கன்னமாம் படிகையது சுன்னமானால்
கலங்காமல் வெடியுப்பைக் கவ்விக்கொல்லும்
சுன்னமாம் வெள்ளிச்சி சுன்னமானால்
சவுக்காரச் சுன்னம் கடுஞ்சுன்னமாகும்
வன்னமாம் வெண்காரி சுன்னமானால்
வலுமைபெறச் சகலமுந்தான் சுன்னமாமே.
சினச்சுன்னம் முந்தி செய்துகொள். அடிச்சுன்
னம் சினச்சுன்னம் முடிச்சுன்னம் துருசுச்சு
னம், இதனால் சகலமுமாகும்.
சுன்னமா மடிச்சுன்னஞ் சினச்சுன்னம்
சிறப்பான முடிச்சுன்னந் துருசுச்சுன்னம்
கன்னமாஞ் சகலமுந்தான் கட்டிப்போகும்
கலங்காகு முறவாகுஞ் சுன்னமாகும்
தன்னமாஞ் சிந்தூர மெழுகுமாகும்
தடையறவே பொன்னாகும் வயித்தியமாகும்
என்னமோ சொன்னனென்று எண்ணிடாதே
யியல்பாகச் சினத்தை முந்திப்பாரே. அக

சீனச்சுன்னந் துருசுச்சுன்ன முபதேசித்த பரம்பரை.

முந்திப்பார் சிவனுமைக்குச் சொன்னபோது
முனிவான நந்தியவ ரொளிந்துகேட்டு
நந்திதன் மந்திரிக்குச் சொன்னபோது
நலமான விசுவனியு மடுத்துநின்று
கந்தியே காணாமல் கேட்டுக்கொண்டு
கனமான பொதிகமலை யடுத்துவந்து
பந்தியே அகத்தியர்க்கு உபதேசிக்க
பரிவாக தேரருமே கேட்டுக்கொண்டார். ௯0

கொண்டதொரு துருசிதனை நீற்றிக்கொண்டு
குகைவிட்டு யூகிக்குச் சொன்னாரப்போ
கண்டதொரு யூகி சீனத்தைக்கண்டு
கடிதாக கைபாகம் பார்த்துதேறி
வண்டதோ ருலகத்தில் பிழைக்கவேண்டி
வகையான வயித்தியங்கள் செய்யச்சொல்லி
தண்டதொரு சுன்னத்தின் பலமுஞ்சொல்லி
தயவாக விருமென்று போனார்தாமே. ௯௧

இந்நூலை யின்னின்னார்க்குக் கொடாதேயெனல்.

போனதொரு பொல்லாத பாவிகட்கு
புகலரிய ஜனனமில்லை யென்றுசொன்னார்
கானதொரு சொற்புத்தி கேளாதார்க்கு
களங்கில்லை சிந்தூர மில்லையென்றார்
தானதொரு அசடான மாந்தருக்கு
தயவான இந்நூலைக் கொடுக்கவேண்டாம்

பானதொரு பானத்தால் கெட்டோருக்குப்
பலனில்லை நூல்கொடுக்க வேண்டாம்பா.ரே.கூஉ

வங்கச் சுன்னம்.

பாரென்ற வங்கமது சுன்னஞ்சொல்வேன்
பகரவே ஈயமது பலமூநூறு
வாரென்ற தகடாகத் தட்டிக்கொண்டு
வலுவாகப் பிச்சுமே கல்வத்திட்டு
நாரென்ற தண்ணீரா லரைத்துக்கொண்டு
நலமான அண்டோட்டை யிடையேசேர்த்து
காரென்ற அறுஞ்சாம மரைத்துவில்லை
கருணைபெற ரவிதனிலே காயவையே. கூங

காயவைத்து மூசைக்குள் வாரியிட்டு
கருணைபெற வூதிடவே சுன்னமாகும்
சாயவைத் திப்படியே யைந்துவூத
சரிவரவே கடுஞ்சுன்னம் வங்கநீறும்
நாயவைத்து அப்பாலே வைத்துக்கொண்டு
நலமான ரசமதனை பதங்கமேற்றி
வாயவைத்து இச்சுன்ன மிடைபதங்கம் [ளே.
வகையாகச் சேர்த்துமே பொடித்துக்கொள்

தருசுச் சுன்னம்.

பொடித்துமே திராவகத்தா லரைத்துக்கொண்டு
பொருந்தவே வில்லைகட்டி ரவியில்வைத்து
நடித்துமே அஞ்சுசுன்னக் குகையில்வைத்து
நலமாகப் புடம்போடப் பூப்போல்நீறும்

கடித்துமே நாலுக்கு வீரமொன்று
கடுமையா யரைத்துமே துருசுமேலே
வடித்துமே பூசியே யுலரவைத்து
வகையாகச் சுண்ணுப்பு கவசம்போடே. கூடு

துருசுச் சுன்னத்தால் ரசமணி.

கவசமது போட்டுமே காயவைத்து
கதுவாரிப் புடம்போடக் கண்டார்நீறும்
துவசமது நீறெடுத்து விலாரிக்கிட்டு
துப்பறவாய் மூன்றுநாள் வைத்திட்டாக்கால்
கவசமது நீராகு மின்னீர்தன்னில்
நலமான சூதமது இட்டுக்கேளு
பவசமது கொதியிடவே வெண்ணையாகும்
பாங்காக வுருட்டியே பூகங்கேளே. கூசு

இரசமணியால் கமனஞ்செய்யவும் வேதையாடவும்.

பாகவே சூடனுட தீயில்வாட்டி
பாங்கான மணியுருட்டி வைத்துக்கொண்டு
சாகவே சாரணையை தீர்த்தாயாலல்
சங்கவரை நிமைக்குமுன்னே தாண்டியோடும்
வாகவே சூதமணி நாலுருக்கி
வகையான வொன்றுமேல் தங்கம்போடு
நாகவே நாகமது இடையேபோடு
நலமான களங்காகு தூற்றுக்கொன்றே. கூள

தூறுதா னவலோகம் பழுத்துப்போகும்
நுண்மையாய் லோகமெல்லாந் தங்கமாகும்

கூறுதான் தொட்டதெல்லாம் தங்கமாகும்
கருவான கருவிதுதான் தங்கமாகும்
சேறுதா னிக்கருவைக் கண்டுதேறு
ஜெயமான வாதவித்தை கொல்லைக்கீரை
நாறுதான் பெரியோர்க்கு இந்தநூலை
நலம்பெறவே கொடுத்திடவே சித்தியாமே.

தங்கச்சுன்னம்.

சித்தியா நாகமது பலமுமொன்று
சிறப்பான தங்கமது பலமுமொன்று
பத்தியா யிவ்விரண்டு முருக்கிப்பார்த்தால்
பரிவான புட்டுபோ லிருக்கும்பாரு
நத்தியா மண்டோடு மிடையேசேர்த்து
நலமாக அரைத்தூதச் சுன்னமாகும்
வத்தியாங் கடுஞ்சுன்னந் தங்கச்சுன்னம்
வகையான நாலுக்கு ஒன்றுசேரே. கூசு

தங்கச்சுன்னத்தை துருசுக்குக் கவசமிட்டு
செமபில் வேதையாட.

ஒன்றுமே வீரமது கூட்டிக்கொண்டு
வுறவாக அரைத்துமே துருசுக்கப்பி
நன்றுமே யூதிடவே சுன்னமாகும்
நலமான வுமிநீரில் குழைத்துக்கொண்டு
பன்றுமே செம்பிலே தடவிவாட்ட
பழுக்குமே யெட்டரைதான் ஆணிக்கொக்கும்
வண்டுமே செலவுசெய்து காயசித்தி
வளமாகப் பண்ணியே தேறிடாயே. க00

துருசுக்களங்கு.

தேறிடவே துருசியொரு களங்குசொல்வேன்
தெரியாமற் பச்சையென்று மயங்கவேண்டாம்
கூறிடவே நீலகண்டன் பலமோவொன்று
குறிப்பான கெந்தியது பலமுமுக்கால்
நாறிடவே சூடன்பல மரைதான்போடு
நலமான சவ்வீரங் கால்தான்போடு
வாறிடவே யிம்மூன்றுந் தண்ணீராலே
வளமாக அரைத்திடவே மெழுகுமாமே. க0க
மெழுகாகுந் துருசின்மே லப்பிப்போடு
மேன்மைபெற ரவிதனிலே யுலரவைத்து
நழுகாமல் சுண்ணாம்பு உப்புநேரே
நலம்பெறவே அரைத்துமேற் கவசம்போடு
வழுகாம லதன்மேல்மண் கவசம்போடு
வகையாகக் காடையென்ற புடத்திற்போடு
தழுகாமல் சுண்ணாம்பைத் தள்ளிப்போடு
தகைபோலே யுள்மருந்து கறுக்கும்பாரே. க0உ

கொறுக்கு வெள்ளி.

கறுகுகின்ற மருந்தெடுத்து ரவியில்தாக்க
கனமாக விடைக்கிடைதான் கொடுத்துத்திரு
மறுக்குகின்ற ஊதியே யெடுத்துக்கொள்ளு
மயமாகுஞ் செம்புதான் கட்டிப்போகும்
தறுக்குகின்ற செம்பெடுத்து அப்பால்வைத்து
தண்மையாய் வெள்ளியது பலமுமொன்று

வறுக்குகின்ற வங்கத்தைக் கொடுத்துரூதி
வலுமையாய் வெள்ளிதனைத் தகடாய்த்தட்டே.
தகடுதட்டி கெந்தியது பலமுமுக்கால்
தனியான வீரமது பலமுங்கால்தான்
அகடுதட்டி கற்றுழ மஞ்சள்பாலால்
அரைத்துமே மதிதனிலே கவசங்கட்டி
பகடுதட்டி பத்தெருவிற் புடத்தைப்போடு
பண்பாக அஞ்சுதரம் புடத்தைப்போடு
நகடுதட்டி வெள்ளியது நொறுங்கிப்போகும்
நலமான கெந்திமுக்கால் வீரங்காலே. கoச

வெள்ளிக்களங்கு மதைவேதையாடுதலும்.

வீரங்கால் நொறுங்கினதோர் வெள்ளியெல்லாம்
விளம்பவே அரைத்துமே வட்டுபண்ணி
தாரமாம் புடமிட்டு எடுத்துக்கொண்டு
தப்பாம லுருக்கவே களங்கமாகும்
காரமாய்க் களங்குநால் நிறுத்துக்கொண்டு
கருவான துருசினுட செம்புலன்று
வாரமாய்க் கொடுத்துமே யொன்றுப்சேர்த்து
வண்மையா யுருக்கிடவே களங்கமாமே. கoஞ

களங்கத்தை வெள்ளூற்று யூதிக்கொண்டு
கனமான ஆறுவய துள்ளபொன்னை
வளங்கத்தை மட்டமிடை சேர்த்துரூது
வகையாக ஆணிக்கஞ் சரையேகாணும்

நளங்கத்தை யிச்செம்பு அயத்தில்சேர்த்தால்
நலமாக வேழாகும் நடக்கும்பாரு
தளங்கத்தைச் சிந்தூரம் பண்ணிநக்கால்
தப்பாது நாலாறு காணுந்தானே. க0சு

கல்லுப்புக்கட்டு.

காணுமே கல்லுப்புக் கட்டுக்கேளு
கவமான பூநீறு ரொம்பவாங்கி
வாணுமே நாலுக்கு எட்டுதண்ணீர்
வகையாக விட்டுமே கரைத்துக்கொண்டு
தாணுமே கற்சட்டி தனிலேகாச்சி
தயவாக வுப்பாக விழுகும்பாரு
பாணுமே ஆப்பையால் துழாவிக்காச்ச
பண்பாகப் பூநீறு பொடியாய்ப்போமே. க0எ

பொடியாகப் போனவுட னெடுத்துக்கொண்டு
போக்கான சட்டிதனில் படியிரண்டு
வடிவாகக் கல்லுப்புக் கட்டியாக
வகையாக பதிந்துமே அதன்மேல்நீறு
கடியாக அமத்தியே போட்டுக்கொண்டு
கனமாக அடுப்பேற்றி நாலுஜாமம்
தடியாக கமலாக்னி காடாக்னியாக
தப்பாம லெரியிட்டு இரக்கிடாயே. க0அ

கல்லுப்புக் கட்டுமதை வேதையாடுதலும்.

இரக்கியே யெடுக்கையிலே தந்தம்போலா
மேத்தமாய்க் கசிவற்றுத் தானிருக்கும்

அரக்கியே யுப்பதுதா னலுங்கூட்டி
அன்பாகத் தங்கமொன்று நாகமொன்று
கரக்கியே தங்கமது உருகும்போது
கனமான நாகத்தை யொக்கச்சேர்த்து
வரக்கியே புட்டுப்போல் வெள்ளையாகும்
வகையான முன்னுப்பி லரைத்துக்கொள்ளே.
அரைத்துமே வில்லைபண்ணி ரவியிற்காய
அன்பாகக் காடையென்ற புடத்திற்போடு
தரைத்துமே செம்புருக்கு பத்திலொன்று
தண்மையாய்க் கொடுத்திடவே பத்துமாற்றும்
வரைத்துமே வுப்புக்குங் காவிக்கேகா
வன்பான களங்கதுதான் வகையாய்ப்பாரு
கரைத்துமே குன்றியிடை மண்டலமேகொள்ள
கற்றாணும் தேகமெல்லாம் கண்டுபாரே. கக0

இன்னுரிப்படி கெடுதல்.

கண்டுஉப்பு தன்னைவிட்ட வாதிகெட்டான்
கடிசான மனதைவிட்ட ஞானிகெட்டான்
பெண்டுபிள்ளை தன்னைவிட்ட ஆண்டிகெட்டான்
பேராசை யுள்ளதொரு மனிதர்கெட்டார்
பண்டுபெண்ணை யிச்சித்தார் பேர்கள்கெட்டார்
பரிகாரந் தெரியாத வித்தியர்தான்கெட்டார்
கண்டுகண்டு உடலறியான் தன்னைத்தொட்டு
கனியான லோகமெல்லாம் கெட்டார்தாமே.

உப்பைக்கட்டாமல் கெட்டுப்பொகாதே கட்
டில் வாதஞ்சித்தி.

கெட்டுமே போகாம லுப்பைக்கட்டு
கெடியான வாதமெல்லாம் கைக்குள்ளாகும்
பட்டுமே அரக்கில்நின்ற சாயம்போல
பார்த்தாக்கா லேதாவ தொன்றுதோற்றும
விட்டுமே வாதங்கள் பொய்யோவென்பான்
விடுபட்ட ஞானத்தா லெல்லாமாகும்
கட்டுமே கெட்டலேந்து துயரிலாழ்ந்து
தாக்கான மனம்புண்ணுய் மாண்டார்தாமே.

உப்புகட்டி களங்குசிந்தூரஞ்செய் வெள்ளி
தொறுக்கி வேதையாடி.

மாண்டுமே போகாம லுப்பைப்பாரு
மயங்காம லாடதுபோல் முழிக்கவேண்டாம்
பாண்டுமே யமனுக்கு ஆளாகாதே
பதறுமல றுதலிபோ லழவும்வேண்டாம்
காண்டுமே களங்குசிந் தூரம்பண்ணு
கருணைபெற நன்மையா யுண்டுதேறு
வாண்டுமே வெள்ளியது தொறுக்கியாடி
வகையான நவலோகம் பழுக்கும்பாரே. ககக

கெந்திசுத்தியு மதுசெம்பாதலும்.

பழுக்கவே கெந்தகத்தின் செம்புசொல்வேன்
பழுதாகப் போகாமல் சொல்லக்கேளு
நழுக்கவே நாகமது பலமோபத்து
நலமாகத் தக்காளிச் சாற்றுலாட்டி

வழுக்கவே சட்டிதனில் பாலேவிட்டு
வளமாகச் சட்டியிலே கோணிசுற்றி
கழுக்கவே கெந்தகத்தை பரப்பிவைத்து
கனமாக அடுப்பேற்றித் தீயைமூட்டே. ககச

கெந்திரசமாத்திரை.

மூட்டியே பெரியிடவே யுருகிவீழும்
முக்கியமாய் மணிபோலே யிரங்கும்பாரு
ஆட்டியே யிப்படியே அஞ்சதாகும்
அன்பான கெந்தியது மணிபோல்சுத்தி
காட்டியே பலமொன்று நிறுத்துக்கொள்ளு
கனமான சூதத்தைப் பதங்கம்பண்ணி
வாட்டியே கெந்தியிடை பஸ்பஞ்சேர்த்து
வலுமையாய் மூலைப்பாலி லரைத்திடாயே
கெந்திரச மாத்திரையா லோகங்கள்செம்பாகும்.
அரைத்துமே மிளகுபோ லுண்டைபண்ணி
ஆண்மையாய் ரவிதனிலே யுலரவைத்து
கரைத்துமே லோகத்தி லிடைக்கிடையேயிய
கனமான லோகமெல்லாம் செம்பாய்ப்போகும்
நரைத்துமே நாகமது செம்புமாகும்
நலமான தங்கமது செம்புமாகும்
வரைத்துமே லோகமது செம்புமாகும்
வளமான காரியம் செம்புமாமே. ககசு

கெந்தியால் காரியச்செம்பு மதைவேதையாடலும்.

காரியங் கற்றுழை நீரில்சாய்க்க
கனமான சுத்தியாம் கெந்தியைத்தான்

மாரியே யிடைக்கிடைதா னீந்தபோது
மயிற்கழுத்து வர்ணமா மூன்றுங் கூட்டி
சாரியாய் செம்பிடைக்கு யீய்ந்துளுத
சரியான செம்புமிகக் கட்டிப்போகும்
வாரியாம் நொறுங்கினதோர் வெள்ளிதன்னில்
வகையாக நாலுக்கு ஒன்றுசேரே. ககள

கெந்தியால் நாகச்செம்பு மதைவேதையாடலும்.

ஒன்றுமே சேர்த்தவுட னூறுகாணும்
உத்தமனே பத்துக்கு ஒன்றுதங்கம்
கன்றுமே சேர்த்தூத வேழுகாணும்
கருணைபொரு ளிதுதானும் கருவாய்ப்பாரு
கென்றுமே கெந்திரச நாகத்திற்போட
கெடியாகத் தூளாக்கிக் கரிபோலாகும்
வன்றுமே தூளெல்லா மெடுத்துகொண்டு
வகையான செம்புதனில் கொடுத்துளுதே.ககஅ

ஊதிடவே செம்புதான் காந்தியாகும்
உத்தமனே நொறுக்குவெள்ளி யெட்டிரண்டு
காதிடவே சேர்த்தூதத் தங்கம்போலாம்
கருவான எட்டுக்குத் தங்கமொன்று
பாதிடவே சேர்த்துமே பார்த்தால்கேளு
பதிவான தங்கமா மிந்தவித்தை
வாதிடவே வாதிதான் செய்யமாட்டான்
வளமான அவசரத்தில் கெட்டிப்போவான்.

அயச்செம்பு மதைவேதையாடலும்.

கெட்டுமே போகாம லயத்தில்சேர்த்து
கிருபையா யிடைசமனு யரைத்துக்கொண்டு
பட்டுமே மண்மரவில் புடத்தைப்போடு
பரிவான கறுப்பாக விருக்கும்பாரு
கட்டுமே செம்புருக்கி அதிலேதாக்கு
கடிதான தாம்பூரம் கட்டிப்போகும்
பிட்டுமே வொளியென்ன கறுக்கும்பாரு
புரளாமல் நொறுக்குவெள்ளி கொடுத்திடாயே.

கஉ0

கொடுத்திடவே நாலிலொன்று கறுப்பாய்நிற்கும்
குணமான தங்கத்தை யெட்டிலொன்று
அடுத்திடவே தங்கமே கொடுத்துஊத
அன்பான தங்கமாம் தகடுதட்டி
கடுத்திடவே புடம்போட அருகுகட்டி
கனமாக யிரங்குமது ஓட்டிரட்டி
வடித்திடவே யிம்முறைபோ லெல்லாம்பாரு
வடிவான கருவதுதான் வகையாய்ப்பாரே.கஉக

வாதிகள் மடைமையால் கெந்தகத்தில் தனிச்செம்
பெடுக்கப் பார்த்தல்.

வகைபாரு கெந்தகத்தின் தனிச்செம்பென்று
வலிமையாய் மயங்குவா ருலகவாதி
தகைபாரு ஆசுடனே கூடச்சேர்த்து
தண்மையா யிரங்குமது கெந்திச்செம்பு

தொகைபாரு செம்புருக்கித் தாக்காவிட்டால்
தூதாகத் தங்கமில்லை வாதமில்லை
தகைபாரு தனித்தனியே கெந்தகத்தில் [ரே.
தானெடுப்பே னென்றுசொல்லி அலைவார்பா
கெந்தகத்தை செம்பில்சேர்த்து செம்புசெய்ய
வேண்டு மெனல்.

அலைந்துமே கெந்தகத்தின் சுத்திபண்ணி
அடைவாகத் தனிச்செம்பு எடுப்போமென்று
வலைந்துமே யுருக்கிடவே யோடிப்போகும்
வகையான மூலிகைதான் தப்பித்தென்று
கலைந்துமே வோடியே காட்டில்தேடி
கருத்தழிந்து அலைந்தலைந்து கெட்டாரப்பா
தொலைந்துமே கெந்தகத்தின் செம்பெடுக்க
தொலையாத செம்புருக்கித் தாக்குவாரே. கஉங

தாக்கினல் கெந்தியுடன் செம்புதானும்
தண்மையாய்ப் படிசெம்பி லேநிப்போகும்
வாக்கினு லிதுவேதை ஆடும்பாரு
வகையான ஆனைதான் பிடித்தாப்போல
ஆக்கினல் பழக்கமுட னானைதானும்
அன்பாகக் காடுதனில் கட்டிவைக்க
வாக்கினல் பழகாத ஆனைவந்து
பழகவே பிடித்ததுவே பண்பாய்ப்பாரே. கஉச

தங்க கரிபண்ணி யேதையாடச் சொல்லியது.

பண்பாகத் தங்கமிடைக் கிடையேயிய
பரிவான தங்கமது கரிபோலாகும்

தண்பாக மதிபுருக்கி யெட்டிலொன்று
தாக்கிடவே தங்கமாம் நயப்புமாகும்
வண்பாக பிதைவிற்று செலவுசெய்து
வண்மைபெற யோகநிஷ்டை வலுவாய்ப்பாரு
திண்பாக வாதத்தில் கெட்டேனென்று
திரமாக வொன்றுமில்லை யென்றெண்ணாதே.
வாதத்தை சாத்திரத்தை யூன்றிப்பாராமல் நிந்தியாதே.
எண்ணாதே கைபாகம் விட்டுப்போட்டு
எருதைப்போல் துள்ளியே வீழ்கவேண்டாம்
கண்ணான சாஸ்திரத்தி லூன்றிப்பாரு
கருத்தெல்லாந் தான்பிரியும் தங்கவித்தை
பண்ணுத புரட்டுகள்தான் மெத்தவுண்டு
பரிவான வுலகத்தில் வாதிபேச்சு
திண்ணுகச் சுடவேண்டாம் நூலைப்பாரு
திரமாகக் கருத்தெல்லாம் சரக்கில்பாரே. கஉசு

சாரக் கட்டு.

சரக்கென்ற சாரமது கட்டுசொல்வேன்
சகலசித்தி ஆடலாம் நாகம்சாகும்
பரக்கென்ற அண்டோடு ஊதிப்போடு
பகரவே படிரெண்டு சட்டியிட்டு
நாக்கென்ற சீனத்தை யூதிநீற்று
நலமான படியொன்று அதன்மேலிட்டு
வாக்கென்ற அதன்பேரில் சாரக்கட்டி
வலுவாக அதன்பேரில் பதித்துவையே. கஉள

வையப்பா அதன்பேரில் சினச்சுன்னம்
வகையாக முன்போல அமிழ்த்திவைத்து
கையப்பா அதன்பேரில் அண்டச்சுன்னம்
நன்மையாய் முன்சொன்ன படியேபோடு
கையப்பா இருஜாம மெரித்துவாங்கி
கருணைபெறக் கட்டியாய் கந்தமாகும்
மெய்யப்பா உருகியே மணியாய்நிற்கும்
மேன்மைபெறச் சொல்லுதற்கு இல்லைதானே.

நாகக்கட்டி மத்தால் தங்கப்புட்டி மத்தால் வேதையும்.
இல்லையென்று போகாம லிலுப்பைநெய்யி
லிதமாக மூவேழு தரமும்சாய்த்து
கல்லையென்ன நாகத்தை யெடுத்துக்கொண்டு
கனமாக நாகத்தை யுருக்கிக்கொண்டு
தில்லையென்ற சாரத்தை மேலேபோட
திரமாக புகையடங்கி மூழுக்கட்டாச்சு
வல்லையென்றுந் தங்கத்தி னிடையேசேர்க்க
வகையான தங்கமது புட்டதாமே. கஉசு

புட்டதாம் செம்புதனில் பத்துக்கீய
புடம்போடத் தங்கமா மொளியோமெத்த
கட்டமில்லை செலவுசெய்து யோகம்பாரு
கனமான சிவசொத்து வறுமையாக
நட்டமில்லை யென்றுசொல்லி செலவிடாதே
நலமான சிவிகைதனி லேறவேண்டாம்
கட்டமில்லை யென்றுமன தொடுங்கியேதான்
கயவாக விருந்துகற்ப மூண்டிடாயே. கஉ0

துருசுக் களங்கு.

உண்டிடவே துருசினுட களங்குகேளு
உற்பனமாய் துருசியது பலமிரண்டு
கண்டிடவே கெந்தியது பலமிரண்டு
கலரவே பழச்சாற்று லரைத்துக்கொண்டு
திண்டிடவே யிருஜாம மாட்டிவாங்கி
திமாக வில்லைதட்டி காயப்போட்டு
வண்டிடவே சுண்ணும்பு கவசம்செய்து
வலுவாக மண்கவச மேலேசெய்யே. கஙக

செய்யவே காடையென்ற புடத்திற்போடு
சிறப்பாகக் களங்காக விருக்கும்பாரு
நய்யவே செம்புவைத்து உருக்கியாட்டு
நலமாக துருசிகுரு யிடைகொடுத்து
பையவே செம்புகட்டிப் போகும்பாரு
பகரவே தகடாகத் தட்டிக்கொண்டு
கையவே அரைப்பொடியாய் ராவிக்கொண்டு
கலமான தாளகத்தை யிடையேசேரே. கஙஉ

இடைசேர்த்து பழச்சாற்றுல் நாலுஜாம
மிழுத்தரைத்து வில்லையாய்த் தட்டிக்கொண்டு
நடைசேர்த்து ரவிதனிலே காயப்போடு
நலமான சுண்ணும்பு சீலைசெய்து
கடைசேர்த்து சேவலென்ற புடத்தைப்போடு
கருணைபெற யிருக்குமே களங்கமாக
கடைசேர்த்து செம்புருக்கி யிடையேதாக்கு [வேன்.
தண்மையாய் செம்பொளியை யென்னசொல்

சொல்லவே நொறுக்குவெள்ளி பத்திலொன்று
சுயமாகக் கொடுத்திடவே எட்டுமாற்று
கல்லவே வறுத்தவுப்பு நாலுபங்கு
கனமாக செங்கல்மா வொன்றுகூட்டி
நல்லவே புடமூன்றில் தங்கமாகும்
நவின்றதொரு சிந்தூரம் பண்ணவேண்டி
வல்லதொரு திராவகத்தா லரைத்துமேரு
வைத்திடவே சிந்தூர மாகும்பாரே. க௩௪

சமஸ்தகுருவும் செம்பைக்கட்டி வெள்ளியில் கொடு
க்கவேண்டியதென்பது.

சிந்தூர மானதெல்லாம் செம்பில்தாக்கு
சிறப்பான களங்குவகை புடம்போட்டாக்கால்
நந்தூரம் குகையிலிட் டுருக்கவேண்டாம்
நலமான செம்புருக்கி அதிலேதாக்கு
பந்தூர மெழுக்கெல்லாம் செம்பில்தாக்கு
பகரவே செம்புகட்டித் தங்கமாகும்
வந்தூர நொறுக்குவெள்ளி தனில்கொடுத்தால்
வகையான தங்கமாம் நாட்டிப்பாரே. க௩௫

நாட்டிப்பார் வெள்ளியுடன் செம்பைசேர்த்து
நலமான குருக்கொடுத்தால் ஜயமாகாது
காட்டிப்பார் தனிச்செம்பில் கொடுத்தால்கட்டும்
கருணைபெற வெள்ளிதனில் பழுக்கும்வேதை
வாட்டிப்பா ரினமருந்து கொடுத்தால்தேறும்
வகையான பாகமெல்லாம் செம்புக்காகத்

காட்டிப்பார் செம்பதுவங் கட்டிப்போனால்
சகலசித்து மாடலா மறிந்துபாரே. கஉசு
சுன்னத்திற்கு இரசபதங்கஞ் சேராவிட்டால்
காரமில்லை கட்டுகள் முதலியதாகாவெனல்.
அரிந்துபார் சுன்னமது ஆச்சுதென்றால்
அன்பான ரசபதங்கம் சேராப்போனால்
கரிந்துமே சுன்னத்தில் காரமில்லை
கடுமையில்லை கொடுமையில்லை கண்டுகொள்ளு
நரிந்துமே கட்டுவகை நீத்தனங்கள்
நலமான கட்டில்லை வார்கோல்கட்டு
பரிந்துமே யிதையறிவான் புத்திமான்கள்
பரிசுகெட்ட வாதிதா னறியான்பாரே. கஉள
புறட்டுவாதிகள் செய்கையும் அவர்சிஷ்யர்களியல்பும்.
பாரேநீ வெறுஉப்பை சுன்னம்பண்ணி
பதைத்துமே யொருவருடன் காட்டிக்காட்டி
ஆரேநீ நான்பெரியோ னென்றுசொல்லி
அடைவாக மெச்சியே பணம்பிடுங்கி
காரேநீ பனிரெண்டு வருஷங்கார்த்தால்
காட்டுவே னென்றுசொல்லி அகடம்பண்ணி
வாரேநீ யொருவருக்கு ஆசைசொல்லி
வகையாக அலைந்துகெட்ட சண்டிமாடே கஉஅ
சண்டிதா னுசையா லலைந்துகெட்டு
சலுதியாய் வாதந்தா னில்லையென்று
மூந்தியே நான்தந்த பணத்தைத்தாரும்
முக்கியமாய்க் கேட்கவே சண்டைபட்டு

கண்டியே யவனிடத்தி லொன்றுமில்லை
தயவாக யிவனிடத்தி லொன்றுமில்லை
கண்டியே யிருவருந்தான் மயிர்பிடித்து
கனத்தசண்டை போட்டுமே யெதிர்ப்பட்டாரே
எதிர்ப்பட்டு தலையுடைத்து நிற்கும்போது
ஏழையாம் வாதியங்கே கிட்டவந்து
கதிர்ப்பட்டு போகவொரு அய்யாவந்தார்
கனமான பொன்செயநான் கண்டேனென்று
வதிர்பட்டு நான்செய்து தாரேனென்று
வல்லமையாய் புத்திமதி சொல்லிப்பின்பு
அதிர்ப்பட்டு சரக்குவகை கொண்டாவென்று
அடைவாக அரைத்துமே புடத்தைப்போட்டார்
புடம்போட நெருப்பிலே யோடிப்போக
பேய்போல முழித்துமே யோடிப்போனார்
கடன்போட்டு மாலுடன்கள் கெட்டுவாதம்
கனக்கத்தா னையித்திகளோ சாஸ்திரவாதி
நடம்போட்டு நிழ்மூடன் வார்த்தைகேட்டு
நலமறியார் மானுடரே கொஞ்சம்புத்தி
வடம்போட்ட தாயிருக்க பிள்ளைபோன
வலுவொக்கு முட்டாளாம் வாதியார்க்கே.

யூகிநூல் பார்த்தால் மூடராகாரெனல்.

முட்டாளாய்ப் போகாமல் யூகிநூலை
விருப்பமாய் பார்த்தாக்கால் தோணும்பாரு.

கட்டாளா சாஸ்திரத்தைப் படித்துத்தேறு
கடைகெட்ட மானுடரே சுடவும்வேண்டாம்
நட்டாளா சங்கருக்கு சொன்னபுத்தி
நலமறிந்து இனமறிந்து நாடிப்பாரு
தட்டாளா நூல்வினைய மறிந்துகொள்ளு
சாஸ்திரத்தை பலநாளும் சதுராய்ப்பாரே.கசஉ
சகலசரக்குகளும் கட்டும்வகை ஜயநீரில்சீனச்
சுன்னம்சேர்க்க.
சதுராக வின்னமொரு கருவைக்கேளு
சமுத்துடனே சீனத்தின் சுன்னம்பண்ணி
நதிராக வெருக்கம்பால் படிதானென்றில்
நலமாகப் போட்டுவைக்க முறிந்துபோகும்
கதிராக நாளெழில் முறியும்பாரு
கனஆல காலவிஷம் தன்னைப்போலாம்
வதிராக லிங்கத்தைத் தோய்த்துப்போடு
வளமான தாளகத்தை தோய்த்துப்போடே.
உப்புகட்ட கயசம் செய்முறை.
போடவே வெள்ளைபாஷா ணத்திலேநி
பொறுமையாய் தொட்டிமுதல் முருதார்சிங்கி
ஆடவே வெடியுப்பு கல்லுப்போடு
ஆண்மையாம் சாரமிந் துப்புகூட
வாடவே யெட்டுநாள் ரவியிற்போட்டு
வளமான வுப்புக்குக் கவசம்கேளு
காடவே கடல்நுரையை யூதிக்கொண்டு
கடிதான சீனத்தை யூதிக்கொள்ளே. கசச

பாஷாணம்கட்ட கவசத்தில் இரசபதங்கஞ்
சேர்க்க வேண்டுமெனல்.

ஊதியே கடல்நுரையும் சினம்நேரே
உத்தமனே அரைத்துஅதை யூதிக்கொண்டு
சாதியே யுப்புவகை யெல்லாம்வாங்கி
சரியாகப் போட்டிடவே கட்டிப்போகும்
வாதியே பாஷாணம் வகைக்கு அஞ்சு
வகையான சினத்தை யூதிக்கொண்டு
காதியே ரசபதங்க மிடையேசேர்த்து
கடுமையா யரைத்துமண் மறைவிற்போடே.

போட்டுமே பாஷாண மேலேஅங்கி
புகழாகப் போட்டுமே ரவியிற்காய
ஆட்டுமே சுண்ணும்புக் கவசம்போடு
அடைவாகப் புடமிடவே யெல்லாந்தீரும்
காட்டுமே தாளகமு நீறிப்போகும்
கடிதான வெள்ளைபா ஷாணநீறும்
வாட்டுமே சொன்னதெல்லாம் நீறிப்போகும்
வளமான அங்கியென்ற அரசன்தானே. கசசு

கவசசுன்னங்கட்கு ரசபதங்கஞ்சேராட்டால் குற்றமு
ண்டு, சேர்ந்தால் வாதவயித்தியம் பலிக்கும்.

அரசன்முன் ரசபதங்கம் சுன்னத்தோடே
அடைவாகச் சேராதே போலுற்கேளு
கரசன்முன் பாஷாண நீருகாது
கனமாகக் காரமில்லை குற்றமுண்டு

தரசன்றான் சீனமென்ற ராஜாவோடே
தனிப்பான சூதமென்ற பதங்கம்சேர்த்து
விரசன்றான் சகலமுந்தா னீறிப்போகும்
வியாதிக்காம் வாதமாம் வகையாய்ப்பாரே.

சாத்திரம்படியா வாதிகள் நாகமடைவர்.

பாராமல் சுட்டதொரு வாதிக்கப்பா
பலனில்லை தோஷங்கள் மிகவுமுண்டு
நேராகச் சிவனைத்தான் தூஷித்தோர்கள்
நெடுநாளு நரகத்தி லெய்துவார்கள்
காராக வாதத்தைத் தூஷித்தோர்கள்
கருணையாய் ரவிதனிலே நரகமெய்தும்
காராகச் சுன்னவகை தெரியாமூடர்
காற்பணமுங் கரிச்சுட்டு மாளுவாரே. ௧௪௮

சீனச்சுன்னத்தை சித்தர் மறைத்ததும் இதை யார்க்குஞ்
சொல்ல வொண்ணாததும்.

மாளாம லிருக்கவல்லோ சீனச்சுன்னம்
மரைத்துவைத்தார் பதினெட்டு பேருமப்பா
கேளாம லொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
கொடுத்தாக்கால் ரவிகோடி நரகமெய்தும்
பாளாகப் போகாமல் யூகிசொல்லை
பக்குவமாய் நம்பினா லெதுவுமுண்டு
வாளாமல் சிவனுமைக்குச் சொன்னபோது [னே.
வளமையாய்க் கேட்டறிந்தா ளுமையாள்தா

பித்தளைச்செம்பு.

உமையவள்தான் சிவனையுமே நோக்கிப்பார்த்து
உண்மையாய் சிவன்வடிவ மானசெம்பை
தமையாகச் சொல்லுமென்று கேட்கும்போது
தண்மையாய்ச் சிவன்சொன்ன வார்த்தைகேளு
கமையான காகதோண்டி பித்தளையைவாங்கி
கனமாக வுருக்கிடவே யுருகும்பாரு
வமையான தகடாகத் தட்டிக்கொண்டு
வண்மையாய்ப் பலமொன்று நிறுத்துக்கொள்

[ளே. கருக

நிறுத்துமே சினமது சுன்னம்பண்ணி
நிலையான பலமொன்று நிறுத்துக்கொண்டு
நறுத்துமே வீரமது பலமுமொன்று
நலமாக விரண்டுமொன்று யரைத்துக்கொண்டு
பறுத்துமே தகடுமேற் பூசிபூசி
பண்பாக அஞ்சுபுடம் போட்டாயானால்
வறுத்துமே யதையுருக்க அலரிப்பூப்போல்
வகையாகத் தானிருக்கும் வண்மைகேளே.கருக

பித்தளைச்செம்பின் மகிமை.

வண்மையாய் செம்பெடுத்து காதிற்போட
வகையாகக் குண்டலங்கள் சொகுசாய்ப்பண்ணு
நன்மையா யிச்செம்பு தரித்துக்கொண்டு
நலமாக விருந்தாக்கா லெல்லாஞ்சித்தி
கன்மையா யோகசித்தி காயசித்தி
கடிதாக விருக்குமது கண்கொள்ளாதே

துன்மையாய் புடம்போட்டு குடவன்றன்னை
துருசாக வுருக்காமல் சேதிகேளே. கருஉ

பித்தளைச்செம்பு வேதை.

சேதிகேள் கொறுக்குவெள்ளி பலமூநாலு
சுளுக்கான புடம்போட்ட செம்புஒன்று
வாதிகே ளிரண்டுமொன்று யுருக்கிக்கொண்டு
வகையாக பத்துக்கு ஒன்றுதங்கம்
சாதிகேள் கொடுத்துருக்கி யூதிப்போடு [வேன்
சாத்தரியப் பொன்னெளியை யென்னசொல்
பாதிகேள் மதியணிந்தார் சொன்னமார்க்கம்
பகரரிது பித்தளையின் செம்புதானே. கருங
பித்தளைச் செம்பை சித்தர்கள் பரமசிவத்தை வே
ண்டி தெரிந்துகொண்டு மகிமை யடைந்தது.
பித்தளையின் செம்பெடுக்க சித்தரெல்லாம்
பேர்பெரிய சித்தரெல்லா மேங்கியேங்கி
கத்தாவின் தன்னிடத்தில் கேட்டுக்கொண்டு
கனகமய மாக்கியே கொண்டுவிற்று
நித்தான செலவுதனை பண்ணிநாளு
நிஷ்டைகளும் யோகங்கள் பார்த்துத்தேறி
பத்தான பதியுடனே யிருந்தார்சித்தர்
பதிவான ஆயுட்கள் வளர்த்திட்டாரே. கருச

பித்தளையிலுள்ள நாகம்போலல் செம்புகட்டிநிற்கும்.

வளர்த்திட்டார் செம்புடனே நாகஞ்சேர்த்து
வளர்ந்துமே பித்தளையா யிருக்கும்பாரு

களர்த்திட்ட நாகமது ஓடும்போது
கனமான செம்புகட்டி யூரல்போகும்
நளர்த்திட்ட செம்புடனே நாகநின்றூல்
நலமான தங்கம்வெள்ளி யுடைந்துபோகும்
பளர்த்திட்ட சீறலது ஓடிப்போனல்
பதமான மதிபழுத்துத் தங்கமாமே. கருடு

நாகங்கட்டு முறை.

தங்கமாம் நாகத்தைக் கட்டவென்றூல்
தளையான எண்ணெய்க்கக்கிப் போனல்கட்டும்
அங்கமாம் புகையுண்டு சீறலுண்டு
அடைவான தங்கத்தில் சேர்ந்தால்கேளு
பங்கமாம் சீறலறும் புகைச்சலில்லை
பதருமல் லோகத்தில் பழுக்கும்பாரு
சிங்கமாம் நலமாகும் வர்ணமாகும்
சித்தியா முத்தியாம் தெளிந்துபாரே. கருசு

நாகங்கட்ட வகையறியார் மயங்கல்.

தெளிந்துமே சிரிதுபேர் நாகங்கூட்டி
திட்டமாய் செம்புதனில் பழுக்குமென்று
அளிந்துமே செம்புதனில் கொடுத்துப்பார்த்து
ஆதியாந் தங்கமென்று மயங்கவேண்டாம்
களிந்துமே தங்கமிட நாகஞ்சாகும்
கனமான வேதமது சொல்லும்புத்தி
தளிந்துபே ராசைகொண்டு தாவித்தாவி
தனம்விரயப் பட்டுமே அலைவார்பாரே. கருள

நாகசுத்தி.

அலேயாம மின்னமொரு சேதிகேளு
ஆதியாம் நாகமோ பலமோபத்து
கலேயாமல் ரசமொன்று உருக்கிக்கொண்டு
கருணையாய் வாயலுப்பை கவசங்கட்டி
தலேயாகப் பத்தெருவிற் புடத்தைப்போட
தண்மையாய் நாகமது கடுபோகும்
வலேயாக விப்படியே நாலுபோடு
வலுமையாய் நாகமது குறையும்பாரே. கருஅ

குறையுமே யென்றுசொல்லி மயங்கவேண்டாம்
குணமாக வுழுதவன்றன் கணக்குப்பார்த்தால்
அறையுமே யவன்மட்டும் புசிப்புண்டாகும்
ஆண்மையாய் ரசவாதம் செய்தால்மன்னன்
மறையுமே சகலஜனம் பிழைத்துப்போகும்
மார்க்கமாம் ஞானத்துக் கதுதான்வேரு
பரையுமே புத்தியினல் பார்த்துத்தேறி
பருவமாய் நிஷ்டைதனி லிருந்திடாயே. கருக

76—மு

ஊத்தின்விபரம்.

இருந்திடவே மேலூத்து நீர்கள்சாகும்
இதமான சுன்னம் கடுங்காரமாகும்
நருந்திடவே கீழூத்து நீர்களுண்டாம்
நலமாகக் கண்டுகொள்ளு உருக்குமார்க்கம்
கருந்திடவே யியமறு மார்க்கங்கேளு
கனமான மேலூத்து ஆட்டெலும்பு

பருந்திடவே வுமையவள் யூகிக்குச்சொன்ன
பண்பான பரிசுஇது பார்த்துத்தேறே. கசூ0

சாரஜயநீர்.

பார்த்துமே சாரமது பலமிரண்டு
பக்குவமாய் பூநீறு பலமிரண்டு
கார்த்துமே யிவ்விரண்டும் சேர்த்தரைக்கக்
கடுமையாய் தண்ணீரு மாகும்பாரு
நார்த்துமே வீரமது காசுஒன்று
நலமான பச்சை கற்பூரமொன்று
வார்த்துமே பீங்கானில் பனியில்வைக்க
வகையாக ஜயநீரு மாகும்பாரே. கசூக

காகக் கட்டு.

ஆகுமே ஜயநீரை யப்பால்வைத்து
மயங்காம லண்டமது ஐம்பத்தொன்று
ஆகுமே மஞ்சளென்ற கருவைவாங்கி
அடைவாகச் சட்டியிட்டு வறுக்கக்கேளு
ஏகுமே தயிலமாம் தயிலத்தில்தா
னிதமாக விலுப்பெண்ணெய் கூடவிட்டு
பாகுமே தயிலத்தை வடித்துக்கொண்டு
பதறாமல் மேற்பொடியை சொல்லக்கேளே.
சொல்லக்கே ளப்ரேகம் பலமிரண்டு
சுருக்கான வீரமது பலமிரண்டு
கல்லக்கேள் கல்வத்தில் முலைப்பாலாலே
கடுமையா யரைத்திடவே வெண்ணெயாகும்

நல்லக்கேள் காந்தமது பலமிரண்டு
நலமான கருவளையல் பலமிரண்டு
வல்லக்கே ளிவ்விரண்டு மெருக்கம்பாலால்
வகையாக அரைத்துமே வில்லைகட்டே. கசுஙு

கட்டியே ரவிதனிலே காயவைத்து
கனமாகப் புடமிட்டு எடுத்துக்கொண்டு
நட்டியே அப்ரேகம் வீரவில்லை
நலமாக சேவலென்ற புடத்தில்நீறும்
வட்டியே புடமிட்டால் காரமாகும்
வளமாக வெங்காரம் பொரித்தாற்சுன்னம்
தட்டியே பலமிரண்டு எல்லாம்சேர்த்து
தரிப்பாகப் பொடிபண்ணி குழப்பிக்கொள்ளே.

குழப்பியே அண்டத்தின் தயிலத்தாலே
குழம்பாகப் பண்ணியே அப்பால்வைத்து
தழப்பியே மண்ணுலே குகைதான்ரெண்டு
தயவாகச் சுட்டுமே யெடுத்துக்கொண்டு
வழப்பியே தயிலமுட் குகையில்பூசி
வளமாகப் பின்னையொரு குகையில்நாகம்
கழப்பியே பலமிட்டு உருக்கிக்கொண்டு
கனமான சாரத்தைத் தூவிடாயே. கசுசு

தூவியே நாகமது கண்விட்டாடும்
தப்பரவாய் தயிலமுண்ட குகையில்சாய்த்து
காவியே சாரத்தால் மேலேபோட்டு
கனமாகத் தயிலமெல்லா முண்ணச்சாய்ப்பாய்

தாவியே புகைஅஞ்சும் கட்டிப்போகும்
தாக்கியே முன்ஜயநீ ருண்ணச்சாய்க்க
காவியே நாகமது கண்ணடங்கி
கனமாக வெள்ளியைப்போ லிருக்கும்பாரே.

நாகப் புட்டு.

இருக்குமே நாகமது செம்பில்தாக்க
இதமாகப் புகைந்துமே நாகந்தானும்
கருக்குமே உதவாது என்றுசொல்லி
கனிவாக எரிந்துமே யிருக்கவேண்டாம்
தருக்குமே தங்கமது கண்டால்நாகம்
தரியாது வேங்கைண்ட ஆட்டைப்போலாம்
வருக்குமே தங்கமது பலமுமொன்று
வகையான நாகமது பலமுமொன்றே. கசுஎ

ரசபதங்கச் சிந்தூரம்.

ஒன்றுகச் சேர்த்துருக்கிப் பார்த்தாற்கேளு
ஒளிவான வெள்ளையா யிருக்கும்பாரு
கன்றுக அப்பாலே வைத்துக்கொண்டு
கருத்தாக ரசபதங்கம் பலமுநாலு
நன்றுக கெந்தியொன்று கரண்டிதன்னில்
நலமாக உருக்கியே பதங்கம்போட்டு
வன்றுகக் கிண்டிடவே கரிபோலாகும்
வகையான காசியென்ற மேரில்போடே. கசுஅ

ரசசிந்தூரமும் தங்கப்பிட்டுஞ் சேர்த்து சிந்தூரித்து வேதை.

போட்டுமே யரைவாசிக் குப்பிக்கப்பா
போரான அடுப்பேற்றி யெரிக்கும்போது
காட்டுமே சிலாகையால் கிண்டிப்பாரு
கரகரப்பா யுருகியே நிற்கும்போது
காட்டுதா ளகம்பலமு மொன்றுதானும்
நலமாகப் பொடித்துமே குழம்பில்போடு
வாட்டுமே கிண்டிவிட்டு பலப்பக்கல்லால்
வளமாக மூடிமண் சீலைசெய்யே. ககசுகூ
செய்யவே நால்ஜாம மெரித்தெடுத்தால்
ஜெயமாக மேலேறும் ரசமுந்தானும்
கையவே யெடுத்துமே திராவகத்தால்
கடிதாக அரைத்துமே குப்பிக்கேற்றி
நய்யவே நால்ஜாம மெரித்துவாங்கு
நலமான சிந்தூர முருக்கம்பூப்போல்
பய்யவே யெடுத்துமே தங்கப்புட்டு
பக்குவமாய் சேர்த்தரைத்து குப்பிக்கேற்றே.
ஏற்றியே திராவகத்தா லரைத்துக்கொண்டு
இதமாக நால்ஜாம மெரித்துவாங்கு
ஆற்றியே யருணநிறம் சிந்தூரம்தான்
அடைவான செம்பிலே நூற்றுக்கொன்று
காற்றியே தங்கமா யிருக்கும்பாரு
கனமான சிவசொத்து வெள்ளிவேண்டாம்

பாற்றியே யுப்புகா விக்கிருக்கும்
பகர்ந்துரைத்தார் யூகிமுனி பண்பாய்தானே.

ரசநாக சிந்தூர முண்ணகாய சித்தியாகுமெனல்.

பண்பாகத் தேனில்பண விடையுமுண்ணு
பதினாறு வயதுபோல் வாலையாகும்
திண்பாக நமன்வந்து அணுகமாட்டான்
திரமான பசுநரம்பு கற்றூணாகும்
வண்பாக சட்டையது கக்கிப்போகும்
வலுவாக தேகமது சித்தியாகும்
நண்பாக யோகநிட்டை காயசித்தி
நவின்றுமலை வாசமா யிருந்திடாயே. ௧௭௨

சிந்தூரங்கள் செய்யு மிடமெல்லாம் ரசபதங்கம் கெந்தி
சேர்க்கவேண்டியது. அதில் களங்கு சேர்க்க.

இருந்திடவே சிந்தூர விடங்களெல்லா
மியல்பாக ரசபதங்கம் கெந்திசேர்த்து
வருந்திடவே சிந்தூரம் பண்ணிக்கொண்டு
வலுவாகக் களங்குமே கூடச்சேர்த்து
நருந்திடவே திராவகத்தா லரைத்துக்கொண்டு
நலமாக வெரித்திடவே முருக்கம்பூப்போல்
கருந்திடவே களங்குரச மொன்றாய்ச்சேர்த்தால்
கரியாகச் சிந்தூர மாகாதெண்ணே. ௧௭௩

ஷை சிந்தூரபலனும் இது சொன்னவர் பரம்பரையும்.

சிந்தூர மாகவே கைபாகங்கள்
சிறப்பாக இந்தமுறை போலேபாரு

வந்தூர மடிமரத்தி லேறினுக்கால்
வலுவாக நுனிமட்டு மேறலாகும்
நந்தூர முடலுக்குத் தின்னுதேறு
நலமான பிளியுப்பு யெண்ணெயாகா
கந்தூரங் கயிலைமலை யுன்னுதாச்சு
கனமான பார்வதிக்கீ துரைத்தார்தானே. களசு
உரைத்திடவே பார்வதி நந்திக்குச்சொன்ன
உண்மையிது நந்திதன் மந்திரிசொன்னார்
மரைக்காமல் தன்மந்திரி அசுவனிக்கு
மனதார அசுவனியும் விசுவனிக்கு
கரைத்திடவே விசுவனியும் அகஸ்தியர்க்கு
கருத்தான அகஸ்தியரும் புலத்தியர்க்கு
நரைத்திடவே புலத்தியரும் தேரருக்கு
நலமான தேரருமே சொன்னார்தாமே. களரு
சொன்னதொரு யூகிக்குச் சொன்னபோது
சுகமான யூகிமுனி பார்த்துத்தேறி
கன்னதொரு உலகத்தோர் சித்தராக
கனமான புத்திவரச் சொன்னார்தாமும்
நன்னதொரு சிந்தூரம் பண்ணிக்கொண்டு
நலமான செம்புதான் பழுக்கும்போது
வன்னதொரு உறுதிமிக இருக்கவேணும்
வடிவாகத் திரியாம லடங்கிநில்லே களசு

காந்தக்களங்குசெய்து நொறுக்குவெள்ளியில்
கொடித்து வேதையாட.
அடங்கிமிக நிற்கவே களங்குகேளு
ஆகியாங் காந்தமது பலமோவொன்று
துடங்கிநின்ற பழச்சாற்றி லரைத்துமைபோல்
துருசதுவும் பலம்நாலு கூடச்சேர்த்து
கடங்கிநின்ற கெந்தியது பலமுநாலு
காரமாம் வீரமது பலமுமொன்று
கடங்கிநின்ற தாளகமும் பலமுமொன்று
நலமாகப் பழச்சாற்று லரைத்திடாயே. களள
அரைத்துமே வெங்காரம் பலம்பொரித்து
ஆண்மையா யிவையெல்லா மரைத்துருட்டி
கரைத்துமே சுண்ணும்புக் கவசம்போடு
நலமாக மண்கவசம் வலுவாய்ச்செய்து
பரைத்துமே சேவலென்ற புடத்திற்போடு
பதமாக உருக்காமல் செம்பில்தாக்கு
கரைத்துமே செம்புதான் கட்டிப்போகும்
கனமான நொறுக்குவெள்ளி தன்னிலியே.கனஅ

சயவே வெளுமையா யிருக்கும்பாரு
இதமான பத்திலொன்று தங்கஞ்சேரு
காயவே ஊதிடவே தங்கமாகும்
நலமான தங்கமது பச்சையாகும்
காயவே காந்தமது கிராசம்போட்டு
கடிசான செம்புதான் பலமோநாலு

ஆயவே ராவியே யெடுத்துக்கொண்டு
அதன்பின்பு சேர்க்குகிற வரிசைகேளே. களசு
இரசகிந்தூரம் செய்து இதைமுன் காந்தசுராச
செம்புடன்சேர்த்து வேதையாடும் விபரம்.
வரிசைகேள் ரசபதங்க மெடுத்துக்கொண்டு
வகையாள நாத்தமது இடையேசேர்த்து
தரிசைகேள் வெங்கார மிடைபொரித்து
தப்பாமல் மண்பாண்டம் தனிலெரிக்க
காரசைகேள் சிந்தூர முறுக்கம்பூப்போல்
கனமாக இருக்குமது நிறமுமாகும்
நரிசைகேள் செம்பந்தப் பொடியில்தானும்
நலமாக இடைசமனுய் சேர்த்துக்கொள்ளே.
சேந்துமே நிராவகத்தால் நாலுஜாமம்
ஜெயமாக அரைத்திட்டு உலரவைத்து
காத்துமே காசியென்ற மேருக்கேத்தி
கணக்காகப் பனிரெண்டு ஜாமம்தீத்தால்
நாத்துமே யெரியிட்டு யெடுத்துப்பார்த்தால்
நலமாகச் சிந்தூர முருக்கம்பூப்போல்
பாத்துமே செம்புதனில் பத்துக்கிந்து
பரிவாக நொறுக்கிவெள்ளி யெட்டுக்கொள்ளே.
சாந்தகிராச ரசசிந்தூரபலன்.
எட்டுமே செம்பொன்று தங்கமொன்று
இயல்பாகச் சேர்த்துமே பார்த்தால்கேளு
நட்டுமே தங்கமது என்னசொல்வேன்
நாள்கண்ட வைபாக மூனக்குச்சொல்லேன்

கட்டுமே சிந்தூரங் குஞ்சியுண்டாஞ்
தப்பாமல் சாவில்லை நரைகளில்லை
பிட்டுமே புளியுப்புத் தள்ளித்தின்னு
புரட்டில்லை சத்தியமாம் வேதைதானே. கஅஉ

வாதிகள் சிந்தூரஞ் செய்வகையறியாது சிந்
தூரம் பொய்யெனல்.

வேதைதா னிப்படிப் பாராமல்வாதி
விருப்பமா யொன்றுடனே யொன்றுசேர்த்து
காதைதா னரைத்துமே யெரித்துப்பார்த்து
கடிதான சிந்தூரம் பொய்யென்றெண்ணி
காதைதா னெருவருடன் பேசிப்பேசி
நாய்போலே யலையாமல் நூலைப்பாரு
வாதைதான் படாமல்தான் பாகமாக
வைத்துமே சிந்தூரம் பண்ணியுண்ணே. கஅங

துரிசுக்களங்கிற்கு வெண்காரம் பொரித்துச்
சேர்க்கவேண்டுமெனல்.

உண்ணவே துரிசினுட களங்குக்கெல்லா
முத்தமனே வெண்காரம் பொரித்துச்சேரு
தண்ணவே கெந்தகத்தை யிழுத்துக்கொள்ளும்
தப்பாம லாதியிலே சேர்த்தரைத்து
நண்ணவே புடமிட்டுக் கிராசம்போடு
நலமாகும் சத்துகளைப் பிடித்தழுத்தும்
எண்ணவே யிப்படிதான் வரிசைதப்பி
லேதுந்தா னகாது உற்றுக்கேளே. கஅச

திராவகம் பிடிக்கும் விபரமும் சிந்தூரத்தில் சேர்ப்பதும்.
உற்றுக்கேள் திராவகந்தான் வடிக்கும்போது
உண்மையாய் முன்வெள்ளை யூற்றிப்போடு
நற்றுக்கேள் பின்வருகும் கொஞ்சமஞ்சள்
நலமாக அரைவாசி பிடித்துவைத்து
பற்றுக்கேள் கடையிலே வருகும்நீரு
பதறுமலரக்குமஞ்சள் போலேகாணும்
வற்றுக்கேள் கடுங்காரஞ் சிகப்புமாகும்
வலுமையாய்ச் சிந்தூர மனைத்திற்சேரே. சுஅரு
திராவகத்தில் சிவந்தகடைநீர் சிந்தூரத்திற் குபயோ
கம் நடித்தாமஞ்சள்நீர் வியாதிக் குபயோகம்.
சேர்த்துமே சிகப்பான நீர்விட்டாட்ட
சிந்தூரமாகுமே முருக்கம் பூப்போல்
கார்த்துமே நடிநீரு மஞ்சள்கொஞ்சம்
நலமாக வயற்றுவலி விக்கத்துக்காம்
பார்த்துமே நீரெல்லா மொன்றுப்சேர்த்தால்
பதிவான சாக்கடைநீர் போலேயாகும்
வார்த்துமே யெல்லாநீ ரொன்றுப்சேர்த்து
வலுக்காரமில்லையென்று மயங்குவாரே. கஅசு
திராவகத்தை வைத்து முதல் நடி கடைநீர் பிரித்து க
டைநீர் சிந்தூரமுதலியதற் குபயோகஞ்சொய்.
மயங்காமல் திராவகத்தை வைத்துக்கொள்ளு
வலுமையாய்ச் சிந்தூரம் பண்ணிக்கொள்ளு
தயங்காமல் சொன்னபடி போலேதாக்கு
தங்கமாம் களங்கமா மடக்கியேறு

மூயங்காம லடிக்கடிக்குச் சொல்லமாட்டேன்
முக்கியமாய் கடைத்தலையும் பிரித்துப்பாரு
கயங்காண வொன்றுகும் யோகம்பாரு
கவின்றுமே மோகூதமென்ற வீட்டைத்தேடே.

பஸ்பத்திற்கு ஐந்துமுறை மடக்கிரும்பல் கட்டி
வேதையாடு மெனல்.

தேடவே பற்பத்துக் கஞ்சிரு
சிறப்பாகத் தப்பிலுல் பரக்காதப்பா
பாடவே யெழும்பியே சாடிவீழும்
பதையாமல் வாதத்தைச் செய்தபோது
கூடவே கைபாகம் தப்பிற்றுனல்
கலமில்லை வர்ணமில்லை காரியாய்ப்போகும்
கூடவே கைபாக நினைவாய்ச்செய்து
கருத்துவைத்துச் சாஸ்திரத்தில் மனதையூணை.

சாத்திர விசாரணையின்றி கேள்விவாதஞ்செய்
தாற்கெட்டுப்போவான்.

யூணியே சாஸ்திரத்தில் மனதைவைத்து
உத்தமனே கடத்தலையும் பார்த்துத்தேறி
பேணியே மனதிலே நிலைநிறுத்து
போக்கோடே செய்தாக்கா லெல்லாமாகும்
காணியே கேட்டுமே வாதஞ்சுட்டால்
கணக்கில்லை துரைபில்லை பணமும்போகும்
காணியே பெண்டுபிள்ளை சொத்துக்கெங்கி
தரியாமல் வெறுமாளாய்ப் போவர்தானே.

அயத்தில் கெந்திசேர்த்து களங்குசெய்தால் யேதையாரும்.
போகாம லயத்திலுடன் கெந்திசேர்த்து [ண்டாஸ்-
பொறுமையாய் சிலேசேர்த்து அரைத்துக்கொ
ள்ளகாமல் முன்சொன்ன படியேதாக்க
வலுவான தங்கமாம் செம்பொன்றுகும்
தேகாமல் முறைதப்பிச் சேர்த்துப்போட்டு
ஜெயமில்லை யென்றுசொல்வான் பாழாண்டூதா
நாகாமல் வாதிமனங் கெட்டபுத்தி [ன்
தறிதுரும்பனுய்ச்செய்தால் விழலாய்ப்போமே.

துருசுச் சுன்னத்திற்குக் கவசம்.

போகாம லின்னமொரு சேதிகேளு
போக்கோடே சினமது சுன்னம்பண்ணி
தாகாமல் பலமொன்று நிறுத்துக்கொண்டு
தகமையாய் வீரத்தை யிடையேசேர்த்து
வாகாம லரைக்கையிலே சிகப்புமாகும்
வலுவான திராவகத்தா லரைத்துக்கொண்டு
பாகாமல் துரிசின்மேல் பூசிப்பூசி
பக்குவமாய் ரவிதனிலே காயப்போடே. கூகூக
போடவே சுண்ணும்பு சிலேசெய்து
போகாமல் வெள்ளீயம் சேருஞன்று
ஆடவே குகையிலிட்டுருக்கிக்கொண்டு
அப்பனே துருசியது மேலேயிட்டு
பாடவே துரிசைத்தான் வெள்ளியந்தான்
பதறுது இழுக்காமல் பார்த்துக்கொள்ளு

நாடவே ஜாமந்தா னுலுஆனுல்
நலம்பெறவே துரிசியது பொருமிநீறே. ககூஉ
நீறுகப் போவைவுட னிடையேசினம்
நிறுத்துமே திராவகத்தா லரைத்துவில்லே
ஆறுக ரவிதனிலே காயவூது
அப்புறமும் சின்சுன்னம் சேர்த்தரைத்து
காறுக கரியில்வைத்து கடுமையாக
அப்படிதா னஞ்சுதிர மூதுவூது
பாறுகப் பொருமியது சுன்னமாகும்
படிப்படியே வேகமது துரைபுந்தானே. ககூங
தாரத்திற்குத் தருசுச்சுன்னங் கவசஞ்செய்ய
நீறும் தாரசுன்னத்தை வங்கத்திற்கு வீரஞ்
சேர்த்து கவசமிடநீறும்.
துரையான தருசியது சுன்னமாச்சு
துப்பறவாய் நாலுக்கு ஒன்றுவிதம்
கரையாக அரைத்துமே தாரத்தப்பி
கடுமையா யூதிடவே தாரநீறும்
பரையாக தாரமது சுன்னமாச்சு
பகரரிது நாலுக்கு ஒன்றுவீரம்
துரையாக சேர்த்தரை வேள்ளியத்தப்பி
தூக்கியே யூதிடவே சுன்னமாமே. ககூச

வங்கச்சுன்னத்தை துரிசுக்குக்கவசஞ் செ
ய்ய தருசு ஜயசுன்னமாகும்.

சுன்னமாம் ஜயசுன்னம் வங்கச்சுன்னம்
சுருக்கான நாலுக்கு வீரமொன்று

அன்னமது துரிசின்மேற் சவசங்கட்டி
யடைவாக வூதிடவே துரிசுநீறும்
கன்னமாம் துரிசுஜய சுன்னமாகும்
கணக்காகச் சூதமது கட்டிப்போகும்
வன்னமாம் வாதமது வவல்கேட்கு
மக்தான துரிசென்ற ராஜாதானே. ககூடு

சீசச்சுன்ன மந்திரியாலுப்பான குடிகள்கட்டி நீ
ருக்கி உபரசங்களால் ரசங்கட்ட
ராஜாவாய்ச் சரக்குகளை கூட்டபுத்தி
ராஜியாய் சினமென்ற மந்திரிசெய்தான்
காசாவா யுப்பென்ற குடிகள்தானும்
கணக்கறிந்து கட்டியே நீயிப்போனர்
காசாவா யுபரசமு நீரதாச்சு
தவிப்பில்லா சச்சரவு மிகவொழிந்து
பாசாவாய் சூதத்தை கரண்டிதல்லில்
பக்குவமாய் விட்டுமே சாறுவூற்றே. ககூசு

ரசத்தைக்கட்டி சாரணைசெய்துருக்கிக் களங்கு
செய்யவேதையாகும்.

ஊற்றவே மூலிகையு மேதாலுந்தா
னுண்மைவிட்டுக் கொதியதுதா னிட்டால்கேளு
காத்தவே மணிபோலே யிறுகிப்போகும்
கனமான சாரணைதான் செய்தாற்கேளு
நாத்தவே அண்டரண்ட பதங்களெல்லா
நலமாக ஓடுமே கவனத்தாட்டி

பாத்தவே சூதத்தை கரியில்வைத்து
பக்குவமா யுருக்கிடவே யுருகும்பாரே. ககூஎ
உருக்கவே சூத நாலுக்குழன்று
உத்தமனே தங்கமது சேர்த்துநாகம்
பருக்குமே தங்கமிடை சேர்த்துக்கொண்டு
பகராத களங்கமாம் சூதராஜன்
இருக்குமே செம்புருக்கி நூற்றிலொன்று
இட்டுடனே கொடுத்திடவே பச்சையாகும்
பருகுமே நொறுக்குவெள்ளி யிடையேசேர்த்தால்
பத்துமே மாத்தாகும் தங்கந்தானே. ககூஅ

திராவகமகிமையும் மூலிகையால் சரக்குக்கட்டாமையும்.

தங்கமாந் திராவகத்தை விட்டரைத்து
தயவாகத் துருசின்மேல் கட்டிநீற்று
பங்கமா மூலிகையி லொன்றுமில்லை
பதைபதைத்து அலைந்துமே திரியவேண்டாம்
சங்கமாம் சரக்குகள்தான் மூலிகையாலப்பா
சுத்திராகக் கட்டாது செல்லானென்செல்லானென்
பங்கமா மூலிகையில் திரேகம்சித்தி
பகரரிது திராவகத்தின் பெருமைதானே. ககூக
துரிசுசுன்னத்தா லொருசித்தர்செய்த புறட்டும்
சீஷன் மூலிகையாலடைந்த கெதியும்.
பெருமையா மொருசித்தர் துரிசுசுன்னம்
பெலக்கவே முடித்துமே கையிற்கொண்டு
அருமையா மொருவரிடஞ் சென்றுபோகி [று
அவரைத்தான் மூலிகையைக் கொண்டாவென்

கருமையா மகடமா மூலிகையில்சுன்னம்
தப்பாம விட்டுஒரு செம்பிலீந்தார்
கருமையாம் செம்பதுதான் தங்கமாச்சு
காரணமாய் குருசென்று போகத்தாமே.
போகவே சிஷர்த்தா னிலேபிடிங்கி
பிலக்கவே பிழியவுமே யொன்றுமில்லை
யாகவே துருசினுட சுன்னங்காணு
தலேந்துமே மூலிகையைத் தேடித்தேடி
தாகவே குரங்குகையில் மாலேபோலே
தப்பாமல் பிடிங்கியே சுற்றிசுற்றி
வாகவே யிப்படிதான் மனிதர்கெட்டால்
வலுத்தபுத்தி யில்லாரச வாதிகேளே. 208

தொறுக்குத் தங்கம் களங்குவதை.
வாதியாம் ரசவாதி செல்லக்கேளு
வகையான அயந்தங்கம் துருசுமெத்த
நீதியாந் தங்கமது பலமுறாலு
நிர்ணயமா யரப்பொடியும் பலமுமொன்று
காதியாஞ் சேர்த்துருக்கித் தகடாய்த்தட்டி
காரணமா யின்னமொரு கருவைக்கேளு
பாதியாங் கெந்தியது பலமுறாலு
பரிவான பதங்கரசம் பலமுறாலே. 202
நாலான கெந்திரசம் சேர்த்துக்கொண்டு
நகரமே யெருக்கம்பால் தன்னிலாட்டி
சாலான தங்கத்தின் மேலேபூசி
கனமாகப் போட்டிடவே தொறுக்கும்பாரு

வாலான நிரங்கரியா யிருக்கும்பாரு
வலுமையாய்ச் செம்புருக்கி யிடையேதாக்கு
பாலான செம்புகட்டிப் போகும்பாரு
பதிவான நொறுக்குவெள்ளி பத்திலொன்றே.
ஒன்றுகச் சேர்த்தவுடன் தங்கமாகும்
உத்தமனே நல்லதங்க மாகும்பாரு
கன்றுக முன்னெறுக்குத் தங்கந்தன்னை
கடைசியிலே கெந்திரசம் கூடச்சேர்த்து
பன்றுகக் கல்வத்தில் வைத்துமைபோல்
பதிவாக விட்டிரவி காயவைத்து
திண்றுகச் செம்புதனி லுருக்கித்தாக்கு
தியங்காமல் கைபாகம் விபரந்தானே. உ0ச
நொறுக்குத் தங்கம் செம்மில் கிராசஞ்செய்யும்
போது இரண்டுதருத்தியாலாது.
விபரமாங் கிராசமது கொடுக்கவென்றால்
விருப்பமா யிருதுருத்தி போட்டுவைது
நபரமாங் குகைகிழியா வலுமைபார்த்து
நலம்பெறவே ஜயமாக உருக்கிக்கொண்டி
கபரமாங் கிராசமது போடவாங்கும்
கனமான கிராசமது வாங்காப்போனால்
கபரமாஞ் செம்பதுதான் பொருமிப்போகும்
கலனில்லா மலைத்தாலும் வைதைபோடே. உ0ரு
இன்னமொரு தங்கக்களங்கு.
வைதையா மின்னமொரு களங்குசொல்வேன்
விருப்பமாய் செம்பதுவும் பலமூகாலு

பாதையா மரப்பொடியை நாலுக்கொன்று
பக்குவமாய் சேர்த்துருக்க உருகிப்போகும்
நாகையாங் காரீய மொன்றுகூட்ட
நவிலவே மூன்றுமொன்று யுருகிப்போகும்
சாதையா நாளம்வைத்து நன்றுபூசு
நலமாக ஈயமயம் போக்குவாயே. உ0சு

போக்குவாய் வாதுதான் செம்பிலேறிப்
போக்கோடே யிருக்குமது புத்திசொன்னேன்
ஆக்குவாய் செம்பிடையே தங்கந்தானு
மாண்மையா யுருக்கிநீ தகடாய்த்தட்டி
தாக்குவாய் தங்கமிடை கெந்திபோடு
தரியாமல் வீரமது காலும்போடு
போக்குவாய் கைத்தாழ மஞ்சள்நீரால்
பதையாம லரைத்துமே தகட்டிற்பூசே. உ0எ

பூசியே நொறுங்கமட்டும் புடத்தைப்போடு
புகழாக நொறுக்கியே வைத்துக்கொண்டு
ஆசியே கெந்தகமும் வீரங்கூட்டி
அடைவாகத் தங்கமது சேர்த்தரைத்து
வாசியே வட்டுப்போல் வில்லைபண்ணி
வளமாக ரவிதனிலே காயவைத்து
சாசியே கவசமது வலுவாய்ச்செய்து
காடையென்ற புடத்திலே களங்கமாமே. உ0அ

களங்கமா முருக்காம லெடுத்துக்கொள்ளு
கருணைபெற வுருக்கினு லெல்லாஞ்சேர்த்து

களங்கமா மீயமாய் கடித்துக்கொள்ளும்
தப்பாமல் போட்டதங்கம் வெளியாகாது
பளங்கமாம் களங்கத்த புடத்தைவிட்டு
பக்குவமா யெடுத்துஇடை செம்பில்தாக்கு
வளங்கமா யடிக்கடிக்குக் காரந்தாக்கு
வண்ணமபெற செம்புகட்டிப் போகும்பாரே.
அயச்செம்பு புரட்டும் கட்டியசெம்பின் ரா
வடப்பொடியை சிந்தூரிக்கவும்.
போகுமே நொறுக்குவெள்ளி யிருபதுக்கிரண்டி
போட்டவுட னேழுமே மாற்றுகாணும்
தாகுமே சித்தரெல்லா மயத்தைதந்நாணும்
தப்பாமல் செம்பெடுக்கப் புரட்டுசொன்னர்
வாகுமே கட்டினதோர் செம்பைராவி
வகையாக வப்பாலே வைத்துக்கொண்டி
பாகுமே ரசபதங்க மெட்டிலொன்று
பக்குவமாய் நாற்றமது சோர்ந்துருக்கி
வகுமே யுருக்கியது கரியாய்நிற்கு [டே.
மிடைசமனுப் தாளகத்தைப் பொடித்துப்போ
பொடித்துமே போட்டவுடன் கிண்டிக்கொண்டி
பொடியாக்கிக் குப்பியரை வாசியிட்டு
நடித்துமே -பனிரண்டு ஜாமந்தான்
நலமாக வெரித்திடவே சிவந்துபோகும்
படித்துமே சிந்தூரம் பலமுமொன்று
பதருமல் செம்புஅரப் பொடியிலொன்று

கடித்துமே திராவகத்தா லரைத்துங்கொண்டு
கனமாகப் பனிரண்டு ஜாமந்தானே. உகக

செம்பு சிந்தூரவேதையும் மேற்படி சிந்தூரத்தை
யுண்ணும்பலனும்.

ஜாமந்தான் சிந்தூர முருக்கம்பூப்போல்
சகசமாய் செம்புருக்கி யிருபதுக்கொன்று
ஏமந்தா னிகிவிடும் பத்துமாற்று
எளிதல்ல வெள்ளியது சேர்க்கவேண்டாம்
காமந்தான் பணவிடைதான் கொண்டாயானால்
கருதியே மேனி கஸ்தூரிவீசும்
வாமந்தான் சாவில்லை திரேகம்பொன்னும்
வடிவென்ன முடியாது மேனியாமே. உகஉ

பருத்திப்பஞ்சு நூலுக்குச் சாயமேற்றுவதுபோல்
செம்புக்குச் சாயமேற்றத் தங்கமாகும்.

மேனியாம் பரித்தியது பூத்துக்காச்சு
மெதுவாகப் பஞ்சுவெட்டிக் கொண்டபோது
கூனியே நிமிர்ந்துமே யெடுத்துவந்து
குடிலமாய் நூல்முறுக்குங் கொள்கைபோல
தானிகமாம் வெள்ளைநூ லஞ்சுவண்ணம்
தக்கதொரு பாடுபட்டு சாயமேற்றி
வானிகமாம் நூல்போல மதியைப்பாரு
மயங்காமல் நொறுக்கியரைச் சாயமேத்தே.

வாதிகள் செம்புருகும்போதே பழுக்குமென்று
மூடியோஜனை செய்தல்.

ஏத்தவே செம்பைதா னுடைத்தரைத்து
இதமான புடம்போட்டு கரியாய்ப்பண்ணி

காத்தவே கொடுத்தூத தங்கமாகும்
கருணைபெற சித்தர்கள்தான் செய்யுமார்க்கம்
நாத்தவே பொன்னாசை வாதிதானும்
நளினமா யுருக்கையிலே பழுக்குமென்று
காத்தவே யோசனைகள் பண்ணிபண்ணி
கடைகெட்ட நாய்தேங்கா யுருட்டும்பாரே. ௨௧௪

மூடவாதி வெள்ளி நாலுக்கொன்று செம்பு
சேர்த்து சமயிடை தங்கஞ்சேர்த்து
கடைக்குப்போனது.

உருட்டியே யுடைக்காமல் கத்திக்கத்தி
ஊளையிட்ட வாறொக்கு முட்டாள்வாதம்
கருட்டியே அம்பெட்டு வெள்ளிமேலே
கடிதான வெறுஞ்செம்பு நாலுக்கொன்று
வருட்டியே யிதைக்கொடுத்து உருக்கிக்கொண்டு
வலுவாகத் தங்கத்தை சும்மாசேர்த்து
நருட்டியே மாத்தாணி பார்க்கவேண்டி
நலமான செட்டிகடை போனார்தாமே. ௨௧௫

கடைசெட்டிகள் மூடவாதிபொன்னை யுரைத்துரைத
துத் திருடிக்கொள்ளுதலும் வாதிகலங்கி நிற்றலும்.

போனவுடன் செய்யும் வஞ்சகத்தைக்கேளு
புகழாக அவன்முகத்தை நோக்கிப்பார்த்து
கானதொரு கலமுடிச்சு ஆணிக்கோர்வை
கனமாக எடுத்துமே கலமுரைப்பார்
ஆனதொரு உருப்பிடாக் கல்லில்தானும்
அடைவாக அழுத்தியே உரைத்துரைத்து

கானெதாரு எனக்கொவ்வாப் பொன்னதென்று
கடைமுழுதுங் காட்டவே சொன்னார்பாரே.
சொன்னதொரு கடைகடையா யுரைத்தபோது
சூதாகப் பொன்னெல்லாம் குரைந்துபோச்சு
அன்னதொரு முழித்திருக்கத் திருடிக்கொண்ட
அடைவான செட்டிகளைக் கண்டதுண்டோ
கன்னதொரு பேராசை வாதிதானும்
கலங்கியே நான்கெட்டே னென்றுசொல்லி
பின்னையொரு மனிதனிடம் வாதம்கேட்டு
பேருலகி லலைந்தலைந்து மாளுவானே. உக எ

சித்தர் நூல்களில் மயக்கமாய்ச் சொல்வதை வா
திகள் நம்புதலாகா எனவும் செம்புதனியே
பழுக்காதெனவு முபமானங் கூறல்.

மாளுவார் செம்புசும்மா பழுக்குமென்று
மயக்கமாய்ச் சித்தர்கள்தா னுலிற்சொல்லுர்
தாளுவா ரொருபோதும் பழுக்காதப்பா
தண்டித்தால் கரும்புரசம் கொடுக்கும்பாரு
காளுவார் வெறும்வெள்ளி உதவாதப்பா
கருத்தான இளநீர்தா னொறுக்கத்தண்ணீர்
மீளுவார் கொடுக்குமது இதுபோல்வெள்ளி
மீராமல் சேர்த்தரைத்தால் தங்கமாமே. உகஅ

மற்றொரு செம்புவேதை.

தங்கமா மின்னமொரு குருவைக்கேளு
தனியான அரப்பொடிதான் பலமோவொன்று

வங்கமா மீயமது பலமோவொன்று
வகையாகத் தகடாகக் குகையாய்ப்பண்ணி
சங்கமாம் கெந்தியது பலமுமொன்று
சார்வாகக் காரீயக் குகைபில்வைத்து
பங்கமாய்ச் சுருட்டியே வைத்துக்கொண்டு
பதருமலரப்பொடியைக் குகையில்வையே.
வைத்துமே குகையழுக ஊதிக்கொண்டு
வகையான காரீயக் குகையைத்தூக்கு
நைத்துமே மூன்றுந்தான் கண்விட்டாடும்
நலமாகவெடுத்துமே கீழேசாய்த்து
பைத்துமே கல்வந்தில் நொறுக்கத்தூளாம்
பதருமல் துரிசதுவு மிடையேசேர்த்து
கைத்துமே கெந்தியது முக்காற்போடு
காரமாம் வீரமது காலும்போடு. உஉ0
போட்டுமே வெலுமிச்சம் பழச்சாற்றுலே
இதமாக இருஜாம மரைத்துவில்லே
காட்டுமே சுண்ணும்பு கவசம்போட்டு
கனமான மண்கவச மேலேசெய்து
காட்டுமே சேவலென்ற புடத்திற்போடு
நலமாக வுருக்காமல் செம்பில்தாக்கு
பாட்டுமே செம்புகட்டி மணிபோலாகும்
பதமாக விச்செம்பை யெடுத்துக்கொள்ளே.
எடுத்துமே நொறுக்குவெள்ளி யைந்திலொன்று
இதமாக விச்செம்பை யொன்றுதாக்கு

நடித்துமே யேழாகும் பொன்னுஞன்று
நலமாகக் கொடுத்துருக்கி யூதிப்போடு
கடித்துமே மாத்தென்ன ஆறதாகுங்
காவிக்கு முப்புக்குங் கருவாய்நிற்கும்
படித்துமே யிவ்வேதை பற்றிப்பாரு
பகரரிது யூகிமுனி பயின்றூர்தாமே. உஉஉ

அந்தந்தத் தொழிலாள ரவரவர்கள் வாதஞ்செய்
வதும் செட்டிகள் செய்யும் வாதமும்.

பயின்றதொரு அந்தந்தத் தொழிலின்மார்க்கம்
பதிவாக வவரவர்கள் செய்வார்தானும்
நயின்றதொரு பலஜாதி செய்தால்வாதம்
நலமாகச் செட்டிதான் பிழைப்பான்பாரு
கயின்றதொரு நிஜவாதஞ் செய்தாலுந்தான்
கனமான பலஜாதி வெளியில்சொல்வான்
வயின்றதொரு வணிகரிடம் மட்டங்காட்ட
வந்தாலு மவன்பிழைப்பை பார்ப்பான்பாரே,

தட்டான்வாதம்.

பார்க்கவே தட்டானுட் செய்கைசொல்வேன்
பகரரிது அவன்மகிமை சொல்லப்போகா
கார்க்கவே மாத்துரைகள் செய்கையெல்லாம்
கனமாகத் தெரியாது கொஞ்சந்தானும்
ஏர்க்கவே யொருவனிட பொன்னைவாங்கி
இழுப்பாக அவன்வித்துச் செலவுசெய்து
தாக்கவே காப்பொன்னில் மாப்பொன்தள்ளி
தயவாகத் திருடியே யெடுப்பான்பாரே, உஉச

எடுத்துமே நீர்பார்க்கத் திருடிக்கொள்வா
னேழைமதி போகாதே பொடியையோட்டி
கடுக்கவே மாத்துரைகள் சரியாச்சென்று
கடுமையாய் மச்சங்கள் கொடுப்பான்பாரு
தடுக்கவே அழுக்குவிய னிழுக்கும்பொன்னு
தாட்டிகமாய்ப் பேசுவான் பயப்படாதே
வடுக்கவே ஆணியுரை கையிற்கொண்டு
வளமாக உரைத்தாணி வாங்குவாயே. உஉரு

வாதிகள் புரட்டைத் தெளிவித்த பரம்பரை.

வாங்குவா யென்றுசொன்னர் சிவனுமப்போ
வளமான வுமையவளும் சந்தோழித்து
தாங்குவாய் நந்திக்குச் சொன்னபோது
தலைமையாம் நந்திதன் மந்திரிக்கிச்சொல்ல
ஏங்குவாய் தன்மந்திரி விசுவனிக்கு
எளிதான விசுவனியு மசுவனிக்கு
பாங்குவா யசுவனியு மகஸ்தியர்க்கு
பதமாக அகஸ்தியருஞ் சொன்னார்தாமே. உஉசு
சொன்தொரு புலத்தியர்க்குச் சொன்னபோது
சுருக்கான புலத்தியருந் தேரருக்கு
கன்னதொரு தேரருமே யூகிக்குச்சொல்லி
கனமான யூகியுமே பார்த்துத்தேறி
பன்னதொரு மலைபோலே புலகத்தோர்க்கு
பதிவாகச் சைபாகம் வாதமார்க்கம்
தன்னதொரு தமிழாலே யெடுத்துக்கட்டி
சகலஜனம் பிழைக்கவே சொன்னார்தானே.

அயக்களங்குக்கு அயச்சத்தெடுத்து செய்யுமுறை.

சொன்னதொரு அயக்களங்கு சொல்லக்கேளு
சுருக்கான அரப்பொடிதான் பலமுமொன்று
பன்னதொரு சுத்திசெய் யாமல்தானும்
பக்குவமாய் கௌரியது இடையேசேர்த்து
தன்னதொரு தண்ணீரா லரைத்துருட்டி
சாய்வான குகையழுக ஊதும்போது
கன்னதொரு உருகியே மணியாய்நிற்கும்
கனமான பலமொன்று நிறுத்துக்கொள்ளே.

நிருத்துமே துரிசதுவு மணிக்கிரட்டி
நின்றநிரை கால்வாசி லிங்கங்கூட்டி
பருத்துமே வெங்காரங் காலுங்கூட்டி
பக்குவமாய் பழச்சாற்றி லரைத்துமைபோல்
தருத்துமே வில்லைகட்டி ரவிபிற்காய
தப்பாமற் சுண்ணும்பு கவசஞ்செய்து
நருத்துமே சேவலென்ற புடத்திற்போடு
நலமாக உருக்காமல் செம்பில்தாக்கே. உஉசு

அயக்களங்கு வேதையாடும் விதம்.

தாக்கியே யுருக்கியெல்லாங் களிபோலாகும்
தாக்கான கறுப்பாக விருக்கும்பாரு
வாக்கவே செம்புமிகக் கட்டிப்போகும்
வகையான செம்பெடுத்து நொறுக்குவெள்ளி
ஆக்கியே யெட்டுக்கு ஒன்றுபோடு
அன்பாக வுருக்கிடவே யேழுமாற்று

பாக்கவே நிலைநிற்கும் காவிக்கப்பா
பதிவான பத்திலொன்று தங்கஞ்சேரே. உங0
அயச்சத்துக் களங்கை சிந்தூரஞ்செய்து சாப்பிடும்பலன்.
சேத்துமே யுருக்கியே பார்க்கும்போது
சிவசிவாபொன்னெளியை யென்னசொல்வேன்
காத்துமே சிந்தூரஞ் செய்தாற்கேளு
கனமாகப் பத்துவய தாகும்பாரு
நாத்துமே குன்றியிடை தின்றுநேறு
நலமாக வுப்போடு பெண்ணுந்தள்ளு
சாத்துமே மண்டலந்தான் கொள்ளும்போது
சகலசித்து மாடலாம் தாய்சொல்வாளே. உங
சந்திரோதய வீரவைப்புக்கு லிங்கரசமெடுத்து
செய்யும் விபரம்.
சொல்லவே சந்திரோதய வீரவைப்பு
சொல்லுகிறே னிதுலகுவு முன்னேபாரு
கல்லவே லிங்கமொரு இரண்டுசேரு
கனமாகத் திராவகத்தா லரைத்துலர்த்தி
நல்லவே கிடமிரண்டு வாயைத்தேய்த்து
நலமாக லிங்கத்தை யுள்ளேயிட்டு
பல்லவே மேல்தோண்டி சரியாய்மூடி
பக்குவமா யுளுந்துமண் ணரைத்துக்கொள்ளே
அரைத்துமே கவசமது வலுவாய்ச்செய்து
ஆண்மையா யொருஜாமம் வலுவாய்த்தீதான்
கரைத்துமே யெரியிட்டு மல்லாத்திவைத்து [ள்
கமையாய்ப் பிரித்திடவே மேல்தோண்டிக்கு

வரைத்துரச மிருக்குமதை மயிரிஞலே
வழித்துமே பீங்கானில் வைத்துக்கொண்டு
தரைத்துகறி யுப்புபடி நாலளந்து — 4
தண்மையாய்ச் செங்கல்மாப் படியுமொன்றே. 1
படியாக நிறுத்துமே வறுத்துக்கொண்டு
பக்குவமாய்ச் சட்டிரண்டு வரைந்துக்கொண்டு
கடியாக அடிச்சட்டி தன்னிலுப்பு வைத்து
கடிதாகப் போட்டுமே அமுக்கிவைத்து
நடியாக நடுவிலே குழியாய்ப்பண்ணி
நன்மையாய் முன்னெடுத்த ரசத்தைவிட்டு
தடியாக மேற்சட்டி மூடிச்சீலை
தாழ்ச்சியில்லாமலே வலுவாய்ச்செய்யே. உசு
செய்துமே அடுப்பில்பனி ரண்டுஜாமம்
ஜெயமாக வெரித்திடவே பதங்கமேறும்
நைதுமே தணலாற்றிப் பிரித்துப்பார்த்தால்
நலமான சங்குபோல் வெள்ளையாகி
கைதுமே மேலேறி யிருக்கும்பாரு
கனைக்காகச் சுரண்டியே வைத்துக்கொண்டு
பைதுமே பதங்கமது பலமுமெட்டு 8
பாங்காக நிறுத்துமே அப்பால்வையே. உஎ
வையப்பா வறுத்த கல்லுப்பிரண்டு 2
வகையான வெடியுப்பு பலமோரண்டு 2
நையப்பா ஈதினதோர் சீனம்ரண்டு 2
நலமாக சாரம்ரண்டு பூனீரண்டு 2 — 2

கையப்பா யிவையாறும் பொடியாய்ப்பண்ணி
கனமாகக் குப்பியிலே அரையேபோடு
தையப்பா முன்பதங்க மதன்மேற்போடு
தக்கதொரு குப்பிவாய் மூடிப்போடே. ௨௩௬

மூடியே சீலைமண் ணேழுசெய்து
முக்கியமாய்ச் சட்டியினில் மணலையிட்டு
ஆடியே யிரண்டுவிரற் கடைமேல்குப்பி
ஆண்மையாய் வைத்துமேல் மண்ணைக்கொட்டி
தாடியே கழுத்தளவு கொட்டிமேலே
தாக்கியே குகையினால் பரப்பிவைத்து
பாடியே அடுப்பேற்றி ஒருநாள்தானும்
பக்குவமாய் காடாக் கினியைப்போடே. ௩௨௭

போட்டுமே யெரியிட்டு யெடுத்துப்பார்தால்
போரான வயிரம்போல் குப்பிவாயில்
தாட்டுமே உரைந்திருக்கும் வீரந்தானும்
தப்பாம லெடுத்துமே வைத்துக்கொண்டு
காட்டுமே தங்கமிடை வீரஞ்சேர்த்து
தப்பாம லரைத்திடவே வெள்ளையாகும்
வாட்டுமே செம்புநாற் பதுக்குஈய
வலுவான தங்கமாம் வண்மையாமே. ௨௩௮

வீரவைப்பும் கோடாசூரி வீரமும்.

வண்மையாய் வீரவைப்பு சொல்லக்கேளு
வலுவான சூதமது சேரிரண்டு

கண்மையாம் சட்டிதனி லுப்பைப்போட்டு
கணக்காக அதன்பேரில் ரசத்தைவிட்டு
தண்மையாய் நால்ஜாம மெரித்துவாங்க
தவளநிற மாகவே யேறிநிற்கும்
துண்மையா யேறினதோ ரிரசந்தன்னை
துப்பரவா யெடுத்துமே நிறுத்துக்கொள்ளே.

நிறுத்துமே ரசபதங்கம் பலமுமெட்டு
நிலவரமாய் வறுத்த கல்லுப்பிரண்டு
கறுத்துமே வறுபட்ட துரிசிரண்டு
கடினமாம் வெடியுப்புப் பலமும்ரண்டு
தருத்துமே சீனமது சுன்னம்ரண்டு
தயவான சாரம்ரண்டு பூனீரண்டு
பருத்துமே யெல்லாந்தான் பொடித்துக்குப்பி
பக்குவமாய் போட்டுமே ரசமாய்ப்போடே.

போட்டுமே குப்பிக்குக் கல்லால்மூடி
போதவே சீலைமண் ணேழுஞ்செய்து
காட்டுமே சட்டியிட்டு யெரியேபாகம்
கனமாக வேறியே வயிரம்போலாம்
தாட்டுமே வீரமது விக்கும்வீரம்
தப்பாமல் நாளொன்று எரித்துவாங்கு
பாட்டுமே யிதையைந்து தரமேவைத்தால்
பகர்கோடா சூரியாம் வீரமாமே. உசக

வீரமா மைந்துதரம் வைக்கும்போது
விருப்பமாய் வீரத்தை யெடுத்துவைத்து

காரமாம் கல்லுப்பு துரிசுசாரம்
கனமான வெடியுப்பு பூனீர்சினம்
பாரமாம் பொடித்துமே தடவையைந்து
பகர்ந்துமே புதிதாகப் பொடித்துப்போடு
வாரமா மைந்துமே மடக்கில்வீரம்
வகையாகச் சிவந்துமே யிருக்கும்பாரே. உசஉ

இருக்கிறவன் வீரனென்றுல் சுத்தவீரன்
இதமான கொடுவீரன் கொத்தளத்துவீரன்
நருக்கிறவன் துரிசென்ற ராஜாதன்னை
நலமான கொக்கிறகு ஆக்கப்பட்டோன்
பருக்கிறவன் ரதகஜமும் பதாதிசேனை
பகற்போதே நிறுத்தியே சுன்னஞ்செய்வோன்
வருக்கிறவ னெழுவருடன் கூடிவாழ்ந்தோன் 7
வகையான வீரமென்ற ராஜாதானே. உசங.

வீரசின ராஜர்கள் பூதத்துடன் சேர்ந்து தாரந்துரிசு
உபரசராஜாக்களைக் கொல்லல்.

வீரமென்ற ராஜனுமே சினராஜன்
விருப்பமா யிருபேருங் கூடிக்கொண்டு
காரமென்ற காலாளாய் பச்சைபூரம்
கடுமையாய் மூவருமே படையெடுத்து
தாரமென்ற தாரத்தை நீற்றிக்கொண்டு
தாக்கான கண்டரையே நீற்றிப்போட்டார்
பாரமென்ற உபரசமா நூற்றிரண்டு
பத்துப்பே ராஜாவை நீற்றிக்கொண்ணூர். உசச

கல்லுப்புமந்திரி கப்பங்கட்டாது இத்தராசனுட
ன் பரிகாசமாய்ச்சொல்ல தூரிசுராஜன் மேல
ங்கியேற கல்லுப்புக்கட்டி யுருகுதல்.

நீத்திடவே கல்லுப்பு என்றமந்திரி
நினைவாகக் கப்பமுதல் கட்டச்சொன்னால்
காத்திடவே கப்பங்கள் கட்டமாட்டேன்
கரியில்நின்று உருகியே ஆடமாட்டேன்
பாத்திடவே யிந்துவென்ற ராஜாவோடே
பரிகாசமாய்ச் சொல்லி யனுப்பும்போது
நாத்திடவே தூரிசென்ற ராஜாவந்து
நகைத்துமே மேலங்கி யேறினாரே. உசசு

கல்லுப்புக் கட்டியை யுருக்கிக் களங்குசெய்துவேதை.

ஏறியே அவர்நீரை வாங்கிக்கொண்டா
ரிதமாகக் கல்லுப்பு விரைத்துப்போச்சு
ஆறியே கரியில்நின் றுருகும்போது
அடைவான நாலுக்கு ஒன்றுதங்கம்
காறியே தங்கமிடை நாகம்போடு
கனமான நாகமிடை கெந்திபோடு
வாறியே கெந்தியிடை ரசத்தைப்போடு
வகையாக அடிக்கடிக்குக் காரந்தாக்கே. உசசு
காரமே தாக்கவே களங்கமாச்சு
கனமாகச் செம்புதனி லூதிக்கொண்டு
வாரமாங் கொடுத்திடவே மாற்றுப்பத்து
வகையான தங்கமிது வடிவுமெத்த

பாரமா மென்றுசொல்லி மயங்கவேண்டாம்
பதிவான கோடாசூரி பண்புமெத்த
ஆரமாம் சரக்குகளில் போடநீறு
மன்பான வுபரசமு நீறுந்தானே. உசன

தேரையர்சீஷர் நிர்மலாநந்தர் சித்தர்கள்முன்
வீரபஸ்பத்தால் காக்கையை வெள்ளையாக்கி
யதிசயிக்கச் செய்தல்.

நீறுமே தேரமா முனிவர்சீஷர்
நிருமலா நந்தரென்ற சித்தரப்பா
பாறுமே கோடாசூரி வைப்புவைத்து
பத்தியாய்ப் பதினெட்டு சித்தர்கூட்டம்
காறுமே கூடியே யிருக்கும்போது
காகத்தைப் பிடித்துமே உமிநீராலே
தாறுமே வீரத்தைத் தொட்டுப்போட்டு
தாக்கிடவே கொக்குவெள்ளை யாகப்போச்சே.

போச்சுதே பறக்கயிலே சித்தரெல்லாம்
போக்கோடே அண்ணாந்து பார்த்துபார்த்து
ஆச்சுதே காகமோ கொக்கோவென்று
அருமையாய்ப் பேசியே மலைத்துக்கொண்டு
மூச்சுதே யிப்படிதான் ஆர்செய்தாரோ
முனியான சீஷரைத்தான் கேட்கும்போது
ஆச்சுதே நிருமலா நந்தர்வந்து
வகையாக அடிபணிந்து சொன்னார்தாமே. உசசு

கோடாசூரி வீரத்தைவைத்துக்கொண்டு சினத்தை நீத்து
துரிசுசுன்னஞ்செய் சூதத்தைக் கட்டிக்கொள்.
சொன்னதொரு சங்தோஷப் பட்டுசித்தர்
சுகமாக விருமென்று விடங்கொடுட்தார்
கன்னதொரு கோடாசூரி வைப்புவீரம்
கனமான வாதிகளே வைத்துக்கொண்டு
சின்னதொரு சினத்தை நீற்றுக்கொண்டு
சிகமெய்தத் துரிசியது சுன்னம்பண்ணு
வன்னதொரு சூதமென்ற ராஜாவைத்தான்
வகையாகக் கட்டியே வைத்துக்கொள்ளே. உரு0

பித்தளைத்தூளே காட்டாமணக்கின் பாலில் கோ
டாசூரி வீரஞ்சேர்த்து வேதையாட.
வைத்துக்கொள் பித்தளையை ராவிக்கொண்டு
வகையாகப் பலநாலு நிறுத்துக்கொண்டு
நைத்துக்கொள் காட்டா மணக்கள்பாலில்
நலமாக ஒருசேரு கரந்துவூற்றி
கைத்துக்கொள் கொச்சியென்ற வீரமொன்று
கனமாகப் பொடித்திட்டுப் பாலிற்போடு
பைத்துக்கொள் மூன்றுநாள் ஊறவைத்துப்
பாகமாய்க் குகையிலிட் டுருக்கிடாயே. உருக

கொச்சியென்ற வீரத்தால் பித்தளைதங்கமாதலும்
தனேகேள்வியால் செய்யாமல் நூலைப்பார்த்
துச் செய்யெனலும்.
உருக்கிடவே தங்கமாம் பசுமைமெத்த
ஓகோகோ செம்புதனி விடையேசேர்த்து

பருக்கிடவே பத்துமே மாற்றுகாணும்
பதிவாக விருந்துமே யோகம்பாரு
வருக்கிடவே கேள்விபினுல் சுடவும்வேண்டாம்
வகையாக யூகிமுனி நூலேப்பாரு
நருக்கிடவே கொச்சியென்ற வீரம்வைத்தால்
நலமான பித்தளையுந் தங்கமாச்சே. உருஉ

தங்கவுரைக்கு ஆணிக்கோர்வையி னடையாளம்.

தங்கமாம் பொன்னுக்கு ஆணிக்கோர்வை
தாய்கேழ்க்கச் சிவனுமே சொன்னரப்பா
அங்கமா மூரையாத பொன்னுக்கெல்லா
மடைவுடனே உரைபார்க்க ஆணிக்கோர்வை
பங்கமாம் நாலுக்கு நாலுபுள்ளி
பதிவான நாலணக்கி நால்மேல்வெட்டு
தங்கமா மைந்துக்கு ஐந்துபுள்ளி
துப்பரவாய் அஞ்சணக்கி அஞ்சும்வெட்டே.
வெட்டான ஆறுக்கு நாலுவெட்டு
வேண்டியதோர் ஆறேகாலுக்குத் தானும்
தட்டாக கீறிட்ட புள்ளடியின்கீழே
தண்மையாய் கீழ்சாய்ப்பு என்றுசொல்லு
மூட்டான ஆறரைக்குப் புள்ளடியுமாகும்
முதன்மையா மாறே முக்காலுக்குத்தான்
கட்டானபுள்ளடியின் மேலே வெட்டு
கடிதான வேழுக்கு விபரங்கேளே. உருச
விபரங்கேள் மூன்வெட்டு ஆணியாகும்
விளங்கியதோ ரேழேகா லாணிக்குத்தான்

கபரங்கே ளொருசாய்ப்பு என்றுசொன்னார்
கருது ஏழரைக்குமே யிரண்டுவெட்டு
தபரங்கே ளேழே முக்காலுக்குத்தான்
தரியாத வொருவெட்டு என்றுசொல்லு
வபரங்கே ளெட்டுக்கு இருசாய்ப்பாகும்
வண்மையா யெட்டே காலுக்குக்கேளே. உருடு
கேளப்பா ஒருசாய்ப்பு என்றுசொல்லு
கெடியாக வெட்டரைக்குப் புள்ளடியேபேசு
நாளப்பா வெட்டே முக்காலுக்குத்தான்
நளினமா யைந்துவெட்டு ஆணியென்று
பாளப்பா ஒன்பதென்ற மாற்றுக்குத்தான்
பதிவாக நாலுவெட்டு ஆணியாகும்
காளப்பா ஒன்பதே காலுக்குத்தான்
கடிதான மூன்றென்று இயம்பிடாயே. உருசு
இயம்பிடவே ஒன்பதரை மாற்றுக்குத்தா
னியல்பாக ரண்டுவெட்டு ஆணியாகும்
கயம்பிடவே ஒன்பதே முக்காலுக்குக்
காரியமா மொருவெட்டு ஆணியாகும்
தயம்பிடவே பத்துக்கு ஆணியில்லை
தப்பாது செட்டியுரை ஆணிக்கோர்வை
நயம்பிடவே நீபார்க்க உரைப்பான்கல்லில்
நாயகமாய் நீபார்க்கத் திருடுவானே. உருள

துரிசுச்சுன்னத்திற்கு வங்கச்சுன்னஞ்செய்து கவசமிட.

திருடாமல் துரிசிலுட சுன்னஞ்சொல்வேன்
திருவாக ரண்டுபலம் வங்கஞ்சேர்த்து

கருடாமல் மேலூற்று யூதிமெள்ள
கருத்தாகப் பார்த்திடவே பொருமிநீறும்
நருடாமல் வீரமது இடையேசேர்த்து
தாக்கியே யெருக்கம்பா லரைத்துவூது
வருடாமல் நீறியது சுன்னமாகும்
வண்மையா யின்னெருக்கால் வீரஞ்சேரே.

சேர்த்துமே கால்வாசி யெருக்கம்பாலால்
செப்பமா யரைத்தூவி காயவில்லை
கார்த்துமே கரியில்வைத் தூதிப்போடு
கணக்காக விப்படியே யைந்துவூது
பார்த்துமே தடவைக்குக் காலுஞ்சேர்த்து
பக்குவமா யிப்படியே யூதிநெக்கால்
நார்த்துமே கொக்கிறகு போலாம்வங்கம்
நலமாக வெடித்துமே வைத்துக்கொள்ளே.உருசு

மேற்படி வங்கச்சுன்னத்துடன் ரசபதங்களுஞ் சே
ர்த்துத் தூரிசுக்குக் கவசமிட.

வைத்துமே ரசபதங்க மிடையேசேர்த்து
வகையான திராவகத்தா லரைத்துக்கொண்டு
நைத்துமே வில்லைபண்ணி ரவியிற்காய
நலமாகச் சுண்ணம்புக் கவசம்போட்டு
பைத்துமே வுமிநெருப்பில் புடத்தைப்போடு
பதிவாக வெடித்துமே கவசம்போர்த்து
கைத்துமே வீரமது காலுங்கூட்டி
கனமாகத் தூரிசுக்குக் கவசம்பண்ணே. உசு0

துரிசுச்சுன்னத்தை வீரஞ்சேர்த்துத் தாரத்தி
ற்குக் கவசஞ்செய்து புடம்போட.

பண்ணியே சுண்ணும்பு கவசம்போட்டுப்
பரிவாகச் சேவலென்ற புடத்திற்போடு
நண்ணியே மேற்கவசம் தள்ளிப்பார்க்க
நலமான துரிசதுதான் சுன்னமாச்சு
கண்ணியே கடுஞ்சுன்னங் துரிசுச்சுன்னம்
கடிதான நாலுக்கு ஒன்றுவீரம்
வண்ணியே யரைத்துமே தாரத்தப்பி
வகையாகச் சேவலென்ற புடத்தைப்போடே.

தாளகச்சுன்னத்தில் வீரஞ்சேர்த்துத் துரிசுக்குக் கவ
சமிட்டு சுன்னஞ்செய்து இரசமணி செய்ய.

போடவே தாளகந்தான் சுன்னமாச்சு
போக்கோடே நாலுக்கு வீரமொன்று
காடவே அரைத்துமே துரிசுக்கப்பி
காடையென்ற புடத்திலே துரிசுநீறும்
பாடவே துரிசுநீர் பணவிடையேபோட்டு
பக்குவமாய்ச் சேருரசங் கட்டிப்போகும்
தாடவே மணிபோலே யுருட்டிவைத்து
தாவடமாய்ப் போட்டுமே புடத்தைப்போடே.

இரசமணி செம்பட்டில் கட்டி ஜபஞ்செய்ய சிவன் தேவி
வெளிப்பட்டு வாதங்காட்ட வாதஞ்சித்தி.

போட்டுமே செம்பட்டில் கோர்த்துக்கொண்டு
போக்கோடே யெட்டுமே ஜபத்தைப்பண்ணு

காட்டுமே சகலமுந்தான் சித்தியாகும்
கருணைபெற வாதமது எல்லாங்கேட்கும்
தாட்டுமே சிவனுங்கித் தனங்கள்செய்வார்
தாய்வந்து வாதத்தைக் காட்டிவைப்பாள்
பாட்டுமே பாடுபெட்ட வாதிகேளு
பகரவே சூக்ஷமிது பகுத்துப்பாரே. உசுங

தாளகச்சுன்ன வேதையும் லிங்கச்சுன்னவேதையும்.

பகுத்துப்பார் தாளகத்தை நீற்றிக்கொண்டு
பதிவாகச் செம்புருக்கி யதனில்தாக்கு
வகுத்துப்பார் தங்கமது பத்துமாற்று [க்கு
வளமைபெறச் சொல்லிவிட்டே னுலகத்தோர்
தகுத்துப்பார் துரிசுநீர் லிங்கமேலே
தாக்கியே குழைத்தப்பி புடத்தைப்போடு
ககுத்துப்பார் நீறியது சுன்னமாகும்
கடுமையாம் செம்புருக்கி னூற்றிலொன்றே.

சகலசரக்குந் துரிசுசுன்னத்தா லிப்படியேநீறுமெனல்.

ஒன்றுதான் கொடுத்திடவே தங்கமாகு
மூத்தமனே இப்படித்தா னெல்லாத்துக்கும்
கன்றுதான் சரக்கெல்லாம் நீறிப்போகும்
கண்டருட செயலாலே யெல்லாந்தங்கம்
வன்றுதான் சுருக்கமா யிருக்கும்பாரு [னர்
வண்மையாய்ச் சித்தரெலா மறைத்துச்சொன்
தன்றுதான் நினைவாலே யறிந்துபாரு
தாய்சொல்ல நான்செய்து சொன்னேன்பாரே.

வழலையை சித்தர்மறைத்துச் சொன்னரெனவும் யூகி
வெளிப்படையாய்ச் சொன்ன ரெனவும் வழலை
வங்கமெனவும் சொல்லப்படுகிறது.

பாரென்று வழலதனை மறைத்துவைத்து
பதிவான சித்தரெல்லாஞ் சொன்னரில்லை
காரென்று யூகியென்று புத்திதன்னில்
கருத்துறவே யடியேன் ஜீவனுமும்பண்ணி
வாரென்று கடைசியிலே சொல்லிவிட்டேன்
வகையான வாதிகளே நம்புநம்பும்
தாமென்று வழலையறி யாதோர்கெட்டார்
தாக்கியே வங்கந்தான் வழலையாமே. உசுசு

வங்கத்தை வழலையென்றுஞ் நம்பாரெனவும் சித்தர்க
ள் பயப்படுத்திச்சொன்ன பலவிதபுரட்டை நம்பு
வாரெனவும் வழலையை பலபலவிதமாய்மட-
மையால் பாபிகள்சொல்லிச் செய்தலே
வாரெனவுங் கூறுகின்றது.

வங்கந்தா னென்றுசொன்னால் நம்புவாரோ
வகையான பதினெட்டுப் பேர்கள்சொன்ன
சிங்கந்தா னென்றுபய முறுத்திநிக்கால்
சிறப்பான கண்கண்டால் பயமதாகும்
பங்கந்தான் பூனிறை வழலையென்றும்
பாதகமாய் மனதுக்குள் ளிருக்குதென்றும்
பொங்கந்தான் தலைமண்டை வழலையென்றும்
பொல்லாத பாபிகள்தா னலைகுவாரே. உசுள

அலைகுவார் பூனீற்றை யெடுத்துக்கொண்டு
அடிநாக்கில் போட்டுமே வழலையென்பார்
மலைகுவார் கருவித்தை வழலையென்பார்
மயங்கியே பிண்டந்தான் வழலையென்பார்
தலைகுவார் தலைமண்டை தைலம்வைத்து
தாக்கியே கருவிதுதான் வழலையென்பார்
புலைகுவார் பாதைகள்தான் தெரியாமல்தான்
புலம்பியே கரிசுட்டு அலைவார்பாரே. உகூஅ

வழலை வங்கம் சீனம் துரிசு இவைதானென்றும் இவை
முறையே சுன்னம்கட்டு மூதலியவை செய்யுமென
வும் இதனைச்செய்து நீடூழி சித்தராய் வாழ
லாமெனவுஞ் சொல்லியது.

அலையாமல் வங்கந்தான் வழலையாகும்
அடிமையாய் வேலைசெய்தால் சுன்னமாகும்
கலையாமல் சீனந்தான் வழலையாகும்
கடுஞ்சரக்கை கொல்வதுடன் கட்டிநீற்றும்
பலையாமல் துரிசியது வழலையாகும்
படியான சூதத்தைக் கட்டுப்பண்ணும்
நிலையான வழலைதா னிதுதான்பாரு
நீடூழி காலமெல்லாஞ் சித்தராவீர். உகூக

சித்தர் மூதலாகுராக வின்னின்னதைச் செ
ய்யவேண்டுமெனல்.

சித்தராய்ப் போகவே வழலைசொன்னேன்
சிரிப்பான தலைமண்டை யெடுக்கவேண்டாம்

பத்தராய்ப் போகவே நூலெப்பாரு
பலனில்லாக் கருவித்தை பொய்யென்றெண்ணு
கத்தராய்ப் போககா ரியம்பாரு
கனமான பூனீற்றை நம்பவேண்டாம்
முத்தரா யிருக்கவென்றுல் ரசத்தைப்பாரு
மூவுலகும் ரசவாத மாகும்பாரே. உஎo

வங்கநீற்றல்முதலிய வாத மின்னின்னதெனல்.

ரசவாத மேவாதம் நிசமதாகும்
நவின்றதொரு குசவாதம் கலியம்பண்ணல்
நிசவாத மேவாதம் தொழில்களாகும்
நீட்டினகால் முடக்குற்றுல் பெரியவாதம்
பசைவாதமே வாதம் நூலெத்தேடல்
பரிகாரம் பார்ப்பதொரு வாதமாகும்
நிசவாத மேவாதம் வங்கநீற்றல்
நிச்சயமாய் வழலையது தப்பாதாமே. உளக

வழலையை சித்தர்க ளெனக்கு மரைத்துச்சொல்
லு நானதிக துன்பப்பட்டு சிவனிடத்தில் த
வஞ்செய்ய ஈஸ்வரிவெளிப்பட்டு வழ
லையெனக்குக் கூறினுள்.

தப்பாது பூனீறு பேர்படைத்து
தயங்கவே யெனக்குத்தான் வழலைமார்க்கம்
வப்பாது சித்தரெல்லா மலைவாய்ச்சொன்னுர்
வகையாக வெகுநாளா யலைந்துதேறி
மூப்போது சிவனிடத்தி லடிமைவேலை
மூந்தியாய்ச் செய்துவெகு தொண்டுசெய்தேன்

செப்பாது ஈர்வரியுஞ் சந்தோஷித்து
சிறப்பான வங்கந்தான் வழுலியென்றுள். உஎஉ

பூனீறுமுதலிய வென்ன செய்யுமெனவும் வங்கச்சுன்ன
மாலுல் துருசுச் சுன்னமாமெனவும் சூறுகின்றது.

என்றதொரு வாதிகளே சொல்லக்கேளு
மியல்பான துரிசுக்குள் செம்பிருக்கும்
கன்றதொரு பூனீறு என்னசெய்யுங்
கருத்தான மூலிகைதா னென்னசெய்யும்
பன்றதொரு தலைமண்டை யென்னசெய்யும்
பகர்ந்ததொரு வெடியுப்பு என்னசெய்யும்
தன்றதொரு இளவங்கம் சுன்னமாலுல்
தகைபெறவே துரிசியது சுன்னமாமே. உஎ

துரிசு பூனீறுமுதலியதால் நீருது வங்கச்
சுன்னத்தால் நீறுமெனல்.

துரிசியது ஜயசுன்ன மாகவென்றுல்
துப்பரவாய் மூலிகையில் நீருகாது
பரிசியது அண்டோட்டால் நீருகாது
பதமுடைய பூநீற்றுல் நீருகாது
வரிசியது தலையோட்டால் நீருகாது
வலுமையாய் வெடியுப்பால் நீருகாது
கரிசியாம் வாதிகளே சொல்லக்கேளும்
கடுரமாம் வங்கத்தில் துரிசுநீறே. உஎச

துரிசுல்வய சுன்னமாலுல் இரசங்கட்டி வேதையா
டும் வங்கம் துரிசைக் கொல்லுமெனல்.

துரிசியது சுயகுருவே யாச்சுதென்றுல்
சூதத்தைக் கால்வாரி யடிக்கலாகும்
பரிசியது தங்கமாம் பரிசிக்கில்வேதை
பதிவான லோகமெல்லாம் பழுக்கும்வேதை
சரிசியது இரும்பைத்தா னிரும்புருக்கும்
சரியான உகமையது கண்டுதேறு
வரிசியது துரிசைத்தான் வங்கங்கொல்லும்
வகையான சுன்னமது ஆகும்பாரே. உஎடு

அண்டம்பிண்ட முதலியதென் றெடுத்துச் செய்யும்
குடிகெடுவாதிகளே அவற்றுல் நரகமல்லது வே
றில்லை இதை யடிக்கடி சொல்லமாட்டேன்
துரிசுலை கோடிவித்தையுண்டு.
ஆகுமே குடிகெடுத்த வாதிமாரே
அடைவான வங்கத்தால் துரிசுநீறும்
பாகுமே அடிக்கடிக்குச் சொல்லமாட்டேன்
பத்தியாய்த் துரிசுலை கோடிவித்தை
தாகுமே மண்டையென்றும் பிண்டமென்றும்
தாக்கான பூநீறு சுன்னமென்றும்
வாகுமே இதைத்தொட்டால் நரகமெய்தும்
வண்மையா யூகிமுனி வகுத்தார்தாமே. உஎசு

சிந்தூரபஸ்பத்தால் நோய்போகாமை.

வகுத்தபிணி யகலவே சொல்லக்கேளு
வகையான சிந்தூரம் பண்ணிமாந்தர்
தகுத்தபிணி கொடுத்திடவே சிந்தூரத்தை
தாக்கான பிணிநோவு போகாதப்பா

நகுத்துபற்பந் தின்றாலு நோய்கள்தீரா
நன்மையில்லை தீமையில்லை நாடிப்பாரு
பகுத்துடனே பார்த்துமே பிணிகள்தீர
பக்குவமா யின்னமொன்று சொல்வேன்பாரே.

சிந்தூர நீத்தனங்களுக்கு ரசகெந்தி சேரவேண்டும்.

சொல்லுகிறேன் சிந்தூரம் பண்ணினாலும்
ஜெயமான தங்கமதை நீற்றினாலும்
மெல்லுகிறேன் பச்சைரசங் கெந்திநாலு
மெதுவாக யுருக்கிடவே கறுப்பாய்நிற்கும்
கல்லுகிறேன் சிந்தூர மன்னதோடே [கும்
கடுமையாய்ச் சேர்த்தரைக்கக் கரியாய்ப்போ
வல்லுகிறேன் காயசித்தி சித்திசித்தி
வளமாகக் கொடுத்திடவே சித்தியாமே. உஎஅ

இரசகெந்தி சேர்ச்காத சிந்தூரத்தை சிவப்பாய்ச் செய்து
கொடுத்து வியாதிபோகாது மயங்கிக் கெட்டுப்போதல்.

சித்தியாம் சிறிதுபேர் சிந்தூரங்கள்
சிவப்பாகச் செய்துமே காட்டிகாட்டி
பத்தியா மிதைக்கொடுக்க வியாதிபோகா
பக்குவமா யென்னுடைய சிந்தூரந்தான்
முத்தியாய் சிவப்புமெத்த இருக்குதென்று
முக்கியமாய்ச் சொல்லியே கெட்டுப்போனர்
கத்தியாய் சிவப்பான சிந்தூரங்கள்
கனகோச பீசமுடன் சேரக்கேளே. உஎசு

சிந்தூரபஸ்ப சுன்னமுதலிய சகலத்திற்கும்
ரசகெந்தி சேரவேண்டும்.

சேர்க்கிறதோர் கருவென்ன சொல்லக்கேளு
ஜெயமான சிந்தூர மன்னபற்பம்
ஆர்க்கிறதோர் மடிந்தபின்பு அதிலேசேர்க்க
ஆண்மையாம் ரசங்கெந்தி பச்சையாக
பார்க்கிறதோ ருருக்கி சிந்தூரபற்பம்
பாகமாய்ச் சுன்னமுத லெல்லாஞ்சேரு
நூர்க்கிறதோர் சேர்த்துமே மிகவிழுத்து
நலமாக நேகரைத்துக் கொடுத்திடாயே. உஅo

இரசகெந்தி சேர்ந்தது கறுப்பாயிருக்குதென்று
யோசியாதே நோய்களே சீராய் கண்டிக்கும்
காயசித்தி லோகசித்தியாகும் இம்முறை
சிவன்முதல் பரம்பரையாய்வந்தது.

கொடுத்திடவே நோய்களெல்லாந் தவிடேயாகும்
குணமான பற்பந்தான் கறுப்பாய்தோணும்
நடுத்திடவே கறுப்பென்று மயங்கவேண்டாம்
நலமான வியாதிகளேச் சண்ணும்பாரு
வடுத்திடவே காயசித்தி லோகசித்தி [னர்
வண்மையா யாகுமென்று சிவன்தான்சொன்
கடுத்திடவே தேவிதான் கேட்டுக்கொண்டு
கனமான நந்திக்குச் சொன்னார்தானே. உஅக

சொன்னதொரு நந்திதான் தன்மந்திரிக்கு
சுரூபமாய் தன்மந்திரி அசுவனிக்கு

கன்னதொரு அசுவனியும் விசுவனிக்கு
கருணைபெற விசுவனியும் அகத்தியர்க்கு
பன்னதொரு அகத்தியரும் புலத்தியர்க்கு
பதிவான புலத்தியரும் தேரருக்கு
சின்னதொரு தேரரும் யூகிக்குச்சொல்ல
சிறப்பான யூகிதா னுலகத்தோர்க்கே. உஅஉ

உலகத்தோருக்கு வயித்தியம் வாதஞ்சொன்னேன் இத
னேப்படித்தத்தேறி களங்குவகை மூனனேசெய்
து செலவுக்கு வைத்துக்கொள்.

உலகத்தோர் பிழைக்கவயித் தியங்கள்சொன்னேன்
உண்மையாய் வாதமொடு சுன்னஞ்சொன்னே
கலகத்தோர் புத்தியினல் கண்டுகொள்ளு [ன்
காரணமாய் கைபாகம் விபரமெல்லாம்
பலகத்து சாத்திரத்தைப் படித்துக்கொண்டு
பன்பான சரக்குவகை நீற்றிப்பாரு
தலகத்துக் களங்குவகை முன்னேபண்ணு
தண்மையாய்ச் செலவுக்கு வைத்துக்கொள்ளே.

கெந்தகத்தைலத்தால் மட்டத்தை மாற்றுயரச்செய்வது.

வைத்துக்கொள் மட்டங்க ளஞ்சுமாற்று
வகையானல் மாற்றதுவு முசந்துபோக
நைத்துக்கொள் கெந்தியுட தைலஞ்சொல்வேன்
நலமான நல்லெண்ணெ யியங்காவில்
பைத்துக்கொள் கெந்தியது பலமும்போட்டு
பண்பாக முறுகவெரி தைலமாகும்

கைத்துக்கொள் தைலத்தை யிறுத்துக்கொண்டு
கனமான ரசபதங்க மிடையேசேரே. உஅச

சேர்த்துமே தணல்வைத்து கொதிக்கும்போது
செப்பமாய் குச்சினுல் திராவிக்கொள்ளு
பார்த்துமே பதமாக வெடுத்துக்கொண்டு
பக்குவமாய் முன்மட்டங் தகடாய்த்தட்டி
காத்துமே தகட்டின்மேல் தைலம்பூசி
கனிவாகக் குழம்பாகப் பூசிவாட்டு
நாத்துமே புடம்வைக்கக் கறுப்பாயாகும்
நலமான வெங்காரஞ் சேர்த்துருக்கே. உஅடு

உருக்கியே தகடாகத் தட்டிக்கொண்டு
உண்மையாய் தைலத்தில் பூசிவாட்டி
நருக்கியே புடம்போடக் கரியாய்நிற்கும்
நன்மையாய்த் தட்டாம லுருக்கிக்கொண்டு
வருக்கியே வெங்காரம் போட்டுருக்கி
வண்மையாய்ப் புடம்நாலு போட்டிடாயே
தருக்கியே தட்டாமல் நொறுங்குமட்டுந்
தாக்கியே வலுவாகப் போட்டிடாயே. உஅசு

தைலத்தா லிப்படி செய்யாவிட்டால் புத்தி
யில்லாவாதி யேமாந்திடுவன்.

போட்டுமே மட்டத்தை யுருக்கிப்பார்க்க
பொன்னுகு மெட்டரையா மாற்றுகாணும்
காட்டுமே யிப்படிதான் செய்யாவிட்டால்
கனமான மாற்றுதா னையர்ந்திடாது

தாட்டுமே பசுமையெல்லா மிந்தப்போக்கு
தாக்காட்டால் களைகமது ஆகாதாகும்
வாட்டுமே வாதிக்குப் புத்தியில்லை
வளமாகச் செய்யாமல் பதைப்பான்பாரே.

மூடவாதி சிறுபிள்ளையைப்போல் பதைபதைப்பா
ன் அப்படிக்கில்லாமல் புடம்பார்த்து மறை
த்துப் பொறுமையாய்ச் செய்.

பதைத்துமே ஜல்தியாய் சரக்கைவைத்து
பாதியாம் புடத்திலே யெடுத்துப்பார்த்தால்
கதைத்துமே சிறுபிள்ளை நுணுக்காய்வைத்து
களமாகப் பழுத்தகதை போலாம்வாதம்
வதைத்துமே சிலவாதி கிளாக்காய்தன்னில்
வண்மையா யுப்பதுபோ லிருக்குமெள்ள
சிதைத்துமே புடம்பார்த்து பாகம்பார்த்து
சிக்கிரத்தி லொருவருடன் சொல்லுவானே.

அவசரவாதி பெரியோர் முதலாரைநிந்தித்து
அவசரத்தால் வெவ்வேறு குருவையடுத்து
பலனற்றுச் சாவானெனல்.

சொல்லியே பெரியோரைத் தாஷணித்து [ணி
சோம்பியே சாத்திரத்தைப் பொய்யென்றெண்
அல்லியே யவசரத்தில் பார்த்துப்பார்த்து
அவன்சேதி யின்னொருத்தன் சேதிகேட்டு
துல்லியே நாய்போலே தொடர்ந்துபார்த்து
துப்பரவா யில்லையென்று அவனைவிட்டு

கல்வியே யிப்படிதா னலைந்தபோது
கனமான வயதுசென்று சாவார்தானே. உஅசூ
கேள்விவாதிகள் வாதம்பலியாது ஜநநம்
தோறும் துன்புறல்.

தானேதா னுடல்விட்டு உபிருமேக
தப்பாமே வாதமே வாதமென்று
கானேதான் மறுபிறப்பு பிறந்துசுட்டு
கலங்கியே மூன்றுதலை முறைபுமேங்கி
வானேதான் கேள்வியினல் சுட்டபேர்க்கு
வகையான தினையளவு பொன்னுமில்லை
மானேதான் மூட்டாளைக் கேட்டுசுட்ட
மாதவர்க்கு மில்லையென்று சிவன்சொன்னாரே.
சிவன்பரம்பரையில் யூகிசொன்ன நூலைவாசி
க்க சகலசித்தியுமுண்டு.

சிவன்தானும் யூகிக்குச் சொன்னநூலை
சிறப்பாக வாசித்துத் தேறிச்சுட்டால்
கவன்சொன்ன தங்கமாம் வாதமாகும்
கவனமோ சித்தியாம் சித்தராவீர்
பவன்சொன்ன விச்சென்மத்தில் கிடைக்கும்
பாக்கியமாங் குபேரனுட பண்புமாகும்
தவன்சொன்ன யோகசித்தி காயசித்தி
தப்பாமல் சத்தியமாம் நூலைப்பாரே. உகூக

காகத்தைலத்தால் மட்டத்தை மாற்றுயரச்செய்வது.

நூல்பார்த்த புத்தியுள்ள வாதிமாரே
நுணுக்கமா மின்னமொரு தைலஞ்சொல்வேன்

கால்பார்த்த மட்டத்தில் பழுப்புநின்முல்
காரணமாந் தங்கமய மாகக்கேளு
தால்பார்த்த நாகமது பலமோவொன்று [து
தருணைபெற விலுப்பைநெய்யில் தரந்தால்பத்
வால்பார்த்து ச்சாச்சுமே யதையுருக்கி
வகையான நாலுக்கு ரசமுமொன்றே. உகூ

ஒன்முக ரசஞ்சேர்த்து அரைத்துக்கொண்டு
ஒப்புரவாய் வீரமது இடையேசேர்த்து
கன்முக நல்லெண்ணெயா லரைத்துக்
கடுகவே குழம்பாக விரண்டுஜாமம்
வன்முக வுரைத்துமே யிடையேகெந்தி
வலுவாக வதையரைத்து நாள்தான்பத்து
நன்முகப் போட்டுமே அடுப்பிலேற்றி
நலமாகத் திமுடுக வெரித்திடாயே. உகங

எரித்துமே குழம்பாக வெடுத்துக்கொண்டு
இதமான தைலத்தைப் பூசைபண்ணி
கரித்துமே பழுப்பான மட்டத்தைத்தான்
காரணமாய் தகடுதட்டி தைலம்வாட்ட
பரித்துமே கறுப்பாக விருக்கும்பாரு
பதிவாகத் தட்டாமற் புடத்தைவையே
தரித்துமே வெங்காரஞ் சேர்த்துருக்கி
தண்மையாய்ப் பின்பொருக்கால் தகடுதட்டே
தகடுமே தட்டியே தைலம்வாட்டி
தப்பாம லிப்படியே போட்டுருக்க

அகடுமே நாலுதரம் போட்டுருக்கு
ஆணிக்கு எட்டரைதா னறிந்துபாரு
வகடுமே தைலத்தில் மாற்றுள்ளும்
வலுவாகப் புடத்துக்கு இருக்கும்தங்கம்
பகடுமே வோந்திகண்ட மயிலைப்போலே

பலவார்த்தை சொல்லாமல் நூலைப்பாரே.உகூடு
நூலைவரிவரியா யூனிப்பார் யூகிசொன்னவாதஞ் சித்தியாம்.
நூல்பார்க்கப் பார்க்கவே தெளிவுகா ணும்
நுணுக்கமாய் வரிவரியாய் மனசையூன்று
கால்பார்க்கக் கடைத்தலையும் பார்த்துத்தேறு
கனிபோலே யிருக்குமது சுருக்கமாக
தால்பார்க்கும் வாதமது கைக்குள்ளாகும்
தண்மையா யூகிமுனி யுரைத்தநேர்மை
பால்பார்க்கும் பூனைபோல் கடைவாய்நக்கிப்
பரிவாகத் தரியாமல் நினைவில்லையே. உகூசு

பொன் வெள்ளி செம்பு காரீயக்கலப்பில் வகை.
வையப்பா வின்னமொரு தங்கமார்க்கம்
வகையாகச் சொல்லுகிறேன் வைத்துப்பாரு
பொய்யப்பா போகாமல் வெள்ளிபொன்று
போக்கோடே செம்பொன்று சேர்த்துருக்கி
கையப்பா காரீயங் காலுங்கூட்டி
கருணைபெற வுருக்கியே யூதிப்போடு
வையப்பா தகடாகத் தட்டிக்கொண்டு
பாகமாய் தைலத்தில் துவைத்துவாட்டே. உகூஎ

வாட்டியே சுவரவே வாட்டிவாட்டி
வகையான புடம்வெகுவா பிட்டுஇட்டு
தாட்டியே பெடித்துப்பார் கறுப்பாய்நிற்கும்
தட்டாமல் சிதறுமல் கரியில்வைத்து
காட்டியே வெங்காரம் பொரித்துவைத்து
கனமாக வுருக்கியே தகடுதட்டி
மாட்டியே பின்பொருக்கால் தைலம்வாட்டி
மயமாகப் புடம்போட்டு வுருக்கிடாயே. உகூஅ

உருக்கிடவே ஐந்துதர மிவ்வீதந்தான்
உரவாகத் தங்கமது ஆகும்பாரு
நருக்கிடவே தாய்சேர்க்க வேண்டாமப்பா
நலமான நாகந்தான் தாயுமாச்சு
கருக்கிடவே அவசரத்தில் பதங்களாக
கனமாகப் போட்டாக்கா லுருகிப்போகும்
தருக்கிடவே பையவே பழுத்தமாங்காய்
நல்லபழ மாகுமே நடக்கைபாரே. உகூக

இந்நூலிலொருவித்தை பலித்தால் கோடிவித்தைகைகூடும்.

நடக்கைபா ரிந்நூலில் கோடிவித்தை
நலமாக விருக்குமது பார்த்தால்கேளு
நடக்கைபா ரொருவித்தை பலித்ததென்றுல்
நலமாகக் கோடிவித்தை கூடனைத்திலாகும்
அடக்கமாய் செய்துமே யுண்டுதேறு
அன்பாகத் தைலத்தை வைத்துக்கொள்ளு
படக்கமாய்த் தலைமுறையும் வந்துதேறி
பலகால நீடுழி வாழ்வீர்தாமே. ந00

ஆறுமாற்று பொன் ஏழுமாற்றுக.

நீடுழி வாழ்கவே பொன்னைத்தட்டி
நிச்சயமாய் தைலத்தில் தோய்த்துவாட்டி
காடுழி புடம்போட்டு உருக்கிப்பாரு
கனகமா மாறினு லேழுமாற்றே
பாடுழி யொருமாற்று பணங்களாபம்
பக்குவமா யண்ணடம் செலவுக்காமே
நாடுழி இப்படியே காலம்போக்கு
நமனுக்கு ஆளாகா நடத்தைபாரே. நoக

கெந்தகக்குழம்பால் செம்பு கலப்புவேதை.

நடத்தைப்பார் வெள்ளாட்டுக் கடாயின்பிச்சு
நலமாகப் படியொன்று அளந்துவிட்டு
கடத்தைப்பார் கெந்தகமும் பலமுமெட்டு
காரணமாய் வீரமது பலமுமொன்று
தடத்தைப்பா ரிதைப்பொடித்துப் பிச்சில்போட்டு
தயவாக மூன்றுநாள் வைத்துக்கொண்டு
வடத்தைப்பார் குழம்பாகக் காய்ச்சிக்கொண்டு
வளமாக வின்னமொரு வண்மைகேளே. நo2

வண்மைகேள் செம்பொன்று அயமுங்காலும்
வளமாக வெள்ளியொன்று சேர்த்துருக்கி
தண்மைகேள் தகடாகத் தட்டிக்கொண்டு
தப்பாமல் குழம்பதனை தோய்த்துவாட்டி
கண்மைகேள் புடமஞ்சி லேழ்மாற்றுகும்
கனமான தங்கமொன்று சேர்த்துப்பார்த்தால்

திண்மைகே ளெட்டுக்குக் குறையாதப்பா
திரமான பாகமிது தெளிந்துபாரே. கக0க

தெளிந்துதா னுன்மனசைத் திரமாய்ச்சேர்த்து
தேசத்தி லலையாமல் தைலம்வைத்து
அளிந்துதான் வாதிசெய்யா மட்டங்கேளு
அடைவாக வொன்றுமில்லை யென்றுசொல்லி
களிந்துமே மட்டத்தை வாங்கிக்கொண்டு
கருத்துடனே யொருவருக்குங்காட்டாமல்தான்
வளிந்துமே தைலமிட்டுப் புடத்தைப்போடு
வகையாகச் சிவனங்கள் பண்ணிக்கொள்ளே.

செட்டிமாத்துயரச்செய்வான் மட்டங்களுடைந்துபோ
கும்அதை போடாம லிப்படிச்செய் மாற்றுயரும்.
பண்ணிக்கச் செட்டிக்குத் தெரியும்பாரு
படைப்பான பலஜாதி பண்ணமாட்டான்
கண்ணிலே கண்டாலுந் தெரியாதப்பா
கடைகெட்ட வாதியடா வென்னசொல்வேன்
தண்ணிமையா மட்டங்கள் கறுத்திருக்கும் [ம
தண்மையாய் போட்டமட்டம் வெளுத்திருக்கு
துண்ணியே மட்டங்களுடைந்துபோகும்
துப்பரவா யெடுத்தெரிய வேண்டாம்பாரே.

வேண்டாத கறுத்தமட்டம் வெளுத்தமட்டம்
விருப்பமாய் தைலத்தில் புடத்தைப்போடு
காண்டாத தெரிந்தமட்ட மெலும்பில்வைத்து
கருணைபெற வூதினுல் சவளையாகும்

தூண்டாத விளக்கதுபோல் தூண்டிக்கொள்ளு
துப்பரவாய் கெந்தி தைலத்திற்போட்டு
தாண்டாத மட்டமாற் றுயரப்பாரு
தடையறவே யிப்படிதான் செய்துக்கொள்ளே.

மாற்றுயர அடிக்கடி சொல்லமாட்டேன் தைலத்
தில் தோய்த்து புடம்போடவுயரும் இத்தை
லத்திற்கு விலை யிவ்வுலகமெல்லாங்கொ
டுத்தாலும் தராது.

கொள்ளவே யடிக்கடிதான் சொல்லமாடேன்
கூருள புத்தியினல் பண்ணிக்கொள்ளு
மெள்ளவே மாற்றுதா றுயரவென்றுல்
மெதுவான தைலத்திற் புடத்தைப்போடு

கள்ளவே பத்துக்கு உசரமாட்டா
கடைகெட்ட வாதிகளே தைலநன்று
அள்ளவே அகிலமெல்லாங் கொடுத்தாலுந்தா
னப்பனே தைலவிலை கூறுவாறே. ஈ0எ

கெந்தகத்தைலம் பெருமையாராலுஞ் சொல்லமு
டியாது மட்டங்க ளிதலுல்தங்கமாகும்.

கூறுவார் குடிகெடுத்த வாதிமாரே
கூகூகூ கொள்ளையாய்ச் சுடவும்வேண்டாம்
ஆறுவார் கெந்தகத்தின் பெருமைமெத்த
அரனுலு முடியாது அதிகவேலை

தேறுவார் மட்டங்க ளிந்தப்போக்கு
திரம்பார்த்தால் தங்கமய மாகும்பாரு

வாறுவா யிப்படியே யெல்லாம்பாரு
வளமாக விப்படியுந் தைலம்பாரே. ரு0அ

பித்தளைச்செம்புவேதை.

தைலம்பார் பித்தளையின் செம்புசொல்வேன்
தகுந்ததோர் சருகுபித் தளையும்வாங்கி
கைலம்பா குருக்கியே மணிபோலாட
கடுமையாங் கெந்திபலங் கால்நிறுத்து
வைலமாம் ரசபதங்கங் காலும்போட்டு
வளமையா யிவ்விரண்டுங் குமரிநீரால்
மைலமா மஞ்சளென்ற நீராலாட்டி
வளமான சுண்டைக்கா யுண்டைபண்ணே. ரு0க
பண்ணியே யுண்டைக்கி நாகநாலு
பரிவாக வுருகையிலே கிராசம்போடு
கண்ணியே நாகமது வெட்டையாகும்
கடுமையாய் நாகத்தி லூதிப்போடு
புண்ணியே செவ்வலரிப் பூப்போலாகும்
பொருமலா முடைத்துமே பார்த்தால்கேளு
நண்ணியே பூங்காவி நிறமதாகும்
நலமான செம்பைதா னெடுத்துக்கொள்ளே.

தராவேதை.

எடுத்துமே நொறுக்குவெள்ளி யெட்டிலொன்று
இயல்பாகச் சேர்த்திடவே யெட்டுமாற்று
கடுத்துமே தாய்சேர்க்க வேண்டாம்பாரு
கடுமையாய்ப் புடத்துக்கு இறங்கும்பாரு

வடித்துமே தராவைத்தான் பண்ணிக்கொள்ளு
வலுவான தராச்செம்பு மூன்றுமாற்று
தடித்துமே யுலகத்தில் சித்தர்வீதந்
தண்மையா யிருகாய சித்தியாக்கே. ஈகக

யூகிமுனி வடமொழிதென்மொழி பார்த்துச்சொன்ன நூ
லே சத்தியமாய் நினைத்து தைலசுன்னங்களை முடி
த்து வேதையாடு.

சித்தியாம் குடவனிலே வேதைகோடி
சிறப்பான தைலவகை கோடாகோடி
பத்தியாம் சுன்னவகை கோடாகோடி
பழுக்கிறது நாகத்தின் கட்டுகட்டி
மூத்தியாம் வடமொழியைப் பார்த்துத்தேறி
மூக்கியமா யூகிமுனி சொன்னநேர்மை
சத்தியமா யொருவேலை செய்துக்கொள்ளு
சதாகாலம் வாழ்ந்துமே யிருப்பாய்தானே.ஈகஉ

என்நூலில் கெந்தியால் பித்தளைச்செம்பெடுக்கச் சொ
ன்னதை குடிகாரவாதிகள் படிக்காது கலங்கிப்
பொய்யென்று வாதம் பலியாதிருத்தல்.

தானென்ற வெண்ணுடைய நூலில்தானும்
தாக்கான கெந்தியால் பித்தளையைக்கட்டி
வானென்ற செம்பெடுக்கச் சொன்னேனையா
வகையில்லை குடவனிலே யொன்றுமில்லை
கானென்ற படியாத வாதிதானே
கலங்கியே பொய்யென்று வழலேதடி

பானென்ற மதுபானங் குடித்துக்கொண்டால்
பதிவான வாதிக்கிக் கிட்டாதாமே. நகநு
படித்துப் பாடுபடாவாதிக்கு யாவும்பலியாதெனல்.
கிட்டாத வாதிக்குக் குடவனேது
கிளர்ச்சியாய் தைலவகை பாகமேது
மட்டான மட்டங்கள் மிகுதலேது
மயமான களங்குசெய முறைதானேது
பட்டான சிந்தூரம் பாகமேது
பாடுபடா வாதிக்குக் களங்கமேது
தட்டானும் புரட்டருக்கு அறிவங்கேது
தயவான குடவனுட செம்பைவையே. நகச
குடவன் பித்தளைச்செம்பெடுக்க.
வையப்பா சருகுபித்தளையைவாங்கி
வண்மையாய் பந்துபோல் கவசங்கட்டி
நையப்பா புடத்திலே வைத்துப்போடு
நலமாக கரியாக விருக்கும்பாரு
வையப்பா கெந்திதான் நாலும்போட்டு
வலுவாகத் தாழநீ ரதலைாட்டி
வெய்யப்பா வெங்காரம் பொரித்துச்சேர்த்து
விருப்பமாய் வில்லைகட்டி ரவியில்லையே. நகரு
வைக்கவே அதன்பேரில் கவசஞ்சுன்னம்
வகையாக அதன்பேரில் வலுவாய்ச்செய்து
நைக்கவே மண்கவசம் செய்துக்கொண்டு
நலமாகக் காடையென்ற புடத்திற்போடு

பைக்கவே பித்தளையை யுருக்கிக்கொண்டு
பதிவாக யிடைக்கிடையே கொடுத்திடாயே.
கொடுத்திடவே பொன்னெளியை யென்னசொல்வே
குணமான நாகம்பொன் னெட்டிலொன்று [ன்
நடுத்திடவே நொறுக்குவெள்ளி யொன்றுசேர்த்து
நலமான தங்கமது ஒன்றுசேரு
கடுத்திடவே மாற்றென்ன பத்துமாகுங்
கணக்கறிந்து புடமறிந்து போட்டுத்திரு
வடுத்திடவே அதிகபுடம் போட்டாக்காலே
வகையான சரக்கோடி யொன்றுப்போமே.
பித்தளைச் செம்பெடுத்து வேதையாடத் தெ
ரியாது நரகமடைதல்.
ஒன்றுக கெந்தியுட னீயஞ்சேர்த்து
உறவான பித்தளையுங் கூட்டிக்கொண்டு
பன்றுகக் கட்டியே யீயமாக்கி
பரிசான செம்புருக்கித் தாக்கும்போது
நன்றுகச் சத்துகளும் பாயமாட்டா
நலமாக குணமில்லை யென்றுசொல்லி
வன்றுகச் சாத்திரங்கள் பொய்யென்றெண்ணி
வலுவான நரகத்தி லெய்துவானே. நகஅ
நாகக்களங்குசெய்து வேதையாட.
எய்தாமல் நாகமது பலமோபத்து
இதமான விலுப்பைநெ யுருக்கிச்சாச்சு
கய்தாமல் பலமொன்று நிறுத்துக்கொண்டு
கனமான நாலிலொன்று சூதம்சேர்த்து

நய்தாமல் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
நலமான நாகத்திற் கரைதான்தாரம்
வய்தாமல் நாகத்துக் கிடைதான்கண்டர்
வகையான கல்வத்திற் பொடியாய்ப்பண்ணே.
பண்ணியே திராவகத்தா லரைத்துமைபோல்
பதிவாக விருஜாம மரைத்துக்கொண்டு
நண்ணியே வில்லைபண்ணி ரவிபிற்காய
நலமாகச் சுண்ணும்பு பெரிதாய்ச்செய்து
புண்ணியே சேவலென்ற புடத்திற்போடு
புகழாகச் செம்புருக்கி யிடையேதாக்கு
நண்ணியே சீராக வாங்கிக்கொள்ளும்
நலமான நொறுக்குவெள்ளி பத்திலொன்றே.
ஒன்றுகக் கொடுத்துருக்கி யூதிப்போடு
ஓவியமாய்த் தங்கவொளி யென்னசொல்வேன்
கன்றுக்கால் கணக்காகச் செய்துக்கொள்ளு
கருத்துவைத்துப் பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
பன்றுக்கால் களங்கெல்லா மிந்தப்போக்கு
படிகத்தால் தங்கமய மாகும்பாரு
நின்றுப்போல் விழுந்தாக்கால் தலைதெறிக்கும்
நினைவாகப் பாகமாய்ச் செய்துகொள்ளே. நூஉக

தியானயோகம்.

கொள்ளென்று லகண்டபூ ரணத்தைநோக்கு
குணமாக வடுக்காறு தலத்தில்நிற்கும்
துள்ளென்ற வசூரத்தை யிருத்திப்பார்க்கத்
துணையான சிதம்பரத்தில் நடனங்காணும்

வள்ளென்ற சிவகெங்கை தன்னில்மூழ்கு
வளமான சுழுமுனையோ டுருவியேறி
கள்ளென்ற வாறுறு யெல்லைநீங்கா
கனமாக மௌனமாய் நில்லுநில்லே. கூஉஉ

துரிசுச்சுன்னம் அதற்குச்சின அண்டச்சுன்ன முதலியன.

நில்லென்றுல் துரிசிஞட சுன்னஞ்சொல்வேன்
நிலவரமாய்த் துரிசியது பலமும்பத்து
கல்லென்ற திராவகத்தில் தோய்த்துத்தோய்த்து
கலரவே பத்துநாள் ரவியிற்போடு
அல்லென்ற சிலைமது வூதநீறு
மாண்மையா யண்டோட்டை யூதநீறும்
தல்லென்ற விரண்டுமொன் றுகச்சேர்த்துந்
தாக்கான பழச்சாற்றி லரைத்திடாயே. கூஉங

அரைத்துமே ரவிதனிலே காயவைத்து
அன்பாகக் காரியில்வைத் தூதிப்போடு
தரைத்துமே கடுஞ்சுன்ன மண்டச்சுன்னங்
தப்பாமல் நாலுக்கு ஒன்றுவீரம்
கரைத்துமே திராவகத்தா லரைத்துக்கொண்டு
கனமாகத் துரிசின்மே லப்பிப்போடு
வரைத்துமே காயவைத்துப் புடத்திற்போடு
வளமாக வாகுமே யெடுத்துக்கொள்ளே. கூஉச

எடுத்துமே செம்பரத்தம் பூவிற்போடு
இதமாக வழித்துவைக்க ரசமாய்நிற்கும்
கடுத்துமே சரக்குகளில் துவைத்துவாட்ட
கலமான கட்டாகு மெழுகுமாகும்

நடித்துமே யடிக்கடிக்குச் சொன்னலுந்தான்
நலமாகச் செவிதனக்கு ஏறுதப்பா
படித்துமே யுன்மனசு வுறுதிவேணும்
பதறுமற் பார்த்துமே செய்திடாயே. நஉடு

இலிங்கக் கட்டு.

செய்திடவே லிங்கமொரு கட்டுசொல்வேன்
செயலான தாம்பரமும் ராவிக்கொண்டு
நைதிடவே லிங்கமொரு பலமெடுத்து
நன்மையாய்ச் செம்புஅரப் பொடியுமொன்று
கைதிடவே திராவகத்தா லரைத்துக்கொண்டு
கனமாக ஜாமந்தா னெட்டுஜாமம்
தைதிடவே வில்லைபண்ணி யுலரவைத்து
தயவாகச் சீனத்தின் சுன்னம்பண்ணே. நஉசு
பண்ணியே வில்லைமேற் கவசஞ்செய்து
பதறுமு லுமிநெருப்பிற் புடத்தைப்போடு
கண்ணியே கறுப்பாக விருக்கும்பாரு
கனமாக வெடுத்துமே யிடையேதங்கம்
தண்ணியே யெடுத்துமே செம்பில்வைத்து
தயவாகக் கொடுத்துமே நொறுக்குவெள்ளி
வண்ணியே யிருபதுக்கு வொன்றுதாக்க
வகையாக மாற்றேழு காணுந்தானே. நஉள
மாத்தேழு காணுமே புத்தியுள்ள
வாதிக்குச் சொல்லுகிறேன் மகிழ்ந்துகேளு
காத்தேழு வேழுநாள் குருமுகத்தால்
கருணைபெற வெத்தேச காலம்வாழ்வீர்

பாத்தேழு விக்கருவை முன்னேசெய்து
பதமும லரைக்கவே லிங்கமாளும்
வாத்தேழு யிக்குருவா லெல்லாஞ்சித்தி
வண்மையாய்ப் பார்த்தறிந்து மகிழ்ந்துபாரே.
கெந்தகசுத்திசெய்து பித்தளைச்செம்பெடுத்து வதை.
மகிழ்ந்துபார் கெந்தகந்தான் பாலில்சுத்தி
மனதாகச் சுத்தியே பண்ணிக்கொண்டு
நகிழ்ந்துபார் பித்தளையை யுருக்கிக்கொண்டு
நலமாகப் பித்தளைக்குப் பாதிக்கேதான்
வகிழ்ந்துபா ருருக்கியே தாக்கியூது
வலுவான செம்பாகு மகிழ்ந்துகொண்டு
தகிழ்ந்துபார் நாளத்தி லூதிப்போடு
தப்பாமல் நொறுக்குவெள்ளி பத்திலொன்றே.
ஒன்றேதான் செம்புதனைச் சேர்த்துருக்கி
யுயர்வான தங்கமது எட்டிலொன்று
கன்றேதான் சேர்த்துமே யுருக்கிப்பார்த்தால்
கனமான ஆணிக்கு எட்டுகாணும்
நன்றேதா னிதைவைத்துச் செலவுசெய்து
நலமான மலைகளிலே சஞ்சரித்து
வன்றேதான் பெரியோரைக் கண்டுதேறு
வண்மையாய் பார்த்தறிந்து வேதையாடே.
பித்தளைச்செம்பு வேதையாடத் தெரியாமல்
வெட்டுப்போதல்.
வேதைதா னிப்படிப் பாராமல்வாதி
விரைந்துமே லோகத்தில் கெந்திசேர்த்து

காதைதான் பழச்சாறு விட்டரைத்துக்
கடினமாம் வில்லைதட்டிக் காயவைத்து
நாதைதான் புடத்தைதான் வலுவாய்ப்போட்டு
நலமாக விதைபுருக்கி யீயமாக்கி
வாதைதான் வெள்ளியிலே செம்புசேர்த்து
வலுவாக ஈயத்தை கொடுப்பான்பாரே. நஙக
கொடுத்துமே யூதவே பொன்னுமில்லை
குணமில்லை சாத்திரங்கள் பொய்யென்பார்கள்
நடுத்துமே யினமறிந்து கொடுக்காமல்தான்
நலமில்லை குணமில்லை யென்றுசொல்வார்
கடுத்துமே புடம்போட்டு உருக்கவேண்டாம்
கருமையாய்ச் செம்புருக்கி பாய்ச்சிக்கொள்ளு
வடுத்துமே மதிதனிலே கட்டிக்கொண்டு
வளமான கடைதனிலே சென்றுவில்லே.
அயச்சத்து காந்தச்சத் தெடுத்துக்களங்கு.
சென்றேரி யிருக்கவொரு களங்குசொல்வேன்
சிறப்பான அரப்பொடிதான் பலமோப்த்து
நன்றேரி கௌரிதனை யிடையேசேர்த்து
நலமாகச் செவ்வல்லிச் சாற்றிலாட்டி
கன்றேரி யுருக்கிடவே மணியேயாகும்
கடுமையாய் மணியெடுத்து அப்பாலவைத்து
வன்றேரி காந்தமது இடையேயாகும்
வலுமையாய் கௌரிதனை யிடையேசேரே.நஙக
சேத்துமே செவ்வல்லிப் பூச்சாற்றூட்டி
நேயமாக மூன்று நாழிகையுமாட்டி

காத்துமே குகையிலிட் டுருக்கிப்போடு
காந்தமயச் சத்தாகுங் கரிபோலாகும்
சாத்துமே சாற்றிலே யிடையேதாரம்
சாரித்துத் துரிசுகளங் கிடையேசேர்த்து
பாத்துமே செவ்வல்லிப் பூச்சாற்றூட்டிப்
பரிவாகப் புடம்போட்டுப் பொடியாயாக்கே.

* இவ்விடத்துச் செய்யுள் விடுபட்டிருக்கிறது.

அயச்சத்தெடுத்து ஈயம்நாகமுதலியவை சே
ர்த்துக் களங்குசெய்து வேதையாட.

சென்றேரி விக்கவொரு களங்குசொல்வேன்
சிறப்பான அரப்பொடிதான் பலமும்பத்து
கன்றேரி வெள்ளையென்ற பாஷாணந்தான்
கலரவே அயத்துஇடை சேர்த்துக்கொண்டு
நன்றேரி யரைத்துமே யுருக்கிணக்கால்
நலமான மணியாகு மெடுத்துக்கொள்ளு
வன்றேரி காரியம் பலமோ வொன்று
வளமாக வுருக்குஅயம் பலமுமொன்றே. நூஅ
ஒன்றுகச் சேர்துருக்கி யுடைத்துக்கொண்டு
உறவான வீயவிடை கௌரிசேர்த்து
பன்றுகச் செவ்வல்லிப் பூச்சாற்றூட்டிப்
பதிவாகப் புடம்போட்டு உருக்கிக்கொள்ளு
நன்றுக வெட்டையா யிருக்கும்பாரு
நலமான வெட்டையிது பலமிரண்டு
கன்றுகக் குகையிலிட் டுருக்கும்போது
கனமான நாகத்தை யூட்டக்கேளே. நூஅசு

ஊட்டவே நாகமது பலமூநாலு
உறவான விலுப்பைநெய்யி லுருக்கிச்சாச்சு
நாட்டவே நாலாறு தரமுஞ்சாச்சு
நளினமா நாகந்தான் பலமுமொன்று
காட்டவே யுடைத்தரைத்துப் பச்சைச்சாரன்
கனமாகப் பலமிரண்டு கூடப்போட்டு
வாட்டவே மாவாக வரைத்துக்கொண்டு
வலுமையாய் முன்னுருக்கு முகத்தில்தூவே.
தூவவே புகையாமல் சுழித்துவாங்கும்
துப்பரவாய் தங்கமொரு பலத்தைத்தாக்கு
தாவவே யுருகியெல்லாங் களங்கமாகும்
தப்பாமல் களங்கத்தை யுடைத்துவைத்து
காவவே களங்கவிடை துரிசிபோடு
கனமாகக் களங்கமிடை கெந்திசேர்த்து
பாவவே களங்கமிடை தாரம்போடு
பக்குவமாய் வீரமது கூட்டிக்கொள்ளே. நஙஅ
கூட்டியே செவ்வல்லிப் பூச்சாறுவிட்டுக்
கூசாமல் நேகவரை வில்லைகட்டி
ஆட்டியே மண்ல்கருக புடத்தைப்போடு
அப்பனே மண்ல்கருக வெடித்துப்பாரு
நாட்டியே களங்காக விருக்கும்பாரு
நலமாகச் செம்பிரண்டில் களங்கமொன்று
வாட்டியே யுருக்குமுகம் தனில்கொடுக்க
வகையான செம்புகட்டிப் போனவாறே. நஙக

வாறுகேள் நொறுக்குவெள்ளி பத்துக்கொன்று
வகையாகச் சேர்த்தூதத் தங்கமாகும்
தாறுகேள் தாய்சேர்க்க வேண்டாமப்பா
தப்பாமல் குபேரனுட வாழ்வேயாகும்
வாறுகே ளடிக்கடிக்குச் சொல்லியென்ன
வளமான விக்களங்கம் போலேயெல்லாம்
நாறுகேள் சோம்பலாய்த் திரியவேண்டாம்
நலமான சரக்கைவைத்து நிட்டைபாரே. நசo
சரக்கு வலுவறிந்து புடத்தை பெரிசு சிறுசாய்ப்
போடி களங்கெல்லாம் செம்பரிண்டில்
கொடு தங்கமாகும்.
நிட்டைபார் சரக்கினுட வலுவறிந்து
நேராக அரைத்துமே வில்லைபண்ணு
கட்டைபார் வில்லைபுட நேர்மைபார்த்து
கடிதான புடம்பெரிது சிறிதாய்ப்போடு
வட்டைபார் சரக்குநில மனதிலெண்ணு
வழியோடே புடம்வைத்து உருக்கிடாமல்
தட்டைபார் செம்பிரண்டி லிக்களங்கு
தண்மையாய்க் கொடுத்திடவே ஏமமாமே. நசக
ஏமமா மெந்தெந்தக் களங்கைத்தானு
மிதமாகச் செம்பிரண்டி லுருக்கித்தாக்கு
தாமமாங் களங்குக்கு வள்ளகாரம்
தயவாகப் பார்த்துமே பாகமாக
வாமமாம் சேர்க்கையிலே பியம்போகா
வளமாகச் சேர்த்துமே யூதிப்போடு

காமமாம் பொன்னுகு மேமமாகும்
கருத்துவைத்து மந்திரிபோல் செய்துக்கொள்
[ளே. நசஉ
அயச்சத்தெடுத்துச் செம்பு பொடிசேர்த்துக் களங்கு
செய்து வேதையாடவும் சிந்தூரஞ்செய்யவும்.
செய்துமே யிரும்பதுவும் பலமோபத்து
சிறப்பாக அரத்தினல் ராவிக்கொண்டு
கைதுமே குதிரையென்ற பாஷாணந்தான்
கனமாக அரப்பொடியி லிடையேசேர்த்து
பைதுமே அலறியென்ற பூச்சாற்றுலே
பதமாக அரைத்துமே யுருக்கிப்போடு
நைதுமே மணியாகு மெடுத்துக்கொண்டு
நலமாகச் செம்பு அரப் பொடிதானென்றே.
ஒன்றுன வுருக்குஅய மொன்றுபோட்டு
உறவாக விரண்டையுந்தா னேகரைத்து
கன்றுன குகையிலிட் டிருக்கிக்கொண்டு
கனமாகக் கல்வத்தி லிடைத்தரைத்து
நன்றுன லிங்கமொரு பலமும்போட்டு
நன்மைபாய் ஜாமந்தா னலுஆட்டி
வன்றுன வில்லேபண்ணி சுண்ணச்சீலே
வலுவாகச் செய்துமே புடத்தைப்போடே.
புடம்போடக் களங்காகும் செம்பிரண்டில் [ம்
புண்ணியமாய்க் கொடுத்திடவே கட்டிப்போகு
தடம்போடு நொறுக்குவெள்ளி யெட்டிலொன்று
தப்பாமற் கொடுத்திடவே யேழுமாற்று

கடம்போட வைத்துநீ செலவுசெய்து
கருணைபெற காயசித்தி பண்ணிக்கொண்டு
நடம்போடச் சிந்தூரம் பண்ணித்தின்னு
நலம்பெறவே கவனசித்தி பண்ணிக்கொள்ளே.

பண்ணியே யிருதுருத்திப் போட்டுவூதி
பரிவான செம்புக்குக் கிராசம்போடு
திண்ணியே யுருக்காமல் போட்டாயானால்
திரமாக வாங்காது வுட்கொளாது
புண்ணியமே செய்திருந்தால் பொன்னுஞ்செய்வான்
புடபாகம் கைபாகம் பொருந்திப்பாரு
கண்ணியே யலையாமல் நூலேப்பாரு
கருத்துவைத்து அதன்பின்னே வாதம்பாரே,
அப்பிரேகக்களங்கு வேதை.

பாரேநீ கிருஷ்ணுவப் பிரேகமொன்று
பரிவான வீரமொன்று பழச்சாற்றிலே
காரேநீ யிருஜாம மரைத்துக்கொண்டு
கனமாகப் பார்த்திடவே வெள்ளையாகும்
தாரேநீ புடம்போட்டு அயமுநேரே
தப்பாமற் சேர்த்தரைத்துச் துரிசுசேரே
காரேநீ அயமிடையே சேர்த்துக்கொண்டு
கனமாக வரைத்துபுடம் வைத்திடாயே. நசள
வைத்துமே தாளகமுந் துரிசுநேரே
வகையாகப் பனிரண்டு ஜாமமாட்டி

பைத்துமே யெலுமிச்சம் பழச்சாற்றுலே
பதிவாக அரைத்துமே வில்லைகட்டி
கைத்துமே சுண்ணும்பு வலுவாய்ச்செய்து
கணக்காகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
தைத்துமே செம்பிரண்டு களங்கமாகும்
தப்பாமற் கொடுத்துருக்கக் கட்டிப்போமே.
கட்டியதோர் செம்பெடுத்து கொறுக்குவெள்ளி
கனமாக வெட்டுக்கு ஒன்றுசேர்த்து
வட்டியதோர் கொடுத்துமொரு காவிப்பார்த்தால்
வகையான தங்கமடா வென்னசொல்வேன்
முட்டியதோர் முட்டென்ன விதுதான்முட்டு
முட்டாளாய்ப் போகாமற் பாகம்பண்ணி
துட்டியே சகலமுமிப் படியேபண்ணு
துருசாகப் பார்த்தாக்கா லெல்லாம்பாரே.ஈசகூ

(இன்னின்னதற்குமுன் னின்னின்னதுசெய்.)

பார்ப்பதற்கு முன்னேதான் களங்கம்பண்ணு
பதியவே சிந்தூரம் பண்ணித்தின்னு
காய்ப்பதற்கு முன்னேதான் படித்துத்தேறு
கனமான நூல்வினையங் கண்டுதேடு
சேர்ப்பதற்கு முன்னேதான் தைலம்வைத்து
செப்பமாய் மட்டங்கள் வைத்துவாட்டு
நார்ப்பதற்கு முன்னேதான் யூகிநூலை
நலமாகப் பார்த்தறிந்தேதான் வாதியாமே.ஈகூ

அவசரமா யொன்றுரைத்தை செய்து கெடுதல்.

வாதியாய்ச் சிறிதுபேர் வாதஞ்சுட்டு
வகையில்லை தொகையில்லை வாதம்பொய்பொய்
பாதியாய் ஞானத்தைப் பார்ப்போமென்று
பகரவே சிரிதுநாள் பழகித்தேறி
காதியா யதைவிட்டு யோகம்பார்த்து
கடுமையா யுண்ணுக்கை யறுத்துக்கொண்டு
நாதியாய்த் தமர்வாச லுள்ளேயேற்றி
நலமில்லை யதைவிட்டு அலைகுவாரே. கூருக

அலைகுவார் சிறிதுபேர் வாதங்கேட்டு
அதவாச்சு இதவாச்சு என்றுசொல்லி
மலைகுவார் மறைவு சாத்திரத்தைப்பார்த்து
மயங்கியே கஞ்சாவைத் தின்னுப்போல
தலைகுவார் மதுபானங் குடித்துக்கொண்டு [டு
நலம்பெறவே யென்னிடத்திற் பொன்னுமுண்
சூலைகுவார் கூட்டங்கள் கூட்டிக்கொண்டு
கடுமையாய்த் தெருநெடுவே நடப்பர்தானே.

பொன்னிமிளைவேதை.

நடப்பாகப் போகாமல் தங்கத்தோடே
நலமாகப் பொன்னிமிளை பூத்துநிற்கும்
கடப்பாக ஆணிக்கு ஏழுமாற்று
கனமாக வதைவாங்கி வைத்துக்கொண்டு
வடப்பாகத் தங்கத்தைத் தகடுதட்டி
வளமாகப் பொன்னிமிளை மூலைப்பாலாலே

திடப்பாகத் தகடுக்குப் பூசிப்பூசித்
திரமாகப் புடம்வைக்க நொறுங்கும்பாரே.கருஙு

நொருங்கினதோர் நாலுபுடம் வைத்துக்கொண்டு
நோகாமல் கரிபோலே யிருக்கும்பாரு
கருங்கினதோர் செம்பிரண்டு உருக்கிக்கொண்டு
கனமாகக் கரியெல்லா மொன்றுதாக்கு
நருங்கினதோர் செம்பதுவு நூறுமாற்று
நலமாக நொறுக்குவெள்ளி பத்திலொன்று
வருங்கினதோர் கொடுத்துருக்கு எட்டுகாணும்
வண்மையாயிச்செம்பு பண்ணிக்கொள்ளே.கருச

வெள்ளிமுதல் மெழுகிருக நான்சொல்லிய
தின்னின்னதெனல்.

பண்ணியே வெள்ளிசெய்ய வகைகள்சொன்னேன்
பதிவான சுன்னவகை பலவுஞ்சொன்னேன்
நண்ணியே களங்குவகை செய்யச்சொன்னேன்
நலமாக மட்டங்க ளுயருமாக்கம்
கண்ணியே தைலங்கள் வைக்கச்சொன்னேன்
கடுமையாய்திராகவகங்கள் பாகஞ்சொன்னேன்
பண்ணியே பித்தளையின் செம்புசொன்னேன்
வளமான ரசபதங்க வழிசொன்னேனே. கருடு
வழிசொன்னேன் கட்டாத சரக்குதன்னை [ன்
வகையாகக் களங்குபோட் டுரைக்கச்சொன்னே
கழிசொன்னேன் கலப்புக்குக் கட்டுசொன்னேன்
கனமான வெடியின்சிந் தூரஞ்சொன்னேன்

பழிசொன்னேன் களங்குக்குப் புத்திசொன்னேன்
பாஷாண்டி தன்னுடைய வளப்பஞ்சொன்னே
கழிசொன்னேன் கட்டுவகை மெழுகுசொன்னேன்[ன்
கனமான புத்தியினாற் கண்டுதேறே. ௩௫௬

வீரமுதல் குதிரைப்பல்லீறாகக் கட்டத்திராவகம்.

கண்டுதேர் வீரமுதல் பூரங்கட்ட
கனமான தாளகமும் வெள்ளைநீற
தண்டுகேள் கௌரிமுதல் குதிரைப்பல்லு
தண்மையாய்க் கட்டதிரா வகத்தைக்கேளு
வண்டுகேள் சித்தரெல்லா மறைத்துவைத்த
வகையான கட்டுவகை சுருக்கமாக
வண்டுகேள் முற்றுமொரு கயற்றில்கோர்த்தால்
வளமொக்கும் ஜயநீரில் வண்மைகேளே. ௩௫௭

வண்மைகேள் திராவகமும் வாங்கிநீரும்
வகையான கடைசிநீர் பீங்கான்விட்டு
தண்மைகேள் பூனீறு கொஞ்சம்போடு
தப்பாமற் பொங்கியே யடங்கிநிற்கும்
கண்மைகேள் ரசபதங்கங் கூட்டிச்சேர்த்து
கனமாக நாளேழில் வைத்துக்கொண்டு
திண்மைகேள் மேல்நீரை யிறுத்துக்கொண்டு
திரமாக லிங்கத்தைத் துவைத்துவாட்டே ௩௫௮

வாட்டிடவே கட்டியே மணியேயாகும்
வளமாக மணியெடுத்துச் செம்பில்தாக்கக்

காட்டிடவே மாற்றென்ன பத்துமாகும்
கடிதான வீரத்தைத் துவைத்துவாட்டு
நாட்டிடவே செம்பிலே நூற்றுக்கொன்று
நலமான தாளகத்தைத் துவைத்துவாட்ட
தாட்டிடவே மஞ்சளாய் மணியுமாகும்
தாக்கான செம்பு மூப்பதுக்கு ஒண்ணே. நருசு
ஒண்ணான அரிதாரம் பொன்னுக்குத்தான்
உத்தமனே உரையாணிக் கோர்வையில்லே
நண்ணான கௌரியை யிப்படியேபண்ணு
நலமான பூர மிப்படியேபண்ணு
திண்ணான ரசவாதம் கூடணத்திலாகும்
திரமான வாதிகளே யிலேபிடுங்கி
வண்ணான சரக்குகளில் சுருக்கிப்போட்டு
வகையாக அலேந்துலேந்து திரிவார்தானே. நசுO

மூன்சொன்ன கட்டுவகைத் திராவகப்பெயரும்
அருசுச்சுன்னமும்.

திரியாமல் மூப்பூவு மிதுதானப்பா
திர்மான செளக்கார மிதுதானப்பா
கரியாமல் கார்மென்று சாரமென்று
கனமான வெகுகார மென்றுபேராம்
வரியாமல் வழலேயென்று மிதுக்குப்பேராம்
வகையான சுக்காறு மாகுமப்பா
துரிசான வின்னீரில் துரிசைத்தோய்த்து
சுகம்பெறவே வூதிடவே சுன்னமாமே. நசுக

துருசுச்சுன்னம் வாதக் கன்னக்கோலாகும் இதனல்
ரசங்கட்டும் தாளகமுதலிய நீறும் இதை
சிவனெனக்குச் சொன்னார்.

சுன்னமாங் துரிசினுல் சூதங்கட்டுஞ்
சுருக்கான தாளகத்தை நீற்றிவைக்கும்
வன்னமாங் தாளகத்தால் வங்கநீறும்
வலுவான வங்கத்தால் துரிசுநீறும்
கன்னமாங் கன்னக்கோ லிதுதானப்பா
கருணைபெற பூக்குமடா ஏமமாகும்
தன்னமாஞ் சிவன்சொல்லக் கேட்டுத்தேறி
தயவுடனே யூகிமுனி யுரைத்தவாறே. நகூஉ

முன்திராவகத்தில் சரக்குகளை சுருக்கிட்டுச் சின
ச்சுன்ன கவசஞ்செய்து ஊதிடநீறும்.
வாறேது ஒன்றுகச் சொல்லக்கேளு
வகையான நீத்தனத்துக் கிதுநீராகும்
காறேது சரக்கெல்லா மூன்னீர்தேய்த்து
கடிதாக நாளெட்டுப் போட்டுமைந்தா
பாறேது சினத்தின் சுன்னங்கட்டி
பதிவாக வூதிடவே பொருமிநீறும்
தாறேது முன்கார மேற்றிக்கொண்டு
தயவாக வூதிடவே சுன்னமாமே. நகூங

ஜயரசபதங்கம்.

சுன்னமாம் ஜயமுள்ள சூதராஜன்
ஜெயமாக நெருப்புக்கு ஓடாமல்தான்

கன்னமாம் பதங்கவகை சொல்லக்கேளு
கடுமையாய்ப் §பண்ணையது சேருஒன்று
வன்னமாங் கல்லுப்பு சேருநாலு
வகையான இவ்விரண்டும் பொடிபோலாக்கி
அன்னமாஞ் சட்டியிட்டு வறுத்துப்போடு
அழகாக மறுசட்டி அடியிற்போடே. நசுச

§பண்ணை-செங்கல்தூளென வெனக்குப் படுகின்றது.

போட்டுமே அதன்பேரில் சொல்லக்கேளு
பொருந்தவே படிநாலு கல்லுப்புத்தான்
ஆட்டுமே செங்கல்மா படியுமொன்று
அழகாக விடித்துமே வறுத்துப்போடு
காட்டுமே மாவாக்கி முன்போல்போட்டு
கருணைபெறக் கையாலே அமிழ்த்திக்கொண்டு
நாட்டுமே நடுவிலே குழியாய்ப்பண்ணி
நலமான சூதமொரு சேருபோடே. நசுசு

சேருமே விட்டுமேல் சட்டிமூடி
செப்பமா யுளுந்துமண் சீலைசெய்து
காருமே வாலையென்ற அடுப்பிலேற்றி
கட்டாய மாகவே மூன்றுநாள்தான்
ஆருமே அடுப்பேற்றி யெரிக்கும்போது
அடைவாக ரசமேறி பதங்கமாகும்
சாருமே பதங்கத்தை யென்னசொல்வேன்
சதகோடி தங்கமாம் தாக்கிப்பாரே. நசுசு

ரசபதங்கத்தில் துரிசுசேர்த்துப்புடமிட்டு வேதையாட.
தாக்கிப்பார் பதங்கத்தை வழித்துக்கொண்டு
தப்பாமல் துரிசியது பச்சையைத்தான்
ஆக்கிப்பா ரனல்தனிலே வைக்கவெள்ளை
யடைவாகக் காரமா யிருக்கும்பாரு
ஆக்கிப்பார் பலமொன்று நிறுத்துக்கொண்டு
அடைவாக ரசபதங்க மொன்றுகூட்டி
நீக்கிப்பார் திராவகத்தா லரைத்துமைந்தா
திரமாக வில்லைகட்டி ரவியிற்போடே. சஉள
போட்டப்பின் மண்மறைவு புடத்தைப்போடு
போகாமற் சூதமது கட்டிப்போகும்
காட்டப்பின் களங்காக விருக்கும்பாரு
கருணைபெற செம்புருக்கி யதிலேதாக்கு
வாட்டப்பின் மூப்பதுக்கு ஒன்றுபோடு
வண்மைபெற பச்சையென்ற தங்கமாகும்
தாட்டப்பின் நொறுக்குவெள்ளி நாலத்தொன்று
தகையாகச் சேர்த்துருக்கத் தங்கமாமே. ஈசுஅ

வாதமுத லின்னின்ன தறிந்தாரின்னின்னரெனல்.

தங்கமாம் பொருளறிந்தால் வாதியாகும்
தடைப்பட்ட கள்ளருக்குத் தெரியுமோதான்
பொங்கமாங் காயசித்தி அறிந்தோன்சித்தன்
பொருந்தாத மட்டிக்குத் தெரியாதப்பா
வங்கமாம் வழலையது அறிந்தோன்வாதி
வகைகெட்ட மாட்டுக்குத் தெரியாதப்பா

பங்கமாம் பாஷாண்டி ஆசைகொண்டு
பதிகெட்டுச் சண்டியா யிலைவான்பாரே. கூசுக

லிங்க பஸ்பம்.

அலையாம லிங்கபற்பந் தன்னைக்கேளு
அடைவாக லிங்கமொரு பலமோபத்து
கலையாமல் திராவகத்தா லரைத்துக்கொண்டு
கனமாகக் கிடமதனி லெரித்தால்கேளு
தலையாம லெரியே ரசமாய்நிற்கும்
தாக்கியே புப்பில்வைத் தெரித்துக்கொண்டு
வலையாக வேறியே பற்பமாகும்
வண்மையாய்ப் பற்பத்தை வழித்துக்கொள்ளே.

லிங்கபஸ்பத்தில் தூருசுகரியிலுதிச்சேர்த்து
புடமிட்டு வேதையாட.

கொள்ளவே துரிசைத்தான் கரியிலுதி
கொடுமையாய் வைத்திடவே வெள்ளையாகும்
கள்ளவே துரிசியது பலமுமொன்று
தாக்கான சண்டரச பற்பமொன்று
வள்ளவே திராவகத்தா லரைத்துமைபோல்
வளமாக மண்மரவில் புடத்தைப்போடு
கள்ளவே யிதையெடுத்து செம்பில்பத்து
கனமாகக் கொடுத்திடவே மாத்தெட்டாமே.

லிங்க பஸ்பத்தில் தங்கஞ்சேர்த்து வேதையாட.

எட்டான மாற்றுதான் தங்கமாகு
மேழைமதி போகாதே ரசத்தைப்பாரு

கட்டான லிங்கபற்ப மிடையேதங்கம்
கருத்தாகச் சேர்த்தனைத்தா லெல்லாந்தங்கம்
மட்டாக விவ்வேதை கோடிவேதை
மார்க்கமா யிதைநன்றாய் மருவிப்பாரு
நட்டாக வின்னமொரு வுப்புக்கட்டு
நலமான யூகிமுனி யுரைத்தவாறே. நுளஉ

கல்லுப்புச்கட்டும் வேதையும்.

வாரேகேள் கடல்நுரையை யூதிக்கொண்டு
வளமாகக் கடுஞ்சுன்ன மாக்கிப்பின்பு
தாருகேள் கல்லுப்புக் கூட்டிமேலே
தப்பாமற் பெருங்கவசம் வலுவாய்ச்செய்து
நாருகே ளதன்பேரில் கிளிஞ்சிசுன்னம்
நலமாகப் பெருங்கவசம் போட்டுவைத்து
பாருகேள் பத்தெருவில் புடத்தைப்போடு
பதறுமல் கல்லுப்பு மணியாய்நிற்கும்
காருகேள் துரிசியது பலமூமொன்று
கனமான கல்லுப்பு மணியுமொன்றே. நுளந

ஒன்றான மணியதனைச் சேர்த்தரைத்து
உண்மையாய் திராவகத்தா லரைத்துக்கொண்டு
பன்றான வில்லைகட்டி ரவியிற்காய
பதமாக வைத்துமே சுன்னங்கட்டி
நன்றாக பெரியபுடம் போட்டெடுத்து
நன்மையாய்ச் செம்புருக்கி யிடையேதாக்கு
வன்றான செம்பதுவும் கட்டிநல்ல
வலுமையா யிருக்குமது வழியாய்ப்பாரே. நுளச

வழியாக நொறுக்குவெள்ளி பலந்தானெட்டில்
வண்மையாய்ச் செம்பொன்று கொடுத்துருக்க
நழியாக மாற்றுமே யேழுகாலும்
நயமாகும் உப்புக்குங் காவிக்கேகா
பழியாகப் பார்த்தாக்கால் வாதமாமோ
பண்பான சித்தரெல்லாம் குருமரைத்தார்
கழியாக வுப்பைமூந்திக் கட்டியாடு
கனகமது உண்டாகும் கருத்தாய்ப்பாரே.உஎடு

சரக்குகள் சத்துருமித்துரு செய்கை.

கருத்தான சித்தர்கள்தான் சொன்னநூலில்
கனமான சத்துருவா லரைத்துக்கொல்லு
நருத்தான மித்துருவைச் சேர்த்துக்கொண்டால்
நலமான தங்கமா மென்றுசொன்னார்
வருத்தான சத்துருவைக் கண்டாலுந்தான்
வளமான மித்துருவைக் காணப்போகா
தருத்தான சத்துருமித் துருவிலாச்சு
தாக்கியே நூல்மரைப்பாய்ச் சொன்னார்தாமே.

சித்தர்நூல் மரைப்பாய்ச் சொல்லியதை யூகிநூல் தெளி
வாக்கியதும் துருசுக்குக் கல்லுப்புச் சத்துருவும்
சத்துருவாலரைத்துப் புடமிட மித்துரு
வான செம்பானதும்.

சொன்னதொரு மரைப்பெல்லாஞ் சித்தர்நூலில்
சுருதியா யூகிமுனி நூலில்தானும்
கன்னதொரு மரைப்பில்லை கண்டுதேறு
கனமான துரிசுக்குக் கல்லுப்புசத்து

வன்னதொரு சத்துருவி லரைத்துக்கொண்டு
வலுவான புடம்போட துருசுசெத்து
தன்னதொரு வுபிர்போகும் போகும்போது
தனமான வினமித்ரு செம்பு ஆச்சே. நஎள

துருசு செம்பாய் தங்கமாவது மிதை சித்தர்மறைத்ததும்
சரக்குகளே சத்துருவால் கொல்லவேண்டுவதும்.

செம்புத்தா னுருக்குமுக மானபோது
ஜெயமான உப்பாலே துருசுசெத்து
கம்பைத்தான் கொடுத்திடவே ஓடிப்போற
கனமான செம்புதான் துருசைப்பற்றி
வம்பைத்தான் பிடித்திழுத்துத் தங்கமாச்சு
வண்மையா யிதைமரைத்தார் சித்தர்நூலில்
நம்பைத்தான் சரக்கெல்லாஞ் சத்துருவாலே
நலமாகச் சேர்த்தரைத்து நாசம்பண்ணே.நஎஅ

பண்ணியே புடம்போட்டு உருக்கும்போது
பதிவாக வோடிப்போ முருகாதப்பா
நண்ணியே செம்புக்குக் கொடுத்தபோது
நலமாக வள்சுழித்து வாங்கிக்கொள்ளும்
கண்ணியே பெண்ணுணுஞ் சேர்ந்தாப்போலே
கலக்கமற்று கர்ப்பமுண் டாகிப்பிள்ளை
புண்ணியமே சத்துருவால் தருந்துக்கொண்டு
புகலரிய செம்புமித்ரு வாலெழுப்பே. நஎசூ

எழுப்பியே மதிதனிலே கொடுத்துக்கட்டி
ஏழைமதி போகாமல் செட்டிகையில்

நழுப்பியே முறையோடே விற்றுக்கொண்டு
நலமான வாசியைநீ நாடிப்பாரு
கழுப்பியே கைமுறையாய்ப் பண்ணிக்கொண்டு
கனமான செய்முறையாய் செம்புருக்கி
வழுப்பியே கொடுத்துமே ஊதிப்போட
வலுவான தங்கமென்ற பேறுமாமே. நஅ0

கெந்தகத்தின் மகிமையும் கெந்திலோகத்தில்
சேர்ந்தால் செம்பாகாது ஈயமாதலும்.

பேருக கெந்தகத்தின் பெருமைசொல்ல
பெரியோர்கள் தயங்கியே முன்பின்போனார்
ஆருன கெந்தகந்தான் அம்மைநாதம்
அறிவுள்ளோ ரறிவாய்கள் கெந்திசெம்பு
பாருன கெந்தகம்மூலோகத்திற்சென்றால்
பரிவான ஈயமாம் செம்பாகாது
வாருன செம்பெடுக்க வுண்மைசொல்வேன்
வகையாகப் பார்த்தறியும் வாதிகேளே. நஅக

சித்தர்செய்கை.

வாதியாம் சித்தர்தான் ஞானமாகி
வண்மையாய்ப் பெரியோர்க ளாகிமெள்ள
காதியாய் ரசக்குளிகை கட்டிக்கொண்டு
கமனவழி ஓடவே பேறுமாகி
நீதியாய்ச் சித்தாந்த முத்தியாகி
நிர்மலமா யாகியே நெடியகோடி
பாதியாய் வருஷங்கள் காயசித்தி
பண்ணியே யிருப்பார்கள் பண்புமாமே. நஅஉ

கெந்தகச்செம்பும் வேதையாடலும்.

பண்பாக கெந்தகத்தின் செம்புசொல்வேன்
பக்குவமாய் நல்லெண்ணெய் படியிலொன்றில்
கண்பாக சேரொன்று நெல்லிகெந்தி
கதிப்பாக வுரைத்தெண்ணெய் தனில்குழைத்து
நண்பாக முறுகவெரி சத்தில்லாமல்
நலமாக வெண்ணெயிலே நுழையுஞ்செம்பு
வண்பாக வீயமது அடியில்தங்கும் [ளே.

வலுமையாய்த் தெளிவிறுத்து வைத்துக்கொள்
வைத்துமே ரோமந்தான் கால்சேரிட்டு
வகையாக சீயக்காய் தன்னில்சுத்தி
நைத்துமே சட்டியிட்டுக் கொஞ்சம்போட
நலமாக ரோமந்தா னுருகிநிற்கும்
பைத்துமே யுருக்குமுகந் தன்னிற்கேளு
பதறுமல் கெந்தியென்ற வெண்ணெய்தன்னை
கைத்துமே சொட்டிட்டுப் பதறுமல்தான்
கடிதாகச் சுருக்கிடவே கரிபோலாமே. ஈஅச
கரியெல்லா மெடுத்துஒரு பலமிறுத்து
கனிவான வங்கத்தை இடையேதட்டி
பரியெல்லா மிரண்டுமொன்று யரைத்துமையாய்
பரிவாக வூதிடவே செம்புமாகும்
வரியெல்லாம் லோகமெல்லாந் தங்கமாகும்
வகுத்தமுனி யூகிதான் சொன்னவித்தை
தரியெல்லாம் சரக்குடைய நோ்மைகண்டு
தப்பாமற் செம்பைவைத் தெடுத்துக்கொள்ளே.

எடுத்துமே வங்கத்தை யரைத்துவில்லை
இதமாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
தடுத்துமே செம்புருக்கி யிடையேதாக்கு
தப்பாமல் கெந்திசெம் புள்ளேபாயும்
நடுத்துமே நாளத்தா லூதிப்போடு
நலமான செம்புதான் பழுக்கும்வேதை
கடுத்துமே நொறுக்குவெள்ளி பத்திலொன்று
கணக்காகச் சேர்த்திடவே தங்கமாமே. நஅசு

கெந்திபி லீயம்விட்டால் செம்பாகும் விடாவிட்
டால்லோகங்களைக் கெடுத்து வேதைசெய்
யாது மாற்றுகுறையும்.

தங்கமாங் கெந்தியம் விட்டாற்செம்பு
தாக்கான வருணமில்லை தாக்கிப்பாரு
பொங்கமாங் கெந்தியம் செம்பிற்பட்டு
போக்கோடே யெடுக்கவகை அறியாமூடர்
சிங்கமாம் வெள்ளிதனில் பட்டால்கெந்தி
சிதறியே கெந்தியஞ் சேர்ந்துகொண்டு
பங்கமா மூதவெள்ளி பொறுமியோடும்
பக்குவமாய் வருணமது உற்றுக்கேளே.

கெந்தியமெடுக்க வெடியுப்பு திராவகம்செய்து
அதிலரைத்து உருக்கிட பசுமையதிகமாகும்.

உத்துக்கேள் லோகத்தில் கெந்தியம்
முறவாகச் சேர்ந்துமே வர்ணமொன்றும்
நத்துக்கேள் கெந்தியம் பித்தளையெடுக்க
நலமாக வெடியுப்புப் பலமோபத்து

வத்துக்கேள் சினமது இருபத்தைந்து
வகையாக திராவகத்தை யெடுத்துக்கொண்டு
புத்துக்கேள் புடம்போட்ட கெந்திவெள்ளி
புதுதிதாகத் திராவகத்தை விட்டுஆட்டே.
ஆட்டியே வில்லைபண்ணி புடத்தில்வைத்து
ஐயனே யுருக்கிடவே பசுமைமெத்த
நாட்டிலே சொல்லாதே யிந்தப்போக்கு
நலமறிந்து லோகமிப்படியேபாரு
பாட்டிலே படித்தாக்கால் தெரியுமோடா
பதமாகக் கைபாகம் சற்றேதப்பில்
நாட்டிலே வாதமில்லை சொன்னேன்சொன்னேன்
நயந்துமே திராவகத்தை வைத்திடாயே. நஅக
கெந்திரூபம் வந்தவிடமெல்லாம் பார்த்து திப்படி
செய் வேதையாகும்.
வைத்திட்டு கெந்திய விடமெல்லாமும்
வகையாகப் பார்த்தாக்கால் பழுக்கும்வேதை
நைத்திட்டு கெந்திக்கு வேதைமெத்த
நலமாகப் பார்த்தறிந்து வேதைபோடு
உய்த்திட்டு எல்லாந்தான் முடிப்பான்வாதி
உப்பறிந்து செயமாட்டா னுலுத்தனப்பா
கைதிட்டு அவசரத்தில் புலம்பியேங்கி
கருத்து அறியாமல்தா னுலுத்தன்தானே. நகo

லோகத்தில் கெந்தி சேரும்போது ஈயம் எட்டுமாற்று
குறையும் இதனை திராவகத்தாற் சுக்கச்செய் யூகி
சொன்னபடி மாற்றுயரும்.

தானென்ற வெள்ளிமுதல் லோகமெல்லாம்
தாக்கினில் கெந்தகந்தா னீயம்பட்டு
வானென்று கடித்துமே பிடித்துக்கொண்டு
வலுவாக மாற்றுகள்தான் காட்டமாட்டா
ளுனென்ற திராவகத்தாற் சுக்குமீயம்
உள்ளபடி மாற்றுகு முயரும்வேதை
நானென்ற யூகிமுனி சொல்லிவிட்டேன்
நலமாகப் பார்த்தறிந்து வேதைபோடே. நகக

திராவகமில்லாது கெந்திசேர்க்க ஈயமாம் திரா
வகத்தைக் கண்டபி னீயம் பறக்கும்.

வேதைதா னிப்படிப் பாராமல்வாதி
விரைந்துமே கெந்தகத்தை மதிபில்தாக்க
வாதைதா னீயமாய்ப் போச்சுதென்று
வலுத்துமே யுருக்கையிலே குறைந்துபோச்சு
தாதைதா னிப்படித்தான் குறைந்ததென்று
திராவகத்தை யறியாமற் போனுரையா
பாதைதான் திராவகத்தைக் கண்டாலீயம்
பறக்குமே விட்டரைக்கப் பண்புமாமே. நகஉ

செம்புமுதலிய லோகத்தை கெந்திசேர்த்துருக்கி
திராவகஞ் சேர்த்து புடமிட்டிருக்கவும்.

பண்பாக திராவகத்தை வைத்துக்கொண்டு
பதிவாகச் செம்புவெள்ளித் தங்கமெல்லாம்

வண்பாகத் தனித்தனியே கெந்திவீரம்
வகையாகப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
தண்பாக கெந்தியம் போகாமல்தான்
தடையறவே யொன்முகச் சேர்த்துருக்கி
கண்பாக வுடைத்துமே திராவகத்தால்
கணக்கறிந்து போட்டுமே யுருக்கிப்பாரே.

இதமுற் சகலமுங் கிடைக்கும் இதனைக் கடை
சியில் சொல்லிப் போட்டேன்.

உருக்கிடவே தங்கமாம் பொருளுமாகு
முயர்ந்ததொரு ஆனிக்கிப் பசுமையாகும்
நருக்கிடவே யோகமுதல் நிட்டையாகும்
நலமாக கடைசியிலே சொல்லிப்போட்டேன்
வருக்கிடவே வாய்பேசாச் செட்டிதானும்
வகையாக வெடுத்துமே செலவுசெய்யான்
கருக்கிடவே கல்மசங்க ளிருந்ததாலல்
கடைகெட்டு அலைந்துமே தவிப்பான்பாரே.

திராவகமுத லின்னின்ன துவிட்டா
லின்னின்ன தில்லையெனல்.

தவிப்பில்லா திராவகத்தை விட்டால்மைந்தா
தாக்கான கெந்தியம் வர்ணம்போச்சு
துவிப்பில்லா தைலத்தை விட்டாற்கேளு
துடிப்பான மட்டங்க ளுபயோகிடாது
கவிப்பில்லா வாதத்தை விட்டால்மைந்தா
கனமான ஞானமில்லை காடாய்ப்போச்சு

நவிப்பில்லா செம்பைத்தான் விட்டாற்கேளு
நலமான வெள்ளிதான் பழுக்காதாமே. நசுடு
துரிசுசிந்தூரம் நந்திசொல்லியது.
பழுக்கவே நந்தியென்ற தேவர்தானும்
பாகமா யடியேற்கு உபதேசித்து
நழுக்கவே துரிசினுட சிந்தூரத்தை
நவிலவே துரிசுதான் பலமோபத்து
தழுக்கவே கெந்தியுமோ பலந்தானேழு
தண்மையாய்ச் சூடனது பலந்தான்மூன்று
வழுக்கவே வீரந்தான் பலந்தானென்று
வகையான வெலுமிச்சம் பழச்சாற்றூட்டே.
ஆட்டியே ஜாமந்தா லுதானும்
அப்பனே மெழுகுபோ லரைத்துக்கொண்டு
காட்டியே துரிசுகட்டி யொன்றுய்வாங்கி
கனமாகக் கரியில்வைத்து வெள்ளையாக்கி
சாட்டியே துரிசின்மே லங்கிதானும்
சதிராகப் போட்டுமே காயவைத்து
நாட்டியே கிளிஞ்சியென்ற சுன்னந்தானும்
நலமாக வுண்டையாய் வலுவாய்ச்செய்யே.
செய்துமே அதன்மேல்மண் கவசம்போடு
செப்பமாய்க் கட்டியே ரவியிற்காய
பைதுமே யெடுத்துமே தணலிற்போடு
பக்குவமாய்த் தணலென்றுற் சொல்லக்கேளு
கைதுமே விரட்டியைத்தா னெரியவிட்டு
கனமாக அத்தணலிற் போட்டுவைத்து

நைதுமே தனலாறி யெடுத்துப்பார்த்தால்
நலமாகக் கரியாக விருக்கும்பாரே. நகூஅ

இருக்கின்ற களங்கெடுத்து உருக்காமற்று
னியல்பாகப் பொடியாக்கி வைத்துக்கொண்டு
நருக்கின்ற செம்பைத்தா னலுருக்கி
நலமாக அப்பொடியைக் கிராசம்போட
வருக்கின்ற சரபமது மண்டூகத்தை
வளமாக விழுங்கிநற் போல்விழுங்கும்
கருக்கின்ற செம்பைத்தா னுருக்கிக்கொண்டு
கனமாக செம்பிடைக்கி அயத்தைச்சேரே. நகூக

அயத்தையே சேர்த்துருக்கி யுடைத்துக்கொண்டு
அடைவாக அப்புறமே வைத்துக்கேளு
நயத்தையே கெந்தகந்தான் பலமிரண்டு
நலமாகச் சூதமது பலமிரண்டு
கயத்தையே யுமிநெருப்பில் வறுத்தல்போல
கறுத்துமே யிருக்குமது அப்பாற்கேளு
டயத்தையே வெங்காரம் பொரித்தெடுத்து
பலநாலு போட்டுநன்றாய் வறுத்துப்போடே,

வறுக்கவே கருஞ்சிவப்பா யிருக்கும்பாரு
வளமாக அயச்செம்பில் சேர்த்துக்கொண்டு
நறுக்கவே திராவகத்தால் நகரைத்து
நலமாக வுமிநெருப்பில் வருத்துப்போடு
கறுக்கவே காசியென்ற மேருக்கேற்றி
கணைக்காகப் பனிரண்டு ஜாமந்தானும்

பறுக்கவே யெரியிட்டு உடைத்துவாங்கி [சoக
பார்த்தாக்காற் செம்பரத்தம் பூப்போலாமே.

ஷ சிந்தூர வேதை

பூப்போலே சிந்தூர மெடுத்துக்கொண்டு
புகழ்பெறவே செம்புக்கு எட்டிலொன்று
காப்போலே தாக்கவுமே தங்கமாகும்
கனமான வாயிரத்து எட்டுமாற்று
தாப்போலே நொறுக்குவெள்ளியிடையேசேர்த்தால்
தப்பாம லெட்டரைதான் மாற்றுமாகும்
வாப்போலே புடத்துக்கு நிலைக்கும்பாரு
வலுவாகச் செய்திடவே நன்மையாமே. சoஉ

ஷ சிந்தூரத்தால் திரும் வியாதி.

நன்மையாய் நந்தியென்ற பாட்டர்சொன்ன
நலமான சிந்தூரம் செய்யும்வேதை
கன்மையே திரியாதே முன்னேபாரு
கடுமையாய்ச் சிந்தூரங் குன்றிரியுண்ணு
வன்மையே நோயெல்லாம் பொடியேயாகும்
வலதாக யூகிமுனி கேட்டுத்தேறி
தன்மையா யுலகத்தோர்க் கிந்துவிட்டேன்
தப்பாது சத்தியமாய்ச் செய்துபாரே. சoஙு

வெள்ளியச்சுண்ணம்.

சத்தியந்தா னின்னமொரு சுண்ணஞ்சொல்வேன் [மை
சதாசிவன்தா னெனக்குந்தான் சொன்னேநேர்
முத்தியந்தான் வெள்ளியம் பலமும்பத்து
மூயர்ச்சியா யாட்டமுரிக் குள்ளேயேழு

பத்தியாய்த் தானுருக்கிச் சாய்த்துக்கொண்டு
பதிலாகத் தகடுதட்டி வைத்துக்கொண்டு
வத்தியந்தான் துணிதனிலே பரப்பக்கேளு
வலுவான பூனீறு பரப்புவாயே. சு0ச

பரப்பியே கனமாக வதன்மேற்கேளு
பரிவான வெள்ளீயத் தகட்டைவைத்து
கரப்பியே யதன்பேரில் பூனீர்போட்டு
கனமாகப் பந்துபோல் சுருட்டிக்கொண்டு
வரப்பியே கிளிஞ்சியென்ற சுன்னந்தானும்
வளமாகச் சீலைமேல் வலுவாய்ச்செய்து
தரப்பியே மண்சீலை மேலேகட்டி
தாட்டிகமாய் வலுவாகப் புடத்தைப்போடே.
புடம்போட்டு எடுத்தவுடன் பட்டுப்போல
பொருமியே நீறியது பற்பமாகும்
நடம்போட்டு நீரும மிருந்ததாலல்
நலமாக மூன்போலே போட்டுத்திரு
கடம்போட்டு நீறினைதோர் பர்ப்பத்துக்கு
கனமாக நாலிலொன்று வீரஞ்சேர்த்து
படம்போட்டு அரைத்துமே புடத்தைப்போடு
பதிவாக்குப் போலேதா னீறிப்போமே. சு0சு

மேற்படி வெள்ளீயச்சுன்னத்தில் தீரும்வியாதியும் அத
னைத் தரிசுக்குக் கவசமிடச்செய்யும் விதமும்.

நீறினைதோர் பர்ப்பத்தைப் பாலும்வெண்ணை [ஞல்
நிலவரமாய்ப் பணவிடைதான் கொண்டாயா

காறினேதார் குஷ்டுபதி னெட்டும்போகும்
கணக்கறிந்து புளிதள்ளு உண்டுதேறு
வாறினேதார் வெள்ளீயம் பாப்பத்துக்கு
வகையான ரசபதங்க மிடையேசேர்த்து
தாறினேதார் திராவகத்தா லரைத்துநீயும்
தடையறவே யின்னமொரு சேதிகேளே. சo௭
சேதிகேள் சீனத்தின் சுன்னம்போட்டு
செயலான இடைக்கிடைதா னரைத்துவில்லை
காதிகேள் ரவிதனிலே காயவைத்து
கனமாகக் களஞ்சியென்ற சுன்னங்கட்டு
வாதிகேள் காடையென்ற புடத்திற்போட
வலுவாக நீறியது சுன்னமாகும்
சாதிகேள் வீரமது நாலுக்கொன்று
சாற்றிடவே திராவகத்தாலரைத்திடாயே.சo அ

துரிசுச்சுன்னம்.

அரைத்துமே அப்பாலே வைத்துக்கொண்டு
அன்பான துரிசியது பலமோரண்டு
கரைத்துமே கரியூதி நெருப்பில்வைத்து
கனமாகச் சுட்டெடுக்க வெள்ளையாகும்
நரைத்துமே திராவகத்திற் சீனச்சுன்னம்
நலமாகப் போட்டுமே குழம்பாய்ப்பண்ணி
வரைத்துமே துரிசினை தோய்த்துவாட்ட
வலுமையாய் சுக்கான்போல் கட்டிப்போமே.

துரிசுச்சுன்ன பிரயோஜனம்.

கட்டியதோ ரதன்பேரில் வங்கச்சுன்னம்
கனமாகப் பூசியே வாட்டத்தீரும்
நட்டியதோ ரதன்பேரில் கிளிஞ்சிற்சுன்னம்
நலமாகக் கவசமது கட்டிக்கொண்டு
பட்டியதோர் பத்தெருவிற் புடத்தைப்போடு
பதிவாக எடுத்திடவே சுன்னமாகும்
வட்டியதோர் சரக்கெல்லாம் வணங்கிக்கேட்கும்
வாதைபட்டுக் கெஞ்சுமே வலுவாய்ப்பாரே.
வலுவாக வுப்புமூத லிருபத்தைந்தும்
வகையான பாஷாண மறுபத்துநாலும்
கலுவாக வுபரசங்கள் நூற்றிரண்டும்
கட்டாகு மணியாகும் தங்கமாகும்
பலுவாக தாணுமே சொன்னமார்க்கம்
பத்தியா யிதையறிந்து செய்யவேதை
நலுவாக வுலகத்தோர்க் கீய்ந்ததென்று
நவின்றுமே யிரண்டுமே துரிசைப்பாரே. சுகக

முட்டாள்வாதி புரட்டுச்செய்கை.

துரிசைத்தான் பாராமல் முட்டாள்வாதி
தூற்றியே மூலிகையில் நீற்றுதென்பார்
கரிசையாய்ச் சொன்னக்கா லவன்கையில்தான்
கணக்காக வொன்றுமில்லை யெண்ணிக்கொள்ளு
பரிசையாய் மூலிகையில் தாளகத்தைப்
பக்குவமாய் நிரைகுரைவில் லாமல்வைப்பேன்

நரிசையாய்ச் சுன்னமய மாகச்செய்வேன்
நலமாகச் சத்தியங்கள் செய்வான்பாரே. சகஉ

பொய்பேசும் வாதியைப் பல்லேத்தட்டு.

செய்வதென் முச்சரிய மாகச்சொல்வான்
செய்யாமற் கத்திரிப்பாய்ச் செல்வான்பாவி
நய்வதொரு தலைமண்டைத் தைலத்தாலே
நலமாகத் துரிசிகட்டுந் தாரங்கட்டும்
கய்வதொரு பிண்டமென்ற மட்டிநீரூல்
கணைக்காக லிங்கமது கட்டுமென்பார்
பய்வதொரு சொன்னவுணப் பல்லேத்தட்டு
படதருதே யுன்பொருளைக் கொடுக்காதமே.

படிக்காத குற்றத்தால் வாதி பொய்பேசுவான் அவன்
சொல்லேத் தள்ளி யுன்தொழிலேப்பார்.

கொடுக்காமற் சௌகாரச் சுன்னம்வைத்து
குடிகெடுத்த வாதியவன் சொல்லும்பேச்சு
நடுக்காட்டில் வித்துவென்ற தைலத்தாலே
நலமான தங்கமா மென்றுசொல்வான்
படிக்காத பேதத்தாற் சொன்னற்கேட்டு
பலனில்லே யென்றுசொல்லி தள்ளிப்போடு
வடிக்காத வுன்தொழிலேப் பார்த்துத்தேறு
வகையான நூல்விரும்பிப் பார்த்துத்தேறே.

வங்கத்தால் துரிசு சுன்னமாகும் மூலிகையிலாகு
லொன்றுமில்லே வியாதிதிரும் செம்பரத்தம்
பூவிற்போட நீராகும் இதைக்காய்ச்சிச்
சுருக்கிட மெழுகாகும்.

தேறியே மூன்வைத்த துரிசுசுன்னம்
திரமாக வங்கத்தாற் சுன்னமாகும்

ஆறியே மூலிகையி லொன்றுமாகா
அன்பான வியாதிக்கா மறிந்துகொள்ளு
காறியே செம்பரத்தம் பூவிற்போட்டு
கனமாக வைத்திடவே தண்ணீராகும்
வாறியே சரக்கெல்லாம் சுருக்குபோட
வகையாக மெழுகாகும் செம்பில்தாக்கே. சகடு
பெரியோர் படியாவாதியிடம் துரிசுசுன்னவேதை
மூலிகையிற் காட்டிப் புறட்டுவார்கள் இதை
ச்சுண்டு மூடர் மோசம்போவார்.
தாக்கியே பார்த்தாக்கால் தங்கமாகும்
தப்பாமல் தாம்பூரம் சேருவாங்கி
வாக்கியே நீர்விட்டு வறுக்கத்தங்கம்
வளமாகத் தானிருக்கும் வளப்பம்பாரு
பாக்கியே பெரியோர்கள் துரிசுச்சுன்னம்
பக்குவமாய் வைத்துமே யெடுத்துக்கொண்டு
தாக்கியே படியாத வாதிக்கிட்டே
தப்பாமல் வந்துமே சொல்வார்தாமே. சகசு
சொல்லவே மூலிகைதான் கொண்டாவென்று
சுருக்கான மூலிகையிற் சுன்னம்போட்டு
கல்லவே காணுமற் பிழிந்தபோது
கனக்காகத் தங்கமாய்க் கண்டபோது
வெல்லவே படியாத வாதிமூலி
விருப்பமாய்த் தேடியே காட்டிலேகி
தல்லவே தழைபிடுங்கிக் கெட்டான்வாதி
தப்பாமற் றுரிசிநீ ரறியான்பாரே. சகஎ

வங்கச் சுன்னஞ்செய் குபேரனுவாய்.
அறியாமற் பேச்சதுவுங் கேளாமற்றான்
அப்பாக வங்கத்தைச் சுன்னம்பண்ணு
குறியாமற் குபேரனேப்போல் வாழ்வீர்கண்டீர்
குணங்கெட்டுப் பொய்செல்லும் வாதிபேச்சை
நறியாமல் நம்பவே வேண்டாமையா
நற்பூடு தழையதனு லொன்றுமில்லை
கறியாமற் சோறுத்து உலகத்தோர்க்கு [சகஅ
கணக்காகச் சொல்லிவிட்டேன் நூலெப்பாரே.

கெட்டவரின்னின்ரு ரெனல்.

நூல்பார்த்து அலைந்தவர்தான் கோடாகோடி
நுணுக்கமா யட்டைபோற் புத்தியுள்ளோர்
கால்பார்த்து மூலிகையிற் கெட்டோர்கோடி
கணக்கறியா மற்றுணும் சுட்டோர்கோடி
நால்பார்த்து வாசியைத்தா லடுக்கிக்கெட்டோர்
நலமான நூலினயம் அறியார்கோடி
மால்பார்த்து அடையோகம் பார்த்துக்கெட்டோர்
மட்டத்தில் லாபத்தைத் தேடிடாயே. சகக

இன்னின்னது லிவ்வள விவ்வளவு லாபம்.

மட்டமெல்லா மொன்றேடே யொன்றுசேர்த்தால்
மனதாகப் பண்ணிரு லிரண்டுலாபம்
தட்டமெல்லாங் களங்குதான் சிந்தூரத்தில்
தயவாக வொன்றுக்குப் பத்துகாணும்
முட்டவே வழலைதா னறிந்தாற்கேளு
மூழுச்செம்பி லாபமா முறைமைகேளு

கட்டவே மெழுகிற்கும் தூமத்திற்கும் [சஉ0
கையறிந்தாற் கோடிசெம்பிற் பழுக்குந்தானே.

இன்னின்னதி லிவ்வளவு வேதையென்று யூகிசொல்ல நம்பு

செம்பில்நின்று பழுக்குமே வேதைகோடி
ஜெயமான ரசவேதை மெத்தகோடி
வம்பில்நின்று கெந்தகந்தான் கோடாகோடி
வலுமையாய்ப் பச்சையாய் சேர்ந்தாற்கேளு
நம்பில்நின்று மட்டங்க ளாகும்வேதை
நலமான பச்சைரச மாற்றுகட்டை
நம்பினோர் யூகிமுனி சொன்னநேர்மை
நலமாக மாற்றறிந்தோன் வாதியாமே. சஉக

இதனு லிதுவாகுமோ வெனல்.

வாதியா மென்றுசொல்லி பேச்சுசொன்னால்
வளமான தங்கம்வந்து வாய்க்குமோதான்
நாதியாம் பதுமையைத்தா னத்திக்கேளு
நலமாகப் பேசாது அழகுமாகும்
காதியாம் காதினற் கேட்டுக்கொண்டால்
கண்ணுக்கு ரம்யமாய்க் காணுமோசொல்
பாதியா னென்றுந்தான் கிடையாவிட்டால்
பதியாக மட்டங்கள் செய்துதேறே. சஉஉ

வெள்ளி மட்டவேதை.

செய்துதேர் வெள்ளியைத்தான் தகடுதட்டி
சிறப்பாக கெந்தகமும் வீரங்கூட்டி

பய்துதேர் கைத்தாழம் பாலாலாட்டி
பதையாமற் புடம்போட நொறுங்கிப்போகும்
கய்துதேர் கறுப்பாக விருக்கும்பாரு
கறுப்பெடுத்து அப்பாலே வைத்துக்கொண்டு
நய்துதேர் நொறுக்குவெள்ளி பலந்தானெட்டு
நலமாகத் துரிசுபல மெட்டுசேரே. சஉங.

எட்டுடனே சேர்த்துமே திராவகத்தா
லின்பமா யரைத்துவில்லே ரவியிற்காய
கட்டுடனே புடம்போட்டு உருக்கிக்கொண்டு
கணக்காகப் பொன்சேர்த்து இடையேவூது
நட்டுடனே மாற்றதுவு மாறுகாணும்
நலம்பெறவே தொழிலிதுதான் நாடிப்பாரு
கிட்டுடனே இத்தொழிலே முன்னேபாரு
கிருபையாய்ச் சிந்தூரம் பண்ணிக்கொள்ளே.

சிந்தூரமுன்னமே செய்துக்கொள்.

சிந்தூரம் பண்ணிறைச் சந்துகாணும்
ஜெகஜ்ஜால வித்தையெல்லா மாடலாகும்
கந்தூரம் கெந்தியுமே ரசமுஞ்சேர்த்து
கருத்தாக முன்சொன்ன படியேபாரு
வந்தூரம் பிரையாசைச் சுட்டால்வாதம்
வகையாகக் கைக்குள்ளே சிக்கும்பாரு
நந்தூரம் பேராசை படவும்வேண்டாம்
நலமாக யோகத்தைப் பார்த்துத்தேறே. சஉரு

பூயாத்திரை செய்து தன்மந்திரிமுதலிய ஆசாரிய
ரைப் பணிந்து தெரிந்து கொண்டேன் இ
தை உங்கட்குச் சொன்னேன்.

தேரியே யண்டாண்ட புவனமெல்லாம்
சுருக்காக சுற்றியே நாள்கள்பார்த்து
வாரியே தன்மந்திரி வாசல்கார்த்து
வளமான தேரரிடம் வளந்துசுற்றி
காரியே அகத்தியர்க்கும் புலத்தியர்க்கும்
கனமான பணிவிடைகள் செய்துதேறி
காரியே அடியேற்குச் சொன்னரப்பா சுஉசு
கருத்துணர்ந்து உங்கட்குச் சொன்னேன்பாரே.

துரிசு களங்கு வேதை.

சொன்னதொரு களங்கொன்று சொல்லக்கேளு
சுயமான துரிசியது பலமுமொன்று
கன்னதொரு சூடனது பலமுமொன்று
கடினமா யிவ்விரண்டுந் திராவகத்தால்
வன்னதொரு மைபோல நேகரைத்து
வளமாகச் சுண்ணும்பு சீலைசெய்து
கன்னதொரு பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
கனமான வீரத்தை யிடையேசேரே. சுஉள
இடைசேர்த்து அரைத்துவில்லை ரவியில்வைத்து
இதமாக கெந்தியது பலமுமுக்கால்
நடைசேர்த்து உமிநெருப்பி லுருக்கியேதா
நலமான வில்லைதான் வாட்டிவாங்கே

கடைசேர்த்து வில்லேபுமே வைத்துப்பாரு
கனமாக அதன்பேரில் சுன்னச்சீலை
வடைசேர்த்து கட்டியே யுமிநெருப்பில்
வலமாகப் புடமிட்டு எடுத்துக்கொள்ளே. சுஉஅ

எடுத்துமே பார்த்தாக்கால் கரியாய்த்தோணு
மிதமாகச் செம்புருக்கி யிடையேதாக்கு
கடுத்துமே பாம்புதப் பளையைத்தானும்
கனமாக வீழுங்கினது போலேயாகும்
நடுத்துமே வோடாமற் பிடித்திழுத்து
நலமான தங்கமாம் நடுக்கந்திரும்
வடுத்துமே நொறுக்குவெளி யேழுமூணு
வலமாகச் சேர்த்திடுமே தங்கமாமே. சுஉக

தங்கமாம் நொறுக்குவெளி ஈயம்போகா
தனைபுருக்கி யிக்குருவை கொடுத்துத்திரு
அங்கமா மூதாமல் திராவகத்தி
லப்பனே போட்டிருக்க வேமமாகும்
பங்கமாம் திராவகத்தைக் கண்டாலியம்
பறக்குமே யொருநொடியிற் பண்புமாகும்
சிங்கமாம் புதைதனிலே யிருந்தாற்போல
கூனைத்திலே கல்மசங்கள் நீங்கிப்போமே. சுஈ0

துரிசுசிந்தூரம் வேதை.

நீங்கிப்போம் துரிசியது பலமோபத்து
நிதானமாய் கூடத்தை யிடையேசேர்த்து
வாங்கிப்போம் திராவகத்தா லரைத்துக்கொண்டு
வளமாக வில்லேபண்ணி ரவியில்வைப்பாய்

தாங்கிப்போ மதன்பேரில் சுன்னச்சீலை
தப்பாமற் செய்துகெஜ புடத்திற்போட
பாங்கிப்போஞ் சிவந்திருக்கும் துரிசுதானே
பதையாமல் ரசபதங்க மிடையேசேரே. சுஙக
சேர்த்துமே திராவகத்தா லரைத்துக்கொண்டு
செப்பமா யும்நெருப்பில் வறுத்துப்போடு
பார்த்துமே குப்பிக்கு அரைதானிட்டு
பக்குவமா யடைத்திட்டுத் தீயைமூட்டு
கார்த்துமே பனிரண்டு ஜாமந்தான்
கட்டாகப் போட்டிடவே சிவந்துபோகும்
நார்த்துமே அருணநிறம் போலாம்பாரு
நலமாக நான்கொள்ளா வேதைபாரே. சுஙஉ
வேதைதான் பித்தளையை யுருக்கிப்பத்து
விதமாகக் கொடுத்திடவே எட்டேகாலம்
காதைதா னுப்புக்குங் காவிக்கேகா
கணைக்காக விருக்குமே கடிந்துபாரு
வாதைதான் படாமலே முன்னேபாரு
வகையாகச் சிந்தூரங் குன்றியுண்ணு
சாதைதான் சாவில்லை நரம்புமின்னும்
சத்தியமா யூகிமுனி யுரைத்தவாறே. சுஙங
சூதத்தாற் சகலமுங் கிடைக்கும்.
வாரேது வாதந்தா னெளிதிலாகும்
வகையான சூதத்தைக் கட்டவேணும்
காரேது வகாரத்திற் பழுக்குஞ்சூதம்
கனமான தங்கமெல்லாஞ் சூதத்தாலே

நாரேது சூதத்தைக் கட்டச்சொர்க்கம்
நலமில்லா மல்புகைஞ்சால் நாசமாவார்
சூரேது ஓன்றுமில்லை மனைதயூணு
சுகமான சிந்தூரம் வைத்துக்கொள்ளே. சுநச

இன்னதா லின்னது சித்தியாகும்.

வைத்துமே கெந்திய விடமெல்லாமும்
வகையாகத் திராவகத்தி லரைக்கச்சித்தி
நைத்துமே களங்கினுட விடங்களெல்லாம்
நலமாகச் சத்துருவாற் கொல்லச்சித்தி
கைத்துமே சுன்னத்தி னிடங்களெல்லாம்
கனமான சீனச்சுல் னத்தாற்சித்தி
பைத்துமே மட்டத்தி னிடங்களெல்லாம்
வகையாகப் பொன்சேரச் சித்தியாமே. சுநடு

சித்தியாம் தாரத்தி னிடங்களெல்லாம்
திரமாகச் சுன்னத்தி லவிக்கச்சித்தி
புத்தியா மிதையறிந்து செய்துக்கொள்ளு
புகலவே சிந்தூர விடமெல்லாமும்
கத்தியாம் கெந்திரசம் வெங்காரஞ்சேர்
கனமாகச் சிந்தூரம் பண்ணிமுன்னே
பத்தியாய்க் களங்குதனிற் சேர்க்கச்சித்தி
பதிவாக மனம்வைத்துச் செய்துக்கொள்ளே.

கல்லுப்புக்கட்டும் வேதையும்.

கொள்ளவே கல்லுப்புக் கட்டுசொல்வேன்
குணமாக வெடியுப்பு ஐந்தாங்காச்சல்

நள்ளவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
நலமாகச் சட்டியினி லுருக்கிக்கொண்டு
கள்ளவே ரோமமது பலமோவஞ்சு
கனமாகக் கொடுத்திடவே கட்டிப்போகும்
துள்ளவே யெடுத்துமே பலமோகூலு
துடிப்பாகச் சினத்தை யூதிச்சேரே. சுகூள

ஊதிடவே கடுஞ்சுன்னம் சீனச்சுன்ன
முத்தமனே வெடியுப்பு மிடையேசேர்த்து
காதிடவே யரைக்கவெண் கருவாலாட்டி
நலமாக வூதிடவே சுன்னமாகும்
பாதிடவே சுன்னமிடை பதங்கஞ்சேரு
பதிவான ரசபதங்கம் வைத்துக்கொள்ளு
காதிடவே திராவகத்தா லரைத்துக்கொண்டு
கனமாகக் கருவொன்று சொல்லக்கேளே. சுகூஅ

சொல்லவே கல்லுப்பு இந்துப்போடு
சொற்பெரிய வீதிரண்டும் படியுமொன்று
அல்லவே ஈதிரண்டும் தெளிவிறுத்து
அப்பனே வடிகட்டிக் காய்ச்சிக்கொண்டு
கல்லவே யிவைதந்தம் போலக்கிண்டு
கனமான வெடியுப்புச் சுன்னங்கட்டி
மெல்லவே யதன்மேற்சுண் ணும்புகட்டி
மேன்மைபெற வலுவாகக் கட்டிக்கொள்ளே.
கட்டியே வலுவாகப் போட்டுக்கொண்டு
கருணைபெற வுருக்கவே காரியிலாடும்

தெட்டியே தங்கம்போல் மணியுமாகும்
தெறிப்படங்கி குகையில்நில் மூடும்போது
வட்டியே யிடைக்கிடைதான் வீரமீய
வகையாக வாங்கியே வெள்ளையாகும்
தட்டியே செம்புதனில் பத்துமாகும்
தடையறவே தாளகத்தை யிடையேதாக்கே.

தாக்கியே பார்த்தாக்கால் மஞ்சளாகும்
தண்மையாய்ச் செம்புருகத் தாக்கினுக்கால்
பாக்கியே யெட்டேகால் மாற்றுகாணும்
பதிவான லிங்கத்தை யிடையேதாக்கு
வாக்கியே களங்கமா யிருக்கும்பாரு
வகையான செம்புருக்கித் தாக்கினுக்கால்
நாக்கியே யேழாகும் நயப்புமாகும்
நாதாந்தப் பேரொளியை நாடிப்பாரே. சசக

களங்கமுதல் கோடாகோடி வித்தைக ளிருப்ப
தால் உப்பைமுந்திக்கட்டி வேதையாடி.
நாடிப்பார் களங்கினில் வேதைகோடி
நலமான குருவும்சிந் தூரங்கோடி
தாடிப்பார் தைலங்கள் கோடாகோடி
தகமைபெற மெழுகுவகை கோடிப்பூரம்
பாடிப்பார் பழுப்பினமுங் கோடாகோடி
பதிவான கைமுறையுங் கோடியுண்டு
வாடிப்பா ருப்பைமுந்திக் கட்டிக்கொண்டு
வலுவான வித்தைதனை செய்துகொள்ளே. சசஉ



செந்தகச் செம்பு.

செய்துகொள் கெந்தகத்தின் செம்புசொல்லேன்
சிறப்பாக கெந்தியுமே பலம்பத்தாகும்
நைதுகொள் காந்தமது பலமஞ்சாகும்
நலமான வெண்காரம் பலமுமஞ்சு
பைதுகொள் துரிசியது பலமுமஞ்சு
பரிவாகப் பழச்சாறு விட்டுஆட்டி
கைதுகொள் ளெட்டுநா ளரைத்துவில்லை
கனமாக ரவிதனிலே காயப்போடே. சசஙு

போட்டுமே அயச்சட்டி அடுப்பிலேற்றி
போரான எண்ணெயரைப் படியுமூற்றி
காட்டுமே வில்லையதிற் போட்டெரித்து
கனமான வில்லைமொறு மொறுக்கவாங்கி
நாட்டுமே சரஉலையிற் செம்புருக்கி
நலமாக வில்லையைத்தா னிடையேயீந்தால்
காட்டுமே கெந்தகத்தின் செம்புமாகும்
கனகமய மானதங்கச் செம்புமாமே. சசச

செம்பான மொறுக்குவெள்ளி யெட்டிலொன்று
செயமான தங்கமா மென்னசொல்லேன்
பங்கான நாதாக்க ளாடுமாட்டு
பரிவான கடராஜ நிந்தச்செம்பு
தங்கான தங்கமெல்லா மாகும்பாரு
தப்பாமற் சத்தியமாம் வேதைபாரு
வங்கான நந்தியென்ற தேவர்சொன்ன
வளமான கைபாகம் வரிசைபாரே. சசசு

கெந்தகச்செம்பை சிந்தூரஞ்செய்து வேதையாட.

வரிசைபார் முன்னெடுத்த கெந்திசெம்பை
வளமையாய்ப் புளியிலைபோல் தகடுதட்டி
நரிசைபார் ரசபதங்கம் லிங்கபஸ்பம்
நலமான வெங்காரம் தாரங்கூட்டி
கரிசைபார் திராவகத்தா லரைத்துப்பூசி
கனமான புடம்போட நொறுங்கிப்போகும்
தரிசைபார் தாளகத்தை யிடையரைத்து
தாக்கவே புடத்திற்சிந் தூரமாமே. சசசு

சிந்தூரம் செம்புதனில் பழுக்கும்வேதை
செப்பமா யிடைக்கிடைதான் செம்பில்தாக்கி
நந்தூரம் தங்கமிடை செம்புகூட்டி
நலமான நொறுக்குவெளி முப்பதிற்கொன்று
பந்தூரங் கொடுத்தாக்காற் பத்துமாற்று
பதிலாகச் சிந்தூரம் தேனிலுண்ணு
நந்தூரம் நோய்மூன்றும் சிதறிப்போகும்
நலமான வாசியைத்தான் மறுக்கும்பாரே. சசஎ

நாகபற்பம்.

மறுக்குமே நாகபற்ப மொன்றுகேளு
மதிப்பான நாகமது பலமோநாலு
கறுக்குமே சுத்திபண்ணி கரியையூதி
கணக்காக வதன்பேரில் நாகம்வைத்து
தறுக்குமே அதன்பேரிற் கறியைப்போட்டு
தப்பாமல் நாளத்தா லூதித்தீரு

வறுக்குமே சிறியே பத்தியோடி
வலுவாக வெள்ளிநிற பற்பமாமே. சசஅ
பற்பமா மிடைக்கிடைதான் வீரஞ்சேர்த்துப்
பதிவாகத் திராவகத்தா லரைத்துக்கொண்டு
அற்பமா யெண்ணுதே வில்லைகட்டி
அன்பாக மண்மரவு புடத்தைப்போடு
கற்பமா மெடுத்துமே துரிசுகட்டி
தாக்கியே யிடைபாகம் நிறுத்தரைத்து
கற்பமாம் வில்லைகட்டி சேவல்போல
கடிதாகப் போட்டுமே எடுத்திடாயே. சசக
எடுத்துடனே செம்புருக்கி யிடைகொடுக்க
இன்பமாய்ச் செம்புகட்டும் தங்கஞ்சேரு
கடித்துமே யிடைசேர்த்து மதியிற்பத்து
கனமாகக் கொடுத்திடவே யேழுமாற்று
கடித்துமே யித்தொழிலைப் பண்ணித்தேறு
தயவான உறுதிமிக மனசையூணு
கடித்துமே யுலகத்தோர்க் காகச்சொன்னேன்
கண்டுகொளு மனதடங்கி அறிவில்லில்லே.

அறிவின வாதிசெய்கை.

அறிவிலே நின்றுதான் சிறிதுபேர்கள்
ஆராய்ந்து சாஸ்திரத்தைப் பார்த்துச்சுட்டு
கறிவிலே மட்டங்கள் பண்ணிபண்ணி
கல்லிலே புரைத்துமே நால்மாற்றென்று
நறிவிலே பார்த்துமே தவித்துவங்கி
நலமில்லை இல்லென்று பார்த்துச்சுட்டு

கறிவிலே பழுப்பாகத் தோணுதென்று
கனமாக வூதியே யுரைத்துப்பார்த்தார். சருக
உரைத்துமே தள்ளிப்பின் னொன்றுபார்த்து
உண்மையில்லை அதைவிட்டு உப்புகட்டி
கரைத்துமே செம்புருக்கி அதிலேதாக்கி
கடிதான வன்னமில்லை யென்றுசொல்லி
நரைத்துமே மூலிகையி லுப்புகாச்சி
நாடியே கொடுத்திட்டு முழித்துக்கெட்டு
பரைத்துமே யிப்படிதான் பார்த்துப்பார்த்து
பரிவாக அலைந்துகெட்ட வாதிதானே. சருஉ

வாதி மட்டத்திற் கிடைக்கிடை பொன்
சேர்த்து செய்யவேண்டும்.

வாதிதான் மட்டங்கள் செய்தானானால் [த்தால்
வண்மையா யிடைக்கிடைதான் பொன்னைச்சேர்
நீதிதான் மாற்றாகும் பொன்னுமாகும்
நிர்ணயமாய்க் குற்றங்க ளொன்றுமில்லை
காதிதான் புடத்துக்குத் தங்கந்தானும்
கடிதாக விரங்கவென்றாற் சொல்லக்கேளு
பாதிதான் மட்டத்தி லிரட்டிப்பொன்னு
பதிவாகச் சேர்த்தாக்கா லிரங்கும்பாரே. சருங

சித்தர் மறைப்பும் வாதிகளறியாமையும்.

இரங்குமே பதினெட்டுச் சித்தர்செய்த
இயல்பான போக்காகு மிந்தப்போக்கை
கரங்குமே சாத்திரத்தில் மறைத்துப்போட்டு
கடிதாக நூற்றுக்கு ஈயச்சொல்லி

நரங்குமே உலகத்தோர்க் காசைசொன்னேர்
நலமாகப் பொருளறியா வாதிதானும்
பரங்குமே களங்குசெய்து தூற்றில்தாக்கி
பலிப்பில்லை யென்றுசொல்லி அலைந்தார்தானே.

மட்டத்திற்குத் தங்கஞ் சேர்த்துப் புடத்தை
ப்போடு நயமும் வர்ணமும்காணும்.
அலையாமற் பொன்சேர்ந்தால் தங்கமாகு
மறிவுகெட்ட வாதிகளே பொன்னைச்சேரும்
கலையாமற் சிறிதுமட்ட மூதிச்சேர்த்துக்
கணக்காகப் பொன்னைதான் சேர்த்தாலுந்தான்
வலையாமல் வர்ணங்கள் காட்டமாட்டா
வலுமையாய்ப் புடம்போட்டால் நயமுங்காணும்
தலையாகத் தங்கமாம் வேதையாகும்
தப்பாமல் யூகிமுனி பார்த்தவாறே. சருரு

ரசபதங்க மெரிப்புக் குறைந்தால் கறுப்பாயிருக்
கும் அதை மறுபடி யெரிக்கும் விபரம்.

வாறேது ரசபதங்கம் வைக்கும்போது
வளமாக வெரிப்புத்தான் குறைந்ததாலே
தாறேது சட்டியைத்தான் பிரித்துப்பார்த்தால்
தகுந்ததோர் வேகாது அரைவேக்காடு
காறேது இப்படிக்குப் பாகந்தப்பில்
கனிந்துமே யேறியதை வழித்துக்கொண்டு
பாறேது மேற்சட்டி யுள்ளேதானும்
பரிவாகச் சோறெடுத்து பிசைந்துகொள்ளே, சருசு

பிசைந்துமே புள்ளேதான் மூட்டுப்பூச்சாய்
பூசியே யரைவேக்கா டானபஸ்பம்
கசைந்துமே அதன்பேரில் தூவிக்காய
கனமாகச் சட்டியைத்தான் கவிழ்த்துமூடி
தசைந்துமே வலுவாக வளுந்துச்சீலை
தடையறவே யெழுசீலை மண்ணுஞ்செய்து
பசைந்துமே அடுப்பில்வைத் தெரித்துக்கொள்ளு
பதிவான வெள்ளையைநீ யெடுத்துக்கொள்ளே.

திராவகம் கெட்டாற் பக்குவம்.

எடுத்துமே திராவகத்தை வைக்கும்போது
இயல்பான தீமிஞ்சில் பொங்கிமூக்கில்
கடுக்கவே சிழைப்பேறல் வருகும்வந்தால்
கடிதாகத் தியாற்றிக் கொஞ்சம்போடு
நடுக்கவே விழுந்தநீர் தள்ளிப்போட்டு
நலமான பிள்ளீரை வாங்கிக்கொள்ளு
படுக்கவே மயங்காம லுறுதிபாரு
பண்மையா யூகிமுனி சொன்னவாறே. சுருஅ

வாதவைத்திய ரசகற்பூரம்.

சொன்னரச கற்பூர மொன்றுகேளு
சுகமான கற்பூரம் பலமூநாலு
மூன்னான திராவகத்தை யதிலேவிட்டு
முருக்கமாய் பீங்கானில் வறுத்துப்போடு
நன்னையமாய் கிடமதனி லெரிக்கவேறும்
நலமாக தும்பைப்பூ நிறம்போலாகும்

கன்னெப்பாய் வழித்துஒரு சட்டியிட்டு
கனமான விருசட்டி யொராஞ்சிசேரே. சருகூ
சேர்த்துமே கல்லுப்புப் படியைவாங்கி
செம்மையாய் வறுத்துமே சட்டியிட்டு
கார்த்துமே யதன்பேரில் மாப்பரப்பி
கருணைபெற மூப்பதுநா ழிகையெரிக்க
நார்த்துமே பதங்கமா யேறிநல்ல
நலமாக வெள்ளையா யிருக்கும்பாரு
பார்த்துமே வழித்தெடுத்து பற்பநாலு
பதமாக சீனமென்ற சுன்னைநாலே. சசுo

ரசகற்பூர வேதை.

நாலான வீதிரண்டு நேகரைத்து
நண்பாக முச்சாம மரைத்துக்கொண்டு
காலான திராவகத்தா லரைத்துவில்லே
காயவைத்து கிடமதனில் ஜாமந்தானும்
வாலான தீயெரிக்க தந்தம்போலாம்
வலுவாக வெடித்துமே செம்புபத்து
தாலான இதையொன்று கொடுத்தாயானால்
தங்கமா மிஞ்சிபண விடையுமுண்மே. சசுக

ரசகற்பூரத்தால் தீரும் வியாதி.

உண்டிடவே குட்டமெல்லாம் போகுமப்பா
உண்மையாய் கிரந்திசொரி சூலைபோகும்
கண்டிடவே கடிவிஷமும் சுரமும்போகும்
கடிதான கால்பிடிப்பும் போகும்போகும்

நண்டிடவே லிங்கமரி மேகம்போகும்
நலமான வெட்டையரை யாப்பும்போகும்
வண்டிடவே மண்டலத்திற் சித்தியாகும்
வண்மையாய் செயலறிந்து உண்டுதேறே. சசுஉ

ரசகற்பூரம் சாப்பிடும்போது தலைமுழுகத் தைலம்.

உண்டதோர் தலைமுழுக நெய்தானென்று
உத்தமனே நல்லெண்ணெய் படிதானென்று
கண்டதோ ராமணக்கி நெய்தானென்று
கடிதாக விவையாவும் கலந்துவிட்டு
வண்டுகோ ளெடுப்பேற்றி யெரிக்கும்போது
வளமாகச் சுண்டியென்ற மூலிபோட்டு
பண்டுகே ளெரியிட்டு எடுத்துகொள்ளு
பதமாக நெய்யாகும் வாசமாமே. சசுஊ

வாசமாம் பூரபல்ப மூண்ணும்போது
வகையாகத் தேய்த்துமே முழுகிக்கொள்ளு
நாசமா நோயெல்லாம் தவிடேயாகும்
நல்லதாங் கண்ணுக்கு மொளிவுமீறும்
தாசமாம் தாதுவெலா மிறுகும்பாரு
தப்பாம லிந்நெய்யை வைத்துக்கொள்ளு
பாசமாம் வடமொழியை பார்த்துப்பார்த்து
பதிவாக யூகிமுனி சொல்லுந்தானே. சசுசு

லிங்கபற்பம்.

சொல்லதொரு லிங்கபற்பம் சொல்லக்கேளு
சுயமான லிங்கமோ பலமோபத்து

கன்னதொரு திராவகத்தால் நெழுகரைத்து
கருணையாய் பிங்கானில் வறுத்துப்போட்டு
வன்னதொரு சட்டிதனி லெரிக்கஜாமம்
வகையாக வேறியே கறுப்பதாகும்
நன்னதொரு கறுப்பெல்லாம் தேய்த்துப்பார்க்க
நலமான ரசமெல்லாம் திரளுந்தானே. சசுரு
திரளுமது ரசமெல்லா மெடுத்துக்கொண்டு
திரமாக வுப்புபடி நாலுங்கூட்டி
கரளுமே வறுத்துமே யம்மியில்தான்
கனமாக நேகரைத்து சட்டியிட்டு
நரளுமே லிங்சரச மதன்மேலிட்டு
நலமாக மேற்சட்டி கவிழ்த்துமூடி
பரளுமே வளுந்துமண் ணைழுசிலை
பக்குவமாய்ச் செய்தவுட னடுப்பிலேற்றே.
லிங்கபஸ்ப தங்கசிந்தூரம்.
ஏற்றியே நாலுநா ளெறித்துப்பார்க்க
இயல்பான ரசமெல்லா மேறிநிற்கும்
காத்தியே சிலாகைபோ லிருக்கும்பாரு
கருணையாய்த் தும்பமலர் போலேயாகும்
நாத்தியே மயிர்க்குச்சி யால்வழித்து
நலமாக வெடுத்துமே அரைத்துக்கொள்ளு
பாத்தியே லிங்கபஸ்பம் பலந்தானொன்று
பதிவான தங்கமது பலமுமொன்றே. சசுள
ஓன்ளுன தங்கத்தை சுத்திபண்ணி
ஓகோகோ பழச்சாற்றில் காவியாட்டி

நல்லுன தங்கத்தை காச்சித்தோய்த்து
நலமாக லிங்கபஸ்பம் சேர்த்தரைத்து
கண்டான திராவகத்தா லரைத்தெடுத்து
கனமான வுமிநெருப்பில் வறுத்துப்போடு
வண்டான காசியென்ற மேருக்கேற்றி
வண்மையாய்ப் பனிரண்டு ஜாமந்தானே. சசு அ
லிங்கரச தங்கச்சிந்தூர வேதையும் இதில்திரும் வியாதியும்.
ஜாமந்தா னொரித்திடவே வெள்ளைபோலாம்
சாற்றரிது கொஞ்சமாய் சிவப்பாய்நிற்கும்
வாமந்தான் செம்புருக்கி யெட்டிலொன்று
வகையாகக் கொடுத்திடவே தங்கமாகும்
காமந்தான் வெல்லத்திற் பணமேயுண்ணு
கனமான பேதி சூதிகையின்வாய்வு
நாமந்தான் காமாலை பாண்டுபோகும்
நலமான மகோதரமும் குன்மம்போமே. சசுக
போகுமே புதிரமொடு வாய்வுதானும்
பொல்லாத நாபிபுட் சூலைபோகும்
தாகுமே மலமடைப்பு கல்லடைப்பு
தாக்கியே கிராணியொடு மூலம்போகும்
வாகுமே நடுக்கமொடு மேகவாய்வு
வடிவான பித்தமுடன் வாய்வுதிரும்
தாகுமே வாதமெண் பதுவும்திரும்
தகையான தோஷமுதல் சன்னிபோமே. சஎ0
சன்னிபோங் கிரந்திமுதல் குட்டந்திரும்
சலிப்பில்லா மூடக்குமுதல் தானேபோகும்

கன்னிபோ மண்டமூதல் வாய்வுதீரும்
கனமான மூலமூதல் தானேபோகும்
வன்னிபோம் சத்தியமா யுலகத்தோர்க்கு
வகையான மருந்திலுட பலத்தைக்கண்டு
சென்னிபோம் பதினெட்டு சித்தரப்பர்
ஜெயமாக வாடினது இந்தப்போக்கே. சளக

சித்தர்கள் ரசத்திற் தங்களுசேர்த்துச் சிந்தூரித்துச்
சாப்பிடவேண்டும் தங்களிக்கி நோயாளிக்கு இரும்
புசேர்த்து வைத்யஞ் செய்யவேண்டும்.

போக்கோடே சித்தரெல்லாந் தங்களுசேர்த்து
பொறுமையாய்ச் சிந்தூரம் பண்ணித்தின்றார்
வாக்கோடே யுலகத்தில் நோயாளிக்கு
வகையாகத் தங்கத்தைச் சேர்க்கவேண்டாம்
தாக்கோடே யிரும்புதனைச் சேர்த்துக்கொண்டால்
தண்மையாய் வயித்தியமு மிகவுநன்று
பாக்கோடே தங்கமது இரதத்தோடே
பாகமாய்ச் சேராதே போறற்கேளே. சளஉ

தங்கத்தில் ரசஞ்சேராவிட்டாற் செம்பு பழுக்காது
இதை யடிக்கடி சொல்லமாட்டேன்.

கேளுமே செம்பதுவும் பழுக்கமாட்டா
கெடியான தங்கமாம் வேதையில்லை
யாளுமே அடிக்கடிக்குச் சொல்லமாட்டே
னன்பாக விதையுமக்குச் சொன்னேன்பாரு
வாளுமே யிவ்வித்தை நிசமாய்ப்பாரு
வகையாகச் சத்தியமாம் நன்றுய்ப்பாரு

காலுமே யெண்ணீயே புறுதியாக
கைபாக மாய்ச்செய்து நண்ணீப்பாரே. சளங

ரசபஸ்ப தங்கச்சிந்தூர வநுபானம்.

நண்ணீப்பார் மூலமென்ற ரோகத்துக்கு
நலமான விளக்கெண்ணெய் தனிலேநாட்டு
கண்ணீப்பார் சூலையெல்லாம் வெல்லந்தாக்கு
கனிவான ஜன்னிக்கு வுள்ளித்தைலம்
கண்ணீப்பார் குன்மத்துக் கரியவெல்லம்
கனமாகச் சயரோகம் தேனிற்தாக்கு
முண்ணீப்பார் சோகைக்கு நெய்யதாகு
மூதண்ட சண்டரச பஸ்பமாட்டே. சளச

சண்டரச பஸ்பத்தால் வியாதிகளனேத்தும்போ
ம்வாதஞ் சித்திக்கும் இதில் தங்கஞ் சே
ராவிட்டால் வர்ணமிடாது.

ஆட்டெல்லாம் சண்டரச பஸ்பத்தாட்டு [கும்
ஆண்மையாய் வியாதியெல்லாந் தவிர்ந்துபோ
காட்டெல்லாம் கைபாக மாகச்செய்து
கருணைபெற வயித்தியத்தைப் பார்த்துத்தேறு
வாட்டெல்லாம் ரசமாட்டு வாதமாகும்
வலுவாக பின்னென்று மாகாதப்பா
நாட்டெல்லாந் தங்கத்தை விட்டால்வன்னம்
நலமில்லை தங்கமென்ற நாமப்போக்கே. சளரு

வீரபஸ்பம்.

போக்கென்று எண்ணுதே வீரபற்பம்
போக்கொடே சொல்லுகிறேன் வீரம்பத்து

காக்கென்று திராவகத்தா லரைத்துமைபோல்
கடிமையாய் பிங்கானி லிட்டுக்கேளு
நாக்கென்று உம்நெருப்பில் வறுத்துப்போடு
நலமாகக் கிடமதனி லெரிக்கக்கேளு
வாக்கென்று ஏறியே சிலாகைபோல
வகையாகப் பதங்கமாயிருக்கும் பாரே. சளசு

வீரசிந்தூரம்.

இருக்குமே வீரத்தை வழித்துக்கொண்டு
இதமாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
நருக்குமே சினத்தை கடுமையாக
நலம்பெறவே யூதியே யிடையேசேரு
வருக்குமே யிவ்விரண்டும் பொடியாய்ப்பண்ணி
வலுவாக சிகப்பாக விருக்கும்பாரு
தருக்குமே திராவகத்தா லரைத்துஜாமம்
தண்மையா யுமிநெருப்பில் வறுத்துப்போடெ.

வீரசிந்தூரவேதை.

வறுத்துமே காசியென்ற மேருக்கேற்றி
வலுவாக முத்தியு மாட்டுமாட்டு
தறுக்குமே பனிரண்டு ஜாமமானால்
தப்பாமே யிறக்கியே பார்க்கும்போது
நறுக்குமே மூருக்கம்பூம் போலேயாகும்
நலமாக செம்புருக்கிக் கொடுக்கக்கேளு
மறுத்துமே சுழித்துமது உள்ளேவாங்கும்
மயங்காமல் நன்றுகத் தாக்கிடாயே. சளஅ

வீரசிந்தூரத்தில் தீரும்வியாதி.

தாக்கிடவே யிருபதுக்கு ஒன்றுபோடு
தப்பாம லெட்டேகா லாகும்பாரு
நாக்கிடவே யித்தொழில்கள் சத்யமாகு
நலமறிந்து சிந்தூரம் குன்றியுண்ணு
வாக்கிடவே குட்டங்கள் மேகமெல்லாம்
வகையாகப் போகிவிடும் வண்மைபாரு
தாக்கிடவே ஜுரங்கள்முத லாறுப்புண்கள்
தப்பாமல் மேகமெல்லாம் தீர்ந்துபோமே.
தீர்ந்துபோம் ஜன்னிமுதல் கருங்குட்டங்கள்
தீராத அரையாப்பு துடைவாழைப்போம்
காந்துமே புளியுப்புப் பெண்ணுந்தள்ளு
கருணைபெற நோயெல்லாந் தவிடேயாகும்
நாந்துமே குன்மமொடு ஈளைபோகும்
நலமான மருந்துதான் நாட்டம்பாரு
பாந்துமே வலியோடு தீருமென்று
பகர்ந்துரைத்தார் யூகிமுனி பண்புமாமே.சஅ0

கெந்தகத் தைலம்.

பண்பாக கெந்தகத்தின் தைலஞ்சொல்வேன்
ப்திவாக கெந்தியது பலமுமொன்று
தண்பாக நேர்வாளம் சுத்திபண்ணி
தாக்கான வாளமது பலமும்பத்து
கண்பாக விருஜாம மரைத்தரைத்து
கருத்தாவே கல்வத்திற் சாய்த்துவைக்க

நண்பாகத் தைலமா யிரங்கும்பாரு
நலமான தைலத்தை யெடுத்துக்கொள்ளே.கஅக
கெந்தகத்தைலத்தை வீரம்தாளகங்களிற் சுருக்கி
ட்டால் மெழுகாகும் வேதையாகும்.
எடுத்துமே வீரத்திற் சுருக்குப்போடு
இயல்பான வீரமது மெழுகுமாகும்
கடுத்துமே தாளகத்திற் சுருக்குப்போடு
கனமான தாளகமு மெழுகுமாகும்
தடுத்துமே யிவ்விரண்டு மிடையேசேர்த்துத்
தப்பாமற் செம்புருக்கிப் பத்துக்கொல்லு
வடுத்துமே கொடுத்துநீ பார்க்கும்போது
வகையான மாற்றென்ன தங்கமாமே. சஅஉ
கெந்தகத்தைலத்தை சரக்கில் சுருக்கிடுமுன்றா
வகத்தில் சுருக்கிட்டு பின தைலத்திலிடவும்
மெழுகுகளங்கு செய்தால் பாகமாய்க்
கொடி இதில் வாதிகளெல்லாஞ்
செய்து தப்பிப்போவார்.
தங்கமாந் தைலத்தை கொடுக்குமுன்னே
தப்பாமல் திராவகத்தாற் சுருக்குப்போடு
அங்கமாம் பின்னேதான் தைலம்போடு
அடைவான மெழுகாகும் வேதையாகும்
சிங்கமா மெழுக்குமுதல் களங்குசெய்தால்
சிறப்பாகக் கொடுக்கிறதும் பாகம்வேணும்
துங்கமாம் வாதிகள்தா னெல்லாம்செய்வார்
துறைதப்பி ஆற்றிலே யிரங்குவாரே. சஅக

சிந்தூரமுதலியவை கொடுக்கும்வழி.

இறங்கியே தண்ணீரிற் போகும்போது
இயல்பான நரிப்பள்ள மென்றுசொல்வார்
நறங்கியே நரிவந்து பறிக்குமோதான்
நலமான பேராச்சு நரிக்குத்தானும்
வறங்கியே சிந்தூரம் களங்குசெய்து
வளமான பற்பங்கள் மெழுகுசெய்தால்
கறங்கியே செம்புருக்கிக் கொடுத்துக்கொண்டு [ளே.
கருவான நொறுக்குவெள்ளி சேர்த்துக்கொள்
சேர்த்துமே பார்த்தாக்காற் குற்றமில்லை
சிறப்பாகத் தங்கத்தைக் கொடுத்துக்கொண்டு
கார்த்துமே புடம்போடத் தங்கமாகும்
கருணைபெற விற்றுமே செலவுசெய்து
நார்த்துமே நிஷ்டையது பண்ணித்தேறு
நலமான கருணைவைத்து நாடிநில்லு
பார்த்துமே யொருவருக்குள் சொல்லிடாதே
பதிவான நிலைநின்று வாழ்வீர்காணே. சஅரு

ரச வீர சண்டரச பூரபஸ்பங்களுக் கநுபானிக்கும்விதம்.

வாழ்வீர்காண் பேராசை வைத்தபேர்க்கு
வகையான வாதநிலை அறிந்துசொல்வேன்
தாழ்வீர்காண் ரசபஸ்பம் வீரபஸ்பம்
தப்பாமற் சண்டரச பஸ்பத்தோடு
காழ்வீர்காண் பூரபஸ் பங்களெல்லாம்
கருணைபெற நெய்யிஞ்சித் தேனிற்கொள்ள

நாழ்வீர்காண் மூலைப்பாலிற் கொடுக்கப்பாகம்
நலம்பெறவே சொல்லுகிறேன் நாடிக்கேளே.
நாடிக்கே ளனுபான மெடுத்துக்கொண்டு
நலமான பஸ்பநெல் லிடையேசேர்த்து
வாடிக்கே ளனுபானம் தேனிற்தாக்கு
வகையான மண்டலத்தில் நோயும்போகும்
பாடிக்கேள் மண்டலத்திற் சித்திசித்தி
பரிவான குட்டமுதல் வாதமெல்லாம்
தேடிக்கேள் வியாதியெலாம் கெஞ்சியோடும்
சித்தியாம் காயசித்தி யாகும்பாரே. சுஅள

காயசித்திக்குச் சிந்தூரபஸ்பங்க ளுண்ணுமிதம்.

சித்தியாம் காயத்தைச் செய்புமார்க்கம்
சிறப்பாகச் சிந்தூரம் பஸ்பமுண்ணை
மூத்தியாம் பசும்பால்நெல் லிடையேபோட்டு
முயர்ச்சியாய் மண்டலங்க ளுண்ணும்போது
நத்தியாம் நல்லெண்ணெய் புளியுமாகா
நலமான பெண்ணுகா நாடிப்பாரு
பத்தியாம் காயமது அழிவுமில்லை
பகரரிது இம்முறைபோல் பற்றிப்பாரே. சுஅஅ

லிங்க வீரபூரசங்கள் கல்லுப்பிலெரித்தால் சக
லமுஞ்சித்தி படியாதோரிதை பலனில்லையென்
றுசொல்வார் இத்தால் தங்கமும் வைத்ய
முஞ்சித்தியாகும் இதுசத்தியம்.

பத்தியாம் லிங்கமுதல் வீரந்தானும்
பலமான பூமுதல் ரசமுங்கூட

நத்தியாம் கல்லுப்பி லெரித்துக்கொண்டு
நலம்பெறவே யெடுத்தாக்கா லெல்லாஞ்சித்தி
பத்தியாம் படியாத வயித்தியோர்கள்
பலனில்லை பதங்கந்தா னென்றுசொல்வார்
மூத்தியாம் தங்கமாம் வியாதிதீரும்
முடிவான சத்தியமா முதன்மைதானே. சஅசு

ரசபதங்க மொருவர்க்குக் காட்டிஞல் சித்தியில்லை
இந்தரசபதங்கத்தை வைத்து வலுவான விட
ங்களில்சேர்த்துக்கொள்.

முதன்மையாம் பதங்கந்தா னென்றுசொல்வார்
முக்கியமாய் கல்லுப்பில் வேதையாச்சு
கதன்மையாங் கல்லுப்பை யுருக்கிப்பாரு
கருத்தில்லை யெரித்தரசம் காணமாட்டார்
கதன்மையா யாவருக்கும் பதங்கங்காட்ட
நலமாக சித்தியில்லை ரசமொளிக்கும்
வதன்மையாம் பதங்கத்தை வைத்துந்தேறி
வலுவான விடமெல்லாஞ் சேர்த்துக்கொள்ளே.

ரசபதங்கத்தை களங்குமுதல் சகலத்திலு முப
போகித்தால் வாதவைத்யம் சித்தியாமென்
றுசொல்லிய குருபரம்பரை.

சேர்த்துமே களங்குமுதற் சிந்தூரங்கள்
ஜெயமாகும் பரிசமாம் தங்கமாகும்
பார்த்துமே யூகிமுனி யேபடைத்து
பதிவான நந்திபக்க லிருந்துகேட்டு

நார்த்துமே தன்மந்திரி தன்னைக்கேட்டு
நலமான அசுவனியை நாடிச்சேர்ந்து
வார்த்துமே அகஸ்த்தியரை வரிசைகேட்டு
வல்பான புலத்தியரை வரிசைகேட்டே. சகூக

யூகிமுனி சொன்ன நூலின்தொகை.

கேட்டுமே தேரமா முனிவரைத்தான்
தெண்டநிட்டு அடிவணங்கிக் கேட்டுத்தேறி
நாட்டுமே பண்புள்ளோ ரென்றுசொல்லி
நலமாக வெனையழைத்து நாடிச்சொன்ன
காட்டுமே வாதமா பிரத்துச்சொச்சம்
கருணைபெற வயித்தியமும் பத்துஅஞ்சு
காட்டுமே சகலஜனம் பிழைக்கச்சொன்னேன்
கப்பாது சத்தியமாம் பாகம்பாரே. சகூஉ

மூடவாதிகள் தெரியாமற்செய்யும் புறட்டுச்செய்கை.

பாரேநீ புலகத்திற் சிறிதுபேர்கள்
பண்பான வயித்தியத்தைப் பார்த்துப்பார்த்து
காரேநீ மருந்துகளை செய்துக்கொண்டு
கனமான வியாதிக்குக் கொடுத்துப்பாரு
நாரேநீ நாளெட்டில் தீருமென்று
நம்பவே வியாதிகண்ட நோயாளிக்கு
வாரேநீ ஆசையாய் சொல்லுவார்கள்
வகையறியார் மூடர்கள்தான் வயித்தியோரே.

வைத்தியர்க்குப் புத்திகூறல்.

வயித்தியரே சொல்லுகிறே னுற்றுக்கேளும்
வகையாக மருந்துகளை பண்ணிக்கொண்டு

நயத்திலே வியாதிகள்தான் பிறந்தநேர்மை
நலங்கண்டு அந்தந்த மருந்துகண்டு
பயத்திலே கொடுத்தாக்கால் வியாதிபோகும்
பதறியே யொன்றைவிட்டு ஒன்றைத்தின்றால்
கயத்திலே அடிக்கிவிட்ட பாண்டம்வீழ்ந்து [சகுச
கடகடென்று உடைந்ததுபோ லாகும்பாரே.

மருந்துசாப்பிடும்போது பத்தியமும் தலைமுழுகு
ந்தைலமும் மருந்துசாப்பிடும் காலவளவும்.

உடையாமல் மண்டலங்கள் கொடுத்துவந்தா
லுத்தமனே திரேகத்தி லுள்ளேசென்று
தடையாமல் நோய்களிலே தொக்கிக்கொண்டு
தடையறவே யுடம்புமாந் தளிர்போலாகும்
கடையாமல் நல்லெண்ணெய் சேர்க்கலாகா
கடுமையாய் நிம்பெண்ணை சேர்க்கவேணும்
படையாமல் நறுந்தாளி கசக்கியூற்றப்
பதிலாக வெரியிடவே நெய்யுமாமே. சகுரு

நெய்யைத்தான் முழுகிவர வியாதிபோகும்
நேரான கற்பமிது நிசமதாகும்
பய்யவே சத்தியமா மிந்தவித்தை
பதறுமல் நோயெல்லா மிதமதாகும்
கையவே வயித்தியர்க ளறியவேணும்
கணக்கறிந்து மருந்துகளைக் கொடுக்கவேணும்
வையகத்தி லுனைப்போல கெட்டியுண்டோ
லலுவாக அய்முண்ணுத் தெரிடாயே. சகுசு

அயக்காந்த கற்பம்.

தேரிடவே அயகற்பஞ் சொல்லக்கேளு
சிறப்பாகக் கந்தமய மிடையேசேர்த்து
வாரிடவே திராவகத்தா லரைத்துப்போட்டு
வகையான கையாநீ ரரைத்துப்போட்டு
தாரிடவே யஞ்சுபுடம் போட்டுக்கொண்டு
தப்பாமல் நாலுபலம் நிறுத்துக்கொண்டு
பாரிடவே லிங்கபற்பம் பலமுமொன்று
பதிவான பூரபற்பம் பலமுமொன்றே. சகூஎ

ஷ சிந்தூரத்தால் திரும்பியாதிகள்.

ஒன்றுன மூலிப்பாலால் ஜாமமாட்டி
ஓகோகோ ரவிவைத்து காயப்போடு
இன்றுன மண்டலத்தில் நின்றுதேறு
நிறமான குட்டமெல்லாம் தீர்ந்துபோகும்
வன்றுன மேகமொடு வாதந்தீரும்
வலுவான கிரந்திமூதல் வெட்டைபோகும்
நன்றுன குல்மமொடு வலிப்பும்போகும்
நலமான வியாதியெல்லா நாடாதாமே. சகூஅ

கெந்தகசுத்தி.

நாடாது கெந்தகத்தின் சுத்திசொல்வேன்
நலமான நெல்லிக்காய் கெந்திவாங்கி
காடாது திராவகத்தா லரைத்துமைபோல்
கனமான டிங்கானில் வறுத்துப்போடு
பாடாது நீர்போக வெடுத்துக்கொண்டு
பக்குவமாய் சட்டிரண்டு வாங்கிக்கொண்டு

வாடாது சட்டியிலே தண்ணீரூற்றி
வகையாக வதன்பேரில் சீலகட்டே. சகூ
கட்டியே கெந்தகத்தை பரப்பிக்கொண்டு
கனமான மேற்சட்டி மேலேமூடி
நட்டியே மண்கவசம் செய்துக்கொண்டு
நலமாகக் குழியிலே சட்டிவைத்து
வட்டியே யதன்பேரிற் புடத்தைப்போடு
வகையாக மணிமணியா யிரங்கும்பாரு
மட்டியே நல்லசுத்தி யாகும்பாரு
மதியான கெந்தியம் விட்டுப்போமே. ரு00
சுத்தி கெந்தியில் செம்பும் கொறுக்குவெள்
ளியும் சேர்த்தவேதை.
விட்டுப்போம் தோஷங்கள் போகும்பாரு
விருப்பமாய் செம்புருக்கி யிடையேசய
கட்டுப்போ மிந்தமய மாகும்பாரு
கருணைபெற நாதாக்க ளாடுமாட்டு [ல்
தட்டுப்போம் கொறுக்குவெள்ளி யிடையேசேர்த்தா
சங்கமாம் சத்தியமாந் தாக்கிப்பாரு
கிட்டுமே வாதத்தி லாதியாகும்
கிளரவே லிங்கபற்பம் பலமுநாலே. ரு0க
சுத்தி கெந்தியில் லிங்கபஸ்பம் சேர்த்தவேதை.
காலான பற்பத்தை நிறுத்துக்கொண்டு
நாடியே சுத்திசெய்த கெந்தியொன்று
காலான உமிநெருப்பி லுருக்கிச்சேர்த்து
கடகவே செம்புருக்கி அதனில்தாக்கு

பாலான செம்புகட்டித் தங்கமாகும்
பருக்குமே நொறுக்குவெள்ளி யெட்டிலொன்று
வாலான ஏழரையா மாற்றுகாணும்
வளமான மண்டலந்தா னுண்டுதேறே. ரு02

கெந்திரசஞ் சேர்த்து சாப்பிடத் திரும்வியா
தியு மிதை நந்தியுபதேசித்ததும்.
தேறிடவே திசைவாயு வெல்லாம்போகும்
திரமாகக் குட்டமுதல் சூலைதிரும்
மாறிடவே யெலிகடிப்பு மீளபோகும்
மன்பான கூடயம்போகு மேகம்போகும்
பாறிடவே கிராணிமுதல் மூலவாயு
பறக்குமே யுதிரமொடு வாயுதிரும்
நாறிடவே மேகமெல்லாந் திருமென்று
நாடியே நந்திசொல்ல நான்கண்டேனே. ரு0ஈ

தாளகசுத்தியும் அதை சண்டரஸபஸ்பம்சே
ர்த்து சிந்தூரிக்கும் வழியும்.
நான்கண்டு தேறியே புலகத்தோர்க்கு
நலமாகப் பிழைக்கவே நாடிச்சொன்னேன்
கான்கண்டு தாளகத்தை கெந்திபோல
கனமாகச் செய்துமே வைத்துக்கொண்டு
பான்கண்டு தாளகத்துக் கெட்டுக்கொன்று
பதிவான சண்டரச பஸ்பஞ்சேர்த்து
வான்கண்டு அப்பிரேகத் தகட்டில்வைத்து
வளமாக வுருக்கிடவே சிகப்பதாமே. ரு0ச

தாளகாரச சிந்தூரத்தில் திரும்வியாதி.

சிகப்பதாம் சிந்தூரங் குன்றியுண்ணு
செங்கதிர்போல் மேனியாம் நோயேயில்லை
வகப்பதாம் கூடியமு மந்தாரகாசம்
வலிப்புள்ள காசமுத லெல்லாம்போகும்
தகப்பதா மிவையெல்லாம் பற்றிப்பாரு
தாக்கியே வயித்யத்தில் மிகவும்பூண்டு
உகப்பதாம் நீடூழி காலம்வாழ்வீ [ரு0ரு
ருண்மையா யிதையறிந்து செய்துக்கொள்ளே.

தங்கவெண்ணெய் வேதையு மிதை தேவிசொன்னதும்.

செய்துகொள்ளு லிங்கபற்பம் பலமுங்கால்தான்
சிறப்பான தங்கமொரு பலமுங்கால்தான்
நய்துகொள்ளு தங்கத்தில் ரசத்தையூற்றி
நலமாகத் தேய்த்திடவே தங்கவெண்ணெய்
கய்துகொள்ளு துணிதனிலே பிழிந்துக்கொண்டு
கனமான தங்கத்தை யெடுத்துக்கொண்டு
பய்துகொள்ளு லிங்கபற்ப மிடையேசேர்த்து [ரு0சு
பகராமல் பழச்சாற்று லரைத்துக்கொள்ளே.

அரைத்துமே யுருட்டியதை காயவைத்து
அன்பான வெலுமிச்சம் பழத்துள்வைத்து
கரைத்துமே புடமிட்டு எடுத்துக்கொண்டு
கனமான செம்புதனில் பத்துக்கொன்று
நரைத்துமே ஈந்திடவே யேழுகாணும்
தாக்கான நல்லமுரை முன்னேபாரு

பரைத்துமே பரைதானே சொன்னவித்தை
பாவித்தார் யூகிமுனி பண்புள்ளோரே. நு1எ

அயக்களங்கு வேதை.

பண்பாகச் செம்புக்குச் சாயமேற்ற
பரிவான தங்கமே யாவதற்குக்
கண்பாக அரப்பொடிதான் பலமோபத்து
கலரவே பழரசத்தி லூரவைத்து
தண்பாக ரவியிலே காயவைத்து
தரிப்பான கெந்தகமும் வீரங்கூட்டி
மண்பாக அயமிடைக்கி அடைக்கிக்கொண்டு [நு0அ
மறுவாக திராவகத்தா லரைத்துக்கொள்ளே.

அரைத்துமே தணலிட்டுப் புடத்தைப்போடு
அன்பாக வெடுக்கவே கரியாய்நிற்கும்
தரைத்துமே செம்பிரண்டு களங்குகாலு
தப்பாமற் கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
வரைத்துமே கறுப்பாக விருக்கும்பாரு
வண்மையா யெடுத்துமே அப்பால்வைத்து
பரைத்துமே வெள்ளியது பலந்தாகாலு
பரிவாகச் சேர்க்கவே பண்புபாரே. நு0கூ

அயக்களங்கு கவசகௌரிக் களங்குவேதை.

பண்பாக கவுரியென்ற பாஷாணத்தை
பலநிறுத்து திராவகத்திற் சுருக்குப்போடு
வண்பாக அயச்சட்டிக் குள்ளேவைத்து
வலுமையாய் ஜாமந்தான் சுருக்குத்தாக்கு

கண்பாக வெடுத்துதான் காரீயத்தில் [ளாம்
கணக்காகக் கொடுத்தாக்கால் நொறுங்கித்தூ
ரண்பாக வித்தூளை யிடையேதங்கம்
நலமாக வரிக்கியே கொடுத்திடாயே. ருகo
கொடுத்திடவே தூளாகுந் தங்கந்தானும்
குணமாகத் தூளத்தா னெடுத்துக்கொண்டு
வடுத்திடவே தூளிநிடை லிங்கபற்பம்
வண்மையாய் நிறுத்துமே கல்வத்திட்டு
படுத்திடவே திராவகத்தா லரைத்துவில்லை
பதிவான் ரவிதனிலே காயப்போடு
நடுத்திடவே அயக்குருவை யரைத்துமேலே
நலமாகக் கட்டியே புடத்தைப்போடே. ருகக
புடம்போடு காடையென்ற புடத்திற்போடு
புகழான குருவாகு மெடுத்துக்கொண்டு
நடம்போடு செம்புபத்து உருக்கிக்கொண்டு
நலமாகக் கொடுத்திடவே ஈயம்போல
வடம்பொட வூதியே பார்த்தாற்கேளு
வலுவான செம்புபத்து மாற்றுகாணும்
கடம்போடு தசூதணு மூர்த்திசொன்ன
கருத்தான நல்லவித்தை முன்னேபாரே. ருகஉ
தாளகக் களங்கு வேதையு மிதைபுலத்தியர்சொன்னதும்.
முன்னேபார் தாளகந்தான் பலமுமொன்று
முடிவாகச் சுண்ணும்பு படிதான்ரண்டு
கன்னேபார் சட்டியிலே போட்டமூத்தி
கனமான தாளகத்தை மேலேயிட்டு

வன்னைபா ரதன்பேரிற் சுன்னமிட்டு
வகையாக விருஜாம மெரித்தாற்கேளு
நன்னைபார் சிகப்பாக விருக்கும்பாரு
நலமான செம்புஇடை கொடுத்துவாங்கே. ருகஉ
வாங்கவே வெண்கலம்போ லுடைந்துபோகும்
வகையான தங்கத்தி லிடையேசய
தாங்கவே நொறுங்கியே புடைந்துபோகும்
தப்பாமற் தங்கவிடை நாகம்போடு
பாங்கவே யெட்டியே விழுங்கும்பாரு
பதிவாகத் தூளாக்கி யெடுத்துக்கொண்டு
வாங்குவே சண்டரச பஸ்பம்சேர்த்து [ருகச
வரைத்துமே திராவகத்தால் வில்லைகட்டே.
கட்டியே அயச்சிமிழில் புடத்தைப்போடு
கனமாகச் சிந்தூர மாகும்பாரு
தட்டியே செம்புக்கு மூப்பத்தொன்றில்
தாக்கிடவே தங்கமாந் தாழ்ச்சியில்லை
நட்டியே புலத்தியரு மெனக்குச்சொன்னார்
நயமான வித்தைதா நாடிப்பாரு
கொட்டியே வாதமெல்லாங் கொள்ளையாகும்
கோகோகோ வேங்காதே குணமாய்நில்லே.

சூயத்திற்குத் தாளகக் களங்கில் சேர்த்துக்
கொடுக்கச் சூர்ணம்.

நில்லவே சூயந்திர அணுபானங்கள்
நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் தூதுவேளை

கல்லவே தக்கோலஞ் சாதிக்காயுங்
கனமான வாலுளுவை வித்திலேடு
தல்லவே கொடிவேலி கொண்ணைப்பூவுந்
தண்மையாய் நிலப்பனையின் கிழங்குங்கூட்டி
வல்லவே வகைக்கொன்று பலமிடித்து [ருகசு
வகையாகத் தூளாகப் பண்ணிக்கொள்வே.
பண்ணியே முக்கழஞ்சி யெடுத்துவைத்து
பண்பாக நறுநெய்யிற் குழைத்துஉண்ண
நண்ணியே கூதயகாச மோடிப்போகும்
நலமான விருமலொடு நாடாதோடும்
பண்ணியே பத்தியமா யுண்டுதேறு
பாலித்தார் யூகிமுனிப் பண்புமாமே. ருகள

குருமூதலியதில் தங்கஞ்சேர்ப்பதி லாகும்பலன்.

பண்பாக குருவிலே தங்கஞ்சேர்த்தால்
பதிவான தங்கமாம் பின்னேவேண்டாம்
கண்பாக மட்டத்திற் பொன்னைச்சேர்த்தால்
கனமான மட்டமாந் தங்கம்வேணும்
முண்பாக முன்னேதான் தங்கஞ்சேர்த்தால்
முத்திரொம்ப உண்டாகு மோசமில்லே
வண்பாக வித்தில்லாச் சாம்ப்ரதாயம்
வலுவான வெலும்பைநாய் கடித்தவாறே.ருகஅ

தங்கஞ் சேர்ப்பதற் குவமையிட்டுக்கூறல்.

கடித்திடவே நாயினுட பல்லில்தானுங்
கனமான ரத்தந்தா னுக்கிற்தட்டி

படித்திடவே யெலும்பில்நின்று வாராப்போலே
பலம்பெறவே யிருக்குமது நாய்க்குத்தானுங்
கடித்திடவே தங்கமெலாம் வாதிதானுங்
கண்மையாய் நாயொக்கும் மூட்டாள்வாதம்
நடித்திடவே வாதிகளே யிந்தப்போக்கு
நலமறியார் தங்கத்தைக் காணார்தானே. ருகசு

தங்களுசேராமல் மட்டம்பழுக்காது.

காணுமல் மட்டத்தைப் பண்ணிப்பண்ணி
கலங்கியே தங்கத்தைச் சேர்க்காமல்தான்
பூணுகப் பழுக்குமென்று நினைத்துநித்தம்
புத்தியிலே யோசனைகள் மிகவும்பண்ணித்
தாணுக வொருநாளும் பழுக்காதப்பா
தாய்சேர்த்தால் நல்லதாம் பழுக்கும்தங்கம்
வாணுலே வாங்கியே திரிவார்வாதி
வகைகெட்ட வாதிக்குச் சொல்லிடாயே. ருஉ0

தங்கங் கிடையாவிட்டால் தங்கமுமயமு மொன்
முதலால் அயக்காந்தசண்டாரசுந்தூரஞ்செ
ய்து சேர்த்துவதையாடு இதை தெர
ருபதேசித்தார்.

சொல்லிடவே அயநீரும் தங்கநீரும்
சொற்பெரிய யிவ்விரண்டு மொன்றதாகும்
நல்லிடவே தங்கமது கிடையாவிட்டால்
நலமாக அயக்காந்த மிரண்டுஞ்சேர்த்து
வல்லிடவே யிடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு
வலுவாகப் பச்சையா யரைத்துக்கொண்டு

கல்லிடவே திராவகத்தா லரைத்துமைபோல்
கனமாக நாலுபுடம் போட்டுக்கொள்ளே. ௫௨௧

போடவே சிவந்துமே தானிருக்கும்
போக்கோடே சண்டரச பற்பஞ்சேர்த்துக்
காடவே யிடைசமனாய்ச் சேர்த்துக்கொண்டு
கலரவே திராவகத்தால் ஜாமமாட்டி
ஆடவே யுமிநெருப்பில் வறுத்துப்போடு
அழகான காசியென்ற மேருக்கேற்றி
பாடவே பனிரண்டு ஜாமந்தீத்தான் [௫௨௨
பக்குவமா யெரிந்தபின் னுடைத்துவாங்கே.

வாங்கியே முருக்கம்பூப் போலேயாகும்
வளமான செம்புதனிற் பத்துக்கொன்று
தாங்கியே கொடுத்திடவே யெட்டுமாற்று
தப்பாமல் தேரர்தா னாடுமாட்டு
வாங்கியே குன்றியிடை கொண்டானாகில்
வடிவான குட்டவெடி கற்பஞ்சூலை
பாங்கியே விஷபாண்டு குன்மந்தீரும்
படித்துறைத்த வாதமெண் பதுவும்போமே.

வைத்யர் பொருள்சம்பாதிக்க.

போகுமே வைத்யர்க் கர்த்தலாபம்
போக்கோடே சொல்லுகிறே னுற்றுக்கேளு
வாகுமே பூரமொன்று வீரமொன்று
வடிவாக கெந்திசமன் சேர்த்துருக்க

வாகுமே கறுப்பாக விருக்கும்பாரு
வண்மையாய்க் குன்றிதான் கொடுத்தாற்கேளு
தாகுமே குட்டமுதல் சர்வவியாதி
தண்மையா யடியஞ்சு மாதந்தானே. நூஉச

மாதந்தான் சென்றபின்பு வந்துகூடி
வருத்தமிகப் படுத்தயிலே வியாதிக்காரன்
காலைத்தா னுண்ணியவன் பிடித்துக்கொள்வான்
கட்டாய மாகவே பணமுங்கேட்டு
நாதந்தான் கண்டிப்பாய் வாங்கிக்கொள்ளு
நாடியே யுனக்குவரும் லாபம்பாரு
வாதந்தான் சிவதவங்கள் பண்ணிவாதம்
வகையாகப் பார்த்துமே நிலைக்கச்செய்யே.

திமிர்குட்டத்திற்கு சண்டாரஸ பஸ்பத்துடன்
சேர்க்க விழுதிப்பட்டை சூர்ணம்.

செய்யவே திமிர்குட்டம் போகவேதான்
சிறப்பாக விழுதியுட பட்டைசீவி
கய்யவே தினமும்வெறு கடிதான்வீதந்
கணக்காகப் பட்டைதூள் சீவிக்கொண்டு
மெய்யவே வெறுகடிதான் கொண்டபோது
மேன்மையாம் வெந்நீருங் குடித்துவாநீ
பய்யவே பத்தியங்க ளில்லையப்பா
பதிவான திமிர்குட்டம் போகுந்தானே

சிலேஷ்மகுட்டத்திற்குச் சேங்கொட்டை ஆறுபானம்.

போகுமே சிலேஷ்மகுட் டங்கள்தீர
போக்கோடே நான்நாளும் பயறுபோல

வாகுமே மண்டலத்திற் கொள்ளும்போது
வனப்பான சேத்மமெல் லாமும்போகும்
நாகுமே பத்தியங்க ளில்லையப்பா
நலமாகக் கண்டறிந்து திண்ணுத்தேறு
பாகுமே சேங்கொட்டை கொள்ளத்திரும்
பதிவான மார்க்கமிது பண்புதானே. குஉள

பித்தகுட்டத்திற்கு வாலுளுவை யரிசியநுபானம்.

பண்பான பித்தகுட்டங் தீரவேண்டி
பகரவே வாலுளுவை பச்சையாக
திண்பாகக் கொள்ளவெறு கடியுந்தானுஞ்
சிறப்பாகப் பத்தியங்க ளில்லைபாரு
வண்பாகப் பெண்ணுசை விட்டுத்தேறு
வலுவான கடைமருந்தின் வனைக்கமெத்த
உன்பாக யூகிமுனி பார்த்தறிந்து
உண்மையாய் செய்துகொள்வீ ருலகத்தோரே.

வாதகுட்டத்திற்கு யுழலாற்றிப்பட்டையிலநுபானம்.

உலகத்தோர் வாதகுட்டங் தீரவேண்டி
யுண்மையா யுழலாற்றிப் பட்டைதானும்
நலகத்தோர் மண்டலங்கள் வெறுகடித்தான்
நாடாது வாதகுட்டம் நசிந்துபோகும்
கலகத்த பத்தியங்க ளில்லையப்பா
கனமான கூட்டங்கள் காணுதோடும்
பலகத்த யூகிமுனி சொன்னநேர்மை
பத்தியாய்க் கண்டறிந்து சித்திபாரே. குஉக

பித்த சிலேஷ்ப குட்டத்திற்கு சிவனூர்வேம்பி லநுபானம்.

சித்திபார் பித்தசிலேத் மத்தின்குட்டம்
சிதறியே திரவே சொல்லக்கேளு
முத்திபார் சிவனுடைய வேம்பின்பட்டை
முடிகியே மண்டலங்கள் வெறுகடித்தான்
பத்தியாய்க் கொண்டிடவே குட்டந்தீரும்
பதிவான யூகிமுனி பார்த்துத்தேறி
நத்தியாம் பத்தியங்கள் வைக்கவேண்டாம்
நலமறிந்து கொடுகுட்டந் தீரும்பாரே. ருங0

வாதகுட்டத்திற்கு பூவரசன்பட்டையி லநுபானமும்
பதினெட்டு குட்டதற்பத்து தீருமென்பதும்.

தீருமே வாதகுட் டங்கள்தீருஞ்
சிறப்பாக பூவரசன் பட்டைதன்னை
வாருமே தூளாக்கி வெறுகடித்தான்
வன்பான குட்டங்க ளெல்லாம்போகும்
வாருமே பத்தியங்க ளில்லையப்பா
வளமான கைமுறையாய்க் கொடுத்துத்தேறு
பாருமே பதினெட்டுக் குட்டத்துக்கு
பண்பான பத்துகுட்டந் தீருந்தானே. ருஙக

சண்டரச பல்பத்தை முன்னநுபாகங்களில்
கொடுக்கக் குஷ்டம் பத்தும்தீரும்.

தீருமே யெட்டதுவுந் திராதப்பா
திரமான சண்டரச பற்பஞ்சேர்த்து
வாருமே யிப்படியே கொடுக்கும்போது
வன்பான குட்டங்க ளெல்லாம்போகும்

தாருமே பத்தியங்க ளில்லையப்பா
தண்மையாய்க் குறிகுணங்கள் பார்த்துத்தெளி
வாருமே குட்டத்துக் கிதுவேயாதி
வலுவாவை குணத்தினுட வரிசைபாரே. குஉ

நீரிழிவுக்கு அத்திப்பழக் கியாழம்.

வரிசைபார் லிங்கத்தில் ஜலங்கள்மிஞ்சி
வலுவாகச் சாய்த்தாக்காற் சொல்லக்கேளு
தரிசைபா ரத்தியுட பழத்தைவாங்கித்
தரிப்பாக வாய்ந்துமே வெந்நீரிற்றூன்
கரிசைபார் காற்படியின் வீதங்கொள்ளு
கனமான உப்புபிளி யாகாதப்பா
நரிசைபார் மண்டலத்திற் சித்தியாகும்
நலமான புண்கிரந்தி வெட்டைபோமே. குஉ.

தாதுபுஷ்டி கிருதம்.

வெட்டைபோ மிந்திரிய மில்லாதார்க்கு
விருப்பமாய் நல்லெண்ணெய் படியுங்காலும்
தட்டைபோம் பசும்பாலு மூடனேசேர்த்து
தப்பாம லுண்டிடவே தானேயுண்டாம்
பட்டைபோம் படிக்கையிலே யெள்ளெடுத்து
பண்பாக கைக்கடங்கத் தின்றுவாநீ
வட்டையா மிந்திரியம் புஷ்டியுண்டாம்
வலுவாக விந்திரிய மிகவுண்டாமே. குஊ

ஷி கிருத முரைத்த பரம்பரை.

உண்டாகச் சிவன்சொல்லி தேவிகேட்க
உற்றுமே நந்திதான் கேட்டுக்கொண்டு

பண்டாக நந்திதா னசுவனிக்கு
பதையாமல் விசுவனியுங் கேட்டுக்கொண்டு
வண்டாக தம்மந்திரிக்குச்சொல்ல
வகையாக தம்மந்திரி கேட்டுத்தேறி
பண்டாக அகஸ்தியர்க்குச் சொல்லவேதான்
பதிவாக புலத்தியர்க்குச் சொன்னார்தானே.
தானேதா னங்கிருந்து புலத்தியர்க்கு
தனியான புலத்தியரும் தேரருக்கு
கானேதா னன்பாக விம்மருந்தை
கனிவான தேரருமே பார்த்துக்கொண்டு
வானேதான் யூகிமுனிக் கரிக்கைசொல்ல
வகையாக யூகிமுனி உலகத்தோர்க்கு
கானேதான் கைபாக வரிசைசொல்லி
காரணமா யிம்மருந்து சொன்னார்தானே.
அயக்களங்குசெய்து சுத்தெடுக்க.
சொன்னேதா ரின்னமொரு களங்குசொல்வேன்
சொற்பெரிய வாதிகளே யுற்றுக்கேளும்
நன்னையமா யயமதுதான் பலமும்பத்து
நலமான செம்பதுதான் பலமும்பத்து
பின்னமில்லாமலே மூசைதன்னில்
பிரபலமா யிவ்விரண்டு முருக்கிச்சேரும்
கன்னயமாய் கல்வத்தி லிட்டுடைத்து [நூல
கருத்தாக கெந்தியது இடைசேர்ப்பீரே.
சேர்த்துமே யெலுமிச்சம் பழச்சாற்றுலே
செப்பமா யிருஜாம மரைத்துவில்லே

பார்த்துமே ரவியிட்டுக் காயவைத்து
பதமாகக் கிளிஞ்சியென்ற சுன்னத்தாலே
வார்த்துமே கவசமது பண்ணிப்பின்பு
வகையாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
சார்த்துமே யெடுத்துப்பார் கரிபோற்காணும்
சரியாக மூசைதனி லுருக்கிடாயே. ருகூஅ

உருக்கிடவே ஈயம்போற் சத்துமாகும்
உண்மையாய்ச் சத்தெடுத்துச் சொல்லக்கேளு
நருக்கிடவே சத்திடைவெங் காரங்கூட்டி
நலமாகச் செவ்வல்லிப் பூச்சார்விட்டு
கருக்கிடவே பிருஜாம மரைத்துக்கொண்டு
கருணைபெற ரவிதனிலே காயவைத்து
பருக்கிடவே குகையிலிட் டுருக்கித்தீரு
பதிவாக வெடுத்திடவே சத்துமாமே. ருகூசு

சத்துமாம் சத்தினிடை வெங்காரஞ்சேர்
சரியாக வரைத்திட்டு பூச்சாற்றுலே
பத்துமாம் நால்ஜாம மரைத்துக்கொண்டு
பருவமா யழலிட்டு உருக்கித்தீரு
சித்துமா மிப்படியே அஞ்சுதானும்
சிறப்பாகக் குகையிலிட் டுருக்கித்தீரு
நத்துமே கசடுதான் விலகிப்போகும்
நலமாக வயக்கசடு விலகிப்போமே. ருசo

அயச்சத்தில் நின்றசெம்பைப் பிரித்து வேதையாட.

விலகுமே அயம்விலகிச் சத்தாய்நிற்கும்
விருப்பமாய் சத்தைதான் சொல்லப்போகா

கலகுமே சத்தில்நின்ற செம்பெடுக்க
நாட்டுகிறே னிக்காண்டந் தன்னில்தானும்
பலகுமே சத்தில்நின்ற நிறைக்குத்தானும்
பதிவாகப் பச்சையயப் பொடியுங்காலு
கலகுமே வெங்கார மிடையேசேர்த்து
காரணமாய்ச் செவ்வல்லிப் பூச்சாறுட்டே. நிசக
ஆட்டியே விலகட்டி புடத்தைப்போடு
அன்பாக மூசைதனி லிட்டிருக்க
கூட்டியே செம்பாகு மெடுத்துளது
குழுறவே தங்கமதை யிடையேசேர்த்து
வாட்டியே மேலூத்தா யூதிப்போடு
வடிவாகத் தங்கமது செம்புமாகும்
நீட்டியே செம்பெடுத்து மதியிலெட்டு
நிலவரமாய்ச் சேர்த்திட்டு ஊதிப்போடே. நிசக

அயச்சத்து சிந்தூரமு மதன்வேதையும்.

ஊதியே யெடுத்துப்பா ரேழுமாற்று
உத்தமா நிலைநிற்கும் பொன்னேவிற்று
சேதியாய்ச் சிந்தூரம் பண்ணக்கேளு
சிறப்பாக அயமதுதான் பலமேகாலு
வாதியாய்த் தங்கமொன்று நாகமொன்று
வடிவாகச் சேர்த்துமே கல்வத்திட்டுக்
காதியாய் ரசகெந்தி யிடையேசேர்த்து
கருத்தாகப் பொற்றலையின் சாற்றூலாட்டே.

ஆட்டியே யுமிநெருப்பில் வறுத்துப்போடு
அன்பாக காசியென்ற மேருபோடு
நீட்டியே பனிரண்டு ஜாமந்தித்தான்
நிலவரமா யெரித்திட்டு உடைத்துப்பாரு
கூட்டியே சிந்தூர மூருக்கம்பூப்போல்
குனிவான நவலோக நூற்றுக்கொன்று
தேட்டியே யிட்டிடமே மாற்றுபத்துச்
சிறப்பாக மண்டலந்தா னுண்டுதேறே. (சச

அயச்சத்துச் சிந்தூரத்தில் தீரும்வியாதி.

தேறவே மண்டலத்திற் காயசித்தி
திறமாகக் கற்றாணைப் போலேமேனி
ஆறவே பசுநரம்பு சிவந்துகா னூ
மதிகமாங் காயசித்தி கூடினத்திலாகும்
காற்றவே நோயெல்லாந் தவடேயாகும்
காரணமாஞ் செவ்வலரிக் கண்களாகும்
தாறவே சாவில்லை திரேகந்தானும்
தடையறவே யெல்லாமுஞ் சித்தியாமே. (சரு

ஞானயோகம்.

சித்தியாய் ஞானத்தைப் பார்த்துத்தேறு
சிறப்பாக வாசியைநீ கட்டிக்கொள்ளு
முத்தியாஞ் சுழுமுனையை நாடிக்கொள்ளு
முதன்மையாய் வழியில்நில்லு சுழியைப்பாரு
கத்தியாய்-திரேகத்தை சுத்தியாக்கு
காரணமாய் நினவழிந்து கொர்விக்காதே

பத்தியாய் வறுமைபோ லிருந்துபாரு
பக்குவமாய் வாதசித்தி பண்ணுவாயே. நுசசு
துரிசுச்சுன்னஞ் செய்வதின் மகிமை.
பண்ணுவாய் துரிசதுவே நீறச்சொல்வேன்
பதையாமல் வைத்துமே சரக்கைநீற்றி
உண்ணுவாய் சரக்கெல்லாங் கட்டியாடு
பூறுதியாய்ச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
விண்ணுவா யொருநொடியில் நீறிப்போகும்
விருப்பமாய் மலநீறு மிந்தப்போக்கு
எண்ணுவாய் பாகமாய்ச் செய்துக்கொள்ளு
எவ்வித பாஷாணங்க ளெல்லா நீறே. நுசள
நீறேது துரிசுடை சுன்னந்தன்னை
நிலையாக விக்காண்டந் தன்னிற்சொன்னேனன்
பாறேது பின்காண்டங் களங்குசொன்னேனன்
பத்தியமாய்ச்சோதித்துப் பார்த்தால்தோணும்
வாறேது பாகத்தை விட்டுப்போட்டு
வகையில்லை யென்றுக்கா லென்னசெய்வேன்
நூறேது நூல்தனிலே நுழைந்துப்பாரு
நுட்பமா யெல்லாமும் வெளியாய்ப்போமே.
வெளியாகுந் துரிசுடை சுன்னம்வைத்து
விருப்பமாய் சரக்கெல்லாங் கட்டியாடு
பளியாகச் சொல்லாதே நினைவாய்ப்பாரு
பதைத்துமே திரியாமற் பாகமாக
துளிபாய்ந்த கதைபோல துரிசைப்பாரு
தொட்டிட மெல்லாம்பூர்க்குந் துடிப்புமெத்த

வளியாகுஞ் செவ்வையாய் பாதையாகும்
வகுத்தாக்காற் சித்தியாம் வடிவுமாமே. குசகு
தருசுச்சுன்னத்திற்கு வங்கப்பொரி.
வடிவாக துரிசினுட சுன்னஞ்சொல்வேன்
வகையாக வங்கமது பலமோபத்து
திடிவாக எள்ளுப் புண்ணுக்கினுள்ளே
துப்பறவாய் வங்கமென்ற தகட்டைவைத்து
கடிதாக மேல்மூடி சீலைசெய்து
கனிவாக கஜபுடத்திற் போட்டுவாங்கு
படிவாக ஆறவிட் டெடுத்துப்பாரு
பதியவே வெண்மைபோல் பொரித்துபோடே.

வெடியுப்புச்சுன்னம்.

பொரிந்ததைதான் பலம்பத்து நிறுத்துவைத்து
போக்கோடே நால்காச்ச லுப்புக்கேளு
அரிந்தபின் பஞ்சுபத்து பலநிறுத்து
அடைவான சீனமது பத்திரண்டு
வரிந்தபின்பு நிறுத்துமே கல்வத்திட்டு
வகையாகப் பழச்சாற்றி லரைத்துக்கொண்டு
உரிந்தபின்பு புதுச்சட்டி யடுப்பில்வைத்து
உற்பனமா யரைத்ததொரு குழம்பைப்போ
[டே. குருக

அண்டோடு சுத்திசுன்னம்.

போட்டுமே யெரியிடவே பற்றும்பாரு
போக்கோடே கடுமையா யெரித்துப்பின்பு

காட்டுமே யுலர்ந்தபத முருகச்சுன்னம்
கடுமையாய் கத்தியால் வழித்துவாங்கி
தாட்டுமே பீங்கானி லிட்டுப்பின்பு
தடையறவே சொல்லுகிறேன் பின்புதானும்
வாட்டுமே அண்டோடு பலமும்பத்து
வகையான சட்டிபிடி சொல்லக்கேளே. ருருஉ

சொல்லவே யுவர்மண்ணும் சுண்ணும்புந்தான்
சுருதியாய்க் கரைத்துமே யடுப்பிலேற்றி
நல்லவே யொருஜாம மெரித்துவாங்க
நலமான வண்டோடு எண்ணெய்வாங்கி
வல்லவே யிருக்குமச் சேட்டைதானும்
வடிவான சுன்னந்தான் வைக்கக்கேளு
கல்லவே பத்தண்ட முழுசாவாங்கிக்
கனிவாக வுவர்மண்ணி லவித்திடாயே. ருருஊ

அவித்துமே யுள்ளேதா வண்டங்கட்டு
மடைவாக வெண்கருவு பிட்டெடுத்து
கவித்துமே சுத்திபண வோட்டிற்போட்டு
கடுகவே யரைத்ததனை வில்லையாக்கி
நவித்துமே கரியில்வைத்து கடுரமாக
நலமாக வூதியே யெடுத்துக்கேளு
வவித்துமே மறுபடியும் சேர்த்தரைத்து
வகையாகக் கடுரமா யூதுவாயே. ருருச

அண்டச்சுன்னத்துடன் மூன் வெடியுப்புச் சேர்த்துச் சுன்னம்.

ஊதியே யிப்படிக்கி பைந்துதானு
முண்மையா யெடுத்துமே கல்வத்திட்டு

வாதியே முன்னம் வெடியுப்புச்சுன்னம்
வகையாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
சாதியே யண்டசுனம் பலமும்பத்து
சரியாக விடைசமனுய் நிறுத்துக்கல்வ
மோதியே வெண்கருவா லரைத்துவில்லை
முக்கியமாய் ரவிபடவே காயவையே. ருருரு

அண்டவெடியுப்புச் சுன்னத்துடன் சேர்ந்த வங்கச்சுன்னம்.

காயவை கரிதனிலே யூதிப்போடு
கடுஞ்சுன்ன மாகுமே வெடிசுன்னம்தான்
தாயகமாய் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
தடையறவே பொரிவங்கச் சுன்னநேரே
வாயகமா யரைத்துமே வில்லைகட்டி
வளமாக ரவிவைத்துக் காயப்போட்டு
மாயவே கரியில்வைத் தூதிப்போடு
மயமாகும் வங்கமென்ற சுன்னந்தானே. ருருசு

மேற்படி வங்கச்சுன்ன மகிமை.

சுன்னமென்ரு லெளிதல்ல வங்கச்சுன்னம்
சருக்குமெத்த கடுங்காரச் சுன்னமாச்சு
கன்னமென்ற திறவுகோ லாச்சுப்பாரு
கனிவான சுன்னந்தான் கடுமைமெத்த
பின்னமில் லாமலே பிருக்கும்பாரு
பிசகில்லாச் சுன்னமாம் வலுமையுண்டு
இன்னிலத்திற் சுன்னமென்ற தெல்லாத்துக்கு
மிடும்பாகும் வங்கமென்ற சுன்னந்தானே.ருருள

வங்கமாஞ் சுன்னத்தின் மார்க்கந்தன்னை
வடிவாக நாவினுற் சொல்லப்போகா
தங்கமாம் பிரமாவுக் கொப்பதாகும்
துடியாக ஆட்டினுல் துரிசுசாகும்
பங்கமில் லாமலே சரக்குகட்டும்
பதிவான ரசங்கட்டும் பதிவுமாகும்
சங்கவரை யெட்டியே யோடும்பாரு
தடையில்லா வங்கத்தி னீறுதானே. ருருஅ

மேற்படி வங்கச்சுன்ன ரசபஸ்பங்களால் தருசுச்
சுன்னமும் வேதையும்.

நீருள வங்கத்தி னீறுபத்து
நிலையான ரசபதங்கம் பலமும்பத்து
ஆருக யிதுரண்டு மரைக்கக்கேளு
அப்பனே பனிரண்டு ஜாமந்தானும்
வாருக வரைத்துமே துரிசுக்கப்பி
வகையாகப் புடம்போடத் துரிசுநீறும்
பாருகத் துரிசுனுட சுன்னந்தொட்டு
பாச்சலா மொருகோடி வேதையாமே. ருருக

தருசுச்சுன்னத்தால் விராலியிலை ரசம் பிழிந்து ரசாஞனி
கட்டு வங்கச்சுன்னம் அகஸ்தியர்வைத்தமுறை.

வேதையாம் விராலியிலைக் கிட்டுமைந்தா
விருப்பமாய்ப் பிழிந்திடவே சாறுவந்து
பாதையாய்ப் பெருகியே சூதந்தானும்
பதிவாகக் கட்டியே மணியுமாகும்

வாதையாய்ப் படவேண்டா மகத்தியர்தான்
வச்சதோர் வங்கமென்று சொன்னர்பாரு
போதையா யிப்பாகம் பார்த்துக்கொண்டு
பிரபலமாய்ச் செய்துமே வாழ்ந்திடாயே. நுசுo

வங்கச்சுன்னத்தால் துரிசுநீற்று ரசமணிகட்டப் பொன்னாகும்.

வாழவே வங்கத்தைச் சுன்னம்பண்ணி
வகையான துரிசின்மேற் கட்டிநீற்றி
பாழாகப் போகாமல் சுன்னம்பாரு
பார்த்துமே துரிசின்மேற் கட்டிநீற்றி
தாழாகத் தாள்பூட்டு யிந்தமார்க்கம்
தாட்டிகமாய் வைத்ததொரு நீலநீறுல்
வாழாகச் சூதத்தைக் கட்டியாடு
வடிவாகச் சூதந்தான் பொன்னும்பாரே. நுசுக

கல்லுப்புக் கட்டுச்சொல்லுகிறே னிதை யிக்காண்ட
த்தும் பின்காண்—த்து மொத்துப்பார்த்துச்
செய்ய வறுமைநீங்கும்.

பொன்னாக வின்னமோ ருப்புக்கட்டு
பிரபலமாய்ச் சொல்லுகிறேன் பிசகில்லாமல்
நன்னாகப் பின்காண்டங் தனிலேசொல்ல
நன்மையா யிதுவதுவு மொத்துப்பார்த்து
முன்னமே கைபாக மாகச்செய்து [ள்ளு
முக்கியமாய் வறுமையைத்தான் போக்கிக்கொ
கன்னல்போல் கல்லுப்பை மூக்திபார்த்தால்
கருவான பொன்னாகும் கண்டுபாரே. நுசுஉ

கல்லுப்பைக்கட்டி ரசபஸ்பஞ்சேர்த்து சிந்தூரி
த்துச் சாப்பிட்டு வேதையாடு.

கண்டுபா ருப்பைமுன் கட்டிக்கொள்ளு
கனிவாகப் பின்னூத பற்பஞ்சேரு
உண்டுபார் சிந்தூரம் பண்ணித்தின்னு
உத்தமனே யுகாந்தவரை யிருக்குமேனி
துண்டுபார் நவலோகம் பழுக்கும்பாரு
தொல்லுலகில் வாதமது ஏவல்கேட்கு
முண்டுபா ருப்பைவிட்டு வாதம்பார்த்தால்
முனிவாக வொன்றுமில்லை சிவன்சொன்னாரே.

கல்லுப்புக்கட்டி வேதையாடச் சொன்னபரம்பரை.

சிவன்தானுங் கல்லுப்பைக் கட்டச்சொன்னார்
சிறப்பான அம்மையுமே உப்புச்சொன்னாள்
தவமான நந்தியெண் ணூயிரத்தில்
தர்க்கமிட்டுப்பையே தனித்துச்சென்றார்
கவந்தானு மசுவனியாங் தேவர்தானும்
கடினமாய் சாஸ்திரத்தி லுப்பைச்சொன்னார்
புவமாகத் தன்மந்திரி கிரந்தன்னில்
பதிவான வுப்பிலுட பெருமைசொன்னார். நூசு
சொன்னதொரு அகஸ்தியர்தான் பத்துலகும்
சுயமான சாஸ்திரத்தி லுப்பைச்சொன்னார்
கன்னதொரு புலந்தியரப் படியேசொன்னார்
கருணைபெற தேரருமே உப்புசொன்னார்

விண்ண மில்லாமலே யூகிதானும்
விருப்பமாய் வாதம்ரண்டு காண்டந்தன்னில்
நன்னயமாய் கல்லுப்பின் பாகம்சொன்னேன்
நலமாகப் பாகத்தின் வரிசைகேளே. நுசுநு

கல்லுப்புக்கட்டு.

பாகமாய் கல்லுப்புப் பாறைதன்னை
பதியவே விளாங்காய்ப்போ லுடைத்துநீயும்
நாகமாய் சுக்காநீர் படியுமைந்து
நன்மையா யதிலிட்டு நடுவில்வைத்து
தாகமாய் சட்டியைத்தான் கவிழ்த்துமூடி
தடையறவே யிருஜாம மெரித்துவாங்க
போகமா யுப்புநீர் கசிவுபோகும்
புத்தியா யெடுத்துமே சொல்லக்கேளே. நுசுசு

முன்கல்லுப்புக் கசிவற்றபின் சீனச்சுன்னஞ்
செய்து சேர்த்திருக்க.

சொல்லவே சீனமது பலமும்பத்து
சுயமாகப் பொரித்துமே புளிப்புவாங்கி
மெல்லவே கசிவற்ற வுப்புநேரே
மேன்மையா யிடைசமனுப்ச் சேர்த்துதானும்
கல்லவே பழச்சாறு கொஞ்சமிட்டு
கனிவாக வரைத்துமே கலையத்துள்ளே
நல்லவே வுருக்கிடுநீ யுருகும்பாரு
நலமாக வுப்பினுட தெறிப்புப்போச்சே. நுசுஎ

கல்லுப்புச் சீனக்கட்டை செங்கல்துள்சேர்த்து
ரசபதங்கத்திற்கு மூட.

தெரிப்படங்கி யுப்பதுவு மூருகிநிற்கும்
திறமான நிறமதுதான் சொல்லக்கேளு
வரிப்படங்கி மஞ்சள்போல் நிறமுமாகு
மகத்தான வுப்பைத்தா னெடுத்துப்பாரு
நரிப்படங்கி பலம்பத்து நிறுத்துக்கொள்ளு
நலமாக வின்னமொரு பற்பங்கேளு
உரிப்படங்கி கல்லுப்புப் படியுநாலு
உண்மையாய்ச் செங்கல்லுப் படியுமொன்றே.

இரசபதங்கம்.

ஒன்றுக வரலிலிட் டிடித்துக்கொண்டு [து
உண்மையாய்ச் சட்டிரண்டு பொருந்தப்பார்த்
தன்றுக வுப்பைத்தான் சட்டியிட்டு
நலமாக வழுத்தியே நடுவில்தானும்
கன்றுகப் பள்ளமது பண்ணிக்கொண்டு
கனிவாகப் பள்ளத்திற் சூதந்தன்னை
வின்றுனை பலநாலு நிறுத்துவிட்டு
விருப்பமாய் மேல்சட்டி மூடிப்போடே. (நூசுக

கல்லுப்புக் கட்டும் ரசபஸ்பமும் சேர்த்தமடக்கு.

மூடியே சீலமண் ணேழுசெய்து
முக்கியமாய்ப் பனிரண்டு ஜாமந்தித்தான்
ஆடியே யெரித்திடவே பதங்கமேறு
மம்மம்மா பதங்கத்தின் பெருமைதன்னை

காடியே வாக்கினல் சொல்லப்போமோ
நலமான பதங்கத்தை வழித்துக்கொண்டு
காடியே முன்னுருக்கு உப்புநேரே
கனிவாக விடைசமனுய்ச் சேர்த்துக்கொள்ளே.
சேர்த்துமே பொடித்துமே சட்டியிட்டு
சிறப்பாக மேல்மூடி சீலைசெய்து
கார்த்துமே முன்போல வெரித்துத்திரு
கனிவாகக் கொஞ்சமா யேறும்பாரு
பார்த்துமே யிப்படியே யேறவேற
பதிவாக மூடியே யெரித்துப்போடு
கார்த்துமே சூதமது வுப்பிற்சேர்ந்து
நலமாகத் தவளம்போ லிருக்கும்பாரே. ருளக

கல்லுப்புக்கட்டு ரசபஸ்பமட்க்கை யுரிக்கி ம
ணியாக்கி வேதையாட.

தவளமா முப்பைநீ யுருக்கிப்பாரு
தந்தம்போ லுருகியே நிற்கும்நிற்கும்
துவளமாஞ் சூதத்தின் மணியேயாகும்
சுப்ரமாய் கல்லுப்பு மணியேயாகும்
உவளமாஞ் செம்புருக்கி நூற்றொன்றிட்டா
லுண்மையாய் மாத்ததுவும் பத்துமாகும்
கவளமாஞ் சிவமென்ற சொத்துஅப்பா
கனகமது உப்பாலு லாகும்பாரே. ருளஉ

உப்பாற் சகலமுமாகும் உப்பைவிட்டால் சகலமும்போகும்.

உப்பினல் சூதத்தைக் கட்டியாடு
ஓமென்ற வெழுத்துமே வுப்பிலாச்சு

உப்பினுல் ருசியாச்சு உணர்வுமாச்சு
உருசையா மூப்பைவிட்டா லெல்லாம்போச்சு
உப்பினுற் காலுக்கு உறுதியாச்சு
உப்பைவிட்டா லெல்லாமும் பாழாப்போச்சு
உப்பினு விரதமது கட்டியாடு [ச்சே. ருளஙூ
மூண்மையெலா மூப்பைவிட்டா லெல்லாம்போ
ஜடம் நிற்கவேண்டுமானுல் கல்லுப்புக்கட்டி சாப்பிடு
கல்லுப்புக்கட்டால் வாதஞ்சித்திக்கும்.
போச்சென்று எண்ணுதே கல்லுப்பைத்தான்
பேணியே பிரண்டுருண்டு பேணிப்பாரு
மூச்சென்று ஜடலமது நிற்கவென்றுல்
மூனியான கல்லுப்பைக் கட்டித்தின்னு
வாச்சென்று ஜடலந்தா னுகர்ந்துநிற்கும்
வடிவான மாத்தாகும் வலுமையாகும்
காச்சென்ற வுப்பைவிட்டு வாதம்பார்த்தால்
கடினமாம் வாதமெல்லாந் தலைகீழாமே. ருளசு
முந்தியுப்பைக்கட்டு வகாரமேவல்கேட்கும்.
கிளாகப் போகாமல் கல்லுப்பைத்தான்
கெடிபடவே கட்டியே கிளந்துபாரு
தாளாக ஞானம்வரும் வாதமாகும்
தனியான செம்பதுதான் பழுக்கும்பாரு
வாள்போலே யேமசித்தி தங்கசித்தி
வஜ்ரமாம் வகாரமது ஏவல்கேட்கும்
தாளாகக் கல்லுப்பில் ரம்பவேதை
தனித்துமே யுப்பைமுந்தி கட்டியாடே. ருளடு

சித்தரொருவ ருப்பைவிட்டுச் சுட்டுக்கெட்டதும் அ
கத்தியரை யடுக்க அகத்திய ருப்பையள்ளிப் பி
ச்சையிட்டதும் அதனால் சித்தர் உப்பைக்
கட்டி வாதசித்தியானதும்.

உப்பைத்தான் விட்டுஒரு சித்தர்தானு
முண்மையாய் வாதத்தைப் பார்த்துப்பார்த்து
தப்பிதமாய்ச் செய்ததெல்லாங் கரியாய்ப்போகத்
தான்கெட்டு குருமுனிக்குச் சரணஞ்சொல்ல
அப்போது துப்புகெட்ட வாதிக்கித்தா
னடைவான வுப்பையள்ளி போட்டார்தானு
முப்போது வாதமது சமைந்தவாறு
முடிவான வாதிகளே கண்டுபாரே. ௫௭௬

முப்புச்சுன்னமு மதையரைக்க வெருக்கம்பால் முறிப்பும்.

கண்டுமே முப்பூவின் சுன்னஞ்சொல்வேன்
கருத்தான வாதிகளே கண்டுகொள்ளும்
பண்டுமே கல்லுப்புச் சீனம்நேரே
பாச்சியே யரைத்துமெள்ள உருக்கிக்கொள்ளு
உண்டுமே சூடனரை சேர்த்தரைத்து
உற்பனமா யூதியெடு சுன்னமாகும்
நண்டுமே யிதையரைக்க நீருகேளு
நலமான வெண்கருவு மெருக்கம்பாலே. ௫௭௭
பாலோடு சீனமது பலமும்பத்து
பண்பான வெடியுப்புப் பலமும்பத்து
காலோடு இவ்விரண்டு முருக்கிக்கொண்டு
கனமான சூடனரை சேர்த்தரைத்து

வாலோடு யூதிடவே சுன்னமாகும்
வடிவாக வெடுத்துமே யப்பால்வைத்து
சாலோடு பூநீறு பலமும்பத்து
சரியாகச் சீனமது சுன்னம்பண்ணை. நுளஅ

பண்ணியே யிவ்விரண்டு மண்டநீரால்
பரிவாக வுரைத்துது சுன்னமாகும்
நண்ணியே யிம்மூன்றும் சேர்க்கும்பாகம்
நலமாகச் சொல்லுகிறேரும் நன்மையாக
கண்ணியே பூநீறு சுன்னநாலு
கனிவான கல்லுப்புச் சுன்னமொன்று
வண்ணியே வெடியுப்புச் சுன்னமொன்று
வகையாக யிம்மூன்றும் சேர்த்துக்கொள்ளே.

சேர்த்துமே வெண்கருவு தெளிந்தநீரால்
நேயமாக வரைத்துவில்லை காயவைத்து
பார்த்துமே யைஞ்சுன்னக் குகையில்வைத்து
பதிவாகப் புடம்போடப் பூப்போல்நீறும்
நார்த்துமே வீரமது நாலத்தொன்று
நலமாகச் சேர்த்துமே யரைத்துவில்லை
வார்த்துமே குக்கிடத்தில் போட்டுவாங்கு
வாதியாம் நீலியது சுன்னமாமே. நுஅ0

மூப்புச்சுன்னத்தால் தருசுச்சுன்னம்.

சுன்னத்தை யண்டவெள்ளை நீரினாலே
சுழற்றியரைத் தருகக்குக் கவசம்பண்ணி

நன்னயமாய் ரவிதனிலே காயவைத்து
நலமாகக் குக்கிடத்தில் துருசுச்சுன்னம்
பின்னையொன்றும் பேசாதே யெடுத்துப்பாரு
பெருமைபெற்ற சுன்னமப்பா முப்புச்சுன்னம்
வன்னகமாய்ச் சவுகார சுன்னந்தன்னை
மரைத்தார்கள் சாத்திரத்தில் மருவிப்பாரே.
துருசுசுன்னத்தால் ரசங்கட்டி வேதையாடும் தொட்
டதெல்லாம் சுன்னமாகும்.
மருவியே துரிசியது நீறிலுக்கால்
மகத்தான சூதத்தைக் காலவாரி
துருவவே யடிக்கலாம் வேதைரொம்ப
தொட்டதெல்லாம் பழுக்குமது துரிசிநீரூல்
வருகவே வாதமது யேவலாகும்
வடிவாக தொட்டதெல்லாம் சுன்னமாகும்
திரிபுரத்தை தனல்செய்த ஈசனுகும்
செப்பினே னிக்காண்டங் தன்னில்தானே.
முன்துருசிநீரூல் தங்கச்சுன்னம்செய்து வேதையாட.
தானென்ற துருசிநீர் தனையெடுத்து
தாக்கவே தங்கமென்ற தகட்டில்தானும்
வானென்ற கட்டியே புடமுமிட்டால்
வாக்கிடவே தங்கமது நீறிப்போகும்
கோனென்ற குருவருளா லெடுத்துச்செம்பில்
குணமாகப் பத்துக்கு ஒன்றதிட்டால்
வானென்ற தங்கமது எளிசிலாகும்
வகையாகத் தங்கத்தால் தங்கமாமே. குஅங

தங்கஞ்சேராவிட்டால் வாதம்பலியாதே.
தங்கத்தைப் போட்டாக்கால் தங்கமாகும்
தங்கத்தைப் போடாட்டால் தங்கமாகா
பங்கமாய் விரைபோட்டால் மரமுமாகும்
பதிவாக விரையில்லா மரமுமுண்டோ
இங்கிதமாய் சொன்னக்கா லேமமாமோ
இதமாக வேமத்தைப் போட்டுப்பாரு
உங்கள்குல மீடேறு மேமமாகும்
முலுத்தர்களே தங்கத்தைப் போட்டுப்பாரே.
பாருமே புடமிறங்கும் வேதையாகும்
பரிவாக ஜெயமாகும் பழுக்கும்வேதை
காருமே யொட்டிரட்டி. யாகும்பாரு
கனிவான பொருளாகும் கண்டுகொள்ளு
சேருமே மட்டத்தில் தங்கத்தாயைச்
சேர்த்தாக்கால் புடமிறங்கும் திட்டமப்பா
வாருமே பொன்னுக்குப் பொன்னேவித்து
வடிவாக மாற்றெல்லாம் பொன்னாச்சே.
ஆச்சென்று சிறிதுபோர் களங்குசெய்து
அடைவாக மதிதனிலே கொடுத்துஊதி
வாச்சென்று பசுமையைத்தான் பார்த்துப்பார்த்து
வடிவாகப் பொன்சேராப் போனதாலே
காச்சென்று சுயமாகப் பழுக்குமென்று
கனிவாக வெள்ளெலும்பு கடித்தாப்போலே
நாச்சுமே பார்த்துமே யெறிவார்பாரு
நலமில்லார்க்கொன்றுமில்லை நாடிப்பாரே.நுஅசு

செம்பில் தங்கஞ்சேர்த்து வேதைடாடும் விபரம்.

நாடிப்பா ரயச்செம்பு நாகச்செம்பு
நலமான காரீயச் செம்புக்குத்தான்
வாடிப்பார் மதிதனிலே கொடுக்கவேண்டாம்
வடிவாகத் தங்கத்திற் கொடுத்துஊதி
யூடிப்பார் மதியெட்டில் ரண்டுசேரு
உண்மையாய் மாற்றுரும் வேதையாகும்
காடிப்பா ரிம்முறைபோற் செய்யாவிட்டால்
கனகமது பிறவாது கருத்தாற்பாரே. (உஅள)

கெந்தி ரயமெடுத்து செம்பிற்சேர்த்து வேதை.

கருத்தாக கெந்தியஞ் செம்பிற்சேர்த்தால்
கனகமா மீயத்தைக் கழற்றிப்போட்டால்
வருத்தாகச் சூடனை லியஞ்சாகும்
வடிவாகும் பாகமாய்ச் செய்துக்கொண்டு
உருத்தாகத் தங்கத்தி னிடையேதாக்கு
உசத்தியா மூதியே மதியிலெட்டு
பொருத்தாகக் கொடுத்தூத தசமதாகும்
புடமிறங்கும் பாதையிது பாகமாமே. (உஅ.அ)

அயச்செம்பிற் சேர்ந்த கெந்தி ரயமெடுக்க.

பாகமா மயச்செம்பிற் கெந்திரயம்
பதிவாகச் சேர்ந்துமே யிருக்கும்போது
ஊகமாய்ச் சூடனரை சேர்த்தரைக்க
வுருதிபெற்ற கெந்தியம் கழன்றுபோகும்
யோகமாய் தங்கத்திற் சேர்ந்துஊது
உறுதிபெறுஞ் செம்பாகு முசத்திமெத்த

தாகமாய் வெள்ளியெட்டு ரண்டுதாக்க
தாட்டிகமாய் மதிபழுத்த வாறுமாமே. (உஅகூ)
செம்பில் ஈயத்தால் களங்குண்டாவதா லதையெடுத்துப்போட.
வாருகேள் கள்ங்கம்வந்த செம்புக்கெல்லாம்
வடிவாகச் சூடனைரை சேர்த்தரைத்து
காருகே ளீயத்தைக் கழட்டிப்போட்டு
கனிவாகச் செய்தாக்காற் பலனுமாகும்
தேருகேள் தங்கமாம் வேதையாகும்
தேசத்திலீயாதே பிந்தகாண்டம்
தாருமா முகவே செய்யாமற்றான்
தாஷ்டூக பாகமாய்ச் செய்துக்கொள்ளே. (உகூ)

கல்லுப்புச் சிந்தூரம்.

கொள்ளவே கல்லுப்புச் சிந்தூரங்கேள்
குறிப்பாகக் கல்லுப்புப் பலமும்பத்து
நள்ளவே சினமது பலமும்பத்து
நலமான பழச்சாற்றால் நாலுஜாமம்
வில்லவே யரைத்திடவே யெட்டுஜாமம்
விதமாகக் கலையத்தில் வாரியிட்டு
மெள்ளவே யுருக்கிடவே மஞ்சள்போலாம்
மேன்மையா யெடுத்துமே சொல்லக்கேளே.

வெடியுப்புத் திராவகம்.

கேளுமே வெடியுப்புப் பலமோபத்து
கெடியாகச் சினமது இருபத்தைந்து

ஆளுமே பொடித்துமே வாலேயிட்டு
அடைவாக மேல்மூடிச் சீலைசெய்து
காளுமே முன்னீரைத் தள்ளிப்போட்டு
நலமான மஞ்சணீர் வருகுமப்பா
வாளுமே பிடித்துஅடை குப்பியிட்டு
வடிவாக பாகத்தை மருவக்கேளே. (குகூ

இரசப்பூர்ப்பு மத்துடன் முன் கல்லுப்புக்கட்டி
ம் சேர்த்து சிந்தூரம்.

மருவவே சூதமது பலமும்பத்து
பகத்தான பிங்காளி லிட்டுக்கேளு
வருகவே நிராவகத்தை கொஞ்சமூற்று
வகையாக ரவிபடவே வைத்துப்பாரு
உருகவே காளான்போல் பூத்துப்போகு
முன்னமையாய் பூக்கமட்டு மூற்றுவூற்று
தருகவே பூத்ததெல்லாம் பலமும்பத்து
தடையறவே மூன்றுருக்கு வுப்புபத்தே. (குகூ

பத்துமே நிறுத்துமே கல்வத்திட்டு
பதிவாக விருஜாம மரைத்துக்கொண்டு
சத்துமே காசியென்ற மேருத்தாளும்
கனிவாகப் பாதியரை சீலைசெய்து
சத்துமே வலைப்பக்கல் மூடிக்கேளு
சரியாசப் பனிரெண்டு ஜாமந்தித்தான்
புத்தியா யெரித்திடவே கமலம்போலாம்
புரமா யெடித்துமே யுடைத்துப்பாரே. (குகச

கல்லுபபு ரசசிந்தூரத்தில் தங்களுசேர்த்துப் பிட்டும்
பின் ரசவீரஞ்சேர்த்து சிங்கூரித்தலும்.

உடைத்துமே காள்வாசி யேறிநிற்கு
மொழுங்காக வடிநிற்கு மூப்பில்தானு
மடைத்தனமாய்ப் போகாமல் சேர்த்தரைத்து
வகையாக முன்போலே யெரித்துத்தீரு
கிடைக்குமே யிப்படியே யஞ்சுமேற்றி
கெதிபெறவே யஞ்சுதிற மெரித்துவாங்கி
வடைக்குமே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வகையாகப் பத்திலொன்று தங்களுசேரே.

சேருமே தங்கமொன்று நாகமொன்று
ஜெயமாகச் சேர்த்திடவே புட்டுப்போலாம்
ஆருமே கரண்டியிலே வைத்துருக்கி
அடைவாக இலுப்பெண்ணெய் விட்டாற்கேளு
நாருமே பத்தியே யெரிந்துநிற்கும்
நலமாக வவித்துமே யிரதந்தன்னை
காருமே முன்னிடைக்கிப் பாதியூற்று
கனவட்டியெண்ணெய்நிற்க வோடாதெனனே.

ஓடாது சூதமது உருகியாடி
மூண்மையா யிதையெடுத்து கல்வத்திட்டு
வாடாது வீரந்தானையுமிட்டு
வாகாகப் பனிரெண்டு ஜாமந்தானு
மீடாக வரைத்துமே வழித்துக்கொண்டு
இதமான பீங்கானி லிட்டுக்கொண்டு

காடாக முன்வைத்த திராவகத்தை
கடிதாக வூற்றிடவே புகையும்பாரே. ருகூள
புகையுமே நீரதுவு மஞ்சளாகும்
போக்கேடே முன்னெரித்த சிந்தூரத்தி
லகையுமே சேர்த்தரைத்துக் காசிக்கிட்டு
அப்பனே பனிரண்டு ஜாமந்தானுங்
துகையாக வெரித்தெடுக்க முருக்கம்பூப்போல்
துடியாக விருந்திடுமே சிந்தூரந்தான்
வகையேது துகையேது ஆடுமாட்டு
வடிவான சிந்தூர மகிமைதானே. ருகூஅ
கல்லுப்புச் சிந்தூரத்தை யீசானதேவர்க்குப் பூசைப
ண்ணி வேதையாட— எவ்விடமும் தங்கமாகும்.
தானேதா னீசானம் பூசைபண்ணி
தாக்கிடவே ரவிநூறு ஒன்றுஇட்டால்
கானேதான் மாற்றென்ன பத்துமாகும்
கைகடந்த வித்தையிது கருதிப்பாரு
நாமேது பாகமாய் நவின்றுபாரு
நலமான வித்தையிது நாட்டுளோரே
வானேது விண்ணேது எல்லாந்தங்கம்
வகுத்துரைத்த சிந்தூர மகிமைதானே. ருகூக
கல்லுப்புச்சிந்தூரமுண்ணை காயசித்தியுண்டாகும் இத
னை தேவிசொல்ல நான்செய்து உலகத்தோர்
பிழைக்கச் சொன்னேன்.
மகிமையாஞ் சிந்தூரங் குன்றியுண்ணு
மகத்தான நோவெல்லாந் தவடேயாகும்

மகிமையாம் வாசியது இறுகியேறும்
மன்பான காயமது உகாந்தந்தன்னில்
நகிமையா யிருந்திடுமே நமனுமில்லை
நாடியே சிந்தூரம் பெருமைதன்னை
யுகிமையாய் தாய்சொல்ல நானுஞ்செய்து
உண்மையாய்ச் சொல்லிவிட்டே னுலகமீடே.

களங்குமுதல் சகலத்திற்கு முட்டாளாய்ப்போகாம
ல் தங்களுஞ்சேர்த்தால் சகலமுந் தங்கமாகும்.

ஈடெனவே களங்குமுதல் சுன்னமெல்லா
மியல்பான தைலமுதல் சிந்தூரங்கள்
வாடென்ற தங்கத்தைச் சேர்த்தரைத்தால்
வகையான லோகமுத லெல்லாந்தங்கம்
காடெனவே காடுசுத்தித் திரியவேண்டாம்
கனிவான மூலிகையைத் தேடவேண்டா
மூடெனவே யிதுமுட்டி முட்டைப்பாரு
முட்டாளாய்ப் போகாமல் தங்கஞ்சேரே. சுo க

தங்கத்தைச் சேர்த்தரைக்கத் தங்கமாகும்
தடையில்லை வேதையிது நவிக்கவேண்டாம்
பங்கமாய்ப் போகாமல் தங்கந்தன்னை
பதியவே களங்குதனில் சேர்த்தரைத்து
உங்கள்குல மீடேறக் குதித்தாலேம்
மொழுங்காகும் வேதையிது உச்சித்திமெத்த
பங்கமுதல் வாராது தங்கம்விட்டால்
பதிவாக வொன்றுமில்லை பதமாய்ப்பாரே.

குருவோடு தங்கஞ்சேர்த்தால் தங்கமாகும் கெடவே
ண்டுமென்றால் தங்கத்தை நீக்கிப்போடு.

பதமாக வாகவென்றால் குருவினோடே
பதியவே தங்கத்தை யிடையேசேர்த்து
நிதமாகக் கொடுத்திடவே யேமமாகும்
நிலைக்காதே போகவென்றால் தங்கந்தன்னை
விதமாக விட்டுவிடு களங்குசெய்து
விலையாக சாகமட்டு மலைவார்பாரு
அதமாக வீடிழந்து பொருளும்போகு
மாச்சரிய மாகவே யலைவார்பாரே. ௬0௩

அலையாமல் வாதஞ் செய்யவேண்டுமானால் சூ
க்ஷமா யின்னின்னதைச் செய்.

அலையாமற் போகாமற் சொல்லக்கேளு
ஆதியாந் தங்கத்தை யடுக்கச்சேரு
மலையாமல் திராவகத்தை வைத்துஊற்று
வகையான கல்லுப்பை மருவிப்பாரு
துலையாத விசாரத்தில் திரியவேண்டாம்
சூட்சாதி சூட்சத்தை கண்டுபாரு
நிலையாகும் வாதமெல்லாம் நொடிக்குள்ளாகும்
நீட்டினால் முடக்குமெனல் நினைவுதானே. ௬0௪

நினைவுதான் காயத்தைக் கண்டுபாரு
நீச்சான விடந்தனிலே போகவேண்டாம்
கனவான ததுபோலே நினைக்கவேண்டாம்
கடைகெட்டுத் திரியாதே வாதம்பாரு

உணர்வாகப் பாகத்தைக் கண்டுதேறு
ஓழுங்காகும் வேதையிது உசத்தியாகும்
மூனைவாகச் சுட்டுமே தவிக்கவேண்டாம்
முக்கியமாய்த் தங்கத்தின் வடிவும்பாரே. சுடு

தங்கத்தை சூக்ஷமமாய் சேர்த்துச் செய்யச்
சொன்னேர் பரம்பரை.

வடிவான சிவன்சொல்ல தேவிகேட்டு
வகையாக நந்திக்கு அறிக்கைபண்ண
துடியாக நந்தி அசுவனிக்குச்சொல்ல
துப்பறவாய் விசுவனிக்கி கூட்சத்தோடே
முடிவாகச் சொல்லிடவே தன்மந்திரிக்கு
முக்கியமா யகத்தியர்க்கு முறைமைசொல்லி
தடிவாகப் புலத்தியர்க்குச் சொல்லக்கேட்டு
தாட்டிகமாய் தேரற்கு நலஞ்சொன்னாரே.
நலஞ்சொன்னார் தேரருமே கேட்டுத்தேறி
நலமாக யூகிமுனிக் குபதேசித்து
பலஞ்சொன்னர் யூகிமுனி பார்த்துத்தேறி
பதிவாக வுலகத்தோர் பிழைக்கவென்று
கலனைப் போகாமல் பாகமாக [ன்
கருத்துவைத் திக்காண்டந் தன்னிற்சொன்னேன
தலனைப் போகாம லிந்தநூலை
தடையறவே படித்துமே பார்த்திடாயே. சுடு

உலகத்தோர் பிழைக்கக் கல்லுப்புக் கட்டுமுதல்
வியாதிதீரு மருந்தீறாகச் சொன்னேன்.

பார்த்திடவே கல்லுப்புக் கட்டுசொன்னேன்
பதிவான திராவகங்கள் பதியச்சொன்னேன்
சேர்த்திடவே பித்தளையின் செம்புசொன்னேன்
சிறப்பான ரசஞ்சவுக் காரஞ்சொன்னேன்
கோர்த்திடவே வினைதீர மருந்துசொன்னேன்
குடிகெடுத்த வாதிகளே பாகமாக
நார்த்திடவே வரிசையாய்ச் செய்துதேறி
நலமறிய வினையகலு நன்மைதானே. சு0அ

தங்கமாகவேண்டுமானால் துரிசிலிருக்கும் செம்
பைக்கொன்று துருசைக்களங்குசெய்து சி
ந்தூரித்து வேதையாடு.

நன்மையாந் தங்கமது ஆகவென்றால்
நலமான துருசிக்குள் செம்பைக்கொல்லு
கன்மையாய் செம்புள்ளே சாகாவிட்டால் [ம்
கனகமாம் வாதமெல்லாம் பொய்யாய்ப்போகு
பின்மையாய் *ரவிசாக வயணங்கேளு
பிலமான வங்கத்தால் சாகும்பாரு
சொன்னபடி தோய்த்தெடுத்தால் துருசுசாகும்
சுயமான களங்கத்தை சொல்லக்கேளே. சு0கூ

* ரவி-செம்பு.

துருசுக்களங்கு.

கேளுமே துரிசிதான் பலமோஐந்து
கெடியான கற்சுன்னம் பலமுமைந்து

ஆளுமே துரிசிமேற் கவசங்கட்டி
அடைவான வங்கமது பத்துசேரு
தாளுமே யுருக்கியே சொல்லக்கேளு
தடையறவே துரிசைத்தா னமிழ்த்திப்போடு
வாளுமே யேழுதற மமிழ்த்திவாங்கு
வகையாகத் துரிசிரவி சாகும்பாரே. சுக0

துரிசுக்களங்கு நிந்தூரிக்க நாக ஜயநீர் செய்வதற்கு நாகப்பிட்டு.

சாகுமே மேற்கவசந் தள்ளிப்போட்டு
சலிதியா யப்புறத்தில் வைத்துக்கொண்டு
வேகுமே நாகமென்ற ஜயநீர்கேளு
விருப்பமாய் நாகமது பலமுமைந்து
தாகுமே யிலுப்பெண்ணெய் தனிலேசுத்தி
தடையறவே யிறுபத்து ஒன்றுதானும்
வாகுமே யுருக்கியே சாய்த்துப்போடு
வடிவாக வெடுத்துருக்க வகையைக்கேளே. சுகக

வகையென்ன சொல்லுகிறே னகந்தன்னை
வகையாக வுருக்கியே சூதம்பாதி
நகையாக வுருக்கியே சேர்க்கப்பிட்டு
நலமாக வீரங்கால் சேர்த்துக்கேளு
முகையாக வரைத்துமே நேர்ந்துபோக
முனிவாக வரைஜாம மிரண்டுதானும்
தகையாக விருக்குமே கறுப்பதாக
தனியாக விரும்புஅப் பொடிதானேந்தே. சுகஉ

நாகஜயநீர் செய்ய நாகப்பிட்டில் சேர்க்க வெடியுப்புநிராவகம்.

அஞ்சுமே போட்டரைத்து வைத்துக்கொண்டு
அடைவான பீங்கானி விட்டுக்கேளு
தஞ்சமாய் புகைநீர்தா னென்றுகேளு
தடையறவே வெடியுப்புப் பலமும்பத்து
துஞ்சுமடா சினமது இருபத்தைந்து
துடியாகப் பொடித்துமே கலயத்திட்டு
பஞ்சுமே வாலியென்ற சட்டிமூடி.
பக்குவமாய் வெள்ளைநீர் வருகும்பாரே. சுகஉ
வருகுமே வெள்ளைநீர் தள்ளிப்போடு
மகத்தான நீருதான் கொஞ்சமஞ்சள்
தருகுமே யதையெடுத் தடைத்துப்போடு
தாட்டிகமாய்க் கடைநீரை வாங்கிப்பாரு
பருகுமே சுயமஞ்சளாயிருக்கும்
பதிவான புகைநீரை நாகத்திட்டால்
கருகுமே புகைந்துமே மஞ்சளாகும்
காரணமாய் நீர்பெருமை கனகமாமே. சுகச

இந்நீருக்கு நாகஜயநீரென்று பெயர், இதை சித்தர் மறைத்தார்கள். இதை இக்காண்டத்தில் நான் சொன்னேன், இத்தால் சகலமுமாகும்.

கனகமாம் நீரதுதான் பேருகேளு
கனமான நாகமென்ற ஜயநீராகும்
அனகமாம் நாகமென்ற ஜயநீர்தன்னை
யடைவாக சித்தர்தான் மறைத்தவாறு

தனகமாந் திராவகத்தை சொல்லவில்லை
தடையறவே நாகத்தில் ஜயர்நீர்போச்சு
வனகமா யிக்காண்டந் தன்னிற்சொன்னேன்
வடிவாகப் பார்த்தறிந்தா லெல்லாமாமே.சுகரு
சித்தர்கள் நாகநீரை பிரட்டாய்ச் சொன்னதும் புத்தி
யீன வாதிகள்மோசம் போனதும்.

எல்லாமு மாகவே சொல்லக்கேளு
ஏத்தமாஞ் சாத்திரத்தில் நாகநீரை
நல்லாக நாகரச முருக்கிச்சேர்த்து
நலமாகப் பொடிவீரந் தூவச்சொல்லி
பொல்லாமை யாகவே சொல்லுரையா
புத்தியிலா வாதிதான் தூவிப்பார்த்து
கல்லாமை நீரில்லாப் போனதாலே
கனிவான சால்திரமும் பொய்யென்பாரே.

அயாகமும் நாகமுஞ் சேர்ந்ததால் ஜயநீராய் திராவ
கத்தை முறித்ததால் தங்கத்திற்கு இந்நீராதியா
கும், இதுபோல் ரசமுமாதியாகும், அத
னால் தங்கமாகும்.

என்பார்க ளயமதுதா நாகமாகு
மியல்பான நாகமது நாகமாகு
மன்பாக விவ்விரண்டுஞ் சேர்ந்துநீரா
யளவான திராவகந்தான் முறிந்ததப்பா
இன்பாக விந்தநீர் தங்கத்தாதி
யியல்பான சூதமது தங்கத்தாதி

வன்பான விந்நீரா லெல்லாமாகும்
வகையான தங்கமாம் வரிசையாமே. சுகஎ
முன்-சுகஎ-வது பாடலில் வங்கத்தில் தோய்க்கச்சொ
ல்லிய துரிசை நாகஜயநீரில் தோய்த்துச் சிந்தூரிக்க
வரிசையாய் முன்வங்கந் தனிலேதோய்த்த
வகையான துரிசதனை யெடுத்துக்கேளு
நரிசையாம் நாகத்தின் ஜயநீர்தன்னில்
நலமாக தோய்த்துமே ரவியிற்போடு
பரிசையாம் பக்ஷமே தோய்த்துப்போடு
பதிவான நாகத்தின் ஜயநீருண்ண
கரிசையாய் ரவிதனிலே போட்டெடுத்து
கனமாக வெடுத்துமே சொல்லக்கேளே. சுகஅ
கேளுமே பூநீறு படியுநாலு
கெடியாகச் சட்டிபடி ரண்டுஇட்டு
ஆளுமே யதன்பேரில் துரிசைவைத்து
அப்பனே பூநீறால் மேலேமூடி
தாளுமே யடுப்புதனி லேற்றிக்கேளு
தடையறவே பனிரண்டு ஜாமந்தானு
மூளுமே காடாக்னி யாயெரித்து
முக்கியமா யெடுக்கசிந் தூரமாமே. சுககூ
துரிசி சிந்தூரத்தில் தங்கஞ்சேர்த்து வேதையாட.
சிந்தூரந் துரிசியது ஆச்சுதப்பா
ஜெகஜ்ஜால மாடவே சொல்லக்கேளு
நந்தூரம் விராகனிடை தங்கந்தானும்
நலமாக வுருக்கியே சிந்தூரத்தை

கந்தூர மிடைசமனுப்த் தாக்கிப்பாரு
கருணைபெறச் செம்பாகும் கருணைகூர்ந்து
எந்தூரம் வெள்ளியெட் டிரண்டுசேர்க்க
வியல்பான பொன்னைட்டு மாற்றுமாமே. சூஉ0
மாத்தாகும் புடமிறங்குந் தங்கந்தானும்
மயமாகும் பொருளாகும் வலுமைமெத்த
சாத்தாகு மிவ்வேதை யெளிதிலாகுந்
தத்தளித்துத் திரியாதே துருசிபாரு
கூத்தாடித் திரியாதே நாகந்தன்னை
கொடிதாக ஜயநீரை வைத்துஊடு
மூத்தாள்தான் முகநின்ற லொன்றுமில்லை
முக்கியமாய் பார்த்திடவே சித்தியாமே. சூஉக
துரிசி சிந்தூரத்தால் விராலியிலை ரசம்பிழிந்து
பாஷாணங்கள்கட்டி வேதை.
சித்தியாந் துரிசென்ற சிந்தூரத்தை
திறமான விராலியிலைக் கிட்டுமைந்தா
புத்தியாய்ப் பிசைந்துமே பிழிந்துக்கொண்டு
புதிதான பாஷாண மறுபத்துநாலுங்
கத்தியாஞ் சுருக்கிடவே கட்டிப்போகுங்
கறியில்நின் முடுமே பாஷாணங்கள்
தத்தியாந் தங்கமாம் வேதையாகுந்
தடையறவே யெல்லாமுஞ் சித்தியாமே. சூஉஉ
துரிசு சிந்தூரமகிமை.
ஆமேதா நவலோக மெட்டியோடு
மடைவான வயமுருகி வேதையாகும்

நாமேதயன் களங்காகும் வேதையாகும்
நலமான யோகமுதல் சித்தியாகும்
பாமேதான் ஞானங்கள் மிகவுமாகும்
பதிவான யோகசித்தி யாகும்பாரு
பூமேவு ருஷிசித்த ராடுமாட்டு
புவியுள்ளோர் பிழைக்கவே சொன்னேன்பாரே
நாகஜயகீர்.

பிழைக்கவே வேணுமென்றுல் நாகத்தோடே
பேரான ரசஞ்சேரு பிட்டுபெண்ணு
நுழைக்குமே வீரத்தை யொக்கச்சேரு
தனியாக லோகத்தை யிடையேசேரு
பிழைக்கவே திராவகத்தைக் கடைநீரூற்றில்
பிரபலமாய்ப் பொன்னுகும் வேதையாகும்
உழைக்கவே பலனுகு மில்லாப்போனு
லொழுங்கில்லே வேதையா முறுதிபாரே. சுஉச

இன்னின்னது பொன்னுக்காதி ஆனதால் நாக
ஜயகீரைவைத்து வேதையாடி இதனுல்வா
த மில்லேயென்பவரை யட்க்கு.

உறுதியாம் வேதைமுகந் தெரியவேண்டி
லுற்றுமே நாகந்தான் பொன்னுக்காதி
அறுதியாம் வீரமது பொன்னுக்காதி
அப்பனே அயமதுதான் பொன்னுக்காதி
நறுதியாம் நாகரச மேமமாகும்
நாட்டிலே சொல்லாதே இந்தப்போக்கை

அறுதியாய் ஜயநீரை வைத்துக்கொள்ளு
அப்பனே சகலசித்து மாடலாமே. சூஉடு

ஆடலாம் நாகரச ஜயநீர்கண்டா
லப்பனே வெகுவேதை யாடலாகும்
பாடலாம் வெகுபோக்கு மெத்தவுண்டு
பதிவான வெல்லாமுந் தங்கமாகும்
நீடலாம் வாதமில்லை யென்றுசொன்ன
நிலையில்லா மனிதருக்கு மண்ணுபோடு
காடலாம் வாதமென்ற வங்கந்தானும்
கருத்தான நாகரசத்தாலே யாச்சே. சூஉசூ

நாகரச ஜயநீர்மகிமை.

ஆச்சுதே நாக்ரச ஜயநீர்தன்னி
லடைவாகப் பதறுதே தோய்த்துவாங்கு
காச்சுதே மரம்போலே பழுத்துப்போகும்
கனிவான காய்பழுத்த வாறுபோல
தோச்சுதே யிப்படிக்கி எல்லாமாகும்
துடியாக வெல்லாமுஞ் சித்தியாகும்
நாச்சுதே மரமேறிக் கைவிட்டாப்போல்
நலமாகப் பாராதே நினைவாய்ப்பாரே. சூஉஎ

நினைவாகப் போகாமல் நாகந்தன்னை
நிலைக்கவே ஜயநீரைப் பண்ணியாடு
அனைவாக நாகமென்று லெளிசோவல்ல
அப்பனே புகைநீரா லெல்லாமாச்சு

உனைவாக தூமத்தில் வேதையாகு
மூய்த்துணர்ந்து பார்த்துமே சோதித்தேறு
வினைவாகக் கைபாக மாகச்செய்து
வடிவானப்பொன்பண்ணி ஞானம்பாரே. சுஉஅ

ஞானமே பார்ப்பதற்கு நாகந்தன்னை
நலமாக ஜயநீர்தான் பண்ணிப்போடு
மோனமாம் வாதம்வரும் யோகமாகும்
முத்திதான் மோகூமா மிந்தவித்தை
கானகத்தில் திரியாதே மூவிதேடி
கனிவாக பிண்டத்தை நினைத்திடாதே
வானகமும் விண்ணகமு முன்னுதாச்சு
வகையாக வுன்னினைவை மருவிப்பாரே. சுஉசு

செம்பைக் கரிசெய்து நாகத்திராவகம் விட்டுத் தியப்
புடமிட்டுத் தங்கஞ்சேர்த்து வேதை.

மருவியே நாகத்தின் ஜயநீரோடே
மனதாகச் சேர்த்தசெம்பு சேர்ந்தபோது
வருவியே தங்கமா மென்னசொல்வேன்
வகையாக நாகத்தின் ஜயநீர்காணும்
கருவியே போகாமல் நாகந்தன்னை
கட்டாய மாகவே ஜயநீராக்கு
தருவியே செம்புசெத்த போதுதானுந்
தன்மையாய் நாகத்தின் ஜயநீர்தானே. சுஉ0

தோய்ச்சுமே தீய்ந்திடவே புடமும்போடு
தொக்காக வெடுத்துமே சொல்லக்கேளு

பாச்சுமே தங்கத்தி லிடையேதாக்கு
பதிவாகத் தங்கத்திற் கொடுக்காப்போனு
லேச்சுமே போடுமது வாதந்தானு
மேழைபோ லிருந்திடுவீர் வெள்ளிமேலே
காச்சுமே கொடுக்காதே தங்கமாகா
கனிவாகத் தங்கத்தில் வேதையாமே. சூஉக

நாகரச ஜயநீரை அரிதேவர்செய்து வேதை
யாடியதும் அதன்மகிமையும்.

வேதையாம் நாகத்தின் ஜயநீராலே
விருப்பமா யரிதேவ ராடினார்பார்
பாதையாம் வெகுபோக்கு நாகத்தாலே
பதிவாக ‡ தூமமென்ற புகையினாலே
நாதையாம் வெகுபோக்கு ஆடலாகும்
நலமாகப் பாகத்தை மருவிப்பாரு
சோதையாம் ரவிபழுக்கும் வேதையாகும்
சுயம்பாகுந் தங்கமாம் நாகமாமே. சூஉஉ

‡ தூமமென்ற புகை - ஆவிநீர் அல்லது திராவகம்,
நாகம் வாதத்திற் காதி, இத்துடன் ரசம் வீரம் திரா
வகஞ் சேர்த்தால் வேதையாகும்.

நாகந்தான் வகாரத்தி லாதியாச்சு
நலமான சூதமது சேர்ந்ததாலே
பாகமாம் வீரமது கூடச்சேர்ந்து
பதிவான திராவகமுங் கூடச்சேர்ந்தால்
ஆகமாம் பொன்னுகுந் தங்கமாகு
மறிவுகெட்ட வாதிகளே பாகமாக

யோகமாய்ச் செய்திடவே வந்துதோயு
முண்மையாம் பொன்செய்ய வாதிபாரே.சுஙஙு

இலிங்கரசமெடுக்க.

ஆதிபார் லிங்கரசப் பெருமைதன்னை
யடைவாக யான்கண்டு உலகத்தோர்க்கு
நீதியாய்ச் சொல்லுகிறேன் பாகமாக
நினைவாக வைத்துமே வேதைபாரு
காதியாம் லிங்கமது பலமோபத்து
கனிவாகத் திராவகத்தை விட்டரைத்து
பாதியாங் கிடமதிலே போட்டுமூடு
பதிவான சீலதா னைழுசெய்யே. சுஙச

நாகரச ஜயநீருக்காக நாகசுத்தி.

செய்துமே அடுப்பேற்றி தீபம்போல
ஜெயமாக வெரித்திடவே வுயரவேறி
கைதுமே யிருக்குமது கரிபோல்தூளாம்
கனமாக வெடுத்துமே தேய்த்துப்பாரு
நைதுமே ரசங்கக்கு மெடுத்துக்கொள்ளு
நலமான நாகரச ஜயநீர்கேளு
உய்துமே நாகத்தை யிலுப்பைநெய்யி
லுனர்வாக விருபத்து ஒன்றுசாயே. சுஙரு

நாகரசஞ்சேர்த்து ஜயநீர் செய்ய.

சாய்த்துமே யெண்ணெய்விட் டிருக்கிக்கொண்டு
சரியாக லிங்கரச நாகம்பாதி
செய்த்துமே சேர்த்துருக்கிக் கல்வத்திட்டு
செம்மையாய் வீரங்கால் போட்டரைத்து

காய்த்துமே ஜாமமிரண் டரைத்துமாப்போல்
கனிவாக நாகமிடை லோகஞ்சேரு
நாய்த்துமே பொடித்துநீ கடைநீருற்று
நலமாகப் புகைந்துமே மஞ்சளாமே. சுஉசு
நாகரசஜயநீர் காளகண்ட ரெனக்குச்சொல்ல வுல
கோருய்ய மறையாமற் சொல்லினேன்.
மஞ்சளாம் நீரினுட பெருமைதன்னை
மகாதேவ ராலேயுஞ் சொல்லப்போகா
நஞ்சுண்ட கறைக்கண்டர் சொன்னர்பாரு
நலமாக நான்கண்டு உலகத்தோர்க்கு
வஞ்சகமாய் சொல்லவில்லை வாதப்போக்கு
வடிவான லிங்கரசத் தாலேநாகம்
பஞ்சுபோல் நீராகு மிந்தநீரில்
பார்த்திடவே சகலசித்தி யாடலாமே. சுஉள
துரிசுசிந்தூரமும் அதன் வேதையும்.
ஆடலாந் துரிசியது பலமோபத்து
அடைவான கெந்தியது பலமுமொன்று
நீடலாம் பழச்சாற்றுல் நேகரைத்து
நிலவரமாய்ப் பனிரண்டு ஜாமந்தானுங்
கோடலாம் ரவியுலர்த்திக் கவசங்கேளு
கொடுமையாஞ் சுண்ணும்பும் உப்புநேரே
வாடலாங் கவசமிட்டுப் புடமாய்ப்போடு
வகையாகக் கறுப்பாக விருக்கும்பாரே. சுஉஅ
இருக்குமே யிதையெடுத்து கல்வத்திட்டு
இதமாகப் பண்ணையரை கூடச்சேர்த்து

நெருக்குமே பாணியா லரைத்துவில்லை
நிலவரமாய்ப் பெரியபுடம் போட்டெடுக்க
அருக்குமே சிகப்பாகுஞ் சிகப்பில்லாதே
அன்பாகக் கறுத்தாக்கால் சூடன்சேர்த்து
வருக்குமே யரைத்துவில்லை காயவைத்து
வழியோடே புடமிடவே சிவந்துபோமே. சூ௩௯

சிவந்திருக்கும் வில்லையுட பெருமைதன்னை
சிவனாலு முடியாது ஒருவர்காணார்
தவந்தநடை பிள்ளையைப்போல் மனிதராகுந் [ம்
தாக்கிடவே லோகமெல்லாம் பழுத்துப்போகு
கவந்திடவே சூடனால் செத்தசெம்பு
கனமாகப் பலநாலு நிறுத்துக்கொண்டு
தவந்திடவே நாகரச ஜயநீர்ப்பாதி
தடையறவே நிறுத்துமே கல்வத்திட்டே. சூச0

துரிசு சிந்தூரித்தால் தங்கஞ்செம்பாகும்.

இட்டுமே வில்லைபண்ணி காயவைத்து
இதமாகப் புடம்போடு சிவந்துகாணும்
நட்டுமே சிவப்பென்றால் சொல்லப்போமோ
நாதாக்க ளொளித்திட்ட மரபுதன்னை
கட்டுமே தங்கத்தில் சிந்தூரத்தை
கனிவாக வுருக்குமுகந் தனில்கொடுக்கப்
பட்டுமே தங்கமது செம்பாய்ப்போகும்
பகரறிது செம்பினிட பண்புமாமே. சூசக

நாகத்திராவகம்செய்து மண்டலவரைவைத்து பின்
னுபயோகிக்க கல்லபலன் கொடுக்கும்.

செம்பாகும் சிகப்பாகு மாதித்தன்போல்
செப்பரிய வெள்ளிதனில் பத்துக்கொன்று
வம்பாகப் புடமிடவே யெட்டுமாற்று
வளமாகப் புடமிரங்கும் வரிசையாகுந்
தெம்பாகும் வேதையிது கூனைத்திலாகும்
செப்பரிய ஆட்டமது நாகத்தாலே
உம்பாக நாகமென்ற ஜயநீர்தன்னை
யுற்றுமே மண்டலத்தில் வைத்திடாயே. சுசஉ

வைத்திடவே யொன்றேடே யொன்றுநின்று
வகையாக நல்லநீ ராகும்பாரு
உய்த்திடவே சாயந்தான் மிகவுமாகு
மோங்கியதோர் சத்தாகும் வேதையாகும்
நைத்திடவே நவலோக மெல்லாந்தானு
நலமாகப் பழுக்குமது வேதையாகும்
கைத்திடவே வேதையிது கருத்தாற்பாரு
கனிவாகப் பார்த்தாக்சா லெல்லாமாமே. சுசந

துரிசு சிந்தூரத்தில் நாகந் தங்கம் ரசம்சேர்த்து
பிட்டுசெய்து சிந்தூரித்து வேதையாட.
ஆமேதான் சிகப்பான சிந்தூரத்தி
லடைவாக நாகமது பத்திலொன்று
காமேதான் தங்கமது பத்திலொன்று
கனிவாகச் சேர்த்துருக்கப் பிட்டுப்போலாம்

நாமேதான் லிங்கரசம் பாதிசேரு
நலமாக விலுப்பெண்ணெய் குத்திநீயும்
பூமேதா னுருக்கியே கல்வத்திட்டு
பிசகாமல் நின்றவிடை வீரங்காலே. ௬௪௪

வீரங்கால் சேர்த்தரைத்து சிந்தூரத்தை
விதமான கடைநீரா லரைத்துக்கொண்டு
காரமா யுலரவைத்துக் குப்பிக்கிட்டு
கணக்காக வெரியிடவே முருக்கம்பூப்போல்
நீரமா யிருக்குமந்த சிந்தூரத்தை
நாடியே ரவிநூறுக் கொன்றுபோடு
ஆரமாம் மாற்றுமது பத்துமாகு
மாதார ஞானவளி யடுத்தவாறே. ௬௪௫

துரிசுநாகரச தங்கக்கலப்பு சிந்தூரபலன்.

அடுத்துமே சிந்தூரங் குன்றியுண்ணு
அடைவான வாசியது மேலேயேறும்
கடுத்துமே காயமது கற்றூணாகுங்
கனிவாக யோகசித்தி காயசித்தி
வடுத்துமே மேனிசெவ் வலறிபோலாம்
மகத்தான சிந்தூர மதிகவேதை
கடுத்துமே சொல்லாதே சிந்தூரம்பார்
தாக்கிடவே லோகமெல்லா மேமமாமே. ௬௪௬

ஷை சிந்தூரபத்தியம்.

ஓமமாஞ் சிந்தூரத் தாலேபாரு
இன்பம்வரும் லிங்கரசத் தாலேபாரு

காமமாம் சிந்தூரந் தின்றிட்டாக்கால்
கைப்போடு புளியுப்புப் பெண்ணுதள்ளு
வாமமாம் கள்ளேநீ யுண்டிடாதே
வடிவான கஞ்சாவைக் குடித்திடாதே
நாமமாம் போதையிலே யுள்ளைக்கொல்வார்
நாதாக்க ளுண்ணுர்கள் நாடிப்பாரே. சூசஎ

சிந்தூரஞ் சிவக்காமல் வாதிக ளிலவது.
நாடிப்பார் சிந்தூரம் பண்ணிப்பார்த்து
நலமாகச் சிவக்காதே போனதாலே
கூடிப்பார் கூட்டமாய்ப் வாதிமார்கள்
கூடியே செய்யவகை யறியாதாலே
தேடியே மூலிகையில் பார்த்துப்பார்த்து
தேசத்தி லிலைந்துமே கெட்டுப்போனர்
கோடியே மானுடர்கள் புத்தியில்லார்
கொடும்பாவி சுட்டலைந்து மாளுவாரே. சூசஅ

குருவில் தங்கத்தாலும் நாகஜயநீராலும்
சேர்க்க வாதசித்தியாம்.

மாளாம லிருக்கவென்றுல் தங்கத்தாயை
மருவியே போட்டரைக்க சித்தியாகும்
தேளான நாகத்தின் ஜயநீராலே
சேர்த்தரைக்க வாதசித்தி சூதனத்திலாகும்
வாளான விழிமாதை தேடவேண்டாம்
வகையான யிக்காண்டந் தனிலுழைத்து
நாளாக நாட்செல்ல வாதமாகும்
நவின்றுமே சாத்திரத்தில் மனதையூனே. சூசக

ஊணவே தங்கத்தை குருவிற்சேரு
உண்மையாம் நாகத்தின் ஜயநீர்பண்ணி
தோணவே கூட்டினத்தைப் பார்த்துத்தேற
தொல்லுலகில் ரசவாதந் துடியாமெத்த
காணுத பொன்னைத்தான் கண்டபோதே
கலக்கமற்று இருதயத்தில் கருணைவைத்து
நாணவே யிருந்துநீ தங்கம்பாரு
நவின்றிடவே காயத்தின் சித்திபாரே. சுரு0

இன்னமொருசெம்பு அடியிற் சொல்லப்படும்.

பாருமே யின்னமொரு செம்புசொல்வேன்
பதிவான வகத்தியர்தா னுமோட்டு
காருமே யிக்காண்டந் தனிலேசொல்வேன்
கருணைவைத்தால் லோகசித்தி பூகசித்தி
வேருமே சரக்கெல்லாஞ் சேர்வைபாரு
வேதாந்த பரநாதன் சொன்னவித்தை
தாருமே வயச்செம்பை முன்னேபாரு
தவித்துமே திரியாதே தாக்கிப்பாரே. சுருக

அயச்செம்பு.

தாக்கிப்பா ரயச்செம்பு சொல்லக்கேளு
தடையறவே வெகுசூருக்கு தாக்கிப்பாரு
ஆக்கிப்பா ரயமதுதான் பலமும்பத்து
அன்பான துரிசியது பலமுநூறு
நோக்கிப்பார் கெந்தியது பலமும்பத்து
நுட்பமா யிம்மூன்றுங் கல்வத்திட்டு

வாக்கிப்பா ரெலுமிச்சம் பழச்சார்தன்னில்
வகையாக நால்ஜாம மரைத்திடாயே. சுருஉ
அரைத்துமே வில்லைதட்டி ரவியிற்காய
அன்பாகப் பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
நிரைத்துமே யெடுத்துப்பார் கரிபோல்தோணும்
நேரான சூடனைரை நிறுத்துப்போடு
புரைத்துமே யிருஜாமம் பாணியாலே
போராக வரைத்துமே வில்லைகட்டி
சிரைத்துமே பெரும்புடமாய்ப் போட்டுவாங்கு
சிறப்பாகச் சிந்தூர மாகுந்தானே. சுருந

நாகஜயநீர்.

ஆகுமே சிந்தூர மப்பால்வைத்து
அடைவாக நாகரசஞ் சொல்லக்கேளு
வேகுமே நாகமது பலமுமொன்று
விருப்பமாய் சூதமது அரைப்பலந்தான்
போகுமே யிரண்டுமொன்று யுருக்கிச்சேர்க்க
புவனமது பொடியாகுந் தண்மைபாரு
ஆகுமே வீரமது பலமுங்கால்தா
னடைவாகப் பொடித்துமே சொல்லக்கேளே.

அயச்சிந்தூரத்தில் நாகரசம் பாதிசேர்த்துச் செ
ம்பெடுக்கச்சொல்லியது.

சொல்லவே புகைநீரை யூற்றிவைக்க
சுருக்காகப் புகையுமது சொல்லக்கேளு
நல்லவே யயத்திலிட சிந்தூரத்தில்
நலமாக நாகரசம் பாதிசேர்த்து

கல்லவே ஜாமமரை கடைநீராலே
கனிவாக வரைத்துமே வில்லைகட்டி
தில்லையாய்ப் புடமிடவே மஞ்சள்போலாம்
திடமாக மஞ்சளைத்தா னெடுத்துக்கொள்ளே.

அயஸ்காரசத்தி லெடுத்த செம்பைத் தங்கஞ்
சேர்த்து வெள்ளியிலிட்டு வேதை.

எடுத்துமே தங்கத்தி லிடையேதாக்கு
இதமான தங்கமது சிகப்புமாகும்
அடுத்துமே ‡ மதியெட்டுக் கொன்றுபோடு
அடைவான மாற்றென்ன வேழுமாகும்
வடுத்துமே யேழான மாற்றைவிற்று
வளமான வாசியோ கத்தைப்பாரு
கடுத்துமே ஞானத்துக் கிதுவேசொன்னேன்
கனமான செம்பினத்தைக் கண்டுபாரே. சுருசு

‡ மதி - வெள்ளி.

அயச்செம்பு தங்கத்திற்சேர தங்கஞ் செம்பாகும்
பின் வெள்ளியிற் கொடு.

கண்டுபார் செம்பெடுத்துத் தங்கத்தாயில்
கனிவாகத் தாக்கிடவே செம்புமாகும்
கொண்டுபார் மதிதனிலே கொடுக்கமாற்று
குறையாமற் கண்டுமே தானிருக்கும்
வண்டுபா ருறுதியாய்ச் செய்துபாரு
வளமான மாற்றுகும் வயசதாகும்
சென்டுபார் பாகமாய்ச் செய்துக்கொள்ளு
சிற்சபையில் ஞானத்தைக் கண்டுதேறே. சுருள

பின்காண்டத்தில் சொல்லியிருக்கு மயச்செம்பி
ல் தங்கம் சேர்த்துக்கொள்ளவும்.

தேறவே பின்காண்டந் தனிலேசொன்ன
சிறப்பான அயச்செம்பில் தங்கஞ்சேர்த்து
ஆறவே பார்த்தாக்கால் பொன்னதாகு
மடைவான பொன்சேராப் போலுற்கேளு
சேரவே மாற்றில்லே புடமிறங்கா
சேர்த்திட்டால் தங்கமய மாகும்பாரு
காரவே யேமத்தை விட்டுநீயும்
கனிவாகப் பார்த்திட்டு மயங்காவாறே. சூடு அ
மோனசாதனை.

மயங்காமல் வாசியைநீ மாட்டியூது
வளமான நாலேயுந்தான் கட்டிக்கொள்ளு
உயங்காமல் ஞானத்தி லுறங்கிநில்லு
உற்றுமே சுழுமுனையில் நாட்டம்பாரு
கயங்காமல் சுழுமுனையில் நாடிப்பாரு
கருணைவைத்து எப்போதும் கருத்தில்நில்லு
தியங்காமல் வாணியவள் வருவாளப்போ
சேவித்து நின்றுமே பணிந்திடாயே. சூடுசூ
நாகரச கெந்தியைசித்தர் மரைத்தார்களெனல்.

பணிந்துமே நாகாரச கெந்தியைத்தான்
பதிவாக சித்தர்தான் மரைத்தார்பாரு
கனிந்துமே யிக்காண்டந் தனிலேசொன்னேன்
காயசித்தி லோகசித்தி கண்டுபாரு

வணிந்துமே தங்கம்வைத்து வாதம்பாரு
வகையாகு மாற்றுகு மருவிநில்லு
தணிந்துமே போகாமல் வாதமார்க்கந்
தடையறவே பார்த்திடவே சித்தியாமே. சுசுo

கெந்தகத்தைதலம்.

சித்தியா மின்னமொரு தைலமார்க்கம்
செப்புகிறே னவலொகம் வேதையாகும்
புத்தியாய் ரகசியமாய்ச் செய்துக்கொள்ளு
புத்திகெட்டுத் திரியாமற் பாகமாக
வித்தகமாய்ச் செய்துமே வேதைபாரு
விருப்பமா யெல்லாமுஞ் சித்தியாகும்
நத்தியே தைலத்தில் வேதைகோடி
நானறியே னிதுபோக்கு வேதைதானே. சுசுக

வேதைதா னுகவே கெந்தகத்தை
விதமான தைலமாய் சொல்லக்கேளு
பாதையாங் கெந்தியது பலமும்பத்து
பகரவே புகைநீரை விட்டரைத்து
நாதையாம் நால்ஜாம மாட்டிப்பின்பு
நலமாக வழித்துமே கலையத்திட்டு
காதையாம் பூப்புடத்தில் தைலம்வாங்கி [ளே. சுசுஉ
கருணைபெறச் சொல்லுகிறேன் கனிவாய்க்கே

கெந்தகத் தைலத்தில் நாகமுதலிய சரக்கைச்
சேர்த்து மடக்குத்தைலம்.

கனிவாக நாகமது பலும்பத்து
கருத்தான சூதமது பலமுமைந்து

நனிவாக வீரமது பலமுங்காலு
நலமாக விதையெல்லாங் கல்வத்திட்டு
பனிவாகப் பொடித்துமே தைலத்தாலே
பதிவாகப் பனிரண்டு ஜாமந்தானும்
வனிவாக வரைத்துமே கலேயத்திட்டு
வகையாகத் தைலமதை யிரக்கிடாயே. சுசுஉ

நாகரச கெந்தகமட்குத் தைலத்தை தூரில்
விட்டரைத்து வேதையாட்.
இரக்கிடவே சிகப்பாகுந் தைலமப்பா
இதமான தைலத்தை வாங்குவாங்கு
அரக்கிடவே புட்டிதனி லடைத்துக்கொண்டு
அடைவாகத் துரிசியது பலமும்பத்து
கரக்கிடவே விட்டரைத்துப் புடமேபோடு
கனிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
வருக்கிடவே கறுப்பாக விருக்கும்பாரு
வகையாகத் தங்கத்தி லிடையேதாக்கே. சுசுச

தாக்கிடவே தங்கமது கறுத்துப்போகுந்
தடையறவே தங்கமதை யெடுத்துக்கொண்டு
நோக்கிடவே மதிபத்து ரண்டுஞ்சேரு
நுட்பமாய் மாற்றுதான் பத்துமாகும்
வாக்கிடவே புடமிறங்கும் நயப்புமாகும்
வகையான ஞானத்துக் கிதுவேயாதி
ஆக்கினைசோர் போலவே யிருக்கும்பாரு
அடைவான தைலமிது அருள்செய்தேனே. சுசுடு

கெந்தகத்தைலஞ் சொல்லிய குருபரம்பரை.

அருள்செய்தார் சிவன்சொல்லத் தேவிகேட்க
வடைவான நந்திக்கு அரிக்கைசொல்ல
பொருள்செய்தா ரசுவனியும் கேட்டுத்தேறி
பிரபலமாய் விசுவனிக்குப் புசன்றுகாட்ட
தருள்செய்த விசுவனியுந் தன்மந்திரிக்கு
தாட்டிகமாய் தன்மந்திரி யகஸ்தியர்க்கு
இருள்செய்த அகஸ்தியரும் புலத்தியர்க்கு
இன்பமாய்க் கேட்டுமே சொன்னவாறே. சுசுசு

சொன்னதொரு புலத்தியருங் கேட்டுத்தேறி
சுருக்காகத் தேரருக்குச் சொன்னார்பாரு
நன்னயமா யூகியையும் வரவழைத்து
நவின்றுமே தைலத்தின் பாகஞ்சொல்ல
பின்னமில் லாமலே யூகிதானும்
பிரபலமா யுலகத்தோர் பிழைக்கவென்று
கன்னல்போல் தைலவகை கருத்துஞ்சொல்லி
காரணமாய் ஞானசித்தி பெற்றார்தானே. சுசுள

கெந்தகத்தைலத்தால் மட்டம் மாற்றுயரும்.

தானென்ற மட்டமென்ற பொன்னுக்கப்பா
தாட்டிகமா யித்தைலந் தடவிப்போட
கானென்று உயருமே பொன்னுதானுங்
கருணைபெற வுயர்ந்ததொரு பொன்னினேடே
வானென்ற தங்கமது இடையேசேரு
வடிவாகத் தங்கமா மென்னசொல்வேன்

நானென்ற வாணுவத்தை வீட்டுப்போடு
நலமாகப் பார்த்தாக்கா லெல்லாமாமே. சுசுஅ
தைலமகிமை தேவிசொல்ல தேரரெனக் குபதேசிக்க
உலகர் பிழைக்கச்சொன்னே னிதை யிரண்டு
காண்டமும் பார்த்துச்செய்.
ஆகுமே தைலத்தின் பெருமைதன்னை
யாரனலு முடியாது ஆத்தாள்சொன்னுள்
வாகுமே யெனையாண்ட தேரர்தானும்
வடிவாக வடியேற்குப் பாகங்காட்ட
ஊகுமே யுலகவா திக்குத்தானு
முண்மையா யிக்காண்டந் தனிலேசொன்னேன்
தாகுமே யிருகாண்ட. மொத்துப்பார்த்துத்
தாக்கிடவே வேதைமுகந் தாக்கிப்பாரே.சுசுசு
செம்புக்குஅரக்குக்குச் சாயம்போடுவதுபோல் நாகஜ
யரீராலுந் தங்கத்தாலுஞ் சாயம்போடவாதசித்தி.
தாக்கிப்பார் வாதமது செய்தாற்கேளு
தடையறவே யரக்குக்குச் சாயம்போல
நோக்கியே போட்டாக்காற் சாயமேறும்
நுண்ணிமையாய் வாய்ப்பேச்சாலொன்றுமில்லை
வாக்கிறற் சொன்னுக்காற் சாயமாமோ
வடிவுபெறச் சாயத்தைக் கண்டுபார்த்து
நோக்கியே நாகமென்ற ஜயரீரோடே
நுண்ணிமையாய்ச் செம்புக்குச் சாயம்போடே
சாயமே போடுவது அரிதேயல்ல
சாயத்தில் மகாசாயந் தங்கச்சாயம்

ஆயமே கண்டாக்கா லாயங்கேட்பா
ரடைவுகெட்ட வாதிகள்தான் காணைமாட்டார்
மாயமா மென்றுசொல்வார் வாதந்தன்னை
மதிகெட்டுத் திரியாமற் சாத்திரத்தை
நாயமாய்ப் பார்த்திடவே வாதமாகும்
நன்மையாய்ப் பார்த்தவனே சித்தனுமே. சுஎக

சித்தர் முதலாலே ரின்னின்னதைப் பார்க்க வேண்டுமெனல்.

சித்தனுய்ப் போகவென்றுல் ஜயநீர்பாரு
சிறப்பாகப் பொன்னுக்கு ஆதியாதி
முத்தனுய்ப் போகவென்றுல் ஞானந்தன்னை
முடிவாக வுழைத்திடவே முத்திமுத்தி
பத்தனுய்ப் போகவென்றுல் யூகிநூலை
பார்த்திடவே சித்தியாம் பலனுமாகும்
நத்தியே வாதமென்ற வெள்ளந்தன்னை
நலமாக வுழைத்தாக்காற் சித்தியாமே. சுஎஉ

நாகச்செம்பு வேதை.

சித்திபெற நாகத்தின் செம்புகேளு
சிறப்பாக துரிசியது பலமோபத்து
முத்திபெற நாகமது பலமிரண்டு
முக்கியமா யிரதமது பாதிசேர்த்து
நத்தியே யுருக்கிரண்டும் புட்டுபண்ணி
நலமாக நாகத்தில் முக்கால்கெந்தி
வித்தகமாய்ச் சூடனரை வீரங்காலாம்
விதமாக நிறுத்துமே கல்வத்திட்டே. சுஎந

கல்வத்தி லிட்டுமே கடைநீராலே
கதிபெறவே முச்சாம மரைநேர்பாகம்
நல்லொத்து வரைத்துமே துரிசிமேலே
நாடியே கவசமது கட்டித்திரு
வில்லொத்து அதன்மேலே கிளிஞ்சிற்சுன்னம்
விதமாகக் கட்டியே காயவைத்து
பல்லொத்து மண்கவச மேலேகட்டி [சூஎச
பதிவான கஜபுடமாய்ப் போட்டுவாங்கே.

வாங்கியே மேற்கவசந் தள்ளிப்போட்டு
வகையாக நிறுத்துமே சொல்லக்கேளு
ஏங்கியே போகாமல் தங்கரேக்கு
இதமாகச் சரியாகச் சேர்த்தரைத்து
பாங்கியே நேர்கார மிட்டுநல்ல
பதிவாக வுருக்கிடவே செம்புமாகும்
தாங்கியே யிச்செம்பை வேடம்பண்ணி [சூஎடு
தடையறவே காதுதனிற் போட்டுக்கொள்ளே.

கொள்ளவே பசிவந்த வேளைதன்னில்
கூருக விச்செம்பை வெள்ளிமேலே
அள்ளவே யிருபதுக்கு ஒன்றுதானு
மடைவாகக் கொடுத்தூத வேழுமாற்று
நள்ளவே யிதைவிற்று செலவுசெய்து
நலமான ஞானவழி யடுத்துநில்லு
கள்ளமாய்ப் போகாமற் செலவுசெய்து
கனிவாக வுபரசத்தைத் தேடிக்கொள்ளே.சூஎசூ

காகச்செம்பு வேதையை செலவுக்குவைத்துக்கொ
ண்டு ரசகுளிகைசெய்து செம்பைப்பார்.
தேடியே கிடைத்தமட்டுஞ் சம்பாதித்து
ஜெயமான குளிகை சாரணையைத்தீரு
ஆடியே யூட்டிடவே குளிகைதானு
மம்பரத்தி லேறியே பறக்கும்பாரு
நாடியே குளிகைதான் கொடியவேகம்
நலமான ஆட்டெல்லாம் சூதத்தாட்டு
வாடியே திரியாமற் செம்பைப்பாரு
வடிவான ரவியைத்தான் வலுமைபாரே. சூளை

செம்பைப்பார்த்து அதற்குத் தங்கச்சாய மேற்றுமல்
வாதிகள்புரண்டு மோசம்போ யழுகிறார்கள்.

செம்பைத்தான் பாராமல் வாதிமார்கள்
ஜெயமான சாயத்தை யறியாதாலே
வம்பாக வயமுடனே செம்பைச்சேர்த்து
வடிவாக மதிதனிலே கொடுத்துஊதி
தெம்பாக தங்கத்தைச் சேர்க்காதாலே
திடமில்லை யென்றுசொல்லி யெறிவார்பாரு
கம்பாக விடக்கெடுத்த நாயைப்போலே
கனிந்துமே யழுதிடுவார் கலனுமாமே. சூளை

கலனைப் போகாமல் யூகிநூலே
கலந்துமே பார்த்திட்டு செம்பைத்தானும்
பிலனைச் செய்திட்டு வேதைபோடு
பிதற்றியே திரியாதே யுற்றுப்பாரு

வலமாக வாதிகள்தான் தங்கத்தாயை
வலுவாகச் சேர்க்காதே போனதாலே
தலமாக வாதந்தான் புறண்டுபோச்சு
தப்பாமே செய்துமே தாக்கிடாயே. சுஎசு

செம்பை முந்திக் கரியாய்ச்செய்து தங்கஞ்
சேர்த்து மதியிற்கொடுக்க வேதை.

தாக்கிடவே செம்பைமுந்திக் கரியாய்ப்பண்ணி
தடையறவே நாகமென்ற ஜயநீரோடே
நோக்கியே சேர்த்துமே தங்கத்தோடே
நுட்பமாய் சேர்த்திடவே மதிபழுக்கும்
வாக்கிடவே புடமிறங்குங் கலனுமில்லை
வடிவான வாதமென்ற அங்கந்தானும்
நோக்கிடவே வந்திடுங்காண் பொன்னுமாச்சு [சுஅ0
நுட்பமாய்ப் போக்கறிந்தால் வேதையாமே.

புறட்டுவாதி களீயத்தைச் சேர்க்கச்சொல்லி மோசஞ் செய்வது.

வேதைதானிப்படிப் பாராமல்வாதி
விரைந்துமே யீயத்தை விட்டுவுதி
பாதைதான் போய்ப்பார தென்பார்லோகர்
பதையாமற் பொய்சொல்லி திரிவாரப்பா
காதைதான் கதைதானும் பேசிப்பேசி
கடூரமாய்ச் சொல்லியே வேடங்கொள்வார்
வாதைதான் படாமலே தங்கத்தாயை
வடிவாகச் சேர்த்திட்டால் வயணமாமே. சுஅக

வயணமாம் வாதிதான் செம்பெடுக்க
வகையறியா மற்றுலும் பொய்கள்சொல்லி
நயமாக வாதம்வரு மெனக்கதென்று
நன்மையா யுரைத்துமே பணம்பிடுங்கி
அயமான ததுகொண்டா வென்றுசொல்லி
யடைவாக வுருக்கிப்பார் தட்டான்போலே
கயமாக வெடுத்துமே பார்த்தெறிந்து
கடையாக வலைந்துமே மாளுவாரே. சுஅஉ

தங்கத்தை நல்லநினைவோடு சேர்த்து வேதையாடு.
மாளாம லிருக்கவல்லோ நாகம்பாரு
மாண்டிறந்து போகாமற் செம்பைப்பாரு
தாளான தங்கத்தைப் பார்த்துக்கொள்ளு
தடையற்று வேதைமுகந் தனியுமாகும்
வாள்போலே வந்திடுங்காண் வாதசித்தி
வகையான சித்தியெல்லாந் தங்கத்தாலே
கூழ்போலே யுன்னினைப்பை தள்ளிப்போட்டு
குணமாக நல்நினைவைக் கண்டுதேறே. சுஅந

மனதை நிலைப்படுத்தி கைபாகந் தவறுமற் செய்தாகச்
செம்பெடுத்துக்கொள் வாதசித்தி யுண்டாகும்.

தேறவே மனதைநீ யொக்கப்பண்ணி
செய்தொழிலைப் பாகமாய்ப் பண்ணித்தேர்ந்து
ஆறவே யடிக்கெல்லாஞ் சோதித்தேறி
யறிவான வாதத்தைச் சுட்டுத்தேறு
காறவே வாதம்வந்தால் ஞானமாகும்
கைவிடாப் பாகத்தைக் கண்டுதேறு

நாறவே நாகத்தின் செம்பைப்பாரு
நலமான வாதசித்தி நவிலுங்காணே. சூஅச
தட்டுவகை சீன வெண்காரவெடிரசஜயநீர்.
நவிலுமே சகலசரக் குடனேகட்ட
நாதாந்த ஜயநீர்தா னென்றுகேளு
கவிலுமே சினமது பலமும்பத்து
கனிவாகப் பொரித்தெடுத்துக் கல்வத்திட்டு
தவிலுமே வெண்கருவு மெருக்கம்பாலுந்
தனேவிட்டு மூன்றுநாள் வைத்துப்பாரு
பவிலுமே தெளிந்ததுவு நீருமாகும்
பதிவாக நீர்விட்டு சீனத்தாட்டே. சூஅடு
ஆட்டியே வில்லைதட்டிக் காயப்போடு
அடைவாகப் பெரியபுடம் போட்டுத்திரு
நாட்டியே கடுஞ்சுன்னஞ் சீனச்சுன்னம்
நலமாக வெடுத்துமே சொல்லக்கேளு
காட்டியே வெண்காரம் பலமும்பத்து
கனிவாகப் பொரித்தெடுத்துச் சொல்லக்கேளு
தாட்டிகமாய் சின்சுன்ன மிடையேசேர்த்து
தடையறவேவெண்கருவாலரைத்துக்கொள்ளே.
அரைத்துமே வில்லைகட்டி ரவியிற்காய
வன்பாகப் புடம்போடு எடுத்துப்பாரு
புரைத்துமே நீறியது கருமையாகும்.
போக்கோடே யெடுத்துமே சொல்லக்கேளு

நரைத்துமே வெடியுப்புப் பலமும்பத்து
நலமான சினமது இருபத்தைந்து
வரைத்துமே சட்டியிட்டு நீரைவாங்கு
வகையாகப் புகைநீரிற் சேருஒன்றே. சுஅள

கட்டுவகை ஜயநீரால் கள்ளிப்பால் முறித்து லிங்கமு
தலிய சரக்குக்குச் சுருக்கிட்டுருக்கி வேதையாடு.

ஒன்றுமே விட்டுமே சொல்லக்கேளு
உறுதியாய்ச் சூதமது விராகன்ரண்டு
கண்டுமே போட்டுப்பார் கரைந்துபோகுங்
கனிவாக சினம் வெண்காரச்சுன்னம்
தன்றுமே பலம்நிறுத்து நீரிற்போட்டு
தடையறவே கலக்கியே வைத்துக்கொள்ளு
நன்றுமே பாகமது சொல்லக்கேளு
நலமாகக் கள்ளிப்பால் படியும்வாங்கே. சுஅஅ

வாங்கியே திராவகத்தை யதிலேயூற்றி
வைத்திடவே பால்முறிந்து ஜலமதாகும்
தேங்கியே திரியாதே வைத்துக்கொண்டு
சிறப்பான லிங்கமுதல் பூரம்வீரம்
தாங்கியே தாளகமுஞ் சுருக்குப்போட
தடையறவே கட்டியே கரியிலாடும்
பாங்கியாம் லோகமுதல் பாச்சும்போது
பதிவான பொன்னுகும் பார்த்திடாயே. சுஅசு

சரக்குகட்டினுல் வாதசித்தி கட்டாட்டால் வாதசித்தியில்லை.

பார்த்திடவே சரக்குத்தான் கட்டினுக்கால்
பண்பான பொன்னுகும் பாருளோர்க்கு

ஏர்த்திடவே கட்டாட்டாற் பொன்னுமில்லை
யேழைமதி போகாமற் கட்டியாடு
நார்த்திட்டால் நெல்லாகும் பத்தையிட்டால்
நலமாக நெல்லாகா பதறுமாகும்
கோர்த்திட்டால் வாதமது ஏவல்கேட்குங்
கோடிவரை யப்படியே யோடுந்தானே. சுகூ0
நிராவகத்தாற் சுன்னத்தாற் கட்டுவகை முதலி
யவாய் வாதஞ் சித்திக்கும்.
ஓடவே புகைநீராற் சுன்னந்தன்னு
லுசத்தியாய் கட்டாகு மெழுகுமாகும்
பாடவே லோகங்கள் பழுக்குமப்பா
பதையாமற் சரக்கைநீ கட்டியாடு
காடவே யேமமா மூப்புநீரால்
கணக்காக வர்ணமினி கண்டுகொள்ளு
ஊடவே பொன்னுண்டு இல்லாப்போது
லுண்மையில்லை சாத்திரமு மில்லைதானே. சுகுக
வாதத்திற் குப்புமுதல் வேண்டிய தின்னின்னதெனல்.
இல்லையென்று போகாம லுப்பைப்பாரு
இதமான நாகத்தின் ஜயநீர்பாரு
நில்லாதனிற் செய்ததொரு கெந்திபாரு
நிரமான நிராவகத்தின் கடைநீர்பாரு
வில்லையென ரவிபாரு சுன்னம்பாரு
வேதாந்த லிங்க்தி னிரதம்பாரு
சொல்லவில்லை யென்றுமே மலைக்கவேண்டாந்
தொல்லுலகி லாசாள்வீர் தொன்மைதானே.

வாத மொருவருடனுஞ் சொல்லாம லிரகசிய
மா யுழைத்துப்பார் சித்தியாகும்.
அரசாள நினைத்துமே வாதந்தன்னை
யழும்பாக வொருவருடன் சொல்லவேண்டாம்
உரசாளக் கோபத்தா லுன்னைத்தானு
முடனேதான் கொன்றிடுவா ருலகநீதி
இரசாகப் பாராமற் பாகமாக
வெப்படியு முழைத்துமே பார்த்துத்திரு
முரசான வாதம்வரும் ஞானமாகு [சுகுகூ
முற்றுணர்ந்தால் வாதமெல்லாஞ் சித்தியாமே.
சத்தியவான்கள் பாகமாய் முடிவுசெய்து வாத
சித்திபெற்று ஞானமுணர்ந்திருப்பார்கள்.
சித்தியா யாகவெல்முற் பாகமாக
சின்மயமாய் நிராதாரப் பொருளாய்நின்ற
முத்தியென்ற வாதத்தைப் பாகமாக
முடிவாகப் பார்த்தாக்காற் சித்தியாகும்
சத்தியவா னெறியாள ரவர்கள்செய்வார்
சரியான பொறியாளி கண்டுதேறி
வித்தகனா யிருப்பார்க ளுலகமீதில்
வீற்றிருந்து ஞானங்கள் பார்ப்பர்பாரே. சுகுஎ
மறைத்தபொருள்களைப் பாகமாய்ச் சொல்லிவிட்டேன்.
பார்க்கவே வருகுமப்பா வாதநீதி
பாராட்டால் வருகாது வகாரமார்க்கம்
சேர்க்கவே களங்குதனில் தங்கந்தன்னை
சேர்ந்துமே தங்கமா மயங்கவேண்டாம்

ஊர்க்குருவி போலவே வோடவேண்டா
முண்மையிது பாகத்தை யுழைத்துப்பாரு
மார்க்கமாய் செய்திடவே வாதமாகு [ரே. சுகுரு
மரைத்தகரு வழலையெல்லாம் சொன்னேன்பா
புத்தியில்லாவிட்டால் வாதம்பொய்யென்னுதே நரக
முண்டாம் வாதங்கைவந்தால் கற்போலிரு.
சொல்லிடவே புத்தியாற் கண்டுகொள்ளும்
சுணைகெட்ட வாதிகளே காணுப்போலும்
மெல்லிடவே வாதம்பொய் யென்றுசொல்ல
வேண்டாங்காண் நரகமுண்டாந் தோஷமாகும்
அல்லிடவே வகாரத்தைக் கண்டபோது
அடைவான கற்போலே யிருக்கவேணும்
சொல்லாத வார்த்தைகளைச் சொல்லவேண்டாம்
சிறப்பான முடிவைத்தான் கண்டுபாரே. சுகுரு
கல்லுப்பு திராவகமு மதன்மகிமையும்.
கண்டுபார் கல்லுப்புத் திராவகத்தைக்
கழுகனிவன் சூதமது கட்டிப்போகும்
தொண்டுபா ரிரதமது நீறிப்போகும்
தொல்லுலகில் ரசவாத மேவல்கேட்கும்
வண்டுபார் லிங்கந்தான் நீறிப்போகும்
வலுவான திராவகந்தான் வண்மைமெத்த
துண்டுபார் மயங்காமல் வைத்துக்கொள்ளு
துடியான சரக்கெல்லா மாளுந்தானே. சுகுளே
மாளவே சொல்லுகிறேன் திராவகத்தை
மயங்காமல் வாதிகளே வைத்துத்தேறும்

ஆளவே கல்லுப்புப் படியும்பத்து
அப்பனே சீனமது படியும்பத்து
தாளவே யிவ்விரண்டும் பழச்சாற்றாலே
தாட்டிகமா யரைத்துமே குடத்திலிட்டு
வாளவே வாலைபிட் டுளுந்துசீலை
வகையாக வடுப்பேற்றி யெரித்திடாயே. ௬௯அ

கல்லுப்பு திராவகத்தால் லிங்கச்சுன்னமும் வீரரசமும்.

எரித்திடவே நீர்வருகும் சிகப்புநீரா
மின்பமாய் வடித்துமே வைத்துக்கொள்ளு
அரித்திடவே லிங்கமது பலமும்பத்து
அடைவான திராவகத்தா லரைத்துவைக்க
நரித்திடவே நீறியது சுன்னமாகு
நலமான வீரமது பலமும்பத்து
பரித்திடவே யரைத்துவைக்க ரசமுமாகும்
பகரரிய ரசமதனை யெடுத்துகொள்ளே. ௬௯௯

வீரரச நாகக் கல்லுப்புத்திராவகஞ் சேர்ந்த
ஜயநீர் அல்லது நாகத்திராவகம்.

கொள்ளவே வீரரசம் பலமும்பத்து
கொடிதான நாகமது பலமும்பத்து
மெள்ளவே யிரண்டுமொன்றா யுருக்கிச்சேர்க்க
மேன்மையாய் நாகமது கட்டிப்போகுந்
துள்ளவே வீரமரை சேர்த்துஆட்டி
துடிப்பான கடைநீரை விட்டுப்பாரு
கள்ளவே பொங்கியது சிவந்தநீறாம்
காரணமாய்ச் சிவந்தநீ ரிறுத்துக்கொள்ளே.

அயச்செம்பு.

இறுத்துமே யப்பாலே வைத்துக்கொண்டு
இதமான வின்னமொரு செம்புசொல்வேன்
நறுத்துமே வயமதுவும் பலமும்பத்து
நலமான துரிசியது பலமுநூறு
கறுத்துமே கவுரியது பலமும்பத்து
கனிவாகப் பழச்சாற்றுல் ஜாமம்பத்து
ஒறுத்துமே யரைத்திடுநீ வில்லைபண்ணி
புண்ணையாய்ச் சுண்ணும்பு சீலைசெய்யே. எoசு

அயச்செம்பு சிந்தூரமும் வேதையும்.

சீலைசெய் குக்கிடத்திற் போட்டுவாங்கு
சிறப்பாக வுருக்கிடவே மணியாய்நிற்கும்
வாலைசெய் வெங்காரஞ் சேர்த்துருக்கு
வகையாக வெடித்துமே சொல்லக்கேளு
ஆலைசெய் நின்றவிடை சூடன்சேர்த்து
அடைவாகப் பாணியா லரைத்துவில்லை
நாலைசெய் பெரியபுடம் போட்டுவாங்கு
நலமாகச் சிகப்பாகு நாடிப்பாரே. எoஉ

நாடிப்பார் நாகரச ஜயநீர்தன்னை
நலமாகச் சிந்தூரந் தனிலேயிட்டு
கூடிப்பா ரரைத்துபனி ரண்டுஜாமங்
குணமாக வில்லைகட்டிப் புடத்தைப்போடு
வாடிப்பார் முருக்கம்பூப் போற்சிந்தூரம்
வடிவான சிந்தூரம் விராகனென்று

மூடிப்பார் தங்கத்தி லிடையேதாக்கு
முடிவான மதிபிருபத் தொன்றுதாக்கே. ௭௦௬

அயச்செம்பு சிந்தூரமகிமை.

தாக்கிடவே தங்கமாம் வேதையாகுந்
தகைபெறவே தங்கமென்ற தாயைவிற்று
நோக்கிடவே செலவுசெய்து ஞானம்பாரு
நொடிக்குள்ளே காயத்தை யுறுதியாக
வாக்கிடவே ஞானம்வந்தால் ஞானமாகும்
வடிவான ஞானத்துக் கிதுவேயாதி
பாக்கிட்டா லக்கமுகா குமித்தைப்போலே
பதிவான தங்கத்தைச் சேர்த்துக்கொள்ளே. ௭௦௪
சேர்த்திடவே தங்கமாம் தங்கஞ்சேரு
சேராட்டா லொன்றுமில்லை யெரிந்துபோகும்
சார்த்திடவே யாறுதலம் வெளியாய்த்தோணும்
சதிபெறவே நிராகாரத் துள்ளேசேர்க்கும்
வார்த்திடவே வழியோடே சுழியிலேறும்
வடிவாக நூலையுந்தா னிறுகக்கொள்ளு
பார்த்திடவே சுழுமுனையில் நாட்டம்பாரு
பதிவான வாசியது இறுக்கிக்கொள்ளே. ௭௦௫

தங்கத்தைச்சேர்த்து கரிசெய்யாவிட்டால் வாதமில்லை.

இருக்கிறது போலவே தங்கத்தாயை
யிதமாகச் சேர்த்தாக்கால் வாதமாகும்
பெருக்கவே செய்துமே யுலகந்தன்னிற்
பேணியே யிருந்திடவே வாதசித்தி

திருக்கவே யவசரத்திற் செய்துகெட்டுத்
திடமாகப் போகாமற் பாகமாக
நருக்கின்ற செம்பொன்னைக் கரியாய்ப்பண்ணி
நலமான சித்திபெற் றிருந்திடாயே. எ0சு

சூதத்தைக்கட்டி நாககம்பத்திற்பூட்டி வீராராஜனும் புகைநீர்
மந்திரியுந் தங்கத்தாயும் சேர்த்தால் வாதசித்தியாம்.

இருந்திடவே சூதத்தைக் கட்டிக்கொள்ளு
இதமான நாகமென்ற கம்பந்தன்னில்
பொருந்திடவே கட்டியே விலங்குபூட்டு
பொன்விலங்கு என்றுக்கால் வீராசன்
நருத்திடவே புகைநீரு மந்திரியாச்சு
நலமான மந்திரியாற் பொன்னுமாச்சு
அறிந்திடவே தங்கமது தாயுமாச்சு
ஆடலாம் வெகுகோடி வித்தைதானே. எ0எ

வாதவித்தை யட்டகர்மத் தொன்றெனல்.

வித்தைதா னட்டகர்ம மெட்டுக்குளே
விதமான வாதவித்தை யொன்றதாச்சு
பத்தைதான் வாதவித்தை யருமைமெத்த
பகரரிது கண்டுகொண்டா லனந்தம்போக்கு
முத்திபெற வேணுமென்றுல் வாதந்தன்னை
முக்கியமா யுழைத்தெடுக்கப் பலனுமாகும்
சித்திபெற வாணுவத்தை நினைக்கவேண்டாஞ் [எ0அ
சிறிதென்று விட்டாக்காற் பாழாய்ப்போமே.

நாகரசகெந்திகுரு இதற்கு(எகசு)வது பாடலிற் பஞ்சாக்ஷி
ருத்திரன் நாகரச பாசுபதனென்று பெயர்கூறுகின்றது.

பாழாகப் போகாமல் நாககெந்தி
பரிவான குருமார்கம் பகரக்கேளு
தாளாக நாகமது பலந்தானேழு
தடையற்ற சூதமது பலந்தானேழு
வாளாக விரண்டுமொன்று புரிக்கிச்சேர்க்க
வகையாகப் புட்டாக நொறுங்கிப்போகும்
ஆளாக கெந்தகமும் பலமுமைந்து [எ0சு
அன்பான வீரம்ரெண் டரையுஞ்சேரே.

நாகரச கெந்தி குருவிற்சேர்க்க அயத்தருசு
தாளக சிந்தூர வேதை.

சேர்த்துமே கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
சிறப்பான கடைநீரை விட்டுஆட்டி
பார்த்துமே யெட்டுநா ளரைத்துக்கொண்டு
பதிவாக வின்னமொரு சேதிகேளு
நார்த்துமே அரப்பொடியும் பலமும்பத்து
நலமான துரிசியது பலமுநூறு
வார்த்துமே தாளகமும் பலமும்பத்து
வடிவான பழச்சாற்றி லரைத்திடாயே. எக0

அரைத்துமே பனிரெண்டு ஜாமந்தானு
மடைவாகக் குகையிலிட் டுருக்கித்தீரு
நரைத்துமே வெள்ளிபோற் கண்விட்டாடு
நலமான மணியெடுத்து சொல்லக்கேளு

வரைத்துமே சூடனரை சேர்த்தரைத்து
வடிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
பரைத்துமே சிவந்திருக்குஞ் சிந்தூரத்தை
பதிவான நாகரச குருவிற்சேரே. எகக

சேர்த்துமே பனிரண்டு ஜாமந்தானும்
ஜயமாக விழுத்தரைத்து வில்லைகட்டி
பார்த்துமே ரவியிட்டுக் காயவைத்து
பதிவாகச் சுண்ணாம்பு சீலைசெய்து
நார்த்துமே குக்கிடத்திற் குருவாய்நிற்கும்
நலமான குருபெருமை சொல்லப்போமோ
கார்த்துமே குருபேர்பஞ் சாக்னிருத்ரன்
கனிநாக ரசபாசு பதமுமாமே. எகஉ

ஆமேதான் குருவெடுத்துத் தங்கத்தூட்டு
அடைவான தங்கம்போ லிருக்கும்பாரு
வாமேதான் மதியிருபத் துக்குஒன்று
வளமாக இட்டிடவே தங்கமாகும்
தாமேதா னதாக்கள் மொழிந்தமார்க்கம்
தடையறவே யிக்காண்டந் தனிலேசொன்னேன்
பூமேவுங் கைபாக மாகச்செய்து
புலப்படவே ஞானத்தைப் பார்த்திடாயே. எகங

சவுக்கார வைப்பு.

பார்த்திடவே சித்தான சவுக்காரத்தை
பாடுகிறேன் சாத்திரத்தி லில்லையில்லை
வர்த்திடவே யூகியென்று பேர்படைத்து
இன்பமாய் கைபாக வரிசையாக

கார்த்திடவே ஈசனுமே யெனக்குச்சொன்னார்
கருத்தான சித்தரெல்லா மரைத்தசொல்லை
நார்த்திடவே யிக்காண்டந் தனிலேசொல்வே
னாதாக்கள் சொன்னபடி நாடிப்பாரே. எகச

நாடினேன் சித்திரைவை காசிக்குள்ளே
நலமான செங்கதிரோன் தன்னாற்பொங்கி
வாடியே நீறிடுமே பூனீர்தன்னை
வடிவாகப் பதக்குமே வாரியிட்டு
காடியே பாண்டத்தி லிட்டுத்தண்ணீர்
கனிவாக வொன்றுக்கு இரண்டுதண்ணீர்
பூடியே கலக்கியே மூன்றுநாள்வை
பிசகாமற் றெளிவிறுத்துக் காச்சுகாச்சே. எகரு

காச்சியே யெடுத்தபின் சொல்லக்கேளு
கனிவாகப் பொடித்துமே புகைநீரூற்றி
தாச்சியே வில்லைபண்ணிக் காயப்போடு
தடையறவே யகலிட்டுப் புடத்தைப்போடு
பாச்சியே யெடுத்துவைத்துப் பின்புகேளு
பதிவான சீனத்தைப் பொரித்துக்கொண்டு
நாச்சியே திராவகத்தா லரைநேர்ஜாமம்
நலமாகப் பனிரண்டு ஜாமந்தானே. எகசூ

அரைத்துமே ரவிதனிலே காயப்போடு
அகலிட்டு அன்பதெரு அடுக்கிப்போடு
துரைத்துமே சீனமது சுன்னமாகுந்
துடியான சுன்னத்தை நிறுத்துக்கொண்டு

வரைத்துமே யிடைசமனுப் கல்லுப்பைச்சேர்
வகையாகத் திராவகத்தாற் பத்துஜாமம்
நரைத்துமே யரைத்துவில்லை காயவைத்து
நலமாகப் பெரியபுடம் போட்டுவாங்கே. எகள்
வாங்கியே கல்லுப்புச் சுன்னமாகும்
வகையாக வயிரம்போ லிறுகிக்காணும்
தேங்கியே மூன்றுவகை சேர்க்கக்கேளு
திடமாகப் பூனீறு சுன்னநாலு
பாங்கியே சீனத்தின் சுன்னமொன்று
பதிவான கல்லுப்புச் சுன்னமொன்று
ஆங்கியே கல்வத்தி லிதனைப்போட்டு [எகஅ
அடித்துமே யரைப்பதற்கு ஆண்மைகேளே.
கேளுமே திராவகத்தா லாட்டிநீயும்
கெடிபடவே வீரங்கால் பலமும்போட்டு
தாளுமே சாதகமாய்ப் புடத்தைப்போடு
தடையறவே யெடுத்துப்பின் வீரஞ்சேரு
காளுமே யிப்படியே யைந்துபோடு
கனிவான சவுக்காரம் சுன்னமாச்சு
வாளுமே சரக்கெல்லாங் கெஞ்சிகட்டும்
வடிவான பாகத்தைக் கண்டுதேறே. எகசு
தேறவே கருவெல்லா மெதுவாலாச்சு
திரமரனை ஊசரத்தின் குருவாலாச்சு
ஆறவே குருவாலே கோடியாடும்
ஆச்சரியம் கூகூகூ கொள்ளைகொள்ளை

பாறவே சரக்குக்கு நமன்போலாகும்
பார்க்கவே யிதுபோர போக்குமெத்த
வாறவே யெல்லாமு மிதனாலாச்சு
வடிவான சவுக்காரச் சுன்னத்தாட்டே. ௭௨0

சவுக்கார வுப்புக்குரு.

ஆட்டான சவுக்கார குருத்தான்செய்யு
மடைவான மார்க்கத்தை சொல்லக்கேளு
நீட்டான முன்வைத்த சவுக்காரந்தா
நினைவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
காட்டான வெருக்கம்பால் படிதானொன்று
கனிவாக வண்டசுனம் பலந்தானொன்று
தாட்டான புகைநீரு பலந்தானொன்று
தடையறவே சீனத்துச் சுன்னமொன்றே. ௭௨௧

ஒன்றான சவுட்டுவில்லை பலமுமொன்று
ஒழுங்காகக் கற்சுண்ணம் பலந்தானாலு
வன்றாக நல்லதண்ணீ ரெண்டுசேரு
வாகாக நீர்தனிலே கற்சுன்னத்தை
நின்றாகக் கலக்கியே நீரிறுத்து
நிலைவரமாய் முன்சொன்ன நாலுதானும்
பன்றாக வகைக்கியொரு பலநிறுத்து
பதிவாகக் கலக்கியே வைத்துக்கொள்ளே. ௭௨௨

கொள்ளவே வீரமது காசிரண்டு
குணமான சாரமது காசிரண்டு

உசுஅ பூசிமுனி வாதகாண்டம்

நள்ளவே பூரமது காசிரண்டு
நலமான புழுகதுவுங் காசிரண்டு
பள்ளவே குக்கிடத்தின் மலமிரண்டுகாசு
பாங்கான குருவண் உன்பத்திரண்டி
துள்ளவே வெள்ளூரமுங் காசிரண்டு
துடியான சூதமது காசிரண்டே. எஉசு

ரெண்டுமே சுண்ணும்பு நீரினுலே
அழுத்தியரைத் தொன்றுகக் கலக்கிக்கொண்டு
வண்டுமே யெருக்கம்பால் படிதான்விட்டு
வடிவான அண்டமது அன்பத்தொன்று
கண்டுமே வெண்கருவை கூடவிட்டு
கலக்கியே குச்சால்மத் தித்துவைக்க
கொண்டுமே கொப்பளிக்குங் கருங்காரம்நீர்
குணமாக விறுத்துமே சொல்லக்கேளே. எஉச

சொல்லவே தெளிவிறுத்துப் பாகங்கேளு
சொற்பெரிய சவுக்காரம் பலமோபத்து
மெள்ளவே போட்டுமே கரைத்துக்கொள்ளு
மெதுவாகக் கவர்கழியால் கடையவெண்ணெய்
நல்லவே பொருமிவரும் வழித்தெடுத்து
நலமான பிங்கானிற் போடுபோடு
கல்லவே மூன்றுநா ளாகமட்டுங்
கடுசான வெண்ணெயைத்தான் வாங்குவாங்கே
வாங்கியே மூன்றுநா ளாகமட்டும்
வடிவாகக் கண்டதெல்லாம் வெண்ணெய்வாங்கி

தாங்கியே ரவியிட்டுக் காயப்போடு
தனியான நவாசாரஞ் சரியிடைக்குப்
பாங்கியே யாட்டியே யைந்துநாள்தான்
பதிவாக வகலிட்டுப் புடத்தைப்போடு
ஆங்கியே புடம்போட சாரங்கட்டு
மடைவாக முத்துப்போல் வெள்ளையாமே.எஉசு
சவுக்கார வுப்பு ஜயநீர்செய்து சரக்குகள்கட்டி வேதையாட.
ஆமென்ற சாரத்தைப் பனியில்வைத்து
அடைவாக ஜலம்விடுநல் வீரம்பூரம்
பாமெனவே யெடுத்துவைப்பாய் பதனமாக
பதிவான கம்பியுப்பு தோய்த்துப்போடு
காமெனவே சினத்தை தோய்த்துப்போடு
கடிதான வெண்காரந் தோய்த்துப்போடு
வாமெனவே பாறையுப்புத் தோய்த்துப்போடு
வடிவான சிலமதை தோய்த்துப்போடே.எஉஎ
போடவே சூதம்செவ் வீரங்கெந்தி
புகழான லிங்கயொடு தாரம்போடு
ஆடவே அறுபத்து நாலுங்கட்டு
அஞ்சாம லவணமது கட்டிப்போகும்
தாடவே வுபரசாறுற் றிரண்டுபத்து
சத்தாகு மூர்ப்பனமாய்க் கட்டிப்போகும்
பாடவே சுருக்கிடவே ஆட்டுவாட்டு
பதிவாக சவுங்காரம் கடைந்தநீரே. எஉஅ

நீறிலே வளையலுப்பை யரைத்துக்கொண்டு
நிலவரமாய் காயவைத்து மண்மரப்பில்
ஆறிலே புடம்போடு வயிரமாகு
மன்பான சரக்குகளில் வேதைகோடி
காறிலே சத்துகளோ கோடாகோடி
கனிவான மெழுகதுவுங் கோடாகோடி
தாறிலே ஜயநீருஞ் சுன்னங்கோடி
தடையறவே பாகமது கோடிதானே. எஉசு

சவுக்காரகுரு வுபதேசித்த குருபரம்பரை.

தானென்ற சவுக்கார மரப்பையெல்லாம்
சதாசிவன்முன் தாய்தனக்கு அருளிச்செய்ய
பானென்ற தாய்தானு நந்திக்குத்தான்
பதிவான நந்திதம் மந்திரிக்கு
கானென்ற தன்மந்திரி அகஸ்த்தியர்க்கு
கனிவான அகஸ்தியருங் கருணைகூர்ந்து
வானென்ற புலத்தியர்க்கு வடிவுசொல்ல
வடிவான புலத்தியரும் வரைந்திட்டாரே, எஈ0

வரைந்திட்டார் புலத்தியரும் தேரருக்கு
வகையான தேரருமே யூகிக்குத்தான்
கறந்திட்ட பால்போல சவுக்காரத்தை
கனிவாகப் பாகமா யிக்காண்டத்தில்
துறந்திட்டேன் சுடுவாதி பிழைக்கவேண்டி
தொல்லுலகி லரசாளச் சொல்லிப்போட்டேன்

அறைந்திட்ட பாகமாய்ச் செய்துக்கொள்ளு
அடைவாக யூகிமுனி யுரைத்தவாறே. எங

நாகக்கட்டு.

வாறுகேள் நாகத்தைக் கூட்டக்கேளு
வளமாகச் சுத்திபண்ணி வில்லைவைத்து
காறுகே ளப்பிரகங் காந்தமோடு
கனிவான வளையலுப்பு சத்திச்சாரம்
தேறுகேள் நவாசாரம் வீரங்காரம்
திறமாக வகைக்குமே பலநிறுத்து
தாறுகேள் சவுக்காரங் கடைந்தநீரால் [எஉ
தணிவாகக் குழம்புபோல் பண்ணிக்கொள்ளே,
பண்ணியே யுப்பாலே வைத்துக்கொண்டு
பதிவான நாகமது பலமும்பத்து
கண்ணியே யுருக்கியே சாய்த்துவாரீ
கனிவாக யிருபத்து வொன்றுதானு
நண்ணியே சாய்த்திடவே சீரலற்று
நலமாக விறுகியே கண்ணடங்கி
புண்ணியமா யிருக்குமது நாகந்தானும்
பிரபலமா யெடுத்துமே யப்பால்வையே. எஊ

நாகக்கட்டுந் தங்கமுஞ்சேர்ந்து பிட்டாக்கி ஜயநீர்செய்ய.

வைத்துமே தங்கத்தை தகடடித்து
வாகாகப் பழச்சாற்றுல் காவிதன்னை
தைத்துமே யரைத்துநன்றாய் பூசிப்பூசி
தனியாக வேழுதாங் காச்சிப்போடி

உத்துமே தங்கத்தை லேசாய்த்தட்டி
யுறுதியாய் நாகத்தை யுருக்கிக்கொண்டு
பைத்துமே பயத்தகட்டை மேலேபோட்டு
பதிவாக வுருக்கிடவே புட்டுமாமே. எஙச

புட்டுமே யெண்ணெய்குத்தி யுருக்கிக்கொண்டு
பேரான வீரரசம் பாதிசேர்த்து
கட்டுமே யெண்ணெய்ரொம்ப குத்திக்குத்தி
கனிவாக வுருக்கிடவே யுருகிநிற்கும்
தட்டுமே ரசத்தினிடை பாதிவீரம்
தடையறவே சேர்த்துமே பொடித்துக்கொண்டு
உட்டுமே கடைநீரு ஊற்றிவைக்க
உறுதியாய்ப் புகைந்துஜலஞ் சிகப்பதாமே.

நாகஜயநீரை மண்டலங்கழித்தெடுத்து சரக்குகளில்
சுருக்கிட மெழுகாகும் வேதையாகும்.

சிகப்புதான் மண்டலத்தில் வைத்துக்கொண்டு
ஜெயமான நீர்தனிலே சரக்குதேய்த்து
அகப்பதாம் விளக்குதனில் வாட்டினுக்கா
லடைவான சரக்கெல்லா மெழுகுமாகும்
தகப்பதா மெழுகெடுத்து செம்புநூறில்
தனித்திடவே மாற்றென்ன பத்துமாகும்
ஈகப்பதாங் காவிக்குப் புக்கிரங்குங்
கனமான ஜயநீர்தான் கர்த்தனுமே. எஙசூ

சித்தர்கள் சுன்னமுதல் சவுக்காரமீருகக் கோடா
கோடி வேதை செய்தல்.

கத்தனும் சுன்னத்தில் வேதைகோடி
கனமான பச்சைபினில் வேதைகோடி
பத்தனும் சுண்ணமதில் வேதைகோடி
பதிவான சவுக்காரங் கோடாகோடி
முத்தனும் புகைநீருங் கோடாகோடி
முனிவான களங்குவகை கோடாகோடி
சித்திரஞ் செய்வார்க ளிந்தவித்தை
சிறப்பான சவுக்காரச் சுன்னத்தாட்டே. எஉள

சவுக்காரத்தைவிட்டு வாதிகள்ளிகெடுதல்.

ஆட்டான சவுக்காரந் தன்னைவிட்டு
அடைவாக வழுவியென்ற ஜலத்தையூற்றி
பாட்டாகச் செய்திடுவா ருலகமாண்பர்
பதிவான வழலையைத்தான் மரைத்துப்பாடி
தேட்டென்ன வெள்பார்க ளுலகவாதி
திருடர்தான் சொன்னமுறை போலேபாரார்
காட்டாது காட்டியே வாதஞ்சுட்டு
கடைகெட்டே னென்பார்கள் சண்டிதானே.

மூடவாதிக ளொன்றைவிட் டொன்றைசெய்து கெடுதல்.

சண்டிதான் மெத்தவண்டி சுட்டுக்கெட்ட
தறுதறும்பன் சொன்னபடி செய்யாமல்தான்
முண்டியே யிதைவிட்டுப் பின்னையொன்று
முடிவாகப் பார்ப்பமென்று யோசிப்பார்கள்

கண்டிப்பாய்க் கேட்டுமே சவுகாரத்தை
கனமாக வழலைசொல்ல வேணுமென்று
தண்டியே கேட்டுமே திரிவாய்பாரு
தறுதுரும்பன் சொல்லுவா னில்லைதானே.எங்கு
சித்தா கடினமாயுரைத்த சவுக்காரவழலையை
க்காண்டத்தில் தெளிவாய்ச் சொன்னது.
இல்லையென்று போகாமல் வழலைதன்னை
யிதமாக விக்காண்டம் தன்னிற்சொன்னேனன்
றில்லையிலே சித்தர்தான் றொம்பவுண்டு
திறமாகக் கண்காணு திருப்பாய்பாரு
கல்லோவிலே வெகுகடினஞ் சவுக்காரந்தான்
கனமாகப் பாடினர் சித்தரப்பா
தொல்லையென்ற பாவிக்கு வாதமில்லை
தொடுமூடன் சொல்லுவான் கூர்ந்துபாரே.
யூகியென்று பெயர்வசித்துச் சித்தரிடம் வாது
செய்துதேறி குள்கை முதலிய பெருமை
காட்டி சிவயோகம்பொருந்தினேன்.
பாரேநீ யூகியென்று பெயர்படைத்து
பதிவான அண்டத்துச் சித்தரோடே
காரேநீ வாதுகள்தான் போட்டுத்தேறி
கனிவாகக் குளிகையுட வேகங்காட்டி
தாரேநீ துரிசிலுட கூர்மைகாட்டி
தன்மையாய்ப் புகைநீரு தன்மைகாட்டி
வாரேநீ கல்லுப்புக் கட்டிகட்டி
வடிவான சிவயோக மருவினேனே. எசக

யூகிமுனி வாதகாண்டம்

தேடியே பார்க்கையிலே யொன்றுங்காணார்
தேசத்தி லேயிருந்துமே பிச்சைவாங்கி
வாடியே மனநொந்து யேங்கியேங்கி
மகத்தான கைபாகந் தெரியாதாலே
நாடியே நினைவுதான் கெட்டுப்போகி
நாடாமற் சிலதுபேர் கெட்டார்தானே. எசச

இன்னார்க் கிந்நூல் கொடுப்பதுங் கொடாததுமெனல்.

கெடவேண்டா மிக்காண்டங் தன்னைத்தானுங்
கெட்டியாய்ப் பூசைபண்ணு கேள்விமெத்த
படவேண்டா மூத்தமமானுஞ் சீஷருக்கு
பதிவாகக் கொடுத்துமே புத்திசொல்லு
திடமான தறுதிரும்பல் கையில்தானுங்
திட்டமா யிதைதானுங் கொடுக்கவேண்டாம்
நடமான குணம்பாரு வணக்கம்பாரு
நல்லோர்க்குக் கொடுத்திடுமே நலமதாமே.

இன்னின்னதற் கிதுவில்லாமற்போனால் பயன்படாது.

நலமாகச் சவுக்கார மில்லாச்சுன்னம்
நாட்டினிலே தூறவெறி நகைப்பாஷாணத்தர்
பிலமாகக் களங்குக்குத் தங்குஞ்சேராப்
போனைக்கா லப்பாலே தள்ளிப்போடு
வலமாக வுப்பில்லாக் கட்டையெல்லாம்
வடிவாக வப்பாலே யகற்றிப்போடு
தலமாக வீரமில்லாச் சுண்ணமெல்லாந்
தாட்டிகமாய் தலைசுற்றி யெறியநன்றே. எசசு

சவுக்கார ஜயரீருக்கு வீரபூரங்களி— சரக்குகள்
கட்டி மெழுக்குமுதலியவாகும்.

நன்றுகச் சவுக்கார ஜயநீருள்ளே
நாகரீக மாய்வீரம் பூரமிட்டு
கன்றுகச் சரக்குவகை கட்டியாடி
கணக்காகு முறவாகுங் களங்குமாகும்
பன்றுள மூலிகையிற் கட்டாதப்பா
பதிவான குருப்போட்டாற் கட்டும்பாரு
நின்றுட வயதுதான் மெத்தவுண்டு
நீடுழி காலமெல்லா மிருக்கலாமே. எசள

கோடாசூரி வீரவைப்புக்கு வெடியுப்பு மே. 2. 1930
திராவகமும் ஷி வீரவைப்பும்.

இருக்கவே கொடாசூரி வைப்புக்கேளு
இதமாக முன்சொன்னே னின்னஞ்சொல்வேன்
தருக்கவே வெடியுப்புப் பலமும்பத்து
தனியான சீனமது இருபத்தைந்து
கருக்கவே யிரண்டுமொன்றாய் பொடித்துக்கொண்டு
காரணமாய் வாலியென்ற சட்டிமூடி
உருக்கவே கமலபத மெரித்தாயானு
ண்மையாய் நீரதுவும் வருகும்பாரே. எசஅ

வருகுமே வெள்ளைநீ தள்ளிப்போடு
வடிவான மஞ்சள்நீர் பிடித்துவைத்து
தருகுமே வெகுகாரங் கொடாசூரி
தாட்டிகமாய் முறைவைக்கத் தண்மைகேளு

கருகுமே வெடியுப்புப் பலமும்பத்து
கனிவான புகைநீரா லரைத்துஜாமம்
பருகுமே வில்லேபண்ணி யெரித்தாயானால்
பதிவாக வெரிந்துமே சுன்னமாமே. எசக

சுன்னமாம் சாரமது பலந்தான்பத்து
சுருக்கான புகைநீறு விட்டரைத்து
கல்லைமாள் சட்டியிட் டெரித்தெடுக்க
கனிவான சாரமது கட்டிப்போகும்
நல்லையமாய்ப் பீங்கானி லெடுத்துவைத்து
நலமான சீனமது பலந்தான்பத்து
வன்னமாந் திராவகத்தை விட்டுஆட்டி
வடிவாகப் புடம்போடச் சுன்னமாமே. எரு0

ஆமேதான் சினத்தை வேறவைத்து
யடைவான துருசதுவும் பலந்தானைவு
காமேதான் புகைநீரு விட்டரைத்து
கனிவாகப் புடம்போட்டு எடுத்துவைப்பாய்
நாமேதான் பூநீறு பலந்தான்பத்து
நலமாகப் புகைநீரை விட்டுஆட்டி.
வாமேதா னகல்வைத்துப் புடத்தைப்போடு
வடிவாக வெடுத்துமே யப்பால்வையே. எருக

வையப்பா அன்னமென்ற பேதிதானும்
வடிவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கையப்பா புகைநீரை விட்டுஆட்டி
கனிவாக வில்லைகட்டி காயப்போடு

கையப்பா பெரியபுடம் போட்டுநீயும்
நலமாக வெடித்துமே யப்பால்வைத்து
னையப்பா கல்லுப்புப் பலமும்பத்து
பதிவான புகைநீரா லரைத்திடாயே. எடுஉ

அரைத்துமே வில்லைகட்டிப் பெரியதாக
வன்பாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
தரைத்துமே கடுஞ்சுன்ன மூப்புச்சுன்னம்
தன்மையா யெடுத்துமே யப்பால்வைத்து
நரைத்துமே யின்னமொரு சேதிகேளு
நலமாகச் சூதமது பலந்தானெட்டு
கரைத்துமே கல்லுப்புப் பலந்தானெட்டு
கனிவாக சேர்த்தரைத்துப் பாகங்கேளே. எடுங

பாகமென்ன சொல்லுகிறேன் பாகங்கேளு
பதிவான நல்லதண்ணீர் விட்டுநீயும்
யோகமா யலம்பிடவே சுத்தியாச்சு
உண்மையா யிரதமதை யெடுத்துக்கொண்டு
சூகமென்ன சூதத்தை திராவகத்தில்
சுகமாக விட்டிடவே பூர்க்கும்பாரு
வேகமாய் காசியென்ற மேருக்கிட்டு
விதமாக வெரித்திடவே மஞ்சளாமே. எடுச

மஞ்சளத்தா னெடுத்துமே சொல்லக்கேளு
மயங்காமல் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
அஞ்சவே வெடியுப்புச் சுன்னம்ரெண்டு
அழகான நவாசாரஞ் சுன்னம்ரெண்டு

கஞ்சவே சூலத்தின் சுன்னம்ரெண்டு
கனிவான பேதியென்ற சுன்னம்ரெண்டு
மிஞ்சவே பூநீறு சுன்னம்ரெண்டு
மிதமான கல்லுப்புச் சுன்னம்ரெண்டே.
ரெண்டோடு துரிசிறுட சுன்னம்ரெண்டு
நேராக வெட்டையுந்தான் கல்வத்திட்டு
கண்டோடு நிராவகத்தா லரைத்துப்பத்து
கனிவாக ஜாமந்தா னிழுத்தரைத்து
பண்டோடு பரும்பீங்கான் தன்னிலிட்டு
பதிவாக வறுத்துமே மேருக்கிட்டு
வண்டோடு வாலுகையில் பதித்துவைத்து
வடிவாக வெட்டுநாள் தீயைப்போடே.

கோடாகூரி வீரவேதையு மகிமையும்.

போட்டுமே யெட்டுநாள் தீயைப்போடு
பொலிவாக வாரவிட் டுடைத்துப்பாரு
ஆட்டுமே சிவந்தனிற மாகக்காணு
மடிதனிலே யிருந்திடுமே யிந்தவீரங்
காட்டுமே செம்புநா றொன்றுக்குத்தான்
கனிவாக வொன்றிய மாற்றுகேளு
நாட்டுமே மாற்றுநூ றிருக்கும்பாரு
நலமான வெள்ளியைநீ யிடையேசேரே.
சேர்த்திடவே மாற்றுத்தான் தனித்துப்பார்த்து
சிறப்பாக மாற்றுமே யிறுக்குமப்பா
பார்த்திடவே யிவ்வீரம் சுன்னத்தெல்லாம்
பதிவாக அணுகாட்டா லேமமில்லை

காய்த்திடவே ருஷிதேவர் சொல்லுரில்லே
கனிவாக யிக்காண்டங் தனிலேசொன்னோன்
சார்த்திடவே சூட்சாதி சூட்சமெல்லாஞ்
சரியாக விக்காண்டங் தனிலேயாச்சே. எருழ
இந்நூற்காண்டமிரண்டு மொத்துப்பார்த்து பரி
பாஷைதெரிந்து கோடாசூரி வீரவைப்பு.
செய்து காக்காயின்பேரில் போடக்
கறுட்புசிங்கி வெள்ளையாகும்.
ஆச்சுதே யிக்காண்டம் ரெண்டும்பார்த்து [ம
அடைவாகக்கருவெல்லாம் வெளியாய்த்தோணு
பாச்சுதே சோரமென்ற வீரமாகும்
பதிவான பரிபாஷை சொல்லேலென்பாரு
காச்சுதே மரம்போலே யிந்தவீரங்
கனிவான காக்காயின் மேலேபோட்டால்
நாச்சுதே கொக்குவெள்ளை யாகும்பாரு
நலமான யிவ்வீரம் வேதைதானே. எருக
சித்தர்தேவர் மறைத்த யிவ்வீரம் சமஸ்தத்திற்கு மாதியெனல்.
வேதையாம் பரிசமது வேதைக்காதி
வேதையாஞ் சிந்தூரத் தாதியாகும்
காதையாம் சாரணைக்கு இதுவேயாதி
கனமான தைலத்துக் கிதுவேயாதி
சாதையாந் தைலத்துக் கிதுவேயாதி.
சரியான பொன்னுக்கு மிதுவேயாதி
பாதையாம் பொன்னை நீருக்கெல்லாம்
பதிவான வீரந்தானதியாமே. எசுO

உஉ யூகிமுனி வாதகாண்டம்

ஆதியாம் வீரத்தை சித்தர்தே வர்
ரடியோடே மரைத்தார்க ளிந்தகாண்டம்
நீதியா யிக்காண்டந் தன்னிற்சொன் னேனே
நிலவரமாய்க் கண்டுமே செய்துக்கொள்ளு
காதியாம் வெகுகோபத் துடனேசொன் னேனேன்
கடைகெட்டுத் திரியாதே களிந்துபாரு
வேதையாய் பொலிந்தது ழைத்துப்பாரு
வேதாந்த மாவதற்கு வீரம்பாரே. எசுக
வீராதி வீரனவன் சுத்தராஜா
விதமான வேதைக்குப் புத்திரா லி
காரமது மகாகாரம் வேதைகோபன்
கதிபெறவே வீரனப்பா பொல்லாவீரன்
காரமென்ற வீரனப்பா தடையில்வீரன்
தனித்துநின்ற ஜயவீரன் கோட்டிவீரன்
பாரமென்ற வீரனப்பா பதினாம்வீரன்
பத்திமுத்தி வீரனுட வாட்டுத்தானே. எசுஉ

கோடாகூரி விரச்செய்கை.

ஆட்டானை வீரத்தை யுடநீர்தொட்டு
அடைவான நாகத்தின் மேலேபோட
கூட்டானை நாகமது கட்டிப்போகும்
குணமான தங்கமது நீறுமாகும்
வாட்டானை காரசா ரங்களெல்லாம்
வகையான யிவ்வீரம் போட்டுப்போட்டால்

நாட்டான பூப்போலே நீறிப்போகும்
நாமறியோ மிதுபோர போக்குத்தானே. எசுஙூ
சிவன்சொல்ல இவ்வீரபாகஞ் செய்தேனெனல்.
போகுமே ஜெயவீரம் விட்டானானால்
பொல்லாத வாதமது ரொம்பவில்லை
தாகுமே சாத்திரத்தை நம்பாரென்று
தாக்கினே னிக்காண்டந் தனிலேசொன்னேன்
பாகதுபோல் பாகமெல்லாம் வெளியாய்ச்சொன்னே
பத்திமுத்தி வயிராக்ய மாகப்பண்ணி [ன்
நாகுமே சிவன்சொல்லப் பாகம்பார்த்து
நாடினே னிக்காண்டந் தன்னில்தானே. எசுச
எனதம்மைசொல்லிய வின்னின்னதை யிக்
காண்டத்திற் சொல்லினேன்.
தானேதான் செம்பெடுக்கும் வகைகள்சொன்னேன்
தனியான நாகரச ஜயநீர்சொன்னேன்
வானேதான் புகைநீருங் கடைநீர்சொன்னேன்
வடிவான சவுக்கார மர்மஞ்சொன்னேன்
கானேதான் களங்கமுதல் பசும்பொன்சொன்னேன்
கண்டிமே துரிசினிட களங்குசொன்னேன்
வனேதான் சோரமென்ற வீரஞ்சொன்னே [எசுரு
னென்தாயார் சொல்லிடவே யான்கண்டேனே.
நான்சொன்ன பதினாயிரம்பாடலு முன்பின்பா
ர்த்துச்செய் சூக்ஷங்களெல்லாந் தெரியும்.
சொன்னதொரு சாஸ்திரமு மெல்லாம்பாரு
சூட்சாதி சூட்சமெல்லாம் வந்துதோணும்

கன்னல்பதி னிரண்டும் கனிந்துபாரு
கதிபெறவே வாதமவரும் போதமாகும்
சின்னதொரு மதிபழுக்கும் வேதையாகும்
செல்வம்வரும் சிறப்பாகுஞ் சித்தராவார்
முன்னமே பிள்ளைகப் பார்த்துச்செய்தால்
முக்கியமாய் தங்கமா முனிந்துபாரே. எசுசு

சிகப்புசாரம் வைப்பும் வேதையும்.

பாரேநீ சிகப்பான சாரப்போக்கை
பதிவாக வைக்கிறதோர் பாகங்கேளு
ஆரேநீ சாரமது பலந்தான்பத்து
அடைவான தங்கம்ரெண்டு சூதமைந்து
நாரேநீ கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
நலமான திராவகத்தா லாட்டிக்கொண்டு
வாரேநீ நாகமென்ற ஜயநீராட்டி
வடிவாக வறுத்துமே ‡காசிப்போடே. எசுஎ

‡காசி - குப்பி,

போட்டுமே தீயெரிபன் னிரண்டுஜாமம்
பொன்முருக்கம் பூப்போலே காணுமப்பா
ஆட்டுமே நவலோக நூறொன்றிட்டா
லடைவாக §திசைமாற்று ஆகுமப்பா
நாட்டுமே யிவ்வேதை சூசூம்சூசூம்
நலமறிந்து பாகமாய்ச் செய்துக்கொள்ளு
திட்டுமே செம்பதனிற் செதிக்கிச்சேரு
சிவனறிய வுண்மையாஞ் செய்துபாரே. எசுஅ

§திசைமாற்று - எட்டுமாற்று, திசை - எட்டு ஆதலால்,

செய்தபார் சிகப்பான சாரச்சேதி
செய்திடவே வாதமது வலையும்
பைதுமே யிழைத்துமே யொருசொட்டிட்டால்
பதிவான சரக்கெல்லாங் கரியிலாடும்
ஐந்துபார் தீரா லெல்லாமாச்சு
அப்பனே பாகமது மருவிப்பாரு
நைந்துபா ரொன்றைவிட் டொன்று செய்தால்
நலமில்லை வாதமிது தலைகீழாமே. எசுக

சாஸ்தத்திற்கும் தங்களுசேராவிட்டால் வாதந்தலைகீழாய்விடும்.

கீழாகப் போகாமற் சொல்லக்கேளு
கெடிபடவே களங்குமுதல் சிந்தூரங்கள்
பாழாகப் போகாமல் தைலஞ்செய்தால்
பதிவான தங்கமென்ற தாயைச்சேரு
வாழான தங்கமா மேமந்தல்லோ
வகையாகச் சேராதே போனாற்கேளு
நீருக முடிந்தாலு மென்றுமில்லை
நிலைதப்பிப் போகுமே வாதந்தானே. எ0

தங்கம் சகலத்திற்குமாதி.

தானேதான் வகைதையெல்லாம் தங்கத்தாலே
தடையறவே பொன்னெல்லாம் தங்கத்தாலே
காணேதான் களங்கெல்லாந் தங்கத்தாலே
கனிவான சிந்தூரந் தங்கத்தாலே
வானேதான் தைலமெல்லாந் தங்கத்தாலே
வடிவான தங்கமென்ற தாயைப்போற்று

நானேநா னென்றுசொல்லித் திரியவேண்டாம்
நாடவே வாதத்துக் காதியாமே. எஎக

துரிசுசெய்கை.

ஆதியாம் வாதமது துரிசிலுலே
அடைவான வேதைமுகந் துரிசிலுலே
நீதமாம் பொன்செய்தல் துரிசிலுலே
நிலைத்துநின்ற செம்பெல்லாந் துரிசிலுலே
வாதியாம் வழக்கெல்லாந் துரிசிலுலே
வடிவான வளமையெல்லாந் துரிசிலுலே
காதமாம் வழிநடந்தால் துலையுமப்பா
கனிவாக நடையில்லை வழிமாளாதே. எஎஉ

கெந்திசெய்கை.

மாளாத வர்ணமெல்லாங் கெந்தியாலே
மயமான தங்கமெல்லாங் கெந்தியாலே
தூளான செம்பெல்லாங் கெந்தியாலே
துடியான வதறெல்லாங் கெந்தியாலே
நாளாக நாட்சென்று வாதம்பாரு
நலமான மாற்றுகும் வேதையாகும்
கூளாகப் பேசாமல் குணமாய்ப்பாரு
குரூரமாய்வாதமெல்லாம் பார்த்திடாயே. எஎங

செம்பை முன்செய்துப்பார்த்து பின் சரக்குக
ளைக் கூர்மையாய்ப்பார்.

பார்த்திடவே முன்செம்பைப் பற்றிப்பாரு
பதிவான வேதையாம் பதியப்பாரு

கோர்த்திடவே சரக்குவகை கூர்ந்துபாரு
குணமாகு மணமாகும் கூர்ந்துகேளு
நார்த்திடவே நெல்லாகு மில்லாப்போனல்
நலமாகா பொட்டலாய் நெல்லாகாது
கோர்த்திடவே சரக்குவகை சேர்த்தாணல்
குணம்பெரிய சித்தராய் கூர்மையாமே. எஎச

கூர்மைபுத்தியால் பெண்ணுசையொழித்து வாத யோக
ஞான சித்திகளை காயசித்திகளைச் செய்துக்கொள்:
கூர்மையுள்ள புத்தியைநீ விசாரித்துப்பார்
குணமாக நல்வழியால் பாகஞ்செய்து
வார்மையுள்ள களங்குசெம்பு சிந்தூரங்கள்
வகையாக செய்துமே வழக்கம்பண்ணி
ஆர்மையாய் நல்வழியாய் நின்றுஞான
மடைவாகப் பார்த்துமே யடித்துநில்லு
பார்மையால் வழிதப்பி மார்க்கந்தப்பி
பதியவே திரியாதே பரிவாய்ப்பாரே. எஎடு

பாரேநீ கற்பமுள்ள காயசித்தி
பதிவான வாறுதலம் வெளியாய்ப்போகும்
வாரேநீ நரைதிரைய தற்றுப்போகும்
வடிவான சடந்தானு முறுதியாகும்
காரேநீ யோகசித்தி காயந்தானும்
கடிதாக விறுகியே கனிவாய்க்காணும்
வாரேநீ பெண்ணென்ற வாசைபோக்கி
வடிவான ஜகஜ்ஜாலக் கூத்துபாரே. எஎசு

மௌனஞானமார்க்கம்.

பாருமே யாணவத்தை யொழித்துப்போடு
பதிவானை வைம்புலனை யறிவால்தள்ளு
காராலே சைதன்ய வீட்டினுள்ளே
கடிதான மவுனத்தின் வீதில்கூடி
நாளுமே யெக்காலு மெப்போவென்று
நலமறியக் கூடுவது கூடிநில்லு
வாருமே மனதென்றி குருபதத்தில்
வடிவாக நாதாந்த வெளியில்நில்லே. எஎஎ
நில்லென்று மூலத்தி லங்கென்றணி
நிதமான தினியின்மே லாசைபோக்கி
சொல்லென்று சொரூபமயங் காணுங்காணுஞ்
சுருதியைநீ யாராய்ந்து சூழ்ந்துபாரு
வில்லென்று வளத்தாலே யம்புதைக்கும்
வெறுமரந்தான் வளையாது வீதிதன்னில்
கல்லென்ற குருபாரன்போல் வாழ்வுண்டாகுங்
கருத்துவைத்தால் துரிசிலுட குருவைப்பாரே.

துரிசு குருவுக்கு இரசஜலநீர் வெடியுப்புச் சுன்னங்கள்செய்ய.

குருவைப்பா துரிசிலுட குருவைக்கேளு
குணமான வண்டாண்டந் தூளாத்துவாட
அருவைப்பார் புகைநீரிற் சேருவென்று
அடைவாக நிறுத்துமே பிங்கானிட்டு
கருவையுஞ் சூதமது பலமுங்காலாய்
கடினமாய் துக்கியே புகைநீர்விட்டு

பருவமாய் மூன்றுநாள் நிழலில்வைக்கப்
பரிவாகக் கரைந்துமே நீராம்பாசே. எஎசூ

நீரான பின்புதான் சொல்லக்கேளு
நிர்ணயமாய் வெடிபுப்புப் பலமுமெட்டு
ஆரான சீனமது பலமுமெட்டு
அப்பனே பொரித்தெடுத்துவெடியைச்சேர்த்து
நாரான வனைத்துமே சட்டிபிட்டு
நலமாக வுருக்கவே யுருகும்பாரு
வாரான வுருகினத்தில் பாதிசூடன் [எஅ0
வகையாகச் சேர்த்துவெண் கருவாலாட்டே.
ஆட்டியே சுன்னமென்ற சுகையில்வைத்து
அடைவாகப் புடம்போடப் பூப்போல்நீறும்
தேட்டியே யிதையெடுத்துப் புகைநீர்தன்னில்
திறமாகக் கலக்கிவை நிறமேகேளு
காட்டியே தயிர்போலே நிறமுமாகுங்
கனமான விந்நீரில் வீரம்பூரம்
தாட்டிகமாய் போட்டுமே கலக்கிவைத்து
தாக்கவே சொல்லுகிறேன் கேளுகேளே. எஅக

துரிசுச்சுருக்கும் கவசத்திற்கு வெள்வங்கச் சுன்னமும்.

கேளுமே துருசைத்தான் தோய்த்துத்தோய்த்து
கெடிபடவே யெட்டுநாள் காயப்போடு
ஆளுமே காய்ந்தபின் சொல்லக்கேளு
அடைவாக மேற்கவச மாண்மைகேளு

நாளுமே வெள்ளீயம் பலமோபத்து
நலமாகத் தகடாகத் தட்டிக்கொள்ளு
வாளுமே புண்ணைக்கி நடுவேவைத்து
வளமாகப் பெரியபுடம் போட்டுவாங்கே. எஅஊ

வாங்கியே பார்த்தாக்கால் பொரிந்துபோகும்
வளமாக விடைசமனுய் வெடியின்சுன்னம்
தாங்கியே யிடைசமனுய் சேர்த்துக்கொண்டு
தகையறவே யரைத்துமே யூதிப்போடு

பாங்கியாங் கடுஞ்சுன்னம் வங்கச்சுன்னம்
பதிவான வீரந்தா னிடையேசேர்த்து
வாங்கியே மாளுமட்டு மரைத்துப்போடு
வகையாகத் துருசின்மேற் கட்டிப்பாரே. எஅஙூ

துருசுச்சுன்னம்.

கட்டியே கௌதாரி புடத்தைப்போடு
கடுஞ்சுன்னந் துருசுதான் சுன்னமாகும்
தெட்டியே யெடுத்துப்பார் வெள்ளையாகும்
திறமான கடுஞ்சுன்னந் துருசுச்சுன்னம்

பட்டியே சூதத்தைக் காலேவாரி
பதிவாக வடிக்குமே பண்புமாகும்
துட்டியே யிருக்கும்பார் சகலசித்தி
துடியான வாதமெல்லா நொடிக்குள்ளாமே,

துருசு குருவாற் சூதக்கட்டு.

ஆமேதான் துருசியது குருவேயானு
லாகாகா சூதமது கட்டிப்போகும்

காமேதான் விலாரிக்குக் குருவையிட்டு
நலமாக விடித்துமே பிசைந்தழுத்தி
வாமேதான் பிழிந்து அயக்கண்டியூற்றி
வடிவாகச் சூதத்தை விட்டுக்காச்ச
காமேதா னிட்டலிபோல் வெண்ணையாகி
கண்விட்டு உருகுமே சூதந்தானே. எஅரு

மேற்படி சூதக்கட்டை களங்குசெய்து வேதை
யாடலு முள்ளுக்குக் கொள்ளலும்.

தானேதா னுருகிநின்ற சூதந்தன்னை
தாக்கிடவே முன்னுகை மொக்கநிட்டி
தானேதான் தங்கத்தை யிடையேதாக்கி
தாளகமுங் கெந்தியது ஒக்கவிட்டு
கானேதான் களங்காகு நூற்றுக்கொன்று
காட்டிடவே திசைமாற்றுங் கருதிப்பாரு
வானேதான் களங்கு மண்டலந்தானுண்ணு
வாலேயா மன்மதன்போல் வாழ்வாய்பாரே.

துருசுநீர் சேராவிட்டால் மூலிகையி லிரசங்கட்டாது மூலி
கையாற் கட்டப்பார்த்து வெகுபெயர் கெட்டார்கள்.

பாருமே துருசிநீர் சூதந்தன்னில்
பாச்சாட்டால் ரசமதுதான் கட்டமாட்டா
காருமே மூலிகையிற் சிரிதுபேர்கள்
கட்டியே சுருக்கிட்டு அலைவாரப்பா
வாருமே சிறிதுபேர் கருவைவிட்டு
வகையாகக் கட்டியே யலைந்துபோவார்

நாருமே யிப்படிக்கு அலையவேண்டாம்
நாதாக்கள் சொன்னபடி நாட்டினேனே. எஅன
தருசாற் சகலமுமாகும் தருசுசிவமாகும்.
நாட்டினேன் களங்கதுதான் துருசிலுலே
நலமான சுன்னமது துருசிலுலே
கூட்டினேன் சுன்னமது துருசிலுலே
கூட்டுகிற கருவெல்லாம் துருசிலுலே
தேட்டென்ன வாதமது துருசிலுலே
தீர்க்கமாய் சத்துவகை துருசிலுலே
மூட்டுவது மூட்டெல்லாம் துருசிலுலே
முடிவான துருசதுதான் சிவமுமாச்சே. எஅஅ
தேரருபதேசித்த தருசு குரு.
ஆச்சப்பா வின்னமொரு துருசுகேளு
அண்டத்து முனிதேவர் சொன்னவித்தை
மூச்சப்பா தேரர்தான் குளிகைகட்டி
மூதண்ட லோகமெல்லா மாடினாப்பார்
வாச்சப்பா வடியேற்குச் சொன்னநேர்மை
வகையாகக் கண்டுமே மருவலாகும்
காச்சப்பா கைகடந்து துருசுபோக
கண்டுமே யுலகத்திற் கருவாய்ப்பாரே. எஅசூ
பாருமே துருசியுட குருவைக்கேளு
பதிவான கடைநீரிற் சேர்நிறுத்து
வாருமே பூநீறு பலமும்போடு
வகையாகமொலுமொலெனக் கரைந்துபோகும்

தாருமே வங்கமென்ற சுன்னம்போடு
தடையறவே பொட்டிலின்றன் சுன்னம்போடு
வாருமே வீரமொடு பூரம்போடு
வகையாகக் குழம்புபோற் செய்துக்கொள்ளே.
கொள்ளவே துருசுநீர் தோச்சுத்தோச்சு
கொடுமையா யெட்டுநாள் ரவியிற்போடு
மெள்ளவே சுக்கான்போற் கட்டிப்போகும்
மேன்மையா யெடுத்துமே வைத்துக்கொண்டு
துள்ளவே வங்கமென்ற சுன்னங்கட்டி
துடியாகக் கௌதாரிப் புடத்தைப்போடு
வள்ளவே துருசிதனக் காண்மைமெத்த
வகையாகத் தேரர்தா னுடிமாட்டே. எகூக

ஆட்டியே தேரரடி யேற்குச்சொன்ன
வடைவான பதிணலு லோகமெல்லாம்
கூட்டியே கொடுவேகக் குளிகைகட்டி
குணமாக வடுக்கெல்லாஞ் சோதித்தேறி
நாட்டியே யண்டாண் டங்களேறி
நலமாக வாடிலே ரண்டம்புக்கி
தூட்டியே சகலபத புவனமெல்லாம்
துடியாகச் சோதித்து ஆடினீரே. எகூஉ

ஆடினீர் துருசினுட குருவினுலே
யடுக்கடுக்கா யோடியே துருவனுக்குள்
ஓடினு ரகஸ்தியரு மூபதேசித்தா
ருண்மையாய் சொல்லிடவே சிரசில்வைத்து

நாடினரிக்காண்டங் தனிலேசொன்ன
நாதாந்தத் துருசினுட நட்புகண்டு
வாடினர் கோடிபேர் சித்தர்தானும்
வடிவாகச் சூதமணி கட்டினாரே. எகூஙூ

கட்டினர் துருசினுட நீரினாலே
கசடற்ற சொரூபமணி பண்ணிக்கொண்டு
துட்டினர் வாய்வைத்துப் பரந்துபோனர்
துடியான வாட்டெல்லாங் துருசியாட்டு
நட்டினல் மற்றொன்றுல் சூதஞ்சாகா
நலமான சுக்கிலத்தில் பிள்ளையாகும்
ஓட்டினு லோடலாங் கவனத்தாட்டு
ஓடுகிற காலெல்லாங் துருசிநீரே. எகூச

பரமசிவ முபதேசித்தத் துருசுகுரு.

துருசுநீ ரொன்றுதான் சொல்லக்கேளு
துடியான யிந்துப்புப் பலமுமொன்று
அரிசிநீர் புகைநீரு தன்னலாட்டி
அடைவாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளு
பரிசிநீர் பனிவைக்க ஜயநீராகும்
பச்சையாங் கற்பூர மொன்றுபோட
தெரிசியாம் பிங்கானில் நிறுத்துப்போட்டு
ஜயநீர்தான் பலமொன்று நிறுத்துக்கொள்ளே.

கொள்ளவே பூரத்தில் தளரவாரு
கோரமா ரவியில்வை புரண்டுஉப்பாம்
நள்ளவே பசுஞத்தில் ரவியிற்போடு
நலமாகக் காஞ்சபின் சொல்லக்கேளு

வள்ளவே கிளிஞ்சியினில் நடுவேவைத்து
வளமாக மேல்மூடி சீலைசெய்து
துள்ளவே மணல்மரவில் புடத்தைப்போடு
துடியான பூரமது சுன்னமாமே. எகூசு

சுன்னமாம் பீங்கானில் பரப்பிவைநீ
துடியாகப் பலபலென ஜயநீராகும்
நன்னையமாய்க் கண்டரைத்தான் தோச்சுதோச்சு
நலமான பகூடமொன்று ரவியிற்போடு
வன்னமாம் வங்கமென்ற சுன்னந்தானும்
வகையாகக் கண்டர்மே லங்கியிட்டு
தன்னயமாய் குக்கிடத்தில் குருவாய்நிற்கும்
தடையறவே துருசிகுரு காலனுமே. எகூள

ஒடி துருசுகுருவும் சாரமுஞ் சேர்த்து சுன்னஞ்
செய்து ரசவெண்ணெய்.

காலனும் துருசிகுரு இடையேசாரம்
கணக்காக வரைத்திட்டு புடத்தில்வைக்க
நாலனும் நீறிகடுஞ் சுன்னமாகும்
நலமான சூதத்தை கரண்டிதன்னில்
வாலனும் சூதத்தை விட்டுக்கொண்டு
வகையான சாரநீர் விட்டுநீயும்
தாலமாங் கொதியிடவே வெண்ணையாகும்
தடையற்ற சூடனுட தியில்வாட்டே. எகூஅ

ரசவெண்ணெயை மணிசெய்து கமனஞ்செய்ய
வும் வேதையாடவும்.

வாட்டியே யிறுக்கியே மத்தங்காயில்
வளமாகப் புடம்போட்டு இறுக்கிக்கொண்டு

மூட்டியே செம்புருக்கி யதிலேதாக்கு
மூதண்டங் கிழிந்தூறுந் திசைமாற்றுகும்
கேட்டென்ன துருசைநீ விடவும்வேண்டாம்
திடமான வாட்டெல்லாங் துருசினுலே
காட்டென்ன சூதமென்ற ராஜாவாலே
கனிவான செம்புதான் பழுக்குமாமே. எகூசு
ஆமென்ற சூத சாரணையைத்திரு
அடைவான கவனவழி யோடுமோடும்
வாமென்ற காயசித்தி கூடனத்திலாகும்
வடிவான லோகத்தில் பரிசவேதை
ஓமென்ற குளிகைக்கு வெட்டுகுத்து
உசத்தியா மேல்கடலும் கீழுமாக
தாமென்ற நிமைக்குள்ளே தாண்டியோடுந்
தயவான சிவன்சொல்ல யான்கண்டேனே. அ/00
இந்ததுருசுகுரு உபதேசித்த பரம்பரை.
கண்டுமே சிவன்சொல்ல தேவிகேட்டு
கருணைமய நந்திக்குக் கருணைகூர்ந்து
பண்டுமே நந்திதன் மந்திரிக்கு
பதிவான தன்மந்திரி யகஸ்தியர்க்கு
நண்டுமே தலையசைத்து யகஸ்தியர்க்கு
நலமான வகஸ்தியரும் புலத்தியர்க்கு
வண்டுமே புலத்தியரும் தேரருக்கு
வகையான தேரருமே சொல்லிட்டாரே. அ/0க
சொல்லிடவே யூகிமுனிக் குபதேசிக்க
சிறப்பாக யூகிமுனி பரிர்த்துத்தெரி

நல்லிடவே யுலகவா திக்குச்சொல்ல
நலமான வாதிதா னறியாமல்தான்
வல்லிடவே வாதங்கள் மிகவுஞ்சுட்டு
வகையாக நூல்பார்க்க வகையில்லாமல்
யெல்லிடவே யொன்றென்று மனதிலெண்ணி
யிதுவாக வாதத்தைப் பார்த்திடாயே. அ0உ

செம்பை யடிதலை யொத்துப் பார்த்துச்செய்.

பார்த்திடவே யடிதலையு மொத்துப்பார்த்து
பதிவாக நேராகச் செம்பைத்தானுங்
கோர்த்திடவே செய்துநீ பலனைக்கண்டு
குணமாக பின்னேதான் ஞானம்பாரு
வார்த்திடவே ஞானமய முண்டாம்பாரு
வடிவாக கைபாக வரிசைகண்டு
மூர்த்துமே யுன்னிடத்தில் சரக்குவைத்து
மூவுலகு மலையாமல் முடிவாய்நில்லே. அ0ஊ

துருசு முடித்துக்கொள் மிகுந்த வாழ்வுண்டாகும்.

நில்லென்றுல் வாழ்வுனக்கு நிற்கவேதான்
நேரான துருசிநீ முடித்துக்கொள்ளு
அல்லென்ற போதுவுடல் வாழ்வுண்டாகு
மாதித்த னுள்ளமட்டும் வாழலாகும்
கல்லென்று தபோதனர்போ லிருக்கலாகும்
கலக்கமற்று சூதத்தைக் கட்டலாகும்
வில்லதுதான் வளைந்தாலே யம்புதைக்கும்
விதமாகவின்னமுநானென்சொல்வேனே. அ0ஏ

துருசுமுடிந்தால் ருஷிசித்தர் தேவர்களோடு சேர்ந்திருக்கலாம்.
சொல்லவே வாதாங்க மெளிசோவல்ல
சொற்பெரிய ருஷிசித்தர் தேவரோடே
மெல்லவே சேர்ந்துமே யிருக்கலாகு
மேன்மையாங் துருசுதான் முடிந்துதானுல்
கல்லவே யுனக்குத்தா னீடோமக்காள்
கருணைபுரி பத்தியினைக் கண்டுகொள்ளு
கல்லாக யிக்கருவை செய்துபாரு
கடிதென்று விடவேண்டாங் கருத்துள்ளாரே.
கருத்துள்ளார் துருசுநீர் செய்துக்கொள்வார்
கருத்தில்லா வாதிதான் மூளிதேடி
வெறுத்துமே திரிவார்கள் புத்தியில்லார்
வெறும்பேச்சால் சொன்னுங்கா லொன்றுமில்லை
அருத்துமே திரியாதே பாகம்பாரு
அன்பாக வெல்லாந்தான் வந்துதோயும்
பொருத்துமே யெண்ணியே யோகம்பாரு
புலம்பியே திரியாதே நூலெப்பாரே. அ0சு

(துருசுகுரு ஆனந்தக்களிப்பு.)

சீனச்சுன்னம்.

பாரோ துரிசிநீ ரொன்று-நல்ல
பாகத்தைச் சொல்லுவேன் கேளுங்கள்வாதி
நாரே புகைநீர் கடைநீ-ரிதில்
நாட்டிடச் சேரொன்று தானெடுத்து அ0ள
ஆகமாய்ச் சொல்லுவேன் கேளுசினம்
அஞ்சு பலத்தைப் பொரித்துமேகேளு

தாகமாய் வெண்கருவிட்டு-இதை
தாக்கி யரைத்துப் பெரும்புடம்போடு அ0அ

வெங்காரச் சுன்னமும் சீனச்சுன்னமு
ஞ்சேர்ந்த வெங்காரச் சுன்னம்.

போடக் கடுஞ்சுன்ன மாகு-மிதை
போக்கோடே தானெடு பின்புநீகேளு
ஆடவே காரம் பொரித்து-இதை
அன்புடன் சீனத்துச் சுன்னமிடைசேர் அ0கூ
சேர்த்துமே வெண்கரு விட்டு-இதை
தொக்கவே ஐாமமுந் தானேயரைத்து
பார்துமே தான்புடம் வைக்கக்-கடும்
பாரிது சுன்னம் பதிபுடனாகும் அக0

ரசஜயநீர்.

ஆகுமே சுன்ன மெடுத்து-புகை
அன்பாக விட்டு அரைத்துமேவில்லை
பாகுமே தான்ரவி யிட்டு-புடம்
பத்திடப் போடவே தான்கடுஞ்சுன்னம் அகக
சுன்னத்தை தானே யெடுத்து-இனிச்
சொல்லுவேன் கேள்ரச வாதியேகேளு
நன்னய மாகப் புகைநீர்-சேரு
நாடியே பச்சை ரசமதுகாலாய் அக்உ

ரசஜயநீரில் துருசுக்குச்சுருக்கும் வெண்காரிசீனகவசமும்.

வாடி யெடுத்து மேகேளு-வடி
வாகவே போட்டிடு தானேகரையும்

தேடியே முன்னேநீ வைத்து-நீலன்
தொக்கவே கட்டி பலமொன்றெடுத்து அகங
தோய்த்துப் புகைநீறு தன்னில்-ரவி
தொன்மையாய்ப் போடு எடுத்திடுதோழி
வாய்த்துமே வெண்காரி சினம்-சுன்னம்
வாகாய் துரிசிமே லங்கியுமிட்டு அகச

தருசுசுன்னம்.

பார்த்துமே தானே கிளிஞ்சில்-சுன்னம்
பாகமாய்த் தானே யதின்மேல்கவசம்
காய்த்துமே யிட்டு ரவியில்-காய
காட்டியே குக்கிடந் தானேபுடமாய் அகஞ
இட்டு யெடுத்துமே தோழி-நல்ல
வின்பமாய் தான்நிறங் கொக்கதுபோலாம்
கட்டுமே பாக மெடுத்து-நீலன்
கட்டவே தான்கடுஞ் சுன்னமுமாமே அகசு

தருசுசுன்னத்தால் தில்லம்பால்முறிக்க.

ஆமே ஜகஜ்ஜால மாகும்-நீல
னந்தரமாக ரசமது கட்டும்
தாமே பணவிடை தானே-எடு
தாக்கிடத் தில்லம்பால் தான்படியொன்றில் அகள
போடவே தானே முறியும்-ஜலம்
போக்கோடே தானே யிருக்குதுகேளு
காடான பீச மதனை-அயங்
காட்டக் கரண்டி தனிலிடுவாதி அகஅ

தில்லம்பால் முறிப்பால் ரசமணி.

இட்டுமே பாலது தன்னை-நல்ல
விம்பமாய்க் காச்சவே யிட்டலியாகும்
கட்டுமே பாக மிருக்கும்-இதை
காட்ட வயத்துடப் பாலேநீகிண்டு அகஈ
கிண்டியே பார்த்திடத் தானை-ரசங்
கீர்த்தியாய்க் கட்டி மணியதுபோலாம்
பண்டித மாக விருக்கும்-எடு
பாகமாய்த் தானை தமரதுஇட்டு அஉ0

ரசமணி தாவடமும் வேதையும்.

போட்டுக் கழுத்திலே தானை-போட
பொல்லாத விந்துமே கட்டியேநிற்கும்
காட்டுமே தானை கவனம்-ஓடிம்
காட்டிட சித்திக் கருணையுமாமே அஉக
ஆமேயிச் சூதத்திற் கேளு-நல்ல
அன்பான காயத்தை தான்வலிவாக்கும்
தாமேயஞ் ஞாறுக்கு ஒன்று-இடு
தாக்கிட வேலோக நிசைமாற்றதாமே அஉஉ

ரசமணி சிந்தூரமும் பலனும்.

கட்டின சூதத்தை தானை-எரி
காரண மாகவே சிந்தூரம்பண்ணு
பட்டின தான களங்கம்-குரு
பாச்சிடப் பண்ணிடு சித்தியுமாமே அஉங

சித்தியு முத்தியு மாகும்-நல்ல
சீரான ஞான மிகவருந்தோழி
பத்தியும் பாகமாய்ச் செய்து-பெரும்
பாக்கியந் தானே வசியமுமாகும் அஉசு

ஞானயோகம்.

பெண்ணாசை விட்டுமே கேளு-நல்ல
பேராச் சிலம்பொலி நாட்டத்தைக்கண்டு
பண்ணுச் சுழிமுனை பாரு-இதைப்
பார்த்திட நாலையுந் தானேயிறுக்கும் அஉடு
நன்னய மாகவே தானே-ஆறு
நாட்டத்தைக் கண்டு நலமிகுவாதி
பண்ணைக மானதோர் சொல்லை-யித்தால்
பாதி நிராகார தான்வழிதேடி அஉசூ
வழியோடே தான்சுழி மாறி-வாசி
யோகத்தை யுற்று மருவவேகேளு
சுழுமுனை தன்னை யிறுக்கி-மிக
சொக்கியே நின்று நினைவாகப்பார்த்து அஉசூ
ஏறியே நின்றிடு தோழி-நல்ல
இன்பமாய் நீலனை நீற்றியேபாரு
ஆதியெழுத் ததைக் கட்ட-மணி
யன்பாகத் தானே சேவித்திருந்து அஉஅ
மாரியே காலை யடக்கி-ரெண்டு
மார்க்கமாய் வாசி யிறுக்கியேகேளு

யூறி வருகு மமுதம்-இதை
யுண்டிடு தானே யிருந்திடுதோழி ௮௨௯
வாரி வருகுமே தோழி-இது
வந்திடும்வாத மேமமு மாகும்
நாரியே நாலும் வசமாய்-இந்த
நாட்டத்தைக் கண்டு பிடித்திடுவாதி ௮௩0

பரமசிவம் சொல்லியபடி வாதி துருசுகல்லுப்புகளை
நீற்றுதல் அல்லது கல்லுப்பை யுருக்குதல் செய்
யவேண்டும் இல்லாவிட்டால் லாபமில்லை.

விருத்தம்.

வாதியென்று பேர்படைத்தால் துருசிநீற்ற
வகையறிய வேணுமப்பா மயக்கம்போகும்
சேதிசொன்னா லென்னவரும் லாபமில்லை
சிறப்பாகு மில்லாட்டால் கல்லுப்பைத்தான்
கோதியே நீற்றிடுநீ யில்லாப்போனால்
கூர்மையாய் கரியில்வைத் துருக்கவேணும்
பாதிமதி பரமனாற் சொன்னசொல்லை
பார்த்திட்டால் சகலசித்து மாடலாமே. ௮௩௧

துருசின் வளப்பஞ் சொல்லிய பரம்பரை.

ஆடவே துருசினுட வளப்பமெல்லா
மறிந்தமட்டும் சிவன்சொல்ல தேவிசொல்ல
பாடவே நந்திசொல வசுவனியுஞ்சொல்ல
பதிவான தன்மந்திரி பதியச்சொல்ல

காடவே யகஸ்தியரும் சொல்லக்கேட்டு
கதிபெறவே புலத்தியருந் தேரர்சொல்ல
நீடவே யூகிமுனி கேட்டுக்கேட்டு
நிர்ணயமா யுலகத்திற் சொன்னேன்பாரே.

தருசி சிந்தூரம்.

பாருநீ துருசொன்று சொல்லக்கேளு
பதிவான கண்டருமே பலந்தான்பத்து
சாருமே தங்கத்தின் ரேக்குதானும்
தாழாதே ரெண்டரையயாம் பலமுமாகும்
வாருநீ சூதமது பலந்தான்பத்து
வடிவாக சுத்தித்துக் கல்வத்திட்டு
சேருநீ மூன்றையுந்தான் கடைநீர்தன்னில்
சிறப்பாகப் பனிரெண்டு ஜாமந்தானே. அகூ
தானேதா னரைத்துமே ரஷிரிற்போடு
தனியாகக் கடைநீரில் கெந்திலிங்கம்
வானேதான் தாளகமும் பூநீர்தானும்
வகையான மனோசிலகா ரியம்போடு
வானேதான் வகைக்கியரைப் பலமும்போடு
வடிவான நீரிலரை யரைத்தோர்சேரை
பானேதான் நீநீரிற் போட்டுப்பாரு
பாங்காகத் தெளிவிறுத்துப் பதனம்பண்ணே.
பண்ணியே முன்துருசு னிற்குவிட்டு
பக்குவமா யரைத்திடவே யைந்துநாள்தான்
கண்ணியே காயவைத்துப் பொடியாய்ப்பண்ணி
கனமான மேருக்குள் பாதிபோட்டு

நண்ணியே தான்சிலை மண்ணேழ்செய்து
நலமாக வடுப்பேற்றித் தியைமூட்டு
புண்ணியமே செய்வதற்குச் சிந்தூரித்து
பொற்சிமிளி லடைத்துமே புகலக்கேளே. அஞ்சு

குரு சிந்தூரபலன்.

புகலவே நவலோக நூற்றுக்கொன்று
போக்கோடே கொடுத்திடவே திசைமாற்றுகும்
இகலவே சிந்தூரங் குன்றியுண்ணு
இப்பமா யுகாந்தவரை யிருக்குந்தேகம்
நகலவே நோவெல்லாந் தவடேயாகும்
நாதாந்த சாரமெல்லா நாட்டமாகும்
இகலவே சிந்தூர மார்க்கமப்பா
விப்படியே சிந்தூர மெல்லாஞ்செய்யே. அஞ்சு

தூற்பரம்பரையு நல்செய்தவிட்டும்.

செய்யவே சிவனுக்குச் சிஷாள்கோடி
ஜெயமான வம்மைக்கு அதிலும்ரெட்டி
மெய்யவே நந்திக்குப் பிள்ளையெட்டு
மேன்மையாந் தன்மந்திரி பிள்ளையொன்று
கையவே யிவர்பேரு சிவயோகமுநிநாதன்
கருணையா யகஸ்தியர்க்கு உபதேசித்தார்
துய்யவே நிருதியா மூலிதன்னில்
துடிப்பாகப் பொதிகைக்கு அப்பால்தானே.

தானேதான் தாடைகதான் மலையின்று
தாக்ஷியா யெல்லார்க்கு முபதேசித்தார்

வானென்று யூகிமுனி கேட்டுத்தேறி
வடிவான திருவண்ணு மலையில்வந்து
கானேதா னுலகத்தோர் பிழைக்கவென்று
கருணைதான் புரிந்திட்டே னிக்காண்டத்தில்
வேனேதா னிக்காண்ட மொன்றுபொய்யோ
வேதைதான் நிஜமாக விளம்பினேனே. அநஅ

ஒருமுறைதப்பினுல் மூன்றுமுறை செய்துபார்.

விளம்பினே னின்னமொரு செம்புமார்க்கம்
விருப்பமாய்ச் சொல்லுகிறே னுலகவாதி
களம்பினே னொருமுறைதான் தப்பிற்றுனுல்
கனிவாக மூன்றுமுறை கருணைவைத்து
அளம்பினே னதுசெய்து பாகம்பாரு
அடைவாக வெல்லாமுஞ் சித்தியாகும்
துளம்பினேன் பாகம்வரும் யோகமாகும்
தொல்லுலகில் ரசவாதம் நிலைக்கும்பாரே.

வெடியுப்புஜயநீர் அல்லது திராவகம் இதுசகலத்திற்
கும் குருநீர் அல்லது நாதாந்தநீராகும்.

நிலைக்கவே யின்னமொரு ஜயநீர்கேளு
நிலையான வெடியுப்புப் பலமும்பத்து
மலைக்குமே சினமது இருபத்தைந்து
மதியாக ரெண்டுமொன்றுப் பொடித்துப்போடு
கலைக்கவே கலையத்திற் பாதிபோடு
கனிவாக வாலியென்ற சட்டிமூடி
உலைக்குமே யுளுந்தாலே சிலைசெய்து
உண்மையா யடுப்புதனி லெரித்திடாயே. அசஒ

எரித்திடவே வெள்ளைநீர் வருகும்பாரு
இதமான வெள்ளையைத்தான் வீசிப்போடு
கரித்துமே நடுநீரு மஞ்சளாகும்
கனமான மஞ்சளைத்தான் தள்ளிப்போடு
வரித்துமே கடைநீரு ரொம்பமஞ்சள்
வடிவாகப் பிடித்துமே வேறேவைக்க
நரித்துமே குருவாச்சு இந்தநீரு
நாதாந்த நீருதா னைச்சுபாரே. அசக

ஆச்சப்பா நீரினுட பெருமைதன்னை
யரனுலு முடியாது போறப்போக்கு
நீச்சப்பா துறையறிந்தால் பொன்னைசெய்வான்
நேராகத் துறையறியா னுலுத்தமாடு
காச்சப்பா துறைபோகும் பாதைகேளு
கனிவாகச் சொல்லுகிறே னிந்தநூலில்
வாச்சப்பா யினமறிந்து செய்துக்கொள்ளு
வகையான ஜயநீரை மருவிப்பாரே. அசஉ

நாகரச ஜயநீர்.

மருவிப்பார் நாகமது பலமுமைந்து
மயமாக வுருக்கியே சூதம்பாதி
நருவிப்பா ரெண்டுமொன்று யுருக்கிச்சேர்க்க
நலமாகப் புட்டாகு நன்மைபாரு
நருவிப்பா ரசமதுக்குப் பாதிவீரம்
நலமாகச் சேர்த்துமே பொடியாய்ப்பண்ணி
கெருவிப்பார் நாகத்தில் முக்கால்கெந்தி
கெடிபடவே நிறுத்துமே கல்வத்தாட்டே. அசங

தாம்பரகாரீயச் சிந்தூரம்.

ஆட்டியே கடைநீரை விட்டுஆட்டி
அன்பாகப் பகூமொன் றுரைத்துவாங்க
பூட்டிப்பார் கடைநீரு மிதக்கவிட்டு
பொடிவான் அரக்கென்ற குப்பிதன்னில்
நாட்டிப்பா ரடைத்திட்டு செல்லக்கேளு
நலமாக வின்னமொரு பாகங்கேளு
வாட்டிப்பார் செம்புபல மொன்றுபோடு
வகையான காரீயம் பலமுமொன்றே. அசச

ஓல்லுக விதுரெண்டு மூரிக்கிக்கொண்டு
உறவாகக் கல்வத்தி லுடைத்துக்கொண்டு
கல்லுக ஜாயநீரா லரைத்துமைபோல்
காரணமாய் பெரியபுடம் போட்டுவாங்கு
நல்லுக மஞ்சள்போ லிருக்கும்பாரு
நலமான சிந்தூர மாகமட்டும்
கல்லுகப் போட்டுமே சிந்தூரஞ்செய்
கனிவாகச் சிந்தூர மெடுத்துக்கொள்ளே. அசரு

தாம்பர காரீய சிந்தூரவேதை.

எடுத்துமே தங்கத்தி லிடையேதாக்கு
இன்பமாய் தங்கமது செம்புமாகும்
அடுத்துமே செம்பெடுத்து மதியில்தாக்கு
அன்பாக விருபதுக்கு ஒன்றுதாக்கு
வடித்துமே தங்கமாம் நல்லதங்கம்
வடிவான தங்கத்தை யென்னசொல்வேன்

கொடுத்துமே ஊதியே தகடடித்து
குணமாகப் போட்டிடவே சொல்லக்கேளே.
கேளுமே யருகுகட்டிப் புடமிரங்கும்
குணமாக வெடுத்துமே விற்றுக்கொண்டு
நாளுமெ ஞானத்தை தொந்திச்சேரு
நலமான சற்குருவை நித்தம்பூசி
வாளுமே தியானங்கள் பண்ணித்திரு
வடிவான சிவயோக வழியில்நில்லு
தாளுமே தாள்பூட்டு இந்தவித்தை
தடையறவே செய்திட்டால் பலிக்கும்பாரே.
பலிக்குமே முத்தருட சித்தர்தானும்
பரிவான சாணர்க்கு சொன்னசொல்லும்
கெலிக்குமே வயித்தியத்தில் சொன்னனைப்பா
கிருபையா யிக்காண்டந் தன்னிலேதான்
நலிக்கவே வெளியாகச் சொல்லிப்போட்டேன்
நலமாகப் பார்த்தறிந்து செய்துக்கொள்ளு
வலித்துமே திரியாதே தங்கத்தாயை
வடிவாகப் பூசைபண்ணி வலுமைபாரே. அசஅ

அயச்சத்துசிந்தூரம் அயச்செம்பென்றுஞ் சொல்வது.

வலுமைபா ரயமதுவும் பலமும்பத்து
வகையான நீலனது அன்பதாகும்
கலுமைபெற கலுவத்தில் ரெண்டுமிட்டு
காரியமாய்ப் பழச்சாற்றுல் நேகரைத்து

உலுமைபா ருருக்கிடவே கிட்டனுகு
மூண்மையா யுருக்கியே யெடுத்துக்கொண்டு
நலுமைபார் கெந்தகமும் பலமுமொன்று
நலமாக வுடைத்துமே யரைத்துக்கொள்ளே.
அரைத்துமே பழச்சாற்றுல் நாலுஜாம
மடைவாகக் குகையிலிட் டுருக்கித்திரு
புரைத்துமே யுருக்கியது சத்தாய்நிற்கும்
புதிதான சத்தெடுத் துடைத்துநீயும்
வரைத்துமே நாகமென்ற ஜயநீராலே
வடிவாகச் சேர்த்தரைத்து வில்லைகட்டி
தரைத்துமே ரவிதனிலே காயப்போடு
தடையறவே பெரியபுடம் போட்டுவாங்கே.

அயச்சத்து சிந்தூரவேதை.

வாங்கியே சிவக்கமட்டும் போட்டுவாங்கி
வடிவாகச் சிவந்தபின்பு மார்க்கங்கேளு
தாங்கியே சிந்தூர மூருக்கம் பூப்போல்
தடையறவே பார்வையா யெடுத்துநீயும்
ஓங்கியே தங்கத்தி விடையேதாக்க
உண்மையாய் தங்கமது செம்புமாகும்
பாங்கியே செம்பெடுத்து வெள்ளிதன்னில்
பார்த்திடவே திசைமாற்றும் பரிசுதானே.
பரிசான வயச்செம்பு இதுவேயாச்சு
பதிவான பாகமாய்ச் செய்துகொள்ளு
வரிவான ஜீவனத்தைப் பண்ணித்தேறு
வகையாக விருந்துமே யோகம்பாரு

கரிவாகச் சிந்தூர மிப்படியேசெய்து
கரிவான வேதைமுகக் கருக்குமாகும்
துருசாகச் செய்தாக்கால் பலனுமாகும்
சூசூசூதி சூசூசூத்தைச் சொன்னேன்பாரே.
வாதஞ் செய்யவேண்டுமாலு லின்னின்ன பொன்
னுக் காதியாகச் செய்துக்கொள்.
சொன்னதொரு பொன்னுக்கு ஆதிகேளு
சுயமான நாகமது ரசமுமாகும்
வின்னதொரு லிங்கரசம் பொன்னுக்காதி
விதமான திராவகமும் பொன்னுக்காதி
நன்னயமா யயமதுதான் பொன்னுக்காதி
நாதாந்தத் துரிசியது பொன்னுக்காதி
இன்னிலத்தில் வாதந்தான் செய்யவென்று
லிதமான விவையெல்லாங் கூடச்சேரே. அருங
வாதப்பொன்னெமெதுவாகயோசித்துப் பக்குவமாய்ச்செய்
இல்லாவிட்டால் பொன்முடிந்த துணியுங்கிடைக்காது.
கூடவே சேர்த்துமே பாகமாகக்
குணமாகப் பயபக்தி யாகச்செய்து
ஆடவே யிதைவிற்றுச் செலவுசெய்து
அம்மம்மா சிவயோக மறிந்துபாரு
நாடவே பரபரப்பாய் செய்தாயானால்
நாடாது பொன்முடிந்த துணியுமில்லை
காடவே சிவயோகங் கருதிப்பாரு
கனமாகச் செய்யாமல் கொஞ்சஞ்செய்யே.

உலுமைபா ருருக்கிடவே கிட்டனுகு
முண்மையா யுருக்கியே யெடுத்துக்கொண்டு
நலுமைபார் கெந்தகமும் பலமூமொன்று
நலமாக வுடைத்துமே பரைத்துக்கொள்ளே.
அரைத்துமே பழச்சாற்றுல் நாலுஜாம
மடைவாகக் குகையிலிட் டுருக்கித்திரு
புரைத்துமே யுருக்கியது சத்தாய்நிற்கும்
புதிதான சத்தெடுத் துடைத்துநீயும்
வரைத்துமே நாகமென்ற ஜயநீராலே
வடிவாகச் சேர்த்தரைத்து வில்லைகட்டி
தரைத்துமே ரவிதனிலே காயப்போடு
தடையறவே பெரியபுடம் போட்டுவாங்கே.
அயச்சத்து சிந்தூரவேதை.
வாங்கியே சிவக்கமட்டும் போட்டுவாங்கி
வடிவாகச் சிவந்தபின்பு மார்க்கங்கேளு
தாங்கியே சிந்தூர மூருக்கம் பூப்போல்
தடையறவே பார்வையா யெடுத்துநீயும்
ஓங்கியே தங்கத்தி லிடையேதாக்க
உண்மையாய் தங்கமது செம்புமாகும்
பாங்கியே செம்பெடுத்து வெள்ளிதன்னில்
பார்த்திடவே திசைமாற்றும் பரிசுதானே.
பரிசான வயச்செம்பு இதுவேயாச்சு
பதிவான பாகமாய்ச் செய்துகொள்ளு
வரிவான ஜீவனத்தைப் பண்ணித்தேறு
வகையாக விருந்துமே யோகம்பாரு

கரிவாகச் சிந்தூர மிப்படியேசெய்து
கரிவான வேதைமுகக் கருக்குமாகும்
துருசாகச் செய்தாக்கால் பலனுமாகும்
சூசூசூதி சூசூசூத்தைச் சொன்னேன்பாரே.

வாதஞ் செய்யவேண்டுமானு லின்னின்ன பொன்
னுக் காதியாகச் செய்துக்கொள்.

சொன்னதொரு பொன்னுக்கு ஆதிகேளு
சுயமான நாகமது ரசமுமாகும்
வின்னதொரு லிங்கரசம் பொன்னுக்காதி
விதமான திராவகமும் பொன்னுக்காதி
நன்னயமா யயமதுதான் பொன்னுக்காதி
நாதாந்தத் துரிசியது பொன்னுக்காதி
இன்னிலத்தில் வாதந்தான் செய்யவென்று
விதமான விவையெல்லாங் கூடச்சேரே. அருகு

வாதப்பொன்னேமெதுவாகயோசித்துப் பக்குவமாய்ச்செய்
இல்லாவிட்டால் பொன்முழுந்த துணியுங்கைக்காது.

கூடவே சேர்த்துமே பாகமாகக்
குணமாகப் பயபக்தி யாகச்செய்து
ஆடவே யிதைவிற்றுச் செலவுசெய்து
அம்மம்மா சிவயோக மறிந்துபாரு
நாடவே பரபரப்பாய் செய்தாயானால்
நாடாது பொன்முடிந்த துணியுமில்லை
காடவே சிவயோகங் கருதிப்பாரு
கனமாகச் செய்யாமல் கொஞ்சஞ்செய்யே.

வாதசித்தி பைரவஜபம்.

செய்யவே வைரவரை தியானம்பண்ணி
சிறப்பாக ஓம்நமசி வாயவென்று
மெய்தனிலே புன்னினைவை புறுதியாக்கி
மேதினியி லுருச்செவித்து நூறுதானும்
வய்யவே செய்தாக்காற் சித்தியாகும்
வண்மையாய் சித்தியெல்லாம் ஜபத்திலாகும்
நய்யவே யிதையறிந்து செய்துக்கொள்ளு
நாட்டிலே ரசவாத நாடும்பாரே. அருடு

அடியில்வரும் செம்புசெய்து வைத்துக்கொண்டு
கடற்குரிவியைத் தேடிக்கொள்.

நாடுமே யின்னமொரு செம்புசொல்வேன்
நாதாக்க ளாடியதோர் செம்புதன்னை
மூடினதோர் மூடெல்லாம் வெளியாய்க்கேளு
மூடிவான விச்செம்பு வேதைமெத்த
வாடியே திரிந்துமே மயங்கவேண்டாம்
வகையாகச் செம்பைத்தான் வைத்துக்கொண்டு
தேடினதோர் கடற்குருவி தன்னைத்தேடி
திறமாக ஞானவொலி கீதந்தேடே. அருசு

செம்பு ஜீவனத்துக்காதி.

தேடவே ஜீவனத்துக் கிடமேசெம்பு
ஜெகஜ்ஜால மாடவே செம்புசொல்வேன்
பாடாக வில்லையப்பா செய்துபாரு
பத்தியுடன் செய்தாக்கால் பலனுமாகும்

காடதுபோல் நினையாதே மயக்கமில்லை
கருத்துணர்ந்து செய்திடவே கருணையாகும்
வாடாமல் நாகத்தின் செம்புவேதை
வடிவாக வெடுத்திடவே பலனுமாமே. அருள

சோரச்செம்பு கட்டுவகைஜயநீர்.

பலநாக வின்னமொரு சோரச்செம்பு
பதிவாகச் சொல்லுகிறேன் பாருபாரு
விலகாமல் நாகமது பலமும்பத்து
விருப்பமாய்ச் சுத்தித்து வெடுத்துப்பாரு
தலமாக நாகமது பலமும்ரெண்டு
தாட்டிகமாய்ப் செம்பதுவும் பலமிரண்டு
கலகவருக்கியே புட்டுபண்ணி [அருஅ
கதிபெறவே இலுப்பைநெய் விட்டுருக்கே.

உருக்கையிலே சூதமது பலமும்பாதி
ஓகோகோ விட்டுமே யுருக்கித்தீரு
பெருக்கவே வீரமது காலுமிட்டுப்
பிரழாமற் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணி
நருக்கியே திராவகத்தை விட்டுநீபும்
நலமாக மண்டலந்தான் புதைத்துப்போடு
பெருக்காக நின்றுமே ஜயநீராகும்
பிரிவாக கட்டுவகை பேசக்கேளே. அருக

பேசவே லிங்கமுதல் வெள்ளையெல்லாம்
பிரழாமல் கட்டியே வேதையாகும்

ஆசவே செம்பாகச் சேர்ந்ததாலே
அடைவாக சரக்கெல்லாங் கட்டியாடும்
பாசையாய் சொல்லவில்லை யிந்தப்போக்கு
பதிவான கட்டாகு மெழுகுமாகும்
வாசனையாய் செய்துமே வடிவுபாரு
வலுமையாய்ச் சிறுபிள்ளை யாடுவானே. அசுo

ஆடவே கருவுயர்ந்த ஜயநீர்தானு
மடைவாகக் கட்டுவகை ஐயநீரப்பா
தேடவே முன்சொன்ன ஜயநீர்தானுங்
திறமான சிந்தூர ஜயநீராகு
மூடவே சிந்தூர ஜயநீராலே
முடிவான சிந்தூரம் பண்ணியாடு
வாடாமல் செய்துமே மார்க்கம்பாரு
வாதம்வரும் யோகமாம் வடிவுதானே. அசுக

தாம்பர நாகசிந்தூரமும் வேதையும்.

வடிவான வின்னமொரு செம்புகேளு
வகையாகத் துருசிலுட செம்பெடுத்து
துடிவாகப் பலநிறுத்துத் தகடுதட்டித்
துப்பறவு வெடிசின மிடையேசேர்த்து
படிவாகக் கழுதையுட நீரிலாட்டிப்
பதமாகத் தோய்த்துமே யொடித்துப்பாரு
விடிவாக வொடியுமது பருவம்பார்த்து [அசுஉ
விருப்பமாய்ப் பலநிறுத் தெடுத்துக்கொள்ளே.

கொள்ளவே நாகமது பலமுமொன்று
கூருக விரண்டுமொன்று யுருக்கிக்கொண்டு
மெள்ளவே யுடைத்ததனை சொல்லக்கேளு
மெதுவாகச் சிந்தூர ஜயநீராலே
கள்ளமா யரைத்துமே புடத்தைப்போடு
கனிவாகச் சிவக்கமட்டும் புடத்தைப்போடு
வள்ளபடி சிவந்துமே யிருக்கும்பாரு
ஓகோகோ செப்புகிற வரிசைகேளே. அசுஉ

கேளுமே சிந்தூரம் பலநிறுத்து
கெடியான தங்கத்தி லிடையேதாக்கி
ஆளுமே யதையெடுத்து வெள்ளியெட்டி
லன்பாக வொன்றிடவே யதிகவேதை
பாளுமே திசைமாற்று பதிவுமாகும்
பம்பரம்போ லிருக்குமது பலனுமாகும்
வேளுமே யெரித்தவர்தான் சொன்னமார்க்கம்
வெளுளாமல் பாத்துமே செய்திடாயே. அசுச

செய்திடவே புத்தியாய்ச் சிந்தூரத்தை
திடமான தங்கத்தி லிடைகொடுத்து
பைதிடவே வேதைபா ரில்லாப்போனால் [கும்
பலனில்லை செய்ததெல்லாம் பொய்யாய்ப்போ
கைதிடவே கைநழுக விட்டாயானால்
கலனுகும் வேதைமுகங் கடிதமாகும்
மெய்யாகச் சொல்லிவிட்டேனிந்தப்போக்கு [ரே.
மேன்மையாய்க் குருமுடிக்கும் பொன்னும்பா

சிந்தூரங்கட்கெல்லா மூன்சொன்ன நாகஜயநீர் நன்றுப்
சிவக்கச்செய்யும் தங்கஞ்சேர்ந்தால் வேதையாகும்.
மேன்மையாய்ச் சிந்தூர வகைகட்கெல்லாம்
மிதமான நாகத்தின் ஜயநீராலே
ஆண்மையாய்ச் சிவந்துமே வேதையாகு
மடைவான தங்கத்தா யணைத்துக்கொள்ளு
வாண்மையாம் பொன்னுகும் வடிவுமாகும்
வகையறியார் துகைகாணார் மயங்குவார்கள்
தாண்மையாய்ப் பேசியே வாதுசொல்லி
தர்க்கமிட்டுத் திரிவார்க ளுலகத்தோரே. அசுசு

பெரியோரையடுத்துக்கேட்டால் சகலமுங் கைகூடும்.
உலகத்தோர் பிழைக்கவே சொன்னேனைப்பா
உண்மையாயிதைநம்பி யுறுதியாக
பலகற்றும் பலனேது வாதமில்லை
பதிவாகப் போகாம லிருந்ததாலே
நிலையற்றுப் பேச்சற்று நின்றுதப்பா
நினைவான ஞானநிலை நேர்ந்துபாரு
கலமற்ற விடத்திலே வாதமாகுங்
கற்றுணர்ந்த பெரியோரை யடுத்துக்கேளே.

இந்நூலைச் சோதித்துச்செய்தா லியாதாமொன்று பலிக்கும்.
அடுத்திட்டால் வாதம்வரும் யோகமோடு
அடுக்காட்டால் கழுதைதான் மேய்ப்பான்பாரு
தடுத்திட்டுத் திரியாதே யிக்காண்டத்தை
தடையறவே சோதித்துச் சரியாய்ப்பாரு

படித்திட்டுப் போகாதே யேதாமொன்று
பதிவாகப் பலித்திடுமே சித்தியாகு
முடித்திட்டு யோகசித்தி ஞானசித்தி
முனிவாகத் திரிந்துமே யிருந்திடாயே. அசுஅ

இந்நூலி லின்னின்னது சொல்லினேன்.

இருந்திடவே லோகத்திற் செம்புசொன்னே
னெழுமதி போகாமல்வகையைச்சொல்னேன்
அரிந்திடவே ஞானம்வரும் பாதைசொன்னே
னரிந்துமே யவ்வழியி லிருந்துஆடு
பருந்திடவே பறக்காமற் பாகமாக
பதிவாகச் சொன்னமுறை போலேபாரு
விருந்திட்டுப் பகைபண்ணித் திரியவேண்டாம்
விருப்பமா யாயுர்வே தத்தைதானே. அசுக

இன்னின்ன வகையில் புத்தியாய் நின்றுபார்.

தானென்ற ஆணவத்தைத் தள்ளிப்போடு
தத்தளித்துத் திரியாதே ஞானம்பாரு
கோனென்ற குருவைப்போற் கீர்த்திதேடு
குணமாக விருந்துமே கூத்துப்பாரு
ஆனென்று ஒருவருடன் பேசவேண்டா
மன்பான புத்தியைநீ யுசத்திப்போடு
மானுகப் பேர்படைத்து உலகுதன்னில்
மதியாக விருந்துமே மருவிப்பாரே. அஎ0

மருவிப்பார் சித்தாந்த வேதாந்தத்தை
மயமான சாஸ்திரத்தை மருவிப்பாரு

கருவிப்பார் தத்துவத்தைக் கண்டுபாரு
காரணமாய் நால்வேத மொன்றுய்நின்று
அருவிப்பார் சித்தருட நூல்களெல்லா
மழும்பாகும் வேதமுறை தலைகீழாகும்
கருவிப்பார் வாதம்வந்தால் யோகமாகும்
காச்சினைதே ரூப்பாலே யெல்லாமாச்சே.

திராவகத்தின் பயன்.

எல்லாமாந் திராவகத்தா லெல்லாமாச்சு
எங்கியே திரியாமற் புகைநீர்பாரு
வெல்லுமே வாதமது ஏவல்கேழ்க்கும்
விருப்பமாய் வர்ணங்கள் மிகவுண்டாகும்
நல்லோர்கள் கூட்டத்தில் நின்றுதேர்ந்து
நலமான வாதத்தை மருவிப்பார்த்து
பொல்லாமை யில்லாமல் கோபம்போக்கிப்
பிசகாமல் ஞானத்தைப் பார்த்திடாயே. அளவு

திராவக குருவின் பெருமை.

பார்த்திடவே குருவினுட திராவகத்தை
பதிவாக விக்காண்டங் தனிலேசொல்வேன்
சேர்த்திடவே லோகமெல்லாம் பழுக்குமப்பா
சித்தியாம் வாதவித்தை கூடணத்திலாகும்
கார்த்திடவே திராவகத்தின் வண்மைதன்னை
கனிவாக விதுலகுவு முன்னேபாரு
மூத்தாள்தான் முகத்தில்நின்றுல் பார்க்கான்பாவி
மூடியமட்டுஞ் சோதித்தால் தோணும்பாரே.

வெடியுப்பு திராவகம்.

தோணவே வெடியுப்புப் பலமும்பத்து
துடியான சீனமது இருபத்தைந்து
ஆணவே ரெண்டுமொல்லுப்பு பொடித்துக்கொண்டு
வப்பனே கலயத்தில் வாரியிட்டு
பாணவே யடுப்பேற்றி யெரிக்கும்போது
பொருமையாய் முன்னீரை தள்ளிப்போடு
காணவே நடுநீரைத் தள்ளிப்போடு
கடைநீரைப் பிடத்துமே வைத்துக்கொள்ளே.

வெடியுப்புத் திராவகத்தின்பெயர்.

கொள்ளவே நாதாந்த நீருமாச்சு
கொடியதொரு வேகமாம் காரமாகும்
நள்ளவே வருணத்திற் காதியாகும்
நலமான வாய்நீரும் குமரிநீரும்
வள்ளவே பழச்சாறு நீரென்றும்பேர்
வண்மையா யின்னீரை வைத்துக்கொள்ளு
கள்ளமாய்ச் சொல்லவில்லை யின்னீர்தன்னில்
காரணமாய் நீர்பெருமை காண்கிலேனே. அளவு

நாகரசத் திராவகம்.

காண்கிலே னைகரச மிடையேசேர்த்து
கருத்துறவே யுருக்கியதைக் கல்வத்திட்டு
நாண்கிலேன் வீரங்கால் சேர்த்தரைக்க
நலமான கசிவாக மட்டுமாட்டி
வாண்கிலேன் கடைநீரை மிதக்கவிட்டு
வடிவாக பசூஷமொன்று கடந்துபாரு

தாண்கிலேன் சிவந்தகளி யாயிருக்கும்
நாதாந்த நீரிறுட வாண்மைதானே. அளசு

வர்ண திராவகம்.

ஆண்மையாய்ப் பசூமொன்று கடந்துபிள்பு
அடைவாக நீரிறுத்து வைத்துக்கொண்டு
நாண்மையாய் பின்னீரிற் கெந்திலிங்கம்
நலமான தாளகமும் பூனீர்போட்டு
வாண்மையா மஞ்சிலோபுங் காரிகூட்டி
வகையாக வகைக்கியரை பலமுங்கூட்டி
தோண்மையா யைஞ்சுநா ளிழுத்தரைத்து
துடியாக விதிறுடைய தெளிவைவாங்கே. அளள

தூரிசிசேர்ந்த அயச்சத்து.

வாங்கியே வர்ணமென்ற ஜயநீர்தன்னை
வடிவாகப் பூசைபண்ணி வைத்துக்கொண்டு
தேங்கியே சொல்லுகிறே னின்னங்கேளு
நிறமான § வொழுகரைதான் பலமும்பத்து
வாங்கியே துரிசியது நூறதாகும் [டு
வகையாக ரெண்டுமொன்று யரைத்துக்கொண்
தாங்கியே குகையிலிட் டுருக்கிப்போடு
தடையற்ற மணிபோல வுருகும்பாரே. அளஅ

§ ஒழுகரை - அயம் - இரும்பு,

ஷ அயச்சத்து சிந்தூரம்.

உருகுகின்ற ஒழுகரையு மணியுமாச்சு
உசத்தியா மைந்துநிற முருக்கித்திரு

நருகுகின்ற வெள்ளிபோல் கண்விட்டாடும்
நலமாக வெடித்துமே சொல்லக்கேளு
வருகுகின்ற நாகத்தின் ஜயநீர்தன்னை
வளமாக விட்டாட்டி அரைத்துக்கொண்டு
கருகுகின்ற வில்லைபண்ணிக் காயவைத்து
கனமாகப் புடம்போட்டு எடுத்துப்பாரே.

ஷ அயச்சத்து சிந்தூரத்தில் தங்கஞ்சேர்த்து
வேதை இது காயசித்தியுமாகும்.

எடுத்துப்பார் சிவக்காதே போனாற்கேளு
இன்பமாய் ஜயநீர்தான் விட்டரைத்து
அடுத்துப்பார் வில்லைதட்டி ரவியிற்காய
அடைவாக விப்படியே யைந்துபோடு
தடுத்துப்பார் முருக்கம்பூப் போலேயாகும்
சார்வாகச் சிந்தூர மெடுத்துக்கொண்டு
வடித்துப்பார் தங்கத்தி லிடையேதாக்கு
வடிவாகத் தங்கமது தங்கமாமே. அ0

தங்கமாம் பச்சைநிற மாகக்காணும்
தடையறவே யாயிரத்து எட்டுமாற்று
பங்கமாய் மதியிலிரு பதுக்குஒன்று
பதிவாகக் கொடுத்திடவே திசைமாற்றுகும்
சங்கமா மிதையெடுத்துச் செலவுசெய்யு
சரியான யோகசித்தி காயசித்தி
உங்கமாம் பணவிடைதா னுண்டுதேறு
உறுதியாங் காயமென்ன சித்தியாச்சே. அக

சித்தியா மண்டலத்திற் சட்டைகக்கும்
சிவசிவா அருணநிறம் போலேதோணும்
முத்தியாம் நோவெல்லாந் தவிடேயாகு
முடிவான வேதையிது மூர்க்கமெத்த
பத்தியாய்ப் பாகமது செய்துக்கொள்ளு
பதிவான கைப்போடு புளிப்புதள்ளி
சத்தியா யுண்டிடவே யுகந்துதானும்
தடையற்ற சமாதியிலே யிருக்கலாமே. அஅஉ

அயச்சத்துப் பெருமை.

சமாதியிலே யிருக்கவொழு கரையைச்சொன்னேன்
சரியான வொழுகரையில் வர்ணமெத்த
நமாதியிலே வெகுபாடு பட்டுத்தேறி
நலமான கைபாக விபரமெல்லாம்
கமாதியிலே பாகமா யிக்காண்டத்திற் [கு
கனிந்துமே சொல்லிவிட்டேன் மூறைபோற்பா
வமாதியிலே பாடுபட்டா லெல்லாமாகும்
வடிவான தவமாகும் வைத்துப்பாரே. அஅங

இரும்பைவிட எழுகு வர்ணமாயிருக்கும் சீக்கிர
முருக்கு வேதைசெய்யும்.

பாருமே யிரும்பைவிடக் * கடிசுதானும்
பதமாகச் செய்தாக்கால் வர்ணமாகும்
சேருமே சுருக்கமா யுருகிப்போகும்
சூசூத்தைக் கண்டுமே செய்துக்கொள்ளு
வாருமே யுளிக்கடுசு செம்புகட்டும்
வடிவான நேத்தியிது வர்ணத்தாதி

ஆடுமே அயமென்று மிதற்குப்பேரா
மாதியாந் துருசுதனைப் பார்த்துச்சேரே. அஅச

* கடிசு-எழுகு.

துருசுசெம்பை எழுகோடுசேர்த்துக்கொள் தனிச்செ
ம்பி லீயமிருப்பதா லிதைச்சேர்த்தால் வேதை
கெடும் ஆதலாலுருமாறிய துருசு செம்பைச்
சேர் வாதசித்தியாகும்.

பார்த்துமே துருசுக்குள் செம்புதானும்
பதிவான வர்ணமாம் வர்ணத்தாதி
சேர்த்துமே செம்பைதான் சேர்க்கவேண்டும்
சிறப்பாக ஈயமது சேர்ந்திருக்கும்
கார்த்துமே யுருமாறும் செம்பைச்சேர்த்து
கடுகியே திரிந்துமே யலையவேண்டாம்
ஏர்த்துமே நல்லசெம்பை சேர்த்துஆட
யின்பமாய் வாதமது வருகும்பாரே. அஅரு

கைபாகந்தப்பாமற் செய்தால் வேதையாகும் தப்பி
லெல்லாம் பிசகும்.

வருகுமே கைபாக மாகச்செய்து
வழியோடே செய்தாக்கால் வர்ணமாகும்
தருகுமே வாதத்தா லெல்லாமாகும்
தாக்கினதோர் தங்கத்தில் வேதையாகும்
பெருகுமே ஞானசித்தி யோகசித்தி
போக்கோடே செய்தாக்கா லெல்லாஞ்சித்தி
பிருகுமே மாறுபா டாகச்செய்து
பிரட்டாகச் செய்யாமல் வேதைபாரே. அஅசு

இரும்பைவிட் டுருக்குச் சுத்திசெய்து வேதை
யாடில் மிகவுநன்மை.

பாரேநீ யிரும்பைவிட § உருக்குசுத்திப்
பதிவாகச் செய்பாக மாகச்செய்து
காரேநீ பொன்பண்ணிக் கடையில்விற்று
கதிபெறவே ஞானவழி தேறப்பாரு
வாரேநீ மதிமயங்கிப் போகவேண்டாம்
மறதியா யொன்றைவிட் டொன்றுசெய்து
தாரேநீ தாறுமா றுப்த்திரிந்து
தடையறவே சாஸ்திரத்தைப்பொய்யாக்காயே.

§ உருக்கு - எழுகு.

மதியூகியென்று பெயர்வகித்து இக்காண்டத்தி லுண்மை
யான வேதைகளை யதிகமாகச் சொன்னேன்.

பொய்போகா யூகியைத்தா னித்தம்பூசி
போக்கோடே யிக்காண்டந் தனிலேரொம்ப
மெய்யாக வேதைகள்தான் சொன்னேன்பாரு
மேதினியில் ரசவாத நிஜமதாகும்
வய்யகத்தில் மதியூகி யென்றுபேரு
வடிவாகப் பேர்படைத்து இருந்தேன்யானும்
பய்யவே நிர்ணயமாய் பார்த்தால்வாதம்
பதிவாக வந்திடுமே பலமதாமே. அஅஅ

தருசுச்செம்பு வீரஞ்சேர்ந்தானது.

பலமாக வின்னமொரு செம்புசொல்வேன்
பாதிமதி யணிந்தாய்கள் சொன்னநீதி

பிலமாக துரிசியது பலமும்பத்து
பிரபலமாய் வீரமது பலமிரண்டு
கலமாகத் துரிசியனைதக் கரியில்வைத்து
கருத்தாக வூதிடவே நீறிப்போகும்
தலமாகக் காரமது ரொம்பவாகும்
தாட்டிகமாய் வீரமதை சேர்த்துக்கொள்ளே.

ஷ தருசுச்செம்பு சிந்தூரம்.

சேர்த்துமே புகைநீரை விட்டரைத்து
திறமாகப் பனிரெண்டு ஜாமந்தானும்
பார்த்துமே வில்லைகட்டி ரவியிற்போட்டு
பதிவாக சுண்ணும்பில் புடத்தைப்போடு
கார்த்துமே யெடுத்துநீ சொல்லக்கேளு
கனிவாக ரூடனரை சேர்த்துக்கொண்டு
வார்த்துமே புகைநீரை விட்டுவூட்டி
வலுவாகப் புடமிட சிந்தூரமாமே. கூ00

ஆமேதான் சிந்தூர முருக்கம்பூப்போ
லடைவாக வெடுத்துமே சொல்லக்கேளு
காமேதான் நாகரச ஜயநீராலே
கருத்தாகப் பனிரெண்டு ஜாமந்தானும்
வாமேதா லரைத்துமே வில்லைகட்டி
வலுவாகப் போட்டுமே மார்க்கங்கேளு
தாமேதா லெடுத்துப்பார் சிவந்திருக்கும்
தப்பாம லெடுத்துமே சொல்லக்கேளே. கூ0க

தருசுசெம்பு சிந்தூரமாகாவிட்டால் செய்யவேண்டிய செய்கை.

கேளுமே சிவக்காதே போனற்கேளு
கிருபையாய்ப் பழையபடி புடத்தைப்போடு
தாளுமே சிந்தூர மூருக்கம்பூப்போல்
தடையறவே யிருக்குமது சிந்தூரத்தில்
பாளுமே நாகத்தின் ஜயநீர்தன்னை
பாச்சியே நால்ஜாம மரைத்துவில்லை
வாளுமே ரவிபடவே காயவைத்து
வடிவாகப் புடமிட சிந்தூரமாமே. கூ0உ

தருசுசெம்பு தங்கஞ்சேர்த்தவேதை.

ஆமேதான் சிந்தூரந் தங்கத்தோடே
அணைத்திடவே செம்பாகும் செம்புநேரே
பாமேதான் வெள்ளியது பாதிசேரு
பதிவான தங்கமா மென்னசொல்வேன்
காமேதா னுப்பு காவிக்கிருக்கும்
கருத்தாகப் புடமிறங்குந் தங்கந்தானும்
வாமேதா னிதைவிற்றுச் செலவுசெய்து
வகையாக ஞானவழி யடித்திடாயே. கூ0ங

தருசுசெம்பு சிந்தூர முண்ணும்பலன்.

அடித்திடவே பணவிடைதான் தேனிலுண்ணு
அடைவாக காயசித்தி தங்கசித்தி
படித்திடவே நோவெல்லாந் தவிடேயாகும்
பதையாம லுப்போடு பிளியுந்தள்ளி
கடித்திடவே யுகாந்தவரை யிருக்குந்தேகங்
காயசித்தி மேலான தங்கமாகும்

தடுத்திடவே சுவாசமது இறுகியேறும் [மோ.
தாட்டிகமாய் சித்தியெல்லாஞ் சொல்லப்போ
நொறுக்கு வெள்ளியும் வேதையும்.

சொல்லவே நொறுக்குவெள்ளி செய்யக்கேளு
சொற்பெரிய நாதாக்கள் சொல்லவில்லை
நல்லவே யுலகத்தோர் பிழைக்கவேண்டி
நலமாக விக்காண்டந் தனிலேசொல்வேன்
கல்லவே நிசமதுதான் சொல்லாவிட்டால்
கனிவான சாத்திரமும் பொய்யாய்ப்போகும்
வல்லவே யென்றுசொல்லி யிதிலேசொன்னேன்
வகையாகச் செய்தறிந்து வண்மைபாரே. ௯0௫
பார்க்கவே வெள்ளியது நொறுங்கிப்போக
பதிவாக வகைவிபரஞ் சொல்லக்கேளு
ஏர்க்கவே வெள்ளியது அஞ்சுமாற்று
இன்பமாய் பலநிறுத்து எடுத்துக்கொண்டு
கார்க்கவே காரீய நாலிலொன்று
கனிவாகக் கொடுத்துமே யூதிப்போடு
நார்க்கவே தகடாகத் தட்டிக்கொண்டு
நலமாகப் பாகமதை நவிலக்கேளே. ௯0௬
நவிலவே வெள்ளிக்கு முக்கால்கெந்தி
நலமாக மதிதனக்கு வீரங்காலாய்
கவிலவே யரைத்துமே தகட்டின்மேலே
கனமாகப் பூசியே புடத்தைப்போடு

கவிலவே அதறுபோ லிருக்கும்பாரு
தனியான அதறெடுத்துப் புறம்பாய்வைத்து
அவிலவே மிச்சமதி தனிலேபூசி
அடைவாகப் புடம்போட நொறுங்கிப்போமே.
நொறுங்கவே யிப்படிக்கி நொறுங்கமட்டும் [டு
நுணுக்கமாய்ப் புடம்போட்டு எடுத்துக்கொண்
நறுங்கவே நொறுங்கினதோர் சத்துதானு
நலமான ஈச்சங்காய் போலிருக்கும்
கறுங்கவே சிகப்புமது கறுப்பாய்நிற்குங் [ம்
காரணமாய் நொறுங்கினதோர் கரியைத்தானு
வறுங்கவே பலநிறுத் தெடுத்துக்கொண்டு
வடிவான சூடனரைப் பலமுஞ்சேரே. கூ0அ
சேர்த்துமே யெலுமிச்சம் பழச்சாவிட்டு
சிறப்பாக விருஜாம மரைத்துமைபோல்
பார்த்துமே அகலிட்டுப் புடத்தைப்போடு
பதிவாகக் கறுத்தாக்கால் பின்னுஞ்சூடன்
நார்த்துமே சேர்த்தரைத்துப் புடத்தைப்போடு
நலமான கெந்தியம் விலகிப்போகும்
வார்த்துமே சிந்தூரங் கண்கொள்ளாது
வகையாகச் செய்யுகிற பாகங்கேளே கூ0கூ
பாகமே சொல்லுகிறேன் பாகங்கேளு
பதிவான நாகத்தின் ஜயநீராலே
யூகமா யிருஜாம மாட்டிப்பின்பு
உறுதியாய் வில்லேபண்ணி காயவைத்து

ஆகமாய்ப் புடம்போடச் சிந்தூரந்தான்
அடைவாகச் சிந்தூரங் கண்கொள்ளாது
யோகமாய் சகலசித்து மிதனலாச்சு
உசத்தியா மதினுடைய மியர்க்கைகேளே. கூக0
இயர்க்கைதான் சொல்லுகிறே னுற்றுக்கேளு
இன்பமாய் தங்கமது பலமுமொன்று
அன்பாக உருக்குமுகந் தனில்கொடுக்க
அயற்கையாம் மாற்றுமது பத்துமாகும்
தயர்க்கையாய் தங்கமது பார்க்கும்போது
தாரணியில் பத்தில்லை யெட்டேகாலாம்
துயற்கையாம் நம்பிக்கை யாகச்செய்து
தொல்லுலகில் காயசித்தி பண்ணித்தேறே. கூகக
பண்ணவே நொறுக்குவெள்ளி பிள்காண்டத்தில்
பதிவாகச் சொல்லவிலை புடமேசொன்னேன்
நண்ணவே ஆராய்ந்து பார்த்துத்தேறி
நலமாகச் செய்தாக்கால் பலனுமாகும்
புண்ணவே பிணம்போலே யிருந்தாலென்ன
புவிதனிலே ராஜயோ கத்தைப்பார்க்க
கண்ணவே வாதசித்தி வேணும்வேணும்
கருத்துறவே கருத்தினில் வாதமாமே. கூகஉ
வாதமா மென்றுசொல்லி செம்பெடுத்து
வகையாகக் கொடுத்தாக்கா லென்னலாபம்
போதமாம் ஓர்றுமில்லை பாடுபட்டு
பொருந்தவே செய்தாக்கால் புத்திமுத்தி

நீதமாம் நிரைநிரையாய்ப் பார்த்துப்பார்த்து
நேராக சொல்லிடவே தேரணும்தோணும்
காதமாம் நொறுக்குவெள்ளி போட்டுச்சாயம்
கனிவாக நாகத்தில் ஜயநீர்பாரே. கூகஙு

வாதத்திற் கின்னின்னது செய்துக்கொள்.

பாரேநீ நொறுக்குவெள்ளி செய்யவேணும்
பண்பான புகைநீரு வைக்கவேணும்
காரேநீ பாகமாய் செய்யவேணும்
கருத்துறவே மனநிலைத்த பாகம்வேணும்
தூரேநீ தறுதுரும்பல் கையில்தாணும்
துடியாக சாஸ்திரத்தை கொடுக்கவேண்டாம்
நாரேநீ பிள்காண்டம் தன்னில்தாணும்
நலமான சத்தியங்கள் சொன்னேன்பாரே.கூகச

இச்சாத்திரத்திற் கூறிய வின்னின்னபொருளே வெளி
யிடாதேயெனச் சத்தியங்கூறல்.

சத்தியங்க ளேதென்றுற் சொல்லக்கேளு
தனியான நொறுக்குவெள்ளி பாகமாக
புத்தியாய்ச் சொன்னக்காற் சத்யமாகும்
புதுமையாங் குருசுகரி சொன்னல்சத்யம்
நத்தியது சத்தியமாம் செம்புசொன்னல்
நலமாக விதைகொடுக்குந் தங்கஞ்சொன்னல்
சித்தியிலே சாத்திரத்தை கொடுத்தாயானல்
சிவனாணை சத்தியமாங் கண்டுபாரே. கூகசு

நொறுக்குவெள்ளிக்கு நாகரசஜயநீர் சாயம்
போட வேதையாகும்.

கண்டுபார் நொறுங்கினதோர் வெள்ளிதன்னில்
கனிவான நாகரச சாயம்போடு
வண்டுபார் சிந்தூர மானைற்கேளு
வகையாகத் தங்கத்திற் கொடுக்கமாற்று
நண்டுபார் செம்பதனைக் கொல்லவேணும்
நலமான செய்யுகிற பாகம்வேணும்
தொண்டுபட் டுளறியே திரிந்தாலொன்றும்
திடமில்லை பாகமாய்ச் செய்துகொள்ளே. கூகசு

வாதசித்திக் கின்னமு மின்னின்னது செய்துகொ
ண்டு எள்ளி லெண்ணெயினமானைற்போல்
தங்கத்தானையச் சேர்த்துக்கொள்.

கொள்ளவே ஓழுகரையைச் செய்துக்கொள்ளு
கூறுன புகைநீரை வைத்துக்கொள்ளு
மெள்ளவே நொறுக்குவெள்ளி வைத்துஆடு
மேன்மையாந் தங்கத்தைக் கொஞ்சஞ்சேரு
வள்ளலார் சொன்னதொரு புத்திமார்க்கம்
வகையாக மானுடர்க்கு புத்திசொன்னார்
எள்ளானை லெண்ணையா மினத்தைப்போலே
இதமான தங்கத்தைச் சேர்த்திடாயே. கூகள

சேர்த்திடவே தங்கமாங் காயசித்தி
சித்திபெற தங்கத்தைச் சேர்த்துக்கொள்ளு

பார்த்திடவே சோதித்தால் பலனுமாகும்
பாராட்டலொன்றுமில்லை கழுதைமாண்பு
வார்த்திடவே புத்தியில்லார் கேட்டுக்கேட்டு
வகைகெட்ட சாத்திரத்தை மருவிப்பார்த்து
சேர்த்திடுவாரிப்புவியிலொன்றுமில்லார்
சிறப்பாக வவர்களுக்கு இல்லைதானே. கூகஅ

வாதசித்தியுண்டாக வின்னின்னதை செவ்வைபாய்ப்பார்.

இல்லையென்று சொல்லாமல் வெள்ளிபாரு
ஏத்தமா மதிதனையே நொறுக்கியாடு
கொல்லைவழி போகாமற் செம்பைப்பாரு
கோதியே போகாமலிக்காண்டத்தில்
நல்லாக பார்த்திடவே வாதஞ்சித்தி
நயமாகு முண்டாகும் லோகந்தன்னில்
வில்லாக வளைந்துமே துருசுபாரு
விருப்பமா யெல்லாமும் சோதித்தேதேறை. கூகக

இன்னின்னது செய்யாவிடி லின்னின்னது பயன்படாது.

சோதித்தால் சகலகரு வெல்லாந்தானும்
சோதிக்காப் போனக்கா லொன்றுமில்லை
வாதிக்குப் புத்தியது சொம்பவேணும்
வாதிக்காப் போனக்காற் செம்புசாகா
போதித்தால் மந்திரங்கள் சித்தியாகும்
போதிக்காப் போனக்கா லொன்றுமில்லை
பாதிமதி யணிந்தவன்றான் சொன்னவார்த்தை
பரம்பொருளாய் தங்கத்தைப் பார்த்திடாயே.

தங்கத்தாய் சேர்த்தால் களங்குமூதல் பலன்
கொடுக்கு மில்லாவிட்டால் பலனில்லை.
தங்கத்தைப் பார்த்திட்டால் தங்கமாகும்
தங்கமில்லா களங்குமூத லொன்றுமில்லை
பங்கமாய் போகாமல் களங்கிலேடே
பக்குவமா யேமத்தைச் சேர்க்கவேணும்
துங்கமாய் சிந்தூரஞ் செய்தாலுகில்
துடியான தங்கத்தை சேர்க்கவேணும்
எங்குமே திரிந்தாலு மகப்படாது
இனிமையாய் தங்கத்தைச் சேர்த்திடாயே.கூடக
தங்கமே செய்வதுதா னரிதோவல்ல
தாய்சேர்த்தால் தங்கமா மங்கமாகும்
பொங்கமாந் தாய்சேராப் போனற்கேளு
புடத்திலே பொரிந்துவிடும் வாதம்பொய்யாம்
வங்கமா மியத்தை விட்டுவூத
வலுவில்லை யோடியே மாண்டுபோகும்
திங்கள்வெண் சடையார்தான் சொன்னமார்க்கம்
ஜகத்திலே வாதிகள்தான் செயமாட்டாரே.
தங்கத்தைவிட்டு வாதிகள் துன்புறல்.
மாட்டாமை யில்லையப்பா தங்கம்விட்டு
மதிமயங்கி லோகமென்று செம்பைச்சேர்த்து
தாட்டாமை யாகவே மூலிதேடி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமைபார்த்து
பாட்டெல்லாம் பொய்யாக வென்றுசொல்வார்
பதிவான சாஸ்த்திரம்பொய் யென்றுசொல்லி

கேட்டாகச் சொல்லியே திரிவாரையா
கிருபையுற்ற வாதிக்குத் தங்கமாச்சே. கூஉங

குருச்செம்பில் தங்கஞ்சேர் வங்கஞ்சேர்ந்தா லோடாது.
தங்கமே குருவினுட செம்பில்சேர்த்தால்
தங்கமாம் வங்கத்தைச் சேர்த்துஊத
பொங்கமாய் செம்புதனை கொடுக்கமாட்டார்
பொறுமையாந் தங்கமது பிடித்துக்கொள்ளும்
சங்கவரை யெட்டியே வேதையோடும்
சரியான தங்கத்தைச் சேர்த்துக்கொள்ளு
தங்கமாய்ப் போகாமல் தங்கந்தன்னை
துடியாகச் சேர்த்திடவே யேமமாமே. கூஉச

சரக்கில் செம்பெடுத்துத் தங்கஞ்சேர்த்து வெள்ளியிலி
டவேதையாகும் இல்லாவிட்டால் வேதையில்லை.
ஏமமாம் செம்பதனை யெடுத்தாணை
லிதமான தங்கத்தி லிடையேசேரு
தாமமாம் வெள்ளியுடன் சேர்த்தபோது
தடையறவே பொன்னுகும் புடமிறங்கும்
வாமமா மேமமது சேராப்போலில்
வகையான பொன்னில்லை மார்க்கம்பொய்யாம்
காமமாம் பெண்ணாசை விட்டுப்பாரு
கருணைவைத்து செய்தாக்கால் வாதமாமே.
வாதசித்தி யடைந்தோன் செய்முறை.
வாதமே பலித்தாக்கால் சொல்லக்கேளு
வாய்மூடி கைகட்டி யிருக்கவேணும்

சேதமே வாராமல் நல்லவேட்டி
சிறப்பாக கட்டாம லிருக்கவேணும்
போதமே வாராம லிருக்கவேணும்
புலம்பியே பயித்தியம்போ லலையவேணும்
காதவழி யலைந்துமே நடந்துசுற்றி
காயசித்தி பண்ணியே யிருப்பாயென்னை.
என்னவே யிப்படிக்கு இருந்தாயானு
விதமான வுள்தலைதான் தப்பிநிற்கும்
பன்னவே வகமிருந்தால் தலைதான்போகும்
பதிவாக பிச்சையெடுத் துண்ணவேணும்
கன்னல்போல் பேசாமல் வாயைமூடி
கருத்தாக வரசாக்கினை பணியவேணும்
நன்னயமா யிப்படிக்கு இருந்தாயானுல்
நலமாகப் பொன்னைவைத் திருப்பாயாமே.
சிந்தூரங்கள் செய்ததுபோற் செய்யவேண்டும்.
ஆமேதா னொருமுறைதான் சிந்தூரந்தா
னடைவாகச் செய்தமுறை போலேபாரு
காமேதான் கைபாகம் விட்டுப்போட்டு
கருத்தில்லா வாதிகள்தான் செய்துபொய்யாய்
நாமேதான் பெரியவர்போ லிருப்பார்பாரு
நலமறியார்க் கொன்றுமில்லை நடத்தைப்பொய்
பூமேவு நிலத்தினிலே யிருக்கவென்றுல் [யாம்
பொறுமையாய் வாதத்தைச் செய்திடாயே.

கெவுரி அயச்செம்பு சிந்தூரம்.

செய்திடவே யின்னமொரு செம்புசொல்வேன்
சிறப்பான கெவுரியது செம்புகேளு
நய்திடவே கெவுரியது பலமோபத்து
நலமாக வரப்பொடிதான் பலமும்பத்து
கய்திடவே ரெண்டுமொன்றுப் பாணியாலே
கனிவாக வரைத்துமே ஜாமநாலு
மெய்திடவே குகையிலிட் டுருக்கித்தீரு
மேன்மையா யுருகியே மணியுமாமே. கூஉசு
மணியெடுத் தஞ்சுதர முருக்கித்தீரு
மதியான வதைபுடைத்து மருவக்கேளு
கணியாகத் துருசியது பலமுநூறு
கணக்காகச் சேர்த்துமே கல்வத்திட்டு
துணிவாக வுருக்கியே சவ்வீபோலே
துப்பறவா யுருக்குமணி யொன்றுப்வாங்கி
நணிவாக வந்திடைக்கிப் பாதிரூடன்
நன்றுகச் சேர்த்தரைத்து நவிலக்கேளே. கூநO
கேளுமே யெலுமிச்சம் பழச்சார்விட்டு
கெடிபடவே யிருஜாம நேகரைத்து
ஆளுமே யகலிட்டுப் புடமாய்ப்போடு
அடைவாகச் சிவக்குமட்டும் போடுபோடு
வாளுமே சிவந்தநிற மாயெடுத்து
வடிவாக நாகத்தின் ஜயநீராட்டி

தாளுமே பெரியபுடம் போட்டெடுக்கத்
தப்பாமே முருக்கம்பூ வாகும்பாரே. கூகக

கௌரி அயச்செம்பு சிந்தூரவேதை.

ஆகுமே சிந்தூர மருணன்போலா
மடைவாகச் சிந்தூரந் தனையெடுத்து
ஏகுமே தங்கத்தி லிடையேதாக்கு
இன்பமாய் செம்பாகு மதிகவேதை
பாகுமே மதியுருக்கி யிருபத்தொன்று
பதிவாக இட்டிடவே மாற்றுப்பத்து
நாகுமே நாகரச கெந்திதன்னை
நாடினு லெல்லாமுந் தங்கமாமே. கூகஉ

கௌரி அயச்செம்பு சிந்தூரமுன்னூம்பலன்.

தங்கமாஞ் சிந்தூரம் வேதைகோடி
தனியாகப் பணவிடைதான் தேனிலுண்ணை
அங்கமா மண்டலத்திற் காயந்தாறு
மடைவாக இறுகியே சித்தியாகும்
துங்கமாங் கைப்போடு புளியுந்தள்ளு
துடியாக மேனிசெவ் வலறிபோலா
மிங்கிதமாய் சொன்னுக்கா லென்னலாடி
மினியென்ன வாதமென்ன சொல்லவாச்சே.

புரட்டி வாதிகள் வார்த்தை.

ஆச்சாச்சு ரொம்பவுந்தான் சுட்டேனென்பார்
ரடியோடே வாதம்வந்து தென்றுசொல்வார்
காச்சுதே தேங்காய்போல் காச்சுதென்பார்
கனிவான சொல்லெத்தா னம்பவேண்டாம்

எச்சுதே யென்றுசொல்லி திரியவேண்டாம்
இன்பரச வாதிகளை நம்பவேண்டாம்
மூச்சென்ற ததுவடங்கி ஜடமில்லாது
முனையான சுழுமுனையை நாடிப்பாரே. கூநஉ
நாடிப்பா ரயத்தினுடன் கௌரிசேர்த்து
நலமாக வுருக்கியே வெள்ளிதன்னில்
ஆடிப்பார் வெள்ளியுடன் சேர்த்துஊதி
அன்பாக மாற்றைப்போல் கண்டுபார்த்து
தேடியே யொருவருடன் காட்டிக்காட்டி
திட்டமா யிருந்துமே பொருளும்போக
ஊடினன் கேட்டேனே யென்பாரையா
உலுத்தரச வாதிக்கு உண்மைதானே. கூநடு

நிஜவாதிகள் செய்கை.

உண்மைதா னிஜவாதி சாத்திரத்தை
யுறுதியாய்ப் பார்த்துமே கவனம்வைத்து
தண்மையாய் செய்துமே முடிப்பான்பாரு
தடையில்லா பொன்செய்து கடையில்விற்று
நண்மையாய் வாசியோ கத்தைப்பார்ப்பார்
நலமறியா ஞானத்தைப் புகழ்ந்துபேசி
வண்மையா யிருந்திடுவர் நல்லவர்க்கு
வகையான காயமென்ன நாகந்தானே. கூநஊ
நாகம் பொன்னுக்காதி, யோகம் ஞானத்திற்காதி, பிழைப்
புக்குப் பொன்னுதி, செம்பை நல்ல சாயமாகச்செய்.
நாகந்தான் வாதத்திற் பொன்னுமாச்சு
நாடியே விட்டாக்காற் பொன்னுமில்லை

யோகந்தான் ஞானத்துக் காதியாச்சு
உண்மையாய்ப் பிழைப்புக்கு வாதமாச்சு
பாகமாய் செய்தாக்கால் பலனுமாகும்
பதிவான செம்பினுட பருவம்பாரு
வாகமாய் நாடியே பார்த்துத்தேறு
வடிவான சாயமாய்ச் செய்துபாரே. கூகூ

தாளக அயச்செம்பு சிந்தூரமும் வேதையும்
அதனைஉட்கொள்ளும் பலனும்.

செய்திடவே தாளகத்தின் செம்புசொல்வேன்
ஜெயமான தாளகந்தான் பலமும்பத்து
நய்திடவே யரப்பொடிதான் பலமும்பத்து
நலமாகத் துருசியது பலமும்பத்து
வய்திடவே பாணியால் நாலுஜாமம்
வகையாக வரைத்துருக்கி யெடுத்துக்கொள்ளு
மய்திடவே யிப்படியை முறையுருக்கி
வகையாக வெடுத்துமே சொல்லக்கேளே. கூகூஅ

சொல்லவே சுத்தாக வுருக்கிக்கொண்டு
திறமாகக் கல்வத்தி லுடைத்துமைபோல்
நல்லவே துருசியது பலமுநூறு
நலமாக வரைத்துமே பாணியாலே
கல்லவே யரைத்துமே யுருக்கித்திரு
கசடற்று வெள்ளிபோற் கண்விட்டாடும்
மெல்லவே யெடுத்துடைத்துப் பாகங்கேளு
மேன்மையாய்நின்றவிடை பண்ணைசேரே. கூகூக

சேர்த்துமே பாணியா லரைத்துமைபோல்
சிறப்பான வில்லைகட்டிக் காயப்போடு
பார்த்துமே பெரியபுடம் போட்டுவாங்கு
பதிவான சிந்தூர மாகுமட்டுங்
கார்த்துமே யெடுத்துமே கல்வத்திட்டு
காரியமாய் நாகத்தின் ஜயநீராலே
நார்த்துமே யரைத்திட்டு வில்லையாக்கி
நலமாகச் சிவக்குமட்டும் புடத்தைப்போடே.

போட்டுமே யெடுத்திடவே முருக்கம்பூப்போல்
பொலிவாக விருந்துவிடுஞ் சிந்தூரந்தான்
காட்டுமே பலநிறுத்து வைத்துக்கொண்டு
கனிவான தங்கத்தி லிடையேதாக்கு
வாட்டுமே செம்பாகு மூசத்திமெத்த
வலுமையுள்ளசெம்பைத்தால்புறம்பாய்வைத்து
பாட்டுமே வெள்ளியெட் டொன்றுதாக்கு
பதிவான சங்கமது பாருபாரே. கூசக

பாருமே பணவிடைதா னித்தமுண்ணு
பதிவாக மண்டலத்திற் சித்தியாகும்
ஆகுமே நோயெல்லாந் தவடேயாகு
மாதித்த னுள்ளமட்டு மிருக்கலாகும்
வேருமே யுகாந்தவரை தேகந்தானும்
விருப்பமா யிருந்துமே வாசியேறுங்
காருமே காயசித்திக் கிதுவேயாதி
கணக்காக வுண்டுமே கருதிடாயே. கூசஉ

வாதிகள் கெடுவ திப்படியெனல்.

கருதியே லோகத்திற் சிலதுவாதி
கணக்காகச் சேராம லொன்றேடொன்று
பருதியே சேர்த்துமே முன்பின்னைப்
பதிவாக மதிதனிலே பாச்சிப்பாச்சி
வருதியே கெட்டலைந்து திரிந்துவங்கி
வடிவாகச் சாத்திரமும் பொய்யென்பார்கள்
வருதியே பேராசைப் பட்டுப்பட்டு
வடிவாகத் திரியாதே பாகம்பாரே. கூதங

வாதிசெய்யவேண்டிய தின்னின்னது.

பாகமே பார்ப்பதற்கு ஜயநீர்பாரு
பதையாமல் புகைநீரு பருவம்பாரு
தாகமாய் செய்திடவே யயத்தைப்பாரு
தாட்டிகமா யெல்லாமுஞ் சித்தியாகும்
யோகமாய் வாதசித்தி யாகும்பாரு
ஓருமிக்கப் பாராமல் கொஞ்சம்பாரு
ஆகமா யுலகத்திற் பிழைக்கவேண்டி
யாண்மையாய்ப் பாகமெல்லா மறிந்திடாயே.

சரக்கிற் செம்பெடுத்துத் தங்களுச்சேர்த்து வெள்ளியிற்
கொடு வாதசித்தி யுண்டு.

அறிந்திடவே செம்பெடுத்துத் தங்கந்தன்னி [ள்
லடைவாக இடைக்கிடைதான் கொடுத்துமேகே
கறிந்திடவே வெள்ளிதனிற் கொடுத்துவுடு
கனிவாக செத்தாக்கா லெல்லாமாகும்

பிறிந்திடவே புடமிறங்கு மருகுகட்டும்
பேராகக் காவிக்கு நிற்கும்பாரு
தறிந்திடவே ஞானத்தைப் பார்த்துத்தேறு
தசையவே லோகமெல்லாஞ் சித்தியாமே. கூசரு

செம்புகரி.

சித்தியா மின்னமொரு செம்புகேளு
ஜெகஜ்ஜால மாடவே செய்யக்கேளு
முத்தியாய் துருசினுட செம்புபத்து
முனிவாக கெந்திமுக்கால் வீரங்காலாய்
நத்தியாய் பழச்சாறு விட்டரைத்து
நலமாகப் பனிரண்டு ஜாமந்தானும்
புத்தியா யரைத்துமே சொல்லக்கேளு
புதுமையாய் செம்புதனைத் தகடுதட்டே. கூசசு
தட்டியே மேற்கவசங் கட்டிப்போடு
தனிமையா யதருகு நொறுங்கிப்போகும்
முட்டியே யின்னமே செம்பிருந்தால்
முடிவாக மேற்கவசங் கட்டிப்போடு
கட்டியே நொறுங்கியது செம்புமாகும்
கனிவாக நொறுங்காதே போனற்கேளு
துட்டியாய் நொறுங்குமட்டும் புடத்தைப்போடு
துடியாக வெடித்துமே சொல்லக்கேளே. கூசள

செம்பு சிந்தூரம்.

சொல்லவே யதறெல்லா நிறுத்துக்கொண்டு
துடியாக நிறுத்தோ ரதர்க்குப்பாடு

மெல்லவே சூடனரை சேர்த்தரைத்து
மெதுவாக வில்லைகட்டிப் பாணியாலே
நல்லவே புடம்போடு பெரியதாக
நலமாக வெடுத்துப்பா ராலங்காய்போல்
கல்லவே யிருக்குமது வெடுத்துக்கல்வங்
கதிபெறவேபாகத்தைச்சொல்லக்கேளே. கூசஅ
கேளுமே நாகமென்ற ஜயநீராலே
கெடியாக வரைப்பதுதா னெட்டுஜாமந்
தாளுமே யரைத்தவில்லை ரவியிற்காய்ந்து
தடையறவே மேலோடு கொண்டுமூடி
காளுமே வன்பதெரு வடுக்கிப்போடு
காரணமாய்ச் சிந்தூர முருக்கம்பூப்போல்
நாளுமே யிருக்குமது சிந்தூரத்தை
நலமாக சேர்க்கிறதோர் நாமங்கேளே. கூசகூ
செம்புசிந்தூரத்தால் தங்கச்செம்பும் வேதையும்.
கேளுமே சிந்தூரம் பலநிறுத்து
கெடியாக தங்கத்தி லிடையேதாக்கு
ஆளுமே தங்கம்செவ் வலறிபோலா
மம்மம்மா சிவந்துமே யிருக்குந்தங்கம்
தாளுமே தங்கத்தை செம்புபண்ண
தடையறவே சித்தர்களு மயங்குவார்கள்
காளுமே வெள்ளிமுப் பதிலேதானும்
கனிவாக வெண்டிடவே யாறுமாற்றே. கூடுo
மாத்தான பொன்னேத்தான் விற்றுநீயு
மதிமயங்கிப் போகாமல் ஞானம்பாரு

சேத்தாலே ரசவாதஞ் சித்தியாகுஞ்
சேராட்டா லொன்றுமில்லை கழுதைபோலாம்
பார்த்தாலே வாதம்வரும் பொன்னேயாகும்
பாராட்டா லொன்றுமில்லை கூலிக்காரன்
வேத்தாளைக் கண்டாக்கால் வாயைமூடி
விடுபடா தென்னைவென்றால் விரும்பிப்பாரே.
வாதி செம்பைச் செய்து பார்க்கவேணும்.
விரும்பியே பார்க்கவே செம்பைப்பாரு
விருதாவாய் போகாமல் ஞானம்பாரு
அரும்புதான் பூத்தாலே வாசமாகு
மடைவாகப் பூக்காதே போனாற்கேளு
நரம்புவே நம்பினால் வாதமாகு
நலமாக நம்பாட்டாற் சித்தியில்லை
விரும்பினால் ரசவாத மேவல்கேட்கும் [மே.
விரும்பாட்டா லொன்றுமில்லை விழலாய்ப்போ
ரசவாதஞ் சிவசொத்தானதால் நாலில்மூன்றுபங்கு தர்மஞ்செய்.
போமெனவே ரசவாதஞ் சிவசொத்தப்பா
போக்கோடே செய்தாக்கால் நாலத்தொன்று
ஆமெனவே யநுபவிக்க வேணுமப்பா
அடைவாக மூன்றுபங்கு தர்மஞ்செய்தால்
காமெனவே வாழ்வதுவு நிற்கும்பாரு
கனிவாக வொருமிக்க வநுபவித்தால்
வாமெனவே ஆயிசுதான் வர்த்திக்காது
வடிவான வாழ்வுக்கு இல்லைதானே. கூருஉ

தாம்ர சிந்தூரம்.

இல்லையென்று போகாம லின்னமொன்று
இயல்பான செம்பதுதா னென்றுகேளு
கொல்லைவழி போகாமல் துருசிசெம்பு
குணமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
தில்லைநட ராஜரைப்போல் கெந்திமூக்கால்
திடமாக வீரங்கால் சேர்த்தரைத்து
நல்லாக விருஜாமம் பழச்சார்விட்டு
நலமாக மெழுகுபோ லரைத்திடாயே. கூருச

அரைத்துமே செம்பின்மேற் பூசிப்பூசி
அடைவாக பெரியபுடம் போட்டெடுக்க
நரைத்துமே அதறுபோ லியமாகும்
நலமான வதறெல்லா மெடுத்துவாங்கி
கரைத்துமே பலநிறுத்து சொல்லக்கேளு
கனிவாகச் சூடனரை நிறுத்துக்கொண்டு
பரைத்துமே பாணியா லரைத்துவில்லை
பதிவாக ரவிபடவே காயப்போடே. கூருரு

வெடியுப்பு சிந்தூரம்.

காயவே வைத்துமே சொல்லக்கேளு
கனிவாக பெரியபுடம் போட்டெடுக்க
நாயவே சிந்தூர மாகும்பாரு
நலமான சிந்தூர மப்பால்வைத்து
தோயவே யின்னமொன்று சொல்லக்கேளு
துடியாக வெடியுப்புப் பலமுமெட்டு

நாயவே சினமது பலமிரண்டு
நலமாகச் சேர்த்தரைத்து நவிலக்கேளே. கூருசு
நவிலவே யெலுமிச்சந் தோலைத்தானு
நலமாகப் பிழிந்துமே யெடுத்துக்கொண்டு
கவிலவே பலமாறு நிறுத்துப்போடு
கனமாக விடித்துமே சொல்லக்கேளு
நவிலவே வில்லைபண்ணி சட்டியிட்டு
நலமாக வெரித்திடவே வுருகும்வெந்து
பவிலவே கடுஞ்சுன்ன மாகும்பாரு
பதிவான சுன்னத்தின் பாகங்கேளே. கூருள
பாகமென்ன சொல்லுகிறேன் பாகங்கேளு
பதிவான வெடியுப்புச் சுன்னம்ரெண்டு
ஆகமாய் நாகரசம் பலமிரண்டு
அடைவான வீரமது பலமரைத்தான்
யோகமா பிழுத்தரைக்கச் சிவந்துபோகு
மொடுங்கவே வில்லைபண்ணி சட்டியிட்டு
ஆகமா யெரித்திடவே யரைக்குமஞ்ச
ளன்பாக விருக்குமது ஆண்மைகேளே. கூருஅ
தாம்ரசிந்தூரம் வெடியுப்புச் சிந்தூரஞ்சேர்த்துச் சிந்தூரம்.
ஆண்மையா யெடுத்துமே பலமிரண்டு
அடைவாக §ரவியின்சிந் தூரம்ரெண்டு
காண்மையா மிரண்டுமொன்றுப் புகைநீர்விட்டு
கடிதாக வரைத்துவில்லை காயவைத்து

நாண்மையாய் பெரியபுடம் போட்டெடுக்க
நலமான சிந்தூர முருக்கம்பூப்போல்
தூண்மையா யிருக்குமது சிந்தூரந்தான்
துடியான மகிமைதனை சொல்லப்போமே. கூருகூ

§ ரவி - செம்பு.

தாம்ர வெடியுப்புசிந்தூர தங்கச்செம்பும் வேதையும்.
சொல்லவே தங்கத்தி லிடையேதாக்க
துப்பறவாய் தங்கமது வலறிப்பூப்போல்
நல்லவே யிருக்குமது கண்கொள்ளாது
நலமாக சிகப்புத்தான் செம்புமாகும்
வில்லவே யிருக்குமந்த செம்பைநீயும்
விதமாக மதிநூறு ஒன்றுபோட்டால்
வில்லவே மதிபழுத்துத் தங்கமாகும்
விதமான தங்கமது முடிவுதானே. கூசூ0

இவ் வெடியுப்புச் சிந்தூரத்தா லாகும்வேதை முடி
வானது இதை யிரண்டுகாண்டமு மொத்துப்
பார்த்துச் செய்ய வேதையாகும்.

முடிவான வேதையிது இக்காண்டத்தில்
முடிவாக வாயிரத்தில் முடியச்சொன்னேன்
கடிவாகக் காண்டமிரண் டொத்துப்பார்த்து
கனிவாகப் பாகமாய் செய்துக்கொள்ளு
நடிவாக வெல்லாமும் வந்துதோயு
நலமான பொன்னாகு நலம்பெற்றோர்க்கு
படிவாக ஞானத்தில் மிகவுந்தேர்ந்து
படிந்தாக்கால் வாதம்வரும் பண்புதானே. கூசூக

செம்பை சிகப்பாய்ச் செய்தெடுத்துத் தங்கத்
தைச் சேர்க்கச் சொல்லியது.

பண்புதான் செம்புதனைப் பாகமாகப்
பதியவே செய்துமே செம்பெடுத்து
நண்பியே யேமத்தி னிடையேசேரு
நலமாக வெள்ளியினிற் சேர்ந்தபோது
வண்பியே வேதைதான் முடிவுமாகும்
வகையாகச் சேர்த்துமே வண்மைபாரு
தும்பிமுகன் தன்னைப்போல் செம்புமாகுந்
துடியாகவேதையென்ன வெளிசில்தானே.கூசூஉ

இரண்டுகாண்டமு மொத்துப்பார்த்து முடிவாகும்
வரை செம்துமுடி.

எளிசிலே செய்தெடுத்து ஞானம்பாரு
இதமாக வாசியைத்தா னிறுத்திக்கொள்ளு
களிசாக வுழைத்துமே கருணைகூர்ந்து
கனக்காக வாதமொடு வயித்யம்பாரு
வளிசாக சரீரமது இருப்புத்தூணும்
வழக்கமைத்துத் திரியாதே ரவியைப்பாரு
முளிசாக இருகாண்ட மொத்துப்பார்த்து
முடியுமட்டும் வாதசித்தி முனிந்துபாரே.கூசூஎ

அயச்செம்பில் கெந்திசேர்த்தால் சூட்சன் சேர்த்
தரைத்துப் புடம்போடவும்.

முனிவாக வயச்செம்பு கெந்தியோடே
முக்கியமாய்ச் சேர்ந்தாக்கால் சூடன்தன்னை

வனியாகச் சேர்த்துமே புடத்தைப்போடு
வாகாகச் சிந்தூர மருணன்போலாம்
கனிவாக வாதத்தைக் கண்டுபோற்றி
கருத்துறவே செய்தாக்கால் ஞானமாகும்
மனியாய மாய்ச்செய்து தவிக்கவேண்டா
மடைவாகச் சித்தியாய்ப் பார்த்திடாயே. ௯௬௪

வாதிகள் சொல்லும் பொய்கள்.

பார்த்திடவே சிறிதுபேர் வாதந்தன்னை
பதிவாக வெகுநாளாய் சுட்டுப்பார்த்து
கோர்த்திடவே நினைவோடே செய்துசெய்து
குடிகேடு செய்துமே புறட்டுசொல்லி
நேர்த்திடவே பார்த்ததிலே யின்றைக்குத்தா
னினைவில்லை யென்பார்க ளுலகவாதி
கார்த்திடவே யெந்தனிடம் வெகுநாளென்று
கனிவாகச் சொல்லியே திரிவார்பாரே. ௯௬௫

வாதிக்கு வேண்டிய முக்யவஸ்துக்கள்.

திரியவே யண்டாண்ட பதங்களெல்லாஞ்
சித்தாக வேணுமென்றால் செம்பைப்பாரு
அரியவே சுடர்க்கொடியோன் தன்னைப்பாரு
அடைவாக சித்தியா மெளிதிலாகும்
நரிபோலே திரியாதே நூலைப்பாரு
நலமாக வாதசித்தி காயசித்தி
பிரியமா யுன்னிடத்தில் சரக்குவைத்து
பிரபலமாய்த் திநிந்துமே வேதைபாரே. ௯௬௬

வேதையா நாகத்தின் பெருமைதன்னை
வேண்டினதோர் லிங்கரசந் தன்னைப்பாரு
காதையாற் கைபாகந் தன்னைப்பாரு
கருத்துறவே வேதைமுகங் கருதிப்பாரு
நாதையார் வெகுபோக்கு நாட்டம்பாரு
நாதாந்த சாரத்தை நடத்திப்பாரு
வாதைதான் படாம லயத்தைப்பாரு
வடிவாகப் பாகமெல்லாந் தெரிந்துபோமே.

தெரிந்துபோ மிக்காண்ட மாயிரத்தில்
திறந்துமே வெளியாகச் சொன்னேனப்பா
அரிந்துமே யிதைவைத்துச் செலவுசெய்து
அடைவாக விதிநூலை யறிவாய்ப்பாரு
கரிந்துபோம் பெண்ணாசை தன்னைவிட்டு
கைப்போடு புளியுப்பு எண்ணெய்விட்டு
பரிந்துபார் சிந்தூரந் தின்றுதேறு
பதிவான சித்தியெலா மெளிசிலாமே. கூசுஅ

வாதம் பொய்யென்பவர்களை செருப்பாலடி.

எளிசாகப் போகாமல் வாதந்தன்னை
இன்பமா யுழைத்துமே யினிமையாக
அளிசாக வாதம்பொய் யென்றுசொன்ன
வம்பரைத்தா னடிசெருப்பால் சண்ணுசண்ணு
துளிபாய விந்துவினுல் வந்தபோகந்
தொல்லுலகில் ரசவாத மெளிசிலாகுங்

களியான மனதைவிட்டு வாதம்பாரு
கைகண்ட வேதையாங் கனிந்துபாரே. கூசுகூ

வாசியோகஞ் செய்யும் வழி.

பாரேநீ வழியாறு தலமும்புக்கி
பதிவாக சுழுமுனையி லேறியாடு
சாரேநீ யந்திடத்தில் வழியில்நில்லு
சதியான வாறுதலம் வெளியாய்க்காணும்
காரேநீ வாசியைத்தா னிறுத்திக்கொள்ளு
கடினமற்ற நாகனென்ற வாய்வைத்தானும்
வாரேநீ யிறுத்தியே கும்பித்தேறு
வடிவான ஞானமெல்லாஞ் சித்தியாமே. கூஎ0

செம்பைப்பார் அதனல் பெருவாழ்வுவந்திடும்.

சித்தாக வேணுமென்றுல் செம்பைப்பாரு
சிறிதென்று போகவென்றுல் குடும்பத்தோடே
பத்தாகச் சோர்ந்துமே வேதைபாரு
படபடத்துத் திரியாதே மதம்பேசாதே
மூத்தாக ஞானத்தை முனிந்துபாரு
முறையோடே பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
வித்தார மாகவே பேசவேண்டாம்
வீம்பாக செய்யாதே விரும்பிநில்லே. கூஎக

நில்லென்றுற் செம்பாலே யநந்தம்வாழ்வு
நேராக வந்துவிடும் பொய்யோவல்ல
செல்வமே வந்துவிட்டால் வாய்பேசாதே
சிறப்பான காயத்தை வலுக்கப்பண்ணி

யல்லென்ற குபேரனைப்போல் வாழ்வீர்கண்டீ
ராதார சித்தியெல்லாம் வந்துசேரும்
பொல்லாமை படவேண்டா நல்லமார்க்கம்
புத்தியா யறிந்துமே வேதைபாரே. கூளஉ

சத்யவாதிகள் மகிமையும் அவர்கள் தப்பிப்போகாமல்
பாகங்களையடிக்கடிச் சொல்லியதும்.

வேதைதா னிப்படிப் பாராமல்வாதி
விரைந்துமே ஈயத்தை விட்டுஊதி
போதைதான் பொய்ப்பாடு என்பார்லோகர்
பொன்கொடுத்தால் வாதிகையில் செம்புமாகும்
ஓதைதா னுத்தமமாந் தொழிலைப்பாரு
ஒருதரத்துக் கிருதரமா யுறமாய்சொன்னேன்
வாதைதா னில்லாமல் நல்லோருக்கு
வரிசைதப்பிப் போகாம லறைந்திட்டேனே.

